
இக்கால உலகிற்குத்
திருக்குறள்

தொகுதி-3

தொகுப்பாசிரியர்
முனைவர் தி.சே.சுப்பராமன்
முனைவர் சேயோன்
பதிப்பாசிரியர்
முனைவர் சா.கிருட்டினமூர்த்தி



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இக்கால உலகிற்குத் திருக்குறள்

தொகுதி - 3

தொகுப்பாசிரியர்கள்
முனைவர் தி.சே. சுப்பராமன்
முனைவர் சேயோன்

பதிப்பாசிரியர்
முனைவர் சா. கிருட்டினமூர்த்தி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
II Main Road, C.P.T. Campus, Taramani, Chennai 600 113

பன்னாட்டுத் திருக்குறள் மாநாடு
அண்ணா பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம்
நாள் : 15-01-2004 - 18-01-2004

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Ikkāla Ulakiṟkut Tirukkuṟaḷ - Vol. III
Compilers	:	Dr. T.S. Subbaraman Director, Centre for Development of Tamil in Engineering and Technology, Anna University, Chennai-25 Dr. Cheyon Honorary Secretary Mylai Thiruvalluvar Tamil Sangam Mylapore, Chennai - 600 004
Editor	:	Dr. S. Krishnamoorthy Director, International Institute of Tamil Studies IInd Main Road, C. P. T. Campus T.T.T.I. Post, Chennai - 600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies IInd Main Road, C. P. T. Campus, T.T.T.I. Post, Chennai - 600 113; Phone : 2254 2992
Publication No.	:	477
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2004
Paper used	:	18.6 kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 points
No. of Pages	:	xiv + 322
No. of Copies	:	1200
Price	:	Rs. 95/- (Rupees Ninety five Only)
Printing	:	United Bind Graphics 101-D, Royapettah High Road, Chennai - 4
Subject	:	Studies on Tirukkural

கட்டுரைக் கருத்துகட்குக் கட்டுரையாளரே பொறுப்பு

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

பதிப்புரை

'தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி' என்பார் பரிதிமாற் கலைஞர். இம்மொழியின், உயர்தனிச் செந்நூலாக அமைவது திருக்குறள். திருக்குறள் ஒரு நூல் மட்டுமன்று; அது ஒரு வேதம். குடிமகனிலிருந்து இறைமகன் வரை அனைவர்க்கும் அறிவூட்டும் ஒரு சட்டப் புத்தகம். 'திருக்குறள் தனிமனிதத் தத்துவம்' என்பார் சிலர். 'பொதுவாழ்க்கைத் தத்துவம்' என்பார் பலர். 'இறைத் தத்துவம்' என்பார் இன்னும் பலர். 'உலகத் தத்துவம்' என்பார் உலகோர். இந்நூலைப் படிப்பவர், படித்துப் பயன்பெறுபவர், ஆய்ந்து இன்பம் காண்பவர் என இத்திறத்தார் எண்ணிலடங்கார். மொழி அறிஞர், இலக்கிய அறிஞர் மட்டுமல்லாமல், அறிவியலாளர், பொறியாளர், மருத்துவர், சட்ட வல்லுநர், ஆன்மீகச் சிந்தனையாளர், நாத்திக நோக்காளர், கணிப் பொறியாளர் என இன்ன பிற புதுத்துறை சார்ந்தோர் பலரும் திருக்குறளைத் 'தத்தம் துறை சார்ந்த நூல்' என்று பறைசாற்றிக் கொள்ளுகின்றனர். ஒவ்வொருவரும் இந்நூலைத் 'தனது தனது' என்று உரிமை கொண்டாடும் நிலையிலிருந்தே இந்நூல் அனைவர்க்கும் பொது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இந்நூலுக்கு உரைகண்ட பதின்மர் அல்லாமல், இன்றைய நிலையில் விரிவுரை, விளக்கவுரை, தெளிவுரை, நயவுரைகளுமாக மேலும் பல உரைகளைப் பலரும் இந்நூலுக்கு எழுதியுள்ளனர். திருக்குறளை ஒவ்வொருவரும் தத்தம் நோக்கிலும், போக்கிலும், கருத்திலும், கருத்தாக்கத்திலும் ஏற்றுக் கொள்கிற நிலையில், இந்நூல் மேலும் விளக்கம் பெற வேண்டிய நூல் என்பதை நாம் அறியலாம். ஏறத்தாழ 150க்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் இந்நூலுக்கு வந்துள்ள நிலையில், எஞ்சியுள்ள உலக மொழிகள் அனைத்திலும் இந்நூல் மொழியாக்கம் பெறும் காலம் சேய்மையில் இல்லை. எந்த மதத்தாரும், எந்த நாட்டாரும், உலகில் எம்மூலையில் உள்ளாரும் தம் வாழ்க்கைக்கும், வழி நடத்துதலுக்குமான பல நெறிமுறைகளை இத்திருக்குறளில் காண்கின்றனர். இதனால்தான், இந்நூல் **உலகப் பொதுநூல்** எனும் நிலையையும் தகுதியையும் பெறுகிறது.

திருக்குறளைப் பற்றி மேற்கொள்ளப் பெற்றுள்ள ஆய்வுகள், எண்ணிலடங்கா. அறிவுக்கு வள்ளுவர் கூறிய **தொட்டனைத் தூறும் மணற்கேணி** என்ற தொடர் திருக்குறளுக்கும் பொருந்தும். **அறிதோறும் அறியாமை கண்டற்றால்** என்ற வள்ளுவத்தின் அறிவூக்கச் சிந்தனைகூட திருக்குறளுக்கும் பொருந்தும். எனவே, தானே விதிகளாய் அமைந்து, அவ்விதிகளுக்கு இலக்கணமாகவும் அமைகிற திருக்குறளை **மறை** என்றும், **அறம்** என்றும், **ஆணை** என்றும் கூறுவதில் வியப்பேதுமில்லை. திருக்குறள் நேற்று மட்டுமன்று; இன்று மட்டுமன்று நாளையும் இம்மன்பதையை வாழ்விக்கிற, வழிநடத்துகிற நூலாக விளங்குமென்பதில் ஐயமில்லை.

இத்தகைய திருக்குறள் நம்மைப் பொறுத்தவரை தமிழகத்திற்குரிய நூல் மட்டுமன்று; **ஒரு தேசிய நூல்** என்பதற்குரிய அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருக்கிறது என்பதை எவராலும் மறுக்க இயலாது. இந்நூலை இன்றைய உலகிற்கு மறுவாசிப்புச் செய்வதன் மூலம் வாழ்க்கை சீரமையும்; வளம்பெறும். இந்நோக்கில் எக்காலத்திற்கும் பொருந்துவதாக அமைந்த திருக்குறள் கருத்துகளை இக்கால உலகிற்கு எடுத்துக் கூறும் நிலையில் **இக்கால உலகிற்குத் திருக்குறளின் தேவை** என்ற உயிரோட்டப் பொருண்மையை மையமாக வைத்து அண்ணா பல்கலைக்கழகமும், மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கமும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து பன்னாட்டு அளவிலான ஒரு கருத்தரங்கை நடத்த ஏற்பாடு செய்யப்பெற்றது.

இக்கருத்தரங்கு ,சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் நடைபெறுவதற்கான அனைத்துப் பணிகளையும் ஆர்வத்துடனும் பெருமையுடனும் அப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் முனைவர் எ. பாலகுருசாமி அவர்கள் மேற்கொண்டார். அண்ணா பல்கலைக்கழக அறிவியல் தொழில்நுட்பத் தமிழ் மையத்தின் இயக்குநராகிய முனைவர் தி.சே. சுப்பராமன் அவர்கள் ஒருங்கிணைப்பாளராக இருந்து கருத்தரங்கப் பணிகளுக்குப் பொறுப்பேற்றுக்கொண்டார். சென்னை வானொலி நிலையத்தின் துணை இயக்குநர் முனைவர் சேயோன் இவ் ஒருங்கிணைப்புப் பணிகளில் இணைந்து செயலாற்றினார். இப்பன்னாட்டுக் கருத்தரங்கிற்குக் கட்டுரைகள் வரவேற்கப்பட்ட நிலையில், பலதுறை ஆய்வாளர்கள், அறிஞர்கள், ஆர்வலர்களிடமிருந்தும் கட்டுரைகள் பெறப் பட்டன. இக்கட்டுரைகள் திருக்குறளைப் பல்வேறு பரிமாணங்களில் கண்டு மகிழ்ந்து அனுபவித்த தன்மையை

வெளிப்படுத்துகின்றன. அறிவியல் பற்றிக் கட்டுரைகள் வந்தன; பொறியியல் தொழில்நுட்பம் பற்றிக் கட்டுரைகள் வந்தன; மென்பொருள் பற்றியும் கட்டுரைகள் வந்தன. அரசியல் பற்றிய கட்டுரைகளும் பெறப்பட்டன; சட்டம் பற்றியும் கட்டுரைகளும் பெறப்பட்டன. இல்லறம் பற்றிய கட்டுரைகளும் ஏராளம். தெலுங்கு வேமன்னா சதகம் முதல், இந்தி ரகீம் சத்சாயீ வரையிலும் கன்னடம், மராட்டி, ஒரிசா போன்ற மொழி ஒப்பீட்டுக் கட்டுரைகளும் பெறப்பட்டன. அனைத்துக் கட்டுரைகளும் அறநூலாம் திருக்குறளை அனைவர்க்கும் எளிய முறையில் எடுத்து விளக்குவதாக, ஆய்வு செய்வதாக அமைந்திருந்தன என்பது குறிப்பிட்டுக் கூறவேண்டிய ஒன்றாகும். சட்டம் பற்றிய கட்டுரை ஒன்றில் நீதி அரசர் தி.நெ. வள்ளிநாயகம் அவர்கள், 'சட்டவிதிகளை இ.பி.கோ. என்று வழங்குவதைப் போலத் திருவள்ளுவர் கூறும் அறநெறிகளைத் தி.பி.கோ. என்று கூறலாம்' என்று கூறியிருப்பதை, உண்மையிலேயே திருக்குறளின் எழுச்சியும், தாக்கமும் எந்த அளவிற்கு இருந்திருக்கின்றன என்பதற்குச் சான்றாகக் கூறலாம்.

இக்கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாகக் கருத்தரங்க நாளன்றே வெளியிட வேண்டும் என்று கருதி, இப்பொறுப்பை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஏற்றுக்கொள்ள, அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர்** அவர்களைக் கேட்டுக்கொண்டார். இதனை ஏற்றுக் கொண்ட அமைச்சர் அவர்கள் இக்கட்டுரை நூல் மாநாட்டின் நிகழ்வன்றே வெளிவரவேண்டுமென்பதில் தனிக்கவனம் செலுத்தி எங்களுக்கு அறிவுரை வழங்கினார். இதற்கு மாநாட்டுக் குழுவின் சார்பாகவும், நிறுவனத்தின் சார்பாகவும் நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை அவர்களுக்கு** என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமை அடைகிறேன். கருத்தரங்கக் கட்டுரைகளைத் தொகுத்து, நூலாக வெளியிட எங்களுக்கு அளித்த முனைவர் தி.சே. சுப்பராமன் அவர்களுக்கும், முனைவர் சேயோன் அவர்களுக்கும் நன்றி. இக்கட்டுரைகளை முறையாகச் செப்பம் செய்து, நூல் வடிவில் பதிப்புச் செய்து, மூன்று தொகுதிகளாக அழகிய முறையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளிக்கொணர்ந்துள்ளது. திருக்குறளின் 133 அதிகாரங்களைக் குறிப்பிடும் வகையில் இந்நூலின் இரு தொகுதிகளிலும் 133 கட்டுரைகள் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்க பதிப்புப் பணியாகும். ஒவ்வொரு கட்டுரையிலும் ஒரு திருவள்ளுவர்

வரைபடமாக, 133 திருவள்ளுவர் வரைபடங்களும் சேர்க்கப் பட்டுள்ளன.

இந்நூலின் பதிப்புப் பணி தொடங்கிய நாள் முதல் பணி நிறைவுறும் நாள்வரை உடனிருந்து அனைத்து நிலைகளிலும் உதவிய இந்நிறுவனத் திட்டக் கல்வியர் முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கு என் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் தொகுதிகளுக்கு மெய்ப்புத்திருத்தம் செய்யும் நிலையில் உதவிபுரிந்த இந்நிறுவனப் பேராசிரியர் முனைவர் அன்னி தாமசு, இணைப் பேராசிரியர் ச. சிவகாமி, ஆராய்ச்சி உதவியாளர் முனைவர் சூ. நிர்மலாதேவி, ஆய்வு மாணவி செல்வி க. ஜெயந்தி ஆகியோர்க்கு என் நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறைச் செயலாளர் **திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் **திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இத்தொகுதிகளுக்குக் கூடுதல் பொறுப்புடனும், கவனத்துடனும் ஒளி அச்சுக் கோப்புச் செய்து தந்த நிறுவனக் கணிப்பொறியாளர்கள் ஸ். கோபிநாத், திருமதி ந. லட்சுமி, திருமதி பி. கௌசல்யா, திருமதி இரா. வெண்ணிலா, திரு. சு. கண்ணன் ஆகியோர்க்கு என் நன்றியும் பாராட்டுகளும். அழகிய முறையில் மேலட்டை வடிவமைத்து இத்தொகுதிகளை அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத் தார்க்கு என் நன்றிகள் உரியன.

சென்னை **சா. கிருட்டினமூர்த்தி**
13-01-2004

முன்னுரை

வழிபாட்டிற்கும் போற்றுதலுக்குமுரிய வள்ளுவரின் திருக்குறள் நாடு, மொழி, இனம், மதம், காலம் இவற்றைக் கடந்து வாழ்கின்ற கருத்துக் கருவூலம். இப்பொதுத் தன்மையே அதன் தனிச்சிறப்பு. தமிழனை உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கச் செய்தது பொய்யாமொழிப் புலவரின் முப்பால். மனித வாழ்வோடு இயைந்த பல்வேறு துறைகளும் சிறந்து விளங்கத் திருக்குறள் வழிகாட்டுகிறது. என்றைக்கும் எத்துறை சார்ந்த வல்லுநர்க்கும் அவரவர் துறைகளில் ஏற்படுகின்ற சிக்கல்களுக்குத் தீர்வு சொல்லும் ஞானப்பேழை வள்ளுவனின் வாய்மொழி. இதனாலே தான்,

எல்லாப் பொருளும் இதன்பாலுள விதன்பா
லில்லாத வெப்பொருளும் இல்லையால்

என்றார் மதுரைத் தமிழ்நாகனார். திருக்குறளின் இத்தன்மையை வலியுறுத்தும் வகையில் மாநாடு நடத்திட வேண்டுமென நம் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா, மாட்சிமை பொருந்திய திரு அப்துல் கலாம் அவர்கள் தன் கருத்தினை அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தரிடம் தெரிவிக்க, **இக்கால உலகிற்குத் திருக்குறளின் தேவை** என்ற தலைப்பில் பன்னாட்டுத் திருக்குறள் கருத்தரங்க மாநாடு நடத்தத் திட்டமிடப்பட்டது. மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கமும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் கைகொடுத்தன. அன்று விதைத்த விதை இன்று மரமாகிப் பூத்து மணம் பரப்புகிறது. அதன் எழில்மிகு கிளைகளில் பூத்த இனிய மலர்களே இந்நூலில் காணக்கிடக்கின்ற கட்டுரைகள். எங்கள் எதிர்பார்ப்புக்கும் மீறிய எண்ணிக்கையில் வந்து குவிந்தன தமிழ் ஆர்வலர்களின் கருத்துப் படையல்கள்.

தமிழ்த்துறை மட்டுமன்றி அனைத்துத் துறையைச் சார்ந்தவர்களும் திருக்குறள் இன்றைய சிக்கல் தீர்வுக் களஞ்சியமாக விளங்குவதை வெளிப்படுத்தும் வகையில் எழுதிய

கட்டுரைகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அழகிய நூலாகப் பதிப்பித்திருக்கிறது. திருக்குறளின் கருத்துகள் மற்றமொழி இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கும் அவற்றின் மேன்மையைப் போற்றும் வகையில் பிறமொழி வல்லுநர்களின் கட்டுரைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இக்கால உலகிற்குத் திருக்குறள் என்ற இந்நூல் உருவாகக் காரணமாய் இருந்த அனைத்து நல்லிதயங்களுக்கும், ஊக்கமும் ஆக்கமும் அளித்த அரசிற்கும் நன்றி பாராட்டுகிறோம். பலரும் தங்கள் தங்கள் துறைகளில் சிறந்து மேலோங்க இந்நூல் பயன்படுமென உறுதியாக நம்புகிறோம்.

முனைவர் தி.சே. சுப்பராமன்
முனைவர் சேயோன்

கட்டுரையாளர் பட்டியல்

சமுதாயநோக்கு

1. திரு. பா. தாமோதரன்
1, கம்பர் தெரு
மேத்தா ந கர், சென்னை - 29

2. முனைவர் கு. மோகனராசு
பேராசிரியர்
திருக்குறள் ஆய்வுப்பகுதி
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.

3. திருக்குறள் தூதர் ம. சக்கரவர்த்தி
மாநிலப் பொருளாளர்
உலகத் திருக்குறள் மையம்
பெரியஓபுளாபுரம்கிராமம்&அஞ்சல்
கும்மிடிப்பூண்டி வட்டம்
திருவள்ளூர் மாவட்டம் 601 201

4. முனைவர் பெ. சுப்பிரமணியன்
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை - உயர் ஆய்வு மையம்
அருள்மிகு பழனியாண்டவர்
கலை பண்பாட்டுக் கல்லூரி
பழனி - 624 601

5. திருமதி செ. மகாலட்சுமி
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோவை - 46

6. புலவர் நடேச நாராயணன்,
எம்.ஏ., பி.எட்.,
மேல்நிலைப்பள்ளி தலைமைத்
தமிழாசிரியர் - ஓய்வு
1 கருணாநிதி தெரு, மேற்கு மாம்பலம்
சென்னை - 600 033

7. திரு. பி. மணி
விரிவுரையாளர்
மென்பொருள் தொழில் நுட்பவியல்
பெரியார்மணியம்மை
மகளிர் பொறியியற் கல்லூரி,
வல்லம், தஞ்சாவூர் - 613 403.

8. முனைவர் சோ.பாலசுப்பிரமணியன்
நூலகர், பெரியார்மணியம்மை
மகளிர் பொறியியற் கல்லூரி,
வல்லம், தஞ்சாவூர் - 613 403.

9. Dr. A. Kandiah
17, Edward Street, South Stratifield
New Australia.

10. டாக்டர் பொன்னம்மாள்
நடராஜன்
113, ஹபிபுல்லா ரோடு
சென்னை - 17

11. திரு. ந. செண்பகராமன்
காவல் துறை கண்காணிப்பாளர்
தமிழ்நாடு காவல் துறை
1, பட்டாலியன், திருச்சி - 2.

12. முனைவர் தி. தாமரைச் செல்வி
11, நான்காவது குறுக்குத் தெரு
வெங்கட்டா நகர்,
புதுச்சேரி - 605 011.

13. முனைவர் க. கோபால்
கே. ஜி. நர்சிங் ஹோம்
அரும்பாவூர் - 621 103
பெரம்பலூர் மாவட்டம்

14. திரு. ஏவி.கே. எழில்மணி
வழக்கறிஞர்
சென்னை உயர்நீதி மன்றம்
10, முதல் தெரு, நந்தனம் (விரிவு)
சென்னை - 35.

15. திருமதி ச. சிவகாமி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 113.

16. Dr. S. Kumaran
Department of Indian Studies
Universtiy of Malaya
Kulalambur, Malaysia

17. டாக்டர் கிருஷ்ணவேணி
அருணாசலம்
முன்னாள் முதல்வர்
விலிங்டன் சீமாட்டி கல்வியல் நிறுவனம்
கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம்
சைதை.

பிறமொழி ஒப்பீடு

1. திரு. ஆர். சந்திரசேகரன்
விரிவுரையாளர், ஆங்கிலத் துறை
ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன்
வித்யாலயா அறிவியல்
மற்றும் கலைக் கல்லூரி
பெரியநாயக்கன் பாளையம்
கோயம்புத்தூர் - 641 020

2. திரு. வே. நீலகண்டன்
விரிவுரையாளர்
ஸ்ரீ ராமகிருஷ்ணாமிஷன்
வித்யாலயா கலை &
அறிவியல் கல்லூரி
எஸ். ஆர். கே. வி. அஞ்சல்
கோயம்புத்தூர் - 641 020

3. திரு. ஆர். நாகராஜ்
முதுநிலை விரிவுரையாளர்
ஆங்கிலத் துறை
எஸ். என். எஸ். தொழில்
நுட்பவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 035.

4. திரு. எம். செல்வராஜ்
இளநிலை விரிவுரையாளர்
ஆங்கிலத் துறை
டிஐஇடி, பெருந்துறை.

5. முனைவர் ந. தேவி
முதுநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை
எம்ஓபி. வைணவ மகளிர் கல்லூரி
20, 4 லேன், நுங்கம்பாக்கம்,
சென்னை - 34.

6. Prof. **Gregory James**
Language Centre
Hongkong University of
Science & Tech, Clear Water Bay
Kowloon, Hongkong.

7. முனைவர் சண்முக செல்வகணபதி
முதல்வர்
அரசர் கல்லூரி, திருவையாறு
தஞ்சாவூர் மாவட்டம்.

8. திருமதி டி. சந்தோசப் பிரியா
30/4J சிவசக்தி நகர், எம்.பில்.
திருமலைநாயக்கன் பாளையம்ரோடு
ஜோதிபுரம் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 47

9. செல்வி சி. சாவித்ரி
சிறப்பு நிலை ஆய்வாளர்
(தெலுங்கு இருக்கை)
இந்திய மொழிகள் பள்ளி
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 5

10. Mr. **S. Krishnachand Chordia**
Research Foundation for
Jainology (Regd) "Sugan house"
18/1, Ramanuja Aiyer Street,
Sowcarpet, Chennai - 79.

11. Dr. **M. Sampathkumar**
Department of Telugu
Madras University, Chennai - 5.

12. Prof. **N.D. Mirajkar**
Delhi University, Delhi.

13. Dr. **Lalitha N. Mirajkar**
Delhi University, Delhi

14. Dr. **Ravi Prakash Tekchandani**
Delhi University, Delhi

15. Mr. **Prakash C. Pattanaik**
University of Delhi, Delhi

16. Prof. **V. Gopalakrishna**
Senior Fellow, Dravidian Studies
Dravidian University
Kuppam - 517 425 (A.P.)

17. Dr. **C.G. Rajendra Babu**
Professor and Head
Department of Malayalam
University of Madras
Marina Campus, Chennai - 5

18. Dr. **K. Raja**
Bharathidasan University
Tirichy

பொது

1. திருமு மோகன சுந்தரபாண்டியன்
வழக்குரைஞர்
மனை எண் 48, கதவு எண். 9
பாண்டியன்தெருசங்கரன் அவென்யு
வேளச்சேரி, சென்னை - 42

2. டாக்டர் ஆ. தசரதன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 113.

3. முனைவர் ச. திருஞானசம்பந்தம்
விரிவுரையாளர், தமிழ்த்துறை
ம.தி.தா. இந்துக் கல்லூரி
திருநெல்வேலி - 10

4. Mr. **N.V. Subbaraman**
Editor Young Poet
12/1045. Jeevan Bima Nagar
Anna Nagar West Extn.
Chennai - 600 101

5. புலவர் செ. இராசு எம்ஏ, பிஎச்டி
26/7, சின்னமுத்து இரண்டாம் வீதி
வி.எஸ்.பி. தியேட்டர் எதிரில்
இடையங்காட்டு வலசு
ஈரோடு - 638 011

6. முனைவர் கொடுமுடி சண்முகம்
செயலாளர், தமிழ்வளர்ச்சிக் கழகம்
11பி, இரண்டாம் நிழற்சாலை,
இந்திராநகர், சென்னை - 20.

7. முனைவர் சேயோன்
கௌரவச் செயலர்
மயிலைத் திருவள்ளுவர்
தமிழ்ச் சங்கம்
மயிலை, சென்னை - 4.

8. Dr. **M. Sadasivam**
Retd. Prof. Of Tamil
7, Valliammai II Street,
Erode - 638 004.

9. Justice Dr. **S. Mohan**
Mylai Thiruvalluvar Tamil Sangam
Chennai - 4

10. Dr. **Aranga Ramalingam**
Prof. of Tamil
University of Madras, Chennai - 5.

11. பேரா. கருவை. பழனிசாமி
திருமொழி பதிப்பகம்
42, பாரதீசுவரர் குடியிருப்பு
சூளைமேடு முதன்மை சாலை
சென்னை - 94.

12. முனைவர் ச.வே. சுப்பிரமணியம்
உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்
தமிழூர் - 627 808

13. முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 113

14. முனைவர் அன்னி தாமசு
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 113

15. முனைவர் தி. மகாலட்சுமி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 113

16. திரு. நு.ர. ஆறுமுகம்

17. திரு. பு.ஏ. இராமையா இஆப.,
அரசுச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும்
இந்து சமய அறநிலையத்துறை
தமிழ்நாடு அரசு, சென்னை -9

18. செல்வி க. ஜெயந்தி
முனைவர் பட்ட ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 113

பொருளடக்கம்

சமுதாயநோக்கு

பிறமொழி இலக்கிய ஒப்புமைகள்

பொது

சமுதாய நோக்கு

திருக்குறள் - ஒரு தீர்வுத்திரட்டு

பா. தாமோதரன்

மனித வாழ்க்கைக்கு "அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்" (குறள் 611) என்ற ஆள் வினையுணர்வை வலியுறுத்திய வள்ளுவத்தில் அகழுந்தோறும் வெளிப்படவல்ல "அறத்தீர்வுகள்" பெருமளவில் உள்ளன. திருக்குறள் என்னும் திரட்டி லிருந்து மனிதனை வழிப்படுத்தி நலப்படுத்தவல்ல 'அவ்வறத்தீர்வுகள்' ஐந்து பகுப்புகளாக மேற்கொள்ளப்பட்டு, அவ்வழியின்கண் வாழ்வியற் சிக்கலுக்குத் தீர்வுகள் தரப்பட்டுள்ளன. 'குறள் தொடர்களே' தீர்வுத் தலைப்புகளாக எடுத்தாளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மனிதரும் இவ்வுலகில் 'வாழ்வாங்கு வாழ்வதற்கான' விழுமிய தீர்வுகளைத் தரவல்ல திறமிகு நூல் திருக்குறள் எனத் திண்ணமாய்க் கூறலாம். மேலும் வாழ்க்கையில் நேர்படும் சிக்கல்களை எளிதில் தீர்ப்பதற்கு ஏதுவான 'அறத் தீர்வுகளை' நல்கக்கூடிய கொள்கலமும் திருக்குறளேயாகும்.



திருக்குறளில் ஊடுருவியுள்ள நுட்பமிகுத் தீர்வுகள், 'ஓரளவு' அகழ்ந்தெடுக்கப் பெற்று ஐந்து பகுப்புகளாக இக்கட்டுரையில் வீறுபெற்றுள்ளன.

தீர்வு ஒன்று: 'ஒத்தது அறிவான்' : (குறள் 214)

'உள்ளத்தால் உள்ளலும் தீதே' (குறள் 292) என வள்ளுவர் விடுத்த ஆக்கவுரையை மனித மனங்கள் ஏற்க மறந்த காரணத்தால் 'நிம்மதியின்மை' எங்கும் நிறைந்திருக்கக் காண்கின்றோம். பல திறன்களை உள்ளடக்கி வாழ்க்கையில் உயர்நிலை அடைந்தவர்களும் 'சுயநலம்' என்ற புல்லறிவுச் செயற்பாட்டால் பிறரின் நலன்களுக்குக் கேடு விளைத்து, அதன்வழித் தங்களுக்கும் தீராத் தீவினையைத் தேடிக் கொள்கின்றனர்.

எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும் *(குறள் 207)*

> தனிநல விரும்பிகள் அறிந்தோ அறியாமலோ தம்மைச் சமுதாயத்திலிருந்து பிரித்துத் தனிமைப்படுத்திக் கொள்ள முனைகின்றார்கள். எந்த அளவிற்குச் சமுதாயத்திலிருந்து தம்மைப் பிரித்துக் கொள்கின்றார்களோ அந்த அளவிற்கு மனித உறவு என்னும் இழை நைந்து கொண்டே வருகின்றது[1].

மேற்கூறிய சான்றோரின் கருத்து குறளின் குறுகிய மனநிலை எதிர்ப்புக்கு அரண்செய்வதாக உள்ளது. இப்புன்மை நிலையைப் போக்குவதற்குத் திருக்குறளின் தீர்வுகள் யாது எனின்,

அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு *(குறள் 72)*

என்று அன்புணர்வை உடைமையாகக் கூறிப் பிறவுயிர்களின் துன்பத்தைத் தானுற்றத் துன்பமாகப் பாவிக்கவும் (குறள் 315) உலகவுயிர்களையெல்லாம் தன்னொத்த உயிர்களாக நேசிக்கவும் (குறள் 244) குறியெதிர்ப்பின்றித் தருவதும், அவ்வழிப் புகழ் எய்துதலும், (குறள் 231) என்றவாறு நலமிகு வழிகளை மனிதகுல உய்விற்கான உன்னத நெறிகளாய்த் தருகிறது திருக்குறள்.

எதிர்பார்ப்பின்றித் தருவது மூலகமாகத்தான் ஒருவன் தன்னைத் தரமுயர்த்திக் கொள்ள முடியும் என்ற கருத்தை ஒரு கொள்கை முழக்கமாகவே திருக்குறள் தந்துள்ளது எனச் சொல்லலாம்.

ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் *(குறள் 214)*

'தன்னலம்' என்ற புகழ்க் கொல்லியை வேரறுக்க ஒப்புரவு மாண்பே உற்ற தீர்வாகத் தரப்படுகிறது.

தீர்வு இரண்டு: 'இடுக்கண் வருங்கால் நகுக' (குறள் 623)

தினையளவுத் துன்பங்கள் கூட இன்று மனிதனின் செயல்திறன்களை முடக்க நிலைக்கு உட்படுத்துகின்றன எனலாம். துன்பச் சூழல்கள் அனைத்தும் தங்களை அழிக்க வந்த அதிர்வுகளாகப் பாவித்து மனிதமனங்கள் இடிபாடுகளுக்கு இலக்காகின்றன.

இடையூறுகள் என்பவை உயிராற்றல்களை வேகமாக வெளி படுத்தும் வாழ்க்கைக் கூறுகள் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

என்ற மூதறிஞரின் அனுபவச் சொற்கள் ஆக்கம் சேர்ப்பதாக உள்ளன.

துன்பச் சூழல்களில் போற்றி ஒழுகப்பட வேண்டிய பொறையுடைமைத் தன்மை தவிர்க்கப்படுவதாலும் தீவிரவாதம், வன்முறை போன்ற இழிசெயல்கள் உருவெடுக்கின்றன.

இலக்கம் உடம்பு இடும்பைக்க என்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல் *(குறள் 627)*

இயல்புணர்ந்த மேலோர்கள்

(i) நன்மையோ தீமையோ வந்துற்ற சூழலை அவ்வண்ணமே ஏற்பார்கள்

(ii) அச்சூழலில் தங்களை இழக்கமாட்டார்கள்

(iii) எத்தகு சூழலையும் நுண்மாண் நுழைபுலத்துடன் பயன்படுத்தித் தங்களின் நிலையை மேம்படுத்திக் கொள்வார்கள்.

சுடச்சுடரும் பொன்னே போல ஒளிவிடும் *(குறள் 268)*

என்றவழித் தாக்கும் நெருப்பிலும் தங்களின் தரமுயர்த்திக் கொள்வார்கள் உரனுடையவர்கள் என்பதே திருக்குறள் தரும் தீர்வு.

தசையிடை நார்போல் வானிடை வளிபோல, வள்ளுவர் குறளில் அவர் பேசும் பொருள் எதுவாயினும் விரவி நிற்பன வற்புறுத்தப் படுவன அயராத உழைப்பு, அகலாத முயற்சி உயர்ந்தவை காணும் உள்ளம்[3]

என்று சுடர்பட குறளின் பொருண்மைகளை உணர்த்தி மனித மனங்கள் மேம்பட வேண்டிய அவசியத்தை அறிவுறுத்துகிறார் அறிஞர்.

தீர்வு மூன்று: 'தன்னைத்தான் கொண்டொழுகல்' (குறள்: 974)

மனிதன் சமுதாயத்தில் பிறழ்வின்றி நடப்பதற்காகச் சட்டங்களும், அவற்றின் வழி இயங்காவிடில் உற்ற தண்டனைகளும் பெரிதளவில் இயற்றப்பட்டுள்ளன. மனிதனும், தன்னின் செயல்கள் அனைத்தையும், அச்சட்டங்களின் "ஏற்பு-விலக்கு" நிலைகளுக்கு ஒட்டியமைத்து வாழ முற்படுகின்றானேயன்றித் தன்னளவில் - அறவழியில் ஒழுகுதல் என்ற பண்புணர்வு இன்றில்லை எனலாம்.

திருக்குறள் மிகத் தீர்க்கமாகத் திறனறி சொற்களால் உலகிற்கு விழிப்புணர்வை வழங்க முனைகின்றது.

நிறைநெஞ்சம் இல்லாத ஆணும், பொருள் விழையும் பெண்ணும் 'அறமழித்து' இணைவதால் உருவாகும் ஆட்கொல்லி (எய்ட்ஸ்) நோய், இன்று உலகையே அச்சுறுத்தும் சேர்ந்தாரைக் கொல்லியாகத் திகழ்கின்றது.

வந்துற்ற நோயைத் தீர்க்க மருந்துகளும், விழிப்புணர்வை ஏற்படுத்த விளம்பரங்களும் தேவை என்ற போதும், ஒரு நிரந்தரத்தீர்வாக இலங்கக்கூடியது மக்கள் மனங்களில் இயல்பாக ஊற்றெடுக்க வேண்டிய "தீயவை தீயினும் அஞ்சப்படும் (குறள் 202) என்ற கட்டுப்பாட்டுணர்வே ஆகும்.

அறத்தான் வருவதே இன்பம் *(குறள் 39)*

என்ற 'உயர்-உயிர்'ப்பண்பைத் தன்னின் வாழ்நெறியாகக் கொண்டு மக்கள் வாழ வேண்டும். அறவழியில் அமைந்த உள்ளத்தை உடைமையாக்கி.

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார் *(குறள் 989)*

என உயர வேண்டும். எத்தகு சுழலிலும் தம் நிலையிலிருந்து வழுவாது வாழும் பெற்றிமைத் தன்மையே ஒருவர்க்குத் தம்மையே ஆளக்கூடிய சான்றாண்மை நிலையைத் தரும். அப்பெருமித நிலையில் அவனை அணுகி இடர் இணைக்கும் துணிவு இவ்வுலகில் எவருக்குமே இராது. அவ்வாறு எதிராக எண்ணுபவர், அவ்வளவிலேயே அழிந்து போவர்.

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல் *(குறள் 894)*

என்றவழி நிறைகுணங்களால் தம் நெஞ்சை நிரப்பிக் கொண்டவன் முன்னர், தீண்ட வந்த தீங்குகள் திறனற்றுப் போகும் என்பதே திருக்குறள் வழித் திட்பத் தீர்வு.

தீர்வு நான்கு: 'மலரினும் மெல்லிது காமம்' (குறள் 1289)

"உடம்பொடு உயிரிடை என்ன" (குறள் 1122) என்று தலைவனும் "அவர்திறம் உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு" (குறள்: 1298) என்று தலைவியும், கவின்படச் சுட்டிய நிகழ்வைக் கருத்தொருமித்த இல்லற வாழ்வின் செப்பங்களாகச் செவ்விதின் செப்புகின்றது திருக்குறள்.

இன்றைய உலகியலில் கணவன் மனைவியரிடையே தன் முனைப்பு ஓங்கலால் (Egoism) கருத்து முரண்கள் பலப்பட முகிழ்த்து, விட்டுக் கொடுக்காத 'அவ' நெஞ்சே இருவருள்ளும் ஆர்ப்பரித்து நிற்கின்றது.

பிறரை அடக்கி வென்றால் தான், அவர்களுடன் வாழ முடியும் என்று காணப்படும் உலகத்தில், அன்புடையவர் களிடத்தில் அடங்கித் தோற்றுவிடுவது நன்மை என்று காதல் வாழ்க்கை உணர்த்துகின்றது

''உப்பமைந்தற்றால் புலவி'' (குறள் 1302) என்று உணவிலிட்ட உப்பின் அளவினதாய் ஊடல் அமைந்து, அவ்வுடலிலும் அன்புமிகுந்து கூடும் போது, "தினைத்துணையும் ஊடாமை வேண்டும்" (குறள் 1282) என்ற வண்ணம் உப்பமைவு ஊடலும் அறவே கூடாது என்று நயன்பட நவில்கின்றது குறள்.

கணவன் மனைவி இருவருமே, அன்பை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையை முறைப்படுத்துதல் வேண்டும். அவ்வழி அமைத்திட்ட இல்வாழ்வில் குற்றங்கள் புலப்படாது, குணங்களே ஓங்கி நிற்கும், யார்விட்டுக் கொடுப்பது என்ற புல்லறிவு புறந்தள்ளப்பட்டு, மனமுவந்து தியாகம் செய்யவல்ல திருந்திய வித்தகப் போக்கு இருவரிடையேயும் விஞ்சி நிற்கும்.

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் *(குறள் 985)*

என்ற கடனறி செவ்விய நெஞ்சினரே,

மலரினும் மெல்லிது காமம் *(குறள் 1289)*

என்ற "மென்மை - மேன்மையை" நுகரவல்ல திறன் பெறுவர் என்பதே திருக்குறளின் தீர்வாகும்.

தீர்வு ஐந்து: "ஆக்கம் இழந்தேமென்ற அல்லாவார்" (குறள் 593)

மக்கள் தம் வாழ்வின் மேன்மைக்காகப் பல வழிகளில் வினை விழைவராய் முயல்கின்றனர். செயல் முனைவோர் அனைவரும் கருதிய இலக்கை அடைகின்றனரா? எனின், ஒரு சிலரைத் தவிர, பலர் தொய்ந்தநிலையில் தொலைந்து போகின்றனர்.

படிப்பில் தோல்வி, வியாபாரத்தில் தோல்வி, வேலை இன்மை, வேலையிலிருந்து நீக்கிய வன்மை, நோயின் கடுமை, செல்வமின்மை, என்று பல இன்மைகள் மக்களின் மனநிலையில் சோர்வை உண்டாக்குகின்றது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் *(குறள் 972)*

என்ற வழி பிறப்பால் ஒரே தன்மையரிடையே சிலர் எழுச்சியடையவதும்; பலர் வீழ்ச்சியடைவதும்

நினைக்கப்படுவதாய் *(குறள் 169)*

உள்ளது.

இன்னாமை இன்பம் எனக்கொளின் *(குறள் 630)*

என்ற குறள்வழி, இலங்கும் துன்பங்களையே இன்பாகப் பாவிக்கும் மனநிலையை எய்துவது இன்றியமையாததொன்றாகின்றது.

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம் *(குறள்: 661)*

மேற்கொண்ட செயலின் மனவுறுதியும், விட்டகலாப்பற்றும் (Tenacity) ஒருவரிடம் திகழுமானால், அந்நிலையே "உள்ளியது எய்தல் எளிது (குறள் 540) என்ற 'விறல் ஈனும்" பெற்றிமையைத் தப்பாது தரும். மனவுறுதியுடன் முயலும் நேரங்களில் கூட நம் முயற்சிகள் ஏற்றம் பெறாத சூழல்களும் அமையக்கூடும். அந்நிலையிலும் "துன்பத்துள் துன்பம் உறுதல் இலன்" (குறள்: 629) என்ற மனச்சமன்நிலையுடன் (Equanimity of mind) இயங்கவல்ல இயல்பு நிலையை மேற்கொள்ள வேண்டும்.

"உன்னையே நீ அறிவாய்" என்ற சாக்ரடீஸின் சுட்டு நிலையும்,

தன்னுயிர் தான் அறப்பெற்றானை *(குறள் 268)*

என்ற குறள்வழி மனிதன் தன்னுள் உறைந்திருக்கும் ஆற்றலைத் தன்னளவிலேயே உய்த்துணரும் "அறிநெறி" நிலையே எத்தகு சூழலையும் எதிர்கொள்ளக்கூடிய திறனைத் தரும்.

இவ்வகையில் மன அளவில் "நன்றின் பால் உய்க்கக் கூடிய" (குறள்: 422) அறிவு ஓங்கு நிலையை எய்தியவர்கள்.

ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார் *(குறள் 593)*

என்ற குறள் வழி நலன்கள் நழுவிய நிலையிலும், தன்னம்பிக்கை யுடனும் மனமுடனும் தொடர் முயற்சியைப் பற்றி "எண்ணிய எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்" (குறள் 666) என்பதே குறள் குவலயத்திற்குத் தரும் குன்றாத் தீர்ப்பாகும்.

துணை நூல்கள்

1. டாக்டர் கு. மோகனராசு, திருவள்ளுவரின் குறிக்கோளியலும் உலகப்பொதுமையியலும், முதல் பதிப்பு, 1983, ப. 38.
2. டாக்டர் வ.சுப. மாணிக்கம், **திருக்குறட் சுடர்**, இரண்டாம் பதிப்பு, 1989, ப. 29.
3. டாக்டர் வா.செ. குழந்தைசாமி, **வாழும் வள்ளுவம்**, ஐந்தாம் பதிப்பு, 1992, ப. 89.
4. டாக்டர் மு. வரதராசன், **திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்**, மறுபதிப்பு, 1994, ப. 42.

* * *

திருவள்ளுவரும் பயங்கரவாத எதிர்ப்பும்

கு. மோகனராசு

இன்று உலகையே அச்சுறுத்தி வரும் கொடிய நோய்கள் எய்ட்ஸ், சார்ஸ், பயங்கரவாதம் என்பவையாகும்; இவற்றுள், முன்னிரண்டும் உடல் நோய்கள்; பயங்கர வாதமோ ஒரு மன நோய். இந்நோய், உலகையே இருளில் மூழ்க வைத்து விடுமோ என்ற பேரச்சம், நல்லவர் மனங்களில் நடுக்கத்தை உண்டாக்கி வருகிறது.

மத வெறி, ஆதிக்க வெறி, பணவெறி என்னும் இவற்றை மையமிட்டு எழும் இப்பெருநோயின் பிடியில், ஏழ்மை, ஏமாற்றம், எதிர்ப்புணர்வு, அறியாமை, பேராசை என்னும் இவற்றுள் ஒன்றோ பலவோ கொண்ட உள்ளங்கள் சிக்கிச் சீரழிகின்றன; உலகைச் சீரழிக்கின்றன.



இன்றைக்கு இருக்கும் அளவிற்குப் பயங்கரவாதம், இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்ட திருவள்ளுவர் காலத்தில் இல்லாமல் இருந்திருக்கலாம்; ஆனால், பயங்கரவாதத்திற்கு அடிப்படைகளான உணர்வுக்களும் உள்ளங்களும் அன்றைக்கும்

இருந்துள்ளன; அளவு வேண்டுமானால் குறைந்திருக்கலாம். அதனால்தான், வள்ளுவத்திலும் அதன் அடிச்சுவடிடுகளைக் காண முடிகின்றது.

அணுக்கத் தொடர்கள்

பயங்கரவாதத்தைச் சுட்டும் நேரடிச் சொல்லோ தொடரோ திருக்குறளில் இல்லை; என்றாலும், அதற்கு அணுக்கமான பொருள் கொண்ட தொடர்கள் காணப்படுகின்றன. அவற்றுள், 'வேலொடு நின்றான்' (குறள் 552) என்பது ஒன்று; இத்தொடர், அன்றைய ஆறலைக் கள்வர்களையும் சுட்டும். இவர்கள், தம் வழியே வருபவர்களைப் பணத்திற்காகவும் கொல்வார்கள்; அவர்களிடம் பணம் இல்லையென்றால், அவர்கள் துடிதுடித்துச் சாவதைக் காணவும் கொல்வார்கள்.

'கொலையின் கொடியார்' (குறள் 550) என்பது மற்றொரு தொடர். இது, கொலையாளர்களிலேயே மிகக் கொடிய கொலையாளர்களைச் சுட்டுவது; கொலை உணர்விலும் மிகக் கொடிய உணர்வு கொண்டவர்களை இத்தொடர் சுட்டுகின்றது என்றும் கொள்ளலாம்.

'வேந்து அலைக்கும் கொல் குறும்பு' (குறள் 735) என்பது இன்னொரு தொடர். நாட்டை ஆள்பவர்களையே கதி கலங்க வைக்கும் கொலைத் தொழிலைக் கொண்ட குழுவினரைச் சுட்டுவது இத்தொடர்.

இம்மூன்று தொடர்களும், இன்றைய பயங்கரவாதிகளுக்கு இணையான கொலை வெறி கொண்ட தீயவர்கள் திருவள்ளுவர் காலத்தில் இருந்ததை உணர்த்துகின்றன.

கொடுமையின் கொடுமை

இப்பயங்கரவாதிகள், தம் தொழில் நிறைவேற்றக் கருவிகளாகக் கொள்வது கொலைக் கருவிகளையே; ஆயுதங்களையே. இவை, காலத்திற்குக் காலம் வேறுபட்டுத் தோன்றுவன.

உலக உயிரினங்களைக் குறிப்பாக, மனித இனத்தைக் கொல்லும் கருவிகள் எந்த வடிவில் இருப்பினும், அவை கொடியவையே என்பது திருவள்ளுவர் துணிபு. அதனால்தான் "கணை கொடிது" (குறள் 279) எனச் சுருங்க உரைத்துக் கொலைக் கருவிகளின் கொடுந்தன்மையை விளங்க உரைக்கின்றார்.

இக்கொலைக் கருவியைச் சுட்டும் பிறிதோரிடத்தில் "வில்வணக்கம் தீங்கு" (குறள் 827) எனச் சுட்டுவதையும் காண முடிகின்றது.

கொலைக் கருவிகளைக் கையிலே ஏந்துபவர்கள் பல நிலையினர்; படை வீரர்கள், அரசின் கொலைக்களப் பணியாளர்கள், கொலை வெறியர்கள் அவர்களுள் சிலர். யாவரேயாயினும் கொலைக் கருவிகளைக் கையிலே ஏந்துவார்களேயானால், அவர்கள் மனம் நல்லது செய்யத் தூண்டுதலாக அமையாது என்பது திருவள்ளுவர் துணிபு. இதனை,

படைகொண்டார் நெஞ்சம் (போல்) நன்றூக்காது
(குறள் 253)

என வரும் தொடர் தெளிவு செய்கின்றது.

அரசின் கொலைக்களப் பணியாயினும் அது கொடுமையானதே; இரக்கமற்ற செயலே; அச்சத்திற்கு உரியதே என்பதை,

காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும் *(குறள் 1224)*

என்னும் குறள்வழி நுட்பமாக உணர்த்துகின்றார்.

வேள்வி, நல்ல நோக்கத்தோடே செய்யப்படுவதாயினும் அதில் பிற உயிர்களைக் கொல்வது கூடக் கொடிய செயல்தான் என்பதைப் பக்குவமாக உணர்த்துகிறார் திருவள்ளுவர் (குறள் 259)

எதிர்ப்பின் மறுபக்கம்

பயங்கரவாதத்தை - வன்முறை வெறியைச் சாடும் திருவள்ளுவப் பெருமானார், அந்த எதிர்ப்பின் மறுபக்கமாக ஓர் ஆக்க நிலைச் சிந்தனையில் - செயற்பாட்டில் - மிகமிகப் பக்குவமாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்கிறார்; அதுதான் வன்முறையை வேரறுக்க மென்மையதாக்கும் உத்தி. அந்த உத்தியின் ஒரு சில வெளிப்பாடுகள் வருமாறு:

1. தாம் படைத்த கடவுளை, எட்டுவகைப் பண்பினன் ஆக்கிய திருவள்ளுவர், அவனை வில், வேல் போன்ற கொலைக் கருவிகளை ஏந்தியவனாகப் படைக்க வில்லை. அவனை மலரினும் மிகமிக மென்மையனாகவும் (குறள் 3), அருளாளனாகவுமே (குறள் 8) படைக்கின்றார்;

2. அரசனுக்குரிய பல்வேறு பண்புகளை முறைப்படுத்தி உரைத்த திருவள்ளுவர், எங்குமே வீரத்தை ஒரு பண்பாகச் சுட்டவில்லை; தற்காப்புக்காக மட்டுமே படைகள் அரசுக்

குரியதாக அமைய வேண்டும் எனக் கருதும் திருவள்ளுவர், போர் அடிப்படையில் எழும் பயங்கரவாதச் செயல்களை ஏற்கவில்லை. “வேலன்று வென்றி தருவது” (குறள் 546) என்று அரசனுக்கு அறிவுறுத்துகின்றார்;

3. எண்ணம், சொல், செயல் ஆகிய அனைத்து நிலைகளிலும் வன்முறை உணர்வுகள் இல்லாத அருளாளர்களையே துறவிகளாக வரையறுத்துக்கூறுகின்றார்.

4. வன்முறைகள் அற்ற மென்முறை வாழ்விற்குப் படிப்படியாக அடியெடுத்து வைக்க இல்லறத்தாரைப் பல கோணங்களில் ஆற்றுப்படுத்துகிறார்.

5. காமத்துப்பாலில் போரில் வீரனான தலைமகனின் வன்முறை உணர்வுகளைப் பெண்மையின் மென்மையால் நீர்க்கச் செய்கின்றார்.

பயங்கரவாதத்தை வேரறுக்கும் வழிகள்

உலகின் எந்த ஒரு பகுதியிலும் பயங்கரவாதிகள் இல்லாத நிலை உருவாக வேண்டும் எனக் கருதும் திருவள்ளுவர், ஒவ்வொரு நாடும் அதில் விழிப்பாக இருக்க வேண்டும் என ஆற்றுப்படுத்துகின்றார் (குறள் 735); நாட்டை ஆள்பவர்கள், மக்களைத் துன்புறுத்தும் கொலை வெறியர்கள் போல் நடந்து கொள்ளக் கூடாது (குறள் 552) என்று நெறிப்படுத்துகின்றார். பயங்கரவாதச் செயல்கள் புரியும் தீயவர்கள் ஒரு நாட்டில் இருந்தால், அவர்களைக் களைகளைக் களைவது போல் வேரோடு களைய வேண்டும் (குறள் 550) என்று துணிவுரைக் கின்றார்.

பயங்கரவாதத்திற்கு அடிப்படையான மத, இன, நாடு அடிப்படையிலான மனப் புழுக்கங்கள் (இகல்) இல்லாதவாறு மனித சமுதாயம் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ளப் பல கோணங்களில் ஆற்றப்படுத்துகின்றார்.

பயங்கரவாதத்தை வேரறுக்கத் திருவள்ளுவர் காட்டும் பொதுவான வழிமுறைகளாகப் பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

1. பிறப்பால் உயிர்கள் எல்லாம் ஒன்றே என்னும் உண்மையை உணர்தல் (குறள் 972)
2. பிற உயிர்களின் துன்பங்களைத் தன் துன்பமாகக் கருதுதல் (குறள் 315)

3. எந்த உயிருக்கும் எந்தச் சூழலிலும் எள்ளளவும் தீங்கு செய்ய நினையாதிருத்தல் (குறள் 317)
4. பகையையும் நட்பாகக் கொண்டொழுகும் பண்புடையர் ஆதல் (குறள் 874)
5. நல்லன நாடித் தெய்வங்களுக்குச் செய்யப்படும் வேள்வி, வழிபாடு ஆகியவனவற்றிலும் உயிர்களைக் கொல்லா திருத்தல் (குறள் 259)
6. பிறர் பொருளைத் தமதாக்கிக் கொள்ள நினைக்கும் மன உணர்வுகளை வேரறுத்தல் (வெஃகாமை, கள்ளாமை)
7. பிரிவினை உணர்வுகளை வேரறுத்தல் (குறள் 34)
8. தீய நெறிகளில் மனத்தைச் செலுத்தாமல், உள்ளத்தைத் தூய்மையதாக வைத்துக் கொள்ளல் (குறள் 34)
9. கல்வியால், 'யாதும் ஊரே, யாதும் நாடே' என்னும் உணர்வை உருவாக்கம் செய்து கொள்ளல் (குறள் 397)
10. அன்பால் உலக உறவுகளை நாளும் நாளும் பெருக்கிக் கொள்ளல் (குறள் 74)
11. பெற்றோர்கள், தம் பிள்ளைகளை உலகப் பயன் கருதிய அறிவாளர்களாக உருவாக்குதல் (குறள் 68)
12. தீய இனத்தோடு எவ்வகையிலும் எள்ளளவும் தொடர்பு கொள்ளாமல் வாழ்தல் (சிற்றினம் சேராமை)
13. படிப்படியாக அருளுணர்வு பெற்று, எல்லா உயிரிடத்தும் அருள் செய்து வாழ்தல் (அருளுடைமை)

திருவள்ளுவர், பயங்கரவாத எதிர்ப்புக்காக நூல் எழுதியவர் அல்லர்; ஆனால், உலக மனித இன உணர்வு, உலக மனித இன உறவு, உலக மனித இன ஒருமைப்பாடு, உலக அமைதி என்பன அவருடைய உலகளாவிய இலக்குகளாக அமைந்தன; இந்த இலக்கிற்காகத் தடையாக அமைவன சாதி, மத, இன, நாட்டு வெறிகள்; ஆதிக்க வெறிகள்; பண வெறிகள். இவை பயங்கரவாதத்திற்கு அடிப்படைக் காரணங்கள். ஆகவே, திருக்குறளில் பயங்கரவாதத்திற்கு எதிர்ப்பான கருத்துகள் இடம்பெறலாயின.

மொத்தத்தில், பயங்கரவாத உணர்வுகள் இல்லாத ஓர் உயர்ந்த உலகை அவர் படைக்க நினைத்துள்ளார் என்பதை மேற்சுட்டிய கருத்துகள் உறுதி செய்யும்.

❋ ❋ ❋

திருவள்ளுவர் ஓர் ஊழல் எதிர்ப்பாளர்

ம. சக்கரவர்த்தி

மனிதன் எப்பொழுதும் நேர்மையாளனாக இருப்பதில்லை. குற்றங்களே செய்யாத மனிதனாகவும் இருப்பதில்லை. எனவே, ஏதாவது ஒருவழியில் அன்றிச் செயலில் தவறு செய்பவனாக இருக்கின்றான். சில நேரங்களில் மனிதனுக்குக் கொடுமை நிறைந்த செயல்களைச் செய்யவும் துணிந்துவிடுகின்றான்.

மனிதன் நேர்மையிலிருந்து பிறழ்ந்து, தவறு செய்ய முற்படும்பொழுது அவனுக்குத் தூண்டுகோலாக இருந்து வலிமை சேர்ப்பது அவனின் நெஞ்சே! ஆம், உண்மை. நெஞ்சிலிருந்து பிறக்கின்ற ஆசையே ஊழல் புரிவதற்குத் துணையாக நிற்கின்றது. அதனால் வரும் கேடுகளை மனிதனுக்கு உணர்த்தி எங்ஙனம் எச்சரிக்கை செய்கின்றார் திருவள்ளுவர் என்பதைக் காண்போம்.

அஞ்சுவ தோறும் அறனே; ஒருவனை
வஞ்சிப்ப தோறும் அவா *(குறள் 366)*



ஊழல் சொல்லும் பொருளும்

''ஊழல்'' என்ற சொல்லாட்சி திருக்குறளில் நேரிடையாகச் சுட்டப்பெற வில்லை. பழந்தமிழ் நூல்களிலும் இல்லை.

ஆனால் "ஊழ்" என்னும் சொல்லாட்சி உண்டு. இச்சொல் "முறைமை" என்னும் பொருளிலும் பயின்று வரும்.

ஊழ் - இருவினைக் கோட்பாட்டைக் குறிக்கும்.

1. நன்மை செய்தால் நற்பயன் விளையும்
2. தீமை செய்தால் தீயபயன் விளையும்
3. எதிர்பாராமல் நடைப்பெறுகின்ற இயற்கை முறை
4. இயற்கை முறை
5. உள்ளத்தில் இருந்து திடீர் என்று தோன்றுகின்ற இயற்கைப் பண்பு முறை
6. உலக இயற்கை, உலக நடைமுறைகள்

என்று "ஊழ்" என்பதற்கு உரையாசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

ஊழ் - தலைவிதி; பழவினை; பழவினைப்பயன்; முறைமை; நீதி; பழைமை முடிவு; முதிர்ச்சி; பகை; கதிரவன்; மலர்ச்சி; சகுனம்; பதனழி எனத் தமிழ் அகராதிகள் பொருள் தருகின்றன.

ஊழல் = முறைகேடு; அழுகிக்கெட்டது; கெட்டது; நரகம்

ஊழல் = ஊழ் + அல் எனப் பிரித்தால், - முறைமை சாராத; முறைமை அற்ற; முறைமைக்குப் புறம்பான எனப் பொருள் கொள்ளலாம்.

"ஊழ்" என்ற சொல்லில் இருந்தே "ஊழல்" என்ற சொல் உருவாக்கம் பெற்றிருக்கலாம்.

ஊழின் பெருவலி யாஉள *(குறள் 380)*

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவு இன்றித்
தாழாது உஞற்று பவர் *(குறள் 620)*

திருக்குறளில் ஊழைச் சுட்டும் சொற்களும் தொடர்களும்

இன்று பல துறைகளிலும் நடைபெறும் முறைகேடுகளையே அல்லது முறைமை அல்லாதவைகளையே ஊழல் என்கிறோம்.

திருவள்ளுவர் காலத்தில், இன்றுள்ள அளவிற்கு ஊழல்கள் புரையோடியனவாக இல்லாதிருக்கலாம்; ஆனால், ஊழலே இல்லாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை; அதற்குத் திருக்குறளில் வரும் ஊழல் எதிர்ப்புக் கருத்துகளே சான்று.

ஊழலுக்கு நெருக்கமான - அணுக்கமான பொருள் தருகின்ற சொற்களும், தொடர்களும் பல குறட்பாக்களில் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

"அல்லவை தேய" - 96, "அல்லவை செய்யார்" - 164, "அல்லவை செய்தலின்" - 182, "அல்லவை செய்தல்" - 274, "அல்லவை செய்து" - 246, 466, "அல்லவை நீக்கி" - 384, "அல்ல செயின்" - 116, "அறன் அல்ல" - 173, "அல்ல செய்யக் கெடும்" - 466.

"இழுக்கா" - 35, "அறன் இழுக்கா" - 48, 384, "இழுக்காமை" - 536, "இழுக்கார்" - 952, "இழுக்கியான்" - 535, "கள்ளாமை" - 281, "கள்ளத்தால்" - 282, "களவினால்" - 283, "கள்வார்க்கு" - 290, "குற்றம் இலனாய்" - 1025, "குன்றுவர் குன்றுவ" - 965, "குன்றுவ செய்தல்" - 954, "சலத்தால்" - 669, "சலம்பற்றி" - 956, "தீயவை தீய" - 202, "தீயவை செய்யற்க" - 205, "தீயவை செய்தார்" - 208, "தீவினை" - 210, "பழிபடுவ" - 172, "பழிக்கும்வினை" - 656, "பீழைதரும்" - 658, "நடுவுஇகந்து" - 113, "நடுவு ஒரீஇ" - 115, "நடுவு இன்றி" - 117 இவை போன்று வரும் குறட் சொற்களிலும், தொடர்களிலும் ஊழலால் வரும் கேட்டினையும், அதனைக் களையும் திறனையும் சுட்டிக்காட்டியுள்ளார் திருவள்ளுவர்.

பொருள் நோக்கிலான ஊழல்கள்

மனிதனைத் தவறான முறையில் பொருள் ஈட்ட ஊக்குவிப்பது இருநிலைப்படும். ஒன்று வறுமை. மற்றது நிறைவேறாத ஆசைப் பெருக்கு. இவ்விரண்டில் ஏதேனும் ஒன்று நிறைவுபெறும் பொருட்டு முறைகேடான, அறம் சாராத செயலில் ஈடுபட்டுப் பொருள் ஈட்ட முனைகின்றான். அதனை மிகவும் வன்மையாகக் கண்டித்துச் சாடுகின்றார் திருவள்ளுவர்.

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை *(குறள் 656)*

என்ற குறளில் வறுமையால் ஏற்படும் ஊழலை உணர்த்துகின்றார்.

மனிதனின் உள்ளத்தை இடையறாது அரித்துக் கொண்டிருக்கும் தேவையற்ற ஆசைகளால், பல சூழ்நிலைகளில் கையூட்டல் பெறுதல் போன்ற முறைகேடான வழிகளில் பொருள் தேட முனைகின்றான். இதனால், அவன் அழிவது மட்டுமல்லாமல், இருக்கும் நிலையான பொருள்களும் அழிந்து போகும் என எச்சரிக்கின்றார்.

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் *(குறள்659)*

சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்துஇரீஇ யற்று *(குறள்660)*

என வரும் குறளில் பொருள் ஆசையின் காரணமாக எழும் ஊழலினால் வரும் கேட்டினை நமக்கு உணர்த்துகின்றார் திருவள்ளுவர்.

ஆட்சித்தலைமையும் ஊழல்களும்

ஆட்சித் தலைவன் நடுநிலைப் பண்பிலிருந்து பிறழாமல், நேர்மையான முறையில் ஆட்சி செலுத்தவேண்டும். இத்தகைய ஆட்சித் தலைவர்களை உலகின்கண் வாழும் குடிமக்கள் இறைவனுக்குச் சரிநிகராகப் போற்றுவர் வாழ்த்துவர் என்பதனை,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும் *(குறள் 385)*

என்ற குறள் வழி அறிய முடிகின்றது.

நாட்டை ஆட்சிசெய்யும் ஆட்சியாளன் நாட்டுமக்களை நன்முறையில் ஆண்டு அவர்களை அறநெறியில் அழைத்துச் செல்லக் கூடியவராக அமைதல் வேண்டும். ஏனெனில், ஆட்சியாளரைச் சார்ந்தே குடிமக்கள் அமைவர்; செயல்படுவர். அதனால், ஆட்சியாளன் தன் நேர்மைப் பண்பிலிருந்தும். கடமையிலிருந்தும் சிறிதும் பிறழாமல், அறத்திற்குப் புறம்பான செயல்பாடுகளைப் புறக்கணித்து நடத்தல் வேண்டும்.

ஆட்சித்தலைவன் தீயவனாக அமைந்துவிட்டால், நாட்டில் நேர்மையான ஆட்சிக்கு வாய்ப்பின்றிப் போகும். ஆட்சியாளன் தவறான முறைகளைத் தனதாக்கிக் கொண்டு பொருள் தேட முனைவான். அப்போது, நல்லவற்றையே செய்யத் தெரியாத கொடியவர்களும் இவனுடன் சேர்ந்து கோடிகோடியாகக் கொள்ளை இடுவர். இதனால் நாடும், நாட்டு மக்களும் அல்லல்படுவர் என்பதனை,

அல்லல் பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை *(குறள் 555)*

என்ற குறளின் வழியில் ஆட்சியாளன் எப்படி இருக்கவேண்டும் எனச் சுட்டிக்காட்டுகின்றார் திருவள்ளுவர்.

பணியாளர் தேர்வும்

காதன்மை கந்தா அறிவுஅறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும் *(குறள் 507)*

என்ற குறளின் வழியில், தொழில் அறிவு இல்லாதவரிடம், அவர்மீது கொண்ட அன்பின் காரணமாக ஒரு தொழிலை ஒப்படைப்பது அறியாமை. அச்செயல் எல்லாவகையான துன்பங்களையும் கொடுக்கும் என்கிறார். எனவே திறமைக்கு முதலிடம் தந்து பணியாளர்களைத் தேர்வுகொள்ள வேண்டும். இதனை,

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும் *(குறள் 508)*

என்ற குறளின் மூலம் உய்த்துணர முடிகின்றது.

பணி செய்தலில் ஊழல்கள்

ஒரு நிருவாகத்தில் பணிபுரியும் அலுவலர்களும், பணியாளர்களும் கடமையுணர்வு கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். அன்றிச் சோர்வும், மடிமையும் கடமையைச் சரிவரச் செய்யாமல் காலம் தாழ்த்துவதனாலும் பொருள் இழப்பு ஏற்பட நேரிடும். தொழிலாளர்களும், நிருவாகமும் தம் கடமை யுணர்வை உணர்ந்து, நேர்மைப் பண்போடு நடந்து கொண்டால் தான் தொழில் வளரும்; பொருள் பெருகும்; நாடு வளம் பெறும். இதில் பிறழ்ந்து உண்மைக்குப் புறம்பான செயல்களில் செய்ய முனையும்போது அந்தத் தொழில் நசிவுறும் என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும் *(குறள் 466)*

என்ற குறளின் வழியில், செய்ய வேண்டாதன செய்தாலும் கேடு வரும். செய்ய வேண்டியவற்றைச் செய்யாவிட்டாலும் கேடு வரும் என்று எச்சரிக்கை விடுக்கின்றார் திருவள்ளுவர்.

முறைப்படி அமையாத உழைப்பு, பலர் துணையாக இருந்து பாதுகாத்தாலும் வெற்றிதராது. அதனால் அழிவே ஏற்படும் என்பதை,

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும் *(குறள் 468)*

என்ற குறளின் வழி அறிய முடிகின்றது.

கல்வி

கற்பிக்கும் ஆசிரியர், மாணவனின் சிந்தனைத் திறனைத் தூண்டிப் பொறுமையோடும், பொறுப்புணர்வோடும் துணைநின்று, மாணவர்கள் சிறந்த சிந்தனையாளர்களாக, அறிஞர்களாக உருவாக்க வழிவகை காண வேண்டும். ஆய்ந்து அறியும் அறிவுசார்ந்த மாணவர்களை உருவாக்குவதில் வல்லவர்களாக இருத்தல்வேண்டும் என்பது திருவள்ளுவரின் உள்ளக் கிடக்கை. இதனை,

இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது
உணர விரித்துஉரையா தார் *(குறள் 650)*

என்ற குறளின் வழி உணர்த்துகின்றார்.

கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும் *(குறள் 845)*

என்ற குறளில், படிக்காதவற்றைப் படித்ததாகக் கூறி ஒருவர் நடிப்பது, அவர் தெளிவாக அறிந்தவற்றைக் கூடப் பிறர் ஐயப்படுமாறு செய்து விடும். இதுவும் ஓர் ஊழல் தன்மை வாய்ந்த செயலாகும்.

நீதி

பாட்டாளியின் உழைப்பைப் பதவியில் இருப்பவன் உறிஞ்சிக் கொழுத்து வாழ்கின்றான். இது சமூக அநீதியாகும். நீதி தவறியதால் வரும்கேட்டினைச் சுட்டிக்காட்டி நல்வழிப் படுத்த முனைகின்றார் திருவள்ளுவர். இதனை,

ஒன்றானும் தீச்சொல் பொருள்பயன் உண்டாயின்
நன்றாகாது ஆகி விடும் *(குறள் 128)*

என்ற குறளில் அறியலாம்.

பகைவர், நண்பர், அயலோர், சுற்றத்தினர், உறவினர், சமூகத்தினர், சமுதாயத்தினர், சாதியினர், மொழியினர், மதத்தினர், நாட்டினர், இனத்தினர் எனப்பகுத்துப் பார்த்து ஒருதலையாக அமையாமல் "சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல்" நடுநிலைமையில் நின்று நீதியினை வழங்கவேண்டும் என்பது திருவள்ளுவரின் திடமான குறிக்கோள்.

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின் *(குறள் 116)*

என்ற குறளின் வழி நீதித்துறை எங்ஙனம் தம் கடமையைச் செய்ய வேண்டும் எனச் சுட்டிக் காட்டுகின்றார்.

ஆன்மீகத் துறை

துறவிகள், முற்றும் துறந்த சான்றோர்களாக, கீழான பற்றுகளைத் துறந்தவர்களாக, உலகமென்னும் நல்லுணர்வு உடையவர்களாக, "பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்" என்கின்ற உயிரின் உணர்வு உடையவர்களாக விளங்குவார்கள். இவர்களால் உலகம் நிலைபெறும்.

தவக்கோலத்தில் மறைந்து கொண்டு, தவத்திற்கு மாறான தீய செயல்களைப் புரிவது புதரில் மறைந்து நின்று வேடன் பறவைகளை வலைவீசிப் பிடிக்கும் செயலுக்கு ஒப்பாகும். இதனை,

தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த்து அற்று *(குறள் 274)*

எனவரும் குறளின் வழி அறியலாம்.

பல உயிரினங்களின் நலனுக்குப் பாதுகாப்பாளராகவும்; மக்கள் நல்வாழ்வுக்கு வழிகாட்டியவர்களாகவும், அறஉணர்வுகளை ஊட்டுபவர்களாகவும் இருக்க வேண்டியவர்கள் மாறுபட்டு, செய்யத்தகாத இழிவான செயல்களைச் செய்து உலகப் பழிக்கு ஆட்பட்டு அழிகின்றனர். இத்தகையவர்களை மிகவும் கண்டிக்கிறார் திருவள்ளுவர். இது,

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல் *(குறள் 276)*

என வரும் குறளில் தெரிய வருகிறது.

சிறப்புகள் செய்தலும் ஊழலும்

ஒரு நாட்டில் கலை, இலக்கியம், தொழில், தனிமனிதத்திறன், பொருளாதாரம் போன்ற அனைத்துத் துறைகளும் சிறந்து விளங்க வேண்டுமானால், நாட்டை ஆள்பவர்களும், தனியார் அமைப்புகளும், ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்குபவர்களைத் தேர்ந்தெடுத்துப் பலர் அறியச் சிறப்பித்தல் மற்றும் மேன்மேலும் ஊக்குவித்தல் மிகவும் இன்றியமையாதது ஆகும். அப்போதுதான் ஒவ்வொரு துறையிலும் திறமையாளர்கள் உருவாகமுடியும். மேலும், சிறப்புறச் செய்வதால் ஊக்கம்பெறுவர். பிறரும் ஒவ்வொரு துறையிலும் சிறப்புற விரும்புவர். சிறப்பினைப் பெற நல்ல முறையில் உழைப்பர்.

சிறப்பித்தல் என்பது, விருது வழங்குதல், பரிசுகள் வழங்குதல், பாராட்டிப் பொன்னாடை வழங்குதல், பொற்கிழி வழங்கிச் சிறப்பித்தல், பதவி உயர்வு கொடுத்தல் போன்றவையாகவும் இருக்கலாம்.

அவரவர் திறமைக்கேற்ப விருதுகள் சிறப்புப் பெயர்கள் வழங்கிச் சிறப்பித்தல் என்பதில் திருவள்ளுவருக்குப் பேரார்வம் இருந்திருக்கவேண்டும் போல் தெரிகின்றது. இதற்கு அவரின் குறள்களில் வரும் சிறப்பு விருதுகளே சான்று.

விருதுகள் வழங்குவதிலும் மிகவும் எச்சரிக்கையாக இருத்தல்வேண்டும் என்பது திருவள்ளுவரின் எதிர்பார்ப்பு.

இதனை,

> **இறப்பே புரிந்த தொழிற்றுஆம் சிறப்பும்தான்**
> **சீரல் லவர்கண் படின்** *(குறள் 977)*

என்ற குறளில் அறியலாம். மேலும்,

> **சிறப்புஅறிய ஒற்றின்கண் செய்யற்க, செய்யின்**
> **புறப்படுத்தான் ஆகும் மறை** *(குறள் 590)*

என்ற குறளில், பிறர் அறியும்படி ஒற்றர்களுக்குச் சிறப்புச் செய்தல் கூடாது; அப்படிச் செய்தால் மறைக்க வேண்டியதை ஆட்சியாளனே வெளிப்படுத்தியதாக ஆகிவிடும். எனவே சிறப்புகள் செய்வதிலும் எச்சரிக்கையாகச் செய்தல் வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

உலக அரங்கில் ஊழலுக்கு முதல் எதிர்ப்புக்குரல் கொடுத்த சான்றோன் திருவள்ளுவராகத்தான் இருக்க முடியும். நாடு நலம்பெற, உலகம் என்றும் தாழாமல் நிலைபேறுடன் விளங்க, "எல்லார்க்கும் எல்லாம்", "எல்லா உயிர்களுக்கும் எல்லாம்" என்ற உயரிய - உயர்த்தப்பட்ட நிலையில் வாழ, மனிதன் ஊழலற்ற சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் திருவள்ளுவர் வழிகோலியிருப்பதைத் திருக்குறளின் வழி அறிய முடிகின்றது.

> **நடுவுஇன்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்**
> **குற்றமும் ஆங்கே தரும்** *(குறள் 171)*

மனிதன் தெய்வீக நிலைக்கு உயரத் திருக்குறளின் மூலம் வழிவகை காணுகின்றார் திருவள்ளுவர்.

※ ※ ※

திருக்குறளில் தொல்படிமவியல் சிந்தனைகள்

பெ. சுப்பிரமணியன்

உலகப் பொதுமறையான திருக்குறளில் தொல்படிமவியல் சிந்தனைகள் (Archetypal Patterns) இடம் பெற்றுள்ளன. திறனாய்வு அணுகு முறைகளில் அண்மைக் காலத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்தி வருவது தொல்படிமவியல் அணுகு முறையாகும் (Archetypal Approach). இலக்கியத்தினுடைய திரண்ட பொருளில் அமைந்து கிடக்கின்ற அடிப்படையான சில பண்பாட்டு வடிவங்களைத் தொல் படிமவியல் அணுகுமுறை விளக்குகிறது. இலக்கியத்தில் காணப்படுகின்ற சொற்களுக்கும், சூழ்நிலைகளுக்கும் தொல் படிமங்களின் அடிப்படையில் விளக்கம் தருகின்றது. திருக்குறள் தமிழர் தம் இனப் பெருமையை வெளிப்படுத்தும் குறியீடாகப் பேசப்பட்டு வருகின்றது. வரலாற்றுக்கு முந்திய மனிதனது தூரத்து மூதாதையரின் இனத்தின் அறிவும், உணர்வும், நினைவுகளும் மனத்தின் ஆழத்தில் அவனே அறிய இயலாத நிலையில் உறைந்து கிடக்கின்றன. இவை மூலப் படிவங்களாகும் (Primorida Types) என்கிறார் உளவியல் அறிஞர் யூங். திருவள்ளுவரின் படைப்பு மனத்தில்



பழந்தமிழர்களின் தொல்படிமச் சிந்தனைகள் ஆழமாய்ப் புதைந்துள்ளன.

திருக்குறளில் இடம்பெற்றுள்ள தொல்படிமவியல் சிந்தனைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி ஆராயலாம்.

1. நூலமைப்பும் பொருள் பாகுபாடும்
2. திருவள்ளுவரின் தேடல் தொன்மம் (Quest Myth)
3. தென்புலத்தார்
4. மந்திரம்
5. தொல்படிமவியல் குறியீடுகள்
6. மறுபிறப்புத் தொன்மம்

1. நூலமைப்பும் பொருள் பாகுபாடும்

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று திருக்குறளின் நூலமைப்பும் பொருள் பாகுபாடும் அமைந்துள்ளன. இதனை முப்பால் என்றும் குறிப்பிடுகின்றனர். 'இன்பமும், பொருளும், அறனும், என்றாங்கு' என்று தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல

என்று கோவூர்கிழார் பாடியுள்ளார்.[1] பொருள், இன்பம், அறம் இம்மூன்றையும் இணைத்துச் சொல்வது சிறப்புடைய மரபு என்கிறார் கோவூர்கிழார். தொன்று தொட்டு வழங்கி வந்த மரபை அடியொற்றியே திருவள்ளுவர் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று பாகுபாடு செய்து திருக்குறளை அமைத்துள்ளார். திருவள்ளுவர் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் பத்துக்குறள்களை அமைத்துள்ளார். இவ்வமைப்பு முறை சங்க இலக்கியத்தை அடியொற்றியதாகும்.

பத்துப் பத்தாகப் பாடல்களைப் பகுத்துரைக்கும் வழக்கு முன்பு இருந்தமை பத்துப் பாட்டு, எட்டுத் தொகை நூல்களில் தெரிய வருகின்றது.[2] திருக்குறளின் பொருட்பாகுபாட்டு முறையும், அமைப்பு முறையும் திருவள்ளுவரின் தொல்படிம வியல் சிந்தனையைப் புலப்படுத்துகின்றன.

2. தேடல் தொன்மம்

தொன்மம், தொல்படிமம் என்ற இரண்டு சொற்களையும் வேறுபாடின்றியே திறனாய்வாளர்கள் பயன்படுத்துகின்றனர். தொல்படிமம் எனும் சொல் சிறப்பியல் நிலையினையும், குறிப்பிடத்தக்க பண்புகளையும் அறுதியிட்டுக் கூறுகிற போது பயன்படுத்தப்படுகின்றது. 'தொன்மம்' என்பது தொல்படிமம் வெளிப்படுகின்ற போதும், மற்றும்கதை, வருணனை (Narrative) முதலாய சூழல்களிலும் பயன்படுத்தப்படுகின்றது.[3]

தொன்மங்களில் நடுவணதாய்க் கருதப்படுவது தேடல் தொன்மம் ஆகும். தன்னை, தன் பண்பாட்டு இலச்சினையை, தன் உள்ளத்தை, தன் ஆன்மாவை, தன் வாழ்வை, தனக்குரிய துணையைத்தேடுவது அல்லது அதனை நோக்கி நகர்வது என்பது இதன்பொருள். திருவள்ளுவர், மனித வாழ்க்கைக்கு மிக இன்றியமையாது வேண்டப்படுவது அறம் என்று குறிப்பிடுகின்றார். அறத்தின் வழியே பொருள் ஈட்ட வேண்டும், அறத்தின் வழியே வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

அன்பும் அறனும் உடைத்தது இல்வாழ்க்கை என்று வாழ்க்கைக்கு அடிப்படையாய் அமைவது அறம் என்கிறார்,[4] மனத்துக்கண் மாசில்லாமல் இருப்பதே அறம் என்று எடுத்துரைக்கின்றார் வள்ளுவர். அறத்தினால் தான் ஆக்கம் உண்டாகும், அறத்தை மறந்தால் கேடு உண்டாகும் என்கின்றார். உயிர்களுக்கு அறத்தைத் தவிர ஆக்கம் தருவது வேறொன்றுமில்லை என்று கூறுகின்றார். சிறப்பையும், செல்வத்தையும் தருவது அறம் ஆகும்.

நிறைய நூல்களைக் கற்றுக் கோபம் கொள்ளாது அடங்கிய சான்றோனுக்கு 'அறக்கடவுள்' தாமாக வந்து துணை செய்வார் என்கிறார். ஒருவனுக்கு மறந்தும் நாம் கெடுதல் செய்தல் கூடாது; அவ்வாறு நாம்செய்தோமானால் அறக்கடவுள் நமக்குக் கெடுதலை உண்டு செய்வார்.[5]

நல்ல சிந்தனைகளையுடைய கற்றறிந்த சான்றோர்களுக்கு 'அறக்கடவுள்' உதவி செய்வார் என்றும், கெடுதல் நினைப்பவர்களுக்கு 'அறக்கடவுள்' கெடுதல் செய்வார் என்றும் வள்ளுவர் கூறுகின்றார். "அறத்தைக் கடவுள்" என்றே வள்ளுவர் குறிப்பிடுகின்றார். மனித உயிர்களுக்கு இன்றியமையாதது அறம் என்று வள்ளுவர் வலியுறுத்துவதனால் வள்ளுவரின் தேடல் தொன்மம் 'அறம்' என்று குறிப்பிடலாம். தொல்காப்பியரும், சங்கப் புலவர்களும் சொன்ன அறம் பற்றிய சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்ட திருவள்ளுவர் தன் அறவியல் சிந்தனையை எடுத்துரைக்கின்றார் எனலாம். ஆலத்தூர்கிழார் என்னும் சங்கப் புலவர் "அறம் பாடிற்றே ஆயிழை கணவ"[6] என்று கூறுவதிலிருந்து சங்க காலத்தில் அறக்கருத்துகளை எடுத்துக் கூறும் பாட்டு நூல் இருந்தது என்பதை அறிய முடிகின்றது.

3. தென் புலத்தார்

தென்புலத்தார் பற்றி வள்ளுவர் ஒரு குறளில் குறிப்பிட்டுள்ளார்.

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்என்றுஆங்கு
ஐம்புலத்தா ரோம்பல் தலை.[7]

என்று இறந்து போனவர்கள் தென்திசையில் இருப்பது பற்றிக் கூறுகின்றார். இது ஒரு நாட்டுப்புற நம்பிக்கையாகும் (Folk belief). நாட்டுப்புற நம்பிக்கைகள் காலம் காலமாக வழங்கி வருவன ஆகும். தமிழ் மக்களிடம் காலம் காலமாக வழங்கி வந்த, தென்புலத்தார் பற்றிய நம்பிக்கையை வள்ளுவர் திருக்குறளில் எடுத்தாண்டுள்ளார்.

> தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
> பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்[8]

என்று நெட்டிமையார் எனும் சங்க காலப் புலவர் தென்புலத்தார் பற்றிப் பாடியிருப்பதும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது ஆகும். ஒரு குடியில் இறந்தோர், தென் திசைக்கண் இருந்து, தம் குடியிற் பிறக்கும் புதல்வர் தம்மை நோக்கிப் படைக்கும் சோறும் நீரும் உண்டு வாழ்பவர்.[9] இறந்து போனவர்களை நினைத்து வழிபடுவது ஆவி வழிபாடு அல்லது மூதாதையர் வழிபாடு (Ancestor worship) ஆகும். இறந்தோரின் ஆற்றல் வாழ்வோரின் நலனில் பெரும்பங்கு வகிக்கிறது என்னும் கருத்தாக்கத்தால் ஏற்பட்டதே முன்னோர் வழிபாடு ஆகும்.[10] ஆவி வழிபாட்டிலிருந்து சமயம் தோன்றியது என்று மானிடவியல் அறிஞர் டைலர் கூறுகின்றார்.[11] மூதாதையர் வழிபாடு இன்றும் நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டில் முதன்மையான இடம் பெற்று வருகின்றது. வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த மனித மூதாதையர்களான நியாண்டர்தால் மனிதர்களிடம் கண்டெடுக்கப்பட்ட செய் பொருள்கள் (Artifacts) இறப்புக்குப் பின்னும் ஏதோ ஒரு வகையான வாழ்வுண்டு என்று அவர்கள் நம்பியிருப்பதைப் புலப்படுத்து கின்றன.[12] எனவே 'தென்புலத்தார்' பற்றிய தொல்படிமச் சிந்தனையைத் திருவள்ளுவர் திருக்குறளில் எடுத்தாண்டுள்ளார் எனலாம்.

4. மந்திரம்

மந்திரம் பற்றிய தொல்படிமச் சிந்தனைகள் திருக்குறளில் இடம்பெற்றுள்ளன. "தொன்மைச் சமயத்தில் மந்திரம் (Magic) ஒரு பிரிக்கவியலாத கூறாகும். இது அறிவியல் தோன்றுவதற்கு முந்திய கலையாகும். இதைக் கண்டறிந்து செயல்படுத்திய பெருமை தொன்மை மக்களையே சாரும். தொன்மை மக்கள் அவர்களையும் அவர்களைச் சுற்றியுள்ள இயற்கையையும் மீறிய ஆற்றல் இருக்கிறது என நம்பினர். அவ்வாற்றலைக் கட்டுப்படுத்தி மேலாதிக்கம் செலுத்தும் வழி முறையை மேற்கொண்டனர். கையகப்படுத்திய ஆற்றலை, சில சூத்திரங்கள் அல்லது வாய்பாடுகளைச் சுருக்கி உச்சரிப்பதன் மூலம் அவ்வாற்றலைச் செயல்படுத்த தம் நிலையை மேற்கொண்டனர்.[13]

நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப[14]

என்று தொல்காப்பியர் மந்திரத்துக்கு விளக்கம் தருகின்றார். இவ்விளக்கத்தை அடியொற்றிய வள்ளுவர்

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்[15]

என்று தம் பெருமையை நிலவுலகத்தில் அவர் சொல்லிய மறை மொழியே காட்டிவிடும் என்கிறார். பழந்தமிழ்ச் சமூகத்தில் வழங்கி வந்த 'மந்திரங்கள்' தொடர்பான சிந்தனைகளை வள்ளுவர் நன்கு அறிந்துள்ளார் என்பதை மேற்கூறிய குறள் மூலம் அறிய முடிகின்றது.

5. தொல்படிமவியல் குறியீடுகள்

திருவள்ளுவர் திருக்குறளில் சில இடங்களில் புராணக் கதைகளைத் தொல்படிமக் குறியீடுகளாகப் (Archetypal symbols) பயன்படுத்தியுள்ளார்.

இலக்கியத்தில மிக முக்கியமான மூலக் கூறாய்ப் புராணக் கதைகள் விளங்குகின்றன என்றும் ஹோமர் காலத்திலிருந்தே கவிஞர்கள் புராணக் கதைகளை மிக விரும்பிப் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் தொன்மவியல் திறனாய்வாளர் நார்த் ராப் ப்ரை கூறுகின்றார்.[16] திருவள்ளுவர் திருக்குறளில் ஒரு சில புராணக் கதைகளையே எடுத்தாண்டுள்ளார்.

புராணக் கதைகளைத் தொல்படிமவியல் குறியீடுகளாய்ப் பயன்படுத்தும் போக்கு வள்ளுவரிடம் காணப்படுகின்றது. தொல்படிமவியல் குறியீடுகளைப் பிராய்டு 'உறைந்த குறியீடுகள்' (Condensed Symbols) என்கிறார். கனவுகளை முன் வைத்து பிராய்டு உறைந்த குறியீடுகளை விளக்குகின்றார். நனவிலி மனத்தின் விழைவுகள் கனவின் உள்ளடக்கமாக (Contents) மாறுகின்றன. பல விழைவுகள் உள்ளடக்கமாக மாற்றம் பெறும்போது அவை உறைந்த தன்மையைப் பெற்றுவிடுகின்றன என்று பிராய்டு விளக்குகின்றார்.[17]

திருக்குறளில் இந்திரன் பற்றிய புராணக் கதையினையும், சீதேவி - மூதேவி பற்றிய புராணக் கதையினையும் வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார்.

அ. இந்திரன் பற்றிய உறைந்த குறியீடு

ஐந்தவித் தானாற்ற லகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலுங் கரி[18]

ஐந்தாசைகளையும் ஒழித்தவனது வல்லமைக்குத் தேவர்க்கு அரசனாகிய இந்திரனே சாட்சி என்கிறார் வள்ளுவர்.

"இந்திரன் தான் ஐந்தாசைகளையும் ஒழிக்காமல் சாபமடைந்து நின்று அவ்வாசைகளை ஒழித்தவனாகிய கௌதம முனிவனது வல்லமையைத் தெரிவித்தானாதலின் இந்திரனே சாலுங்கரி என்றார்" என்பர்"[19]

ஆசைகளை அழிக்காமையால் இந்திரன் இழிநிலை அடைந்தான். இந்திரன் பற்றிய புராணக் கதையை உறைந்த குறியீடாகவே வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார். புராணக் கதை மூலம் மேற்கூறிய குறளுக்குப் பொருள் காணும் போது குறளின் நுட்பத்தை அறியமுடிகின்றது.

ஆ. திருமால் பற்றிய உறைந்த குறியீடு

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு[20]

என்ற குறளிலும் புராணக் கதையை எடுத்தாளுகின்றார் வள்ளுவர். தன் அடியினால் உலகத்தை அளந்த இறைவன் தாவிய நிலப்பரப்பு முழுவதையும் சோம்பல் இல்லாத மன்னவன் அடைய முடியும் என்று கூறுகின்றார். மாவலி மன்னனிடம் மூன்றடி மண் கேட்டுத் திருமால் உலகை அளந்த கதையை இங்கு வள்ளுவர் கருத்து விளக்கத்திற்காக தொல்படிமக் குறியீடாக எடுத்தாள்கிறார்.

இ. சீதேவி – மூதேவி பற்றிய உறைந்த குறியீடு

அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்[21]

என்று பிறருடைய ஆக்கங்கண்டு பொறாமைப்படுபவனைத் திருமகள் பொறுக்கமாட்டாது, மூத்தவளுக்கு வழிவிட்டு விலகுவாள் என்கிறார் வள்ளுவர். மூதேவி சீதேவி புராணக் கதையை எடுத்தாண்டு பொறாமை பிடித்த மனிதனின் பண்பை வள்ளுவர் விளக்குகின்றார். புராணக் கதையின் வெளிச்சத்தில் இக்குறளுக்குப் பொருள் கண்டால் குறளின் சிறப்புப் புலனாகும். "தேவர்களும் அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடைந்தபோது அக்கடலினின்று மூதேவி முன்னும், இலக்குமி பின்னும் பிறந்தமையால் மூதேவிக்கு மூத்தவள் என்ற பெயருண்டாயிற்று என்று கூறுவர்.[22] மேற்கூறிய கதையை உறைந்த குறியீடாக வள்ளுவர் பயன்படுத்துகிறார்.

வள்ளுவர் ஆள்வினை உடைமை என்ற அதிகாரத்தில் ஆள்வினையை விளக்க வரும்போது, மூதேவி சீதேவி புராணக்கதையை உறைந்த குறியீடாக எடுத்தாள்கிறார்.

மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்[23]

சோம்பல் உள்ளவனிடத்தில் கரிய மூதேவி வாழ்வதாகவும், சோம்பல் இல்லாதவனிடத்தில் திருமகள் வாழ்வதாகவும்

குறிப்பிடுகின்றனர். 'என்ப' என்று கூறுவதிலிருந்து இப்புராணக் கதை வள்ளுவர் காலத்திற்கு முன்பிருந்தே வழங்கி வந்ததை அறிய முடிகின்றது.

6. மறுபிறப்புத் தொன்மம்

மறுபிறப்புத் தொன்மம் பற்றிய தொல்படிமச் சிந்தனைகள் திருக்குறளில் குறிப்பிடத்தக்க இடம் வகிக்கின்றது எனலாம். ஏழ் பிறப்பு, மறுபிறப்பு பற்றிய செய்திகள் திருக்குறளில் பல இடங்களில் ஆளப்பட்டுள்ளன. தொல்படிமவியல் திறனாய்வாளர்களில் ஒருவரான குமாரி பாட்கின், ஆங்கிலக் கவிஞர் பலரிடம் 'மறுபிறப்புத் தொல்படிமம்' காணப்படுவதாக ஆராய்ந்து கூறியுள்ளார்.[24]

தொடர்ந்து ஏழு பிறப்புகள் உண்டு என்ற நம்பிக்கையைத் (Belief) திருக்குறளில் காண முடிகின்றது.

பழியில்லாத பண்புடைய நன்மக்களைப் பெற்றால் ஒருவனை ஏழு பிறப்பினும் தீவினைப் பயன் தீண்டாது என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.[25] தனக்கு ஏற்பட்ட துன்பத்தினைத் துடைத்தவரது நட்பினை ஏழு பிறவிகளிலும் தொடர்ந்து நினைத்துப் பார்ப்பார்கள் என்று செய்ந்நன்றி அறிதல் அதிகாரத்தில் எடுத்துரைக்கின்றார்.[26]

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி, அப்பிறவியில் மட்டுமல்லாமல் ஏழு பிறவியிலும் தொடர்ந்து பயனளிக்க வல்லது என்று கல்வியின் இன்றியமையாமை பற்றிக் கூறும்போது ஏழ் பிறப்புப் பற்றிக் கூறுகின்றார் வள்ளுவர்.[27]

இம்மை, மறுமை என்ற தொல்படிமச் சிந்தனைகளையும் வள்ளுவர் குறளில் எடுத்தாண்டுள்ளார்.

வறுமை எனும் கொடிய பாவி ஒருவனைப் பற்றிக் கொண்டால், இம்மையிலும், மறுமையிலும் தொடர்ந்து துன்பம் தரும் என்று எடுத்துரைக்கின்றார்.[28]

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்[29]

என்று இம்மை, மறுமை பற்றிக் காமத்துப்பாலில் வள்ளுவர் எடுத்துக் கூறுகின்றார். இந்தப் பிறவியில் உன்னைப் பிரிய மாட்டேன் என்று தலைவன் கூறியதைக் கேட்ட தலைவி, 'மறுமையில் பிரிந்து விடுவேன்' என்ற உட்பொருளைக் கொண்டு வருந்தி அழுகின்றாள். 'இம்மை மாறி மறுமையாயினும்' எனும் குறுந்தொகைப் பாடலின் கருத்து இங்கு ஒப்பு நோக்கத் தக்கது ஆகும்.

அ. சொர்க்கம் – நரகம்

சொர்க்கம், நரகம் பற்றிய சிந்தனைகள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. 'சொர்க்கம்' 'நரகம்' என்ற தொல்படிமச் சிந்தனை திருக்குறளில் சில குறள்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

ஒருவன் மண்ணுலகத்தில் இல்லற வாழ்க்கையைச் சிறப்பாக வாழ்ந்தான் ஆயின் அவன் வானுலகத்து வாழும் கடவுளோடு ஒப்ப வைத்து எண்ணப்படுவான்.[30] சொர்க்கத்தை 'வானுலகம்' என்று குறிக்கின்றார் வள்ளுவர்.

> **அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
> **ஆரிருள் உய்த்து விடும்[31]**

அடக்கம் உடையவனாக ஒருவன் விளங்கினால் அவன் தேவர்களுடன் சேருவான். அடக்கம்இல்லாதவனாக இருந்தால் இருள் சேர்ந்த நரகத்தில் சென்றுசேர்வான் என்று வள்ளுவர் சொர்க்கம் நரகம்பற்றிய சிந்தனையை எடுத்துரைக்கின்றார்.

பிறருக்கு உதவிசெய்யும் ஒருவனைப்போல நல்ல செயலைத் தேவர் உலகத்திலும் காணுதல் அரிது என்கிறார் வள்ளுவர். தேவர் உலகத்தை 'வள்ளுவர்' புத்தேளுலகு என்று குறிப்பிடுகின்றார். 'புத்தேளுலகு' எனும் தொடர் புறநானூற்றில் சில இடங்களில் இடம்பெற்றுள்ளது.

மேலுலகம் இல்லை என்று சொன்னாலும் வறியார்க்குக் கொடுப்பதே சிறந்ததாகும்.[32] 'புகழ்' பெற்ற ஒருவனைப் புத்தேள் உலகு போற்றும்.[33]

> **அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**
> **இவ்வுலகம் இல்லாகி யாங்கு[34]**

என்று அருள் இல்லாதவர்கள் துறக்க உலகம் செல்லமுடியாது. அதுபோலப் பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலக வாழ்வு சிறப்பாக அமையாது என விளக்குகிறார்.

களவு செய்யாமல் வாழ்வோருக்கு வானுலகம் தள்ளாது வாய்க்கும்.[35]

> **யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு**
> **உயர்ந்த உலகம் புகும்[36]**

'நான்' என்னும் செருக்கை அறுத்தவர்கள் தேவர்களாலும் சென்றுஅடைய முடியாத உயர்ந்த வீட்டு உலகத்தை அடையலாம் என்கிறார் திருவள்ளுவர்.

மெய்ப்பொருளை அறிந்த ஞானிகட்கு வையகத்தைவிட, வானுலகம் மிக அண்மையில் உள்ளது.[37] மேலும் மெய்ப் பொருளைத் தெளிவாக உணர்ந்து கொண்டவர்க்கு மீண்டும்

பிறப்பில்லை என்கிறார் திருவள்ளுவர்.[38] ஆசையை விட்டொழித்தால் அழியாத இன்பத்தைப் பெறலாம் என்று வள்ளுவர் எடுத்துக் கூறுகின்றார். அவர் கூறும் 'பேரா இயற்கை' என்பது அழிவில்லாத இன்பம் ஆகும்.

ஈண்டு வாரா நெறி, பேரா இயற்கை, வானோர்க்கு உயர்ந்த உலகம் என்பன நிலையான வீடுபேற்றினை உணர்த்துவனவாகும்.[39]

ஆ. நரகம்

'நரகம்' பற்றிய கருத்துகளும் திருக்குறளில் ஆங்காங்கே எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

> **அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த**
> **இன்னா உலகம் புகல்[40]**

அருளுடையவர்கள் இருள் சேர்ந்த நரகத்திற்குச் சென்று துன்பப்பட மாட்டார்கள் என்று மேற்கூறிய குறளில் விளக்குகின்றார் வள்ளுவர். ஊன் உண்ணுதல் கூடாது என்பது வள்ளுவரது கருத்தாகும். ஊன் உண்பவனை நரகம் விழுங்கிக் கொள்ளும் என்று குறிப்பிடுகின்றார்.[41]

தொல்படிமவியல் அணுகுமுறை மூலம் திருக்குறளை ஆராயும்போது பழந்தமிழர்களின் தொல்படிமச் சிந்தனைகள் திருவள்ளுவரின் படைப்புமனத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதை அறிய முடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. ஔவை துரைசாமிப் பிள்ளை, (உரையாசிரியர்) **புறநானூறு,** (1967) பா. 31.
2. சண்முகம்பிள்ளை, **திருக்குறள் அமைப்பும் முறையும்,** சென்னைப் பல்கலைக்கழகம், (1972) ப.204-205.
3. தி.சு. நடராசன், **திறனாய்வுக்கலை,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட், சென்னை, (1996) ப. 182.
4. **திருக்குறள்,** பாரதி பதிப்பகம், சென்னை, நான்காம் பதிப்பு, 1989, எண். 45.
5. மேலது, எண். 204.
6. ஔவை துரைசாமிப் பிள்ளை, மேலது, பா.34.
7. திருக்குறள், மேலது, எண்.43.
8. ஔவை துரைசாமிப் பிள்ளை, மேலது, பா. 9.
9. மேலது, ப. 27.
10. பக்தவத்சல பாரதி, **பண்பாட்டு மானிடவியல்,** மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2003, ப. 515.
11. மேலது, ப. 493.

12. மேலது, ப. 489-490.
13. மேலது, ப. 517.
14. இளம்பூரணர் (உரையாசிரியர்) பொருளதிகாரம், தொல்காப்பியம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, நூ. 480.
15. திருக்குறள், மேலது, எண். 28.
16. William J.Handy and Max West Brook (Eds) **Twentieth Century Criticism. The Major Statements,** Light and Life Publishers, 1974, p.156, New Delhi.
17. பக்தவத்சல பாரதி, **தமிழர் மானிடவியல்,** மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2002, ப. 182-183.
18. திருக்குறள், மேலது, எண். 25.
19. கோ. வடிவேலு செட்டியார் (உரையாசிரியர்) **திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்,** முதற்பகுதி, அறத்துப்பால், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1972, ப. 34.
20. திருக்குறள், மேலது, எண். 610.
21. மேலது, எண்,.167
22. கோ. வடிவேலு செட்டியார், மேலது, ப. 165.
23. திருக்குறள், மேலது, எண். 617.
24. தி.சு. நடராசன், மேலது, ப. 182.
25. திருக்குறள், மேலது, எண். 62.
26. மேலது, எண். 107.
27. மேலது, எண். 398.
28. மேலது, எண். 1042.
29. மேலது, எண். 1315.
30. மேலது, எண். 50.
31. மேலது, எண். 121.
32. மேலது, எண். 222.
33. மேலது, எண். 234.
34. மேலது, எண். 247.
35. மேலது, எண். 290.
36. மேலது, எண். 346.
37. மேலது, எண். 353.
38. மேலது, எண். 356.
39. ச. தண்டபாணி தேசிகர், **வள்ளுவத்தில் மெய்ப்பொருட் சுவடுகள்,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1980, ப. 57.
40. திருக்குறள், மேலது, எண். 243.
41. மேலது, எண். 255.

சமுதாய நோக்கில் இல்லறக் கடமைகள்

செ. மகாலட்சுமி

திருக்குறள் உலகப்பொதுமறை. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக உலகில் வாழ்ந்து வரும் நீதி நூல். இந்நூல் மனித வாழ்வின் சிக்கலுக்கு வழிகாட்டுகின்றது. கடந்த காலத்தை விட இக்காலமானது பயங்கர நெருக்கடியில் சிக்கிச் சீரழிவதுடன், தனி மனித இன்பமும், குடும்ப அமைதியும் கெடுகின்றன. அப்படிப்பட்ட நிலையில் திருக்குறள் பதில் சொல்வதாக இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

"குறள்" - தொட்டனைத்தூறும் மணற்கேணி. ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு குறளையும் பிரித்துப் பார்த்தால் ஒவ்வொரு பொருள் தருவதாக இருக்கும்.



திருக்குறள் விளக்கம்

அறம் பிறழ்ந்து அமைதி குலைந்த காலக்கட்டத்தில் தான் அறநூல்கள் தோன்றின. அந்த அறநெறிக் காலத்தின் முதல் நூல் திருக்குறள். 133 அதிகாரங்களையும் 1330 குறட்பாக்களையும்

கொண்ட இந்நூல் எந்தச் சமயத்தையும் சாராது தனித்து நின்று உலகினுக்கு நீதி புகட்டிடும் நீதி நூலாகும். வள்ளுவர் காலந்தொட்டு இக்காலம் வரை சீரழிந்து கிடக்கும் சமுதாயத்தைச் சீர் செய்ய எழுதப்பட்டது இந்நூல்"[1].

திருக்குறளைப் பற்றிப்பேசவந்த மதுரைநாகனார்,

எல்லாப் பொருளும் இதன் பாலுள இதன்பால்
இல்லாத எப்பொருளு மில்லையால். . .[2]

என இவ்வடிகளில் அவர் எம்முறையில் இக்கருத்தைக் குறளுக்குக் கூறினார் என்று தெரியாது? ஆனால், அன்றைய காலத்திற்கேற்ப அவருடைய கூற்று உண்மையாக இருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

திருக்குறளை எவ்வளவு ஆழமான பொருளுடைய குறள் என்று வியந்தாலும் இரண்டு முக்கிய உண்மைகள் இங்கு வைக்கப்பட்டுள்ளன.

1. திருக்குறள் இன்றைய, எதிர்கால வாழ்வின் எல்லாக் கேள்விகளுக்கும் விடையாகி விடாது.
2. திருக்குறளின் 1330 குறள்களில் ஒவ்வொன்றும் எவ் விதிவிலக்குமின்றி முழுமையாக இந்தக் காலத்திற்கும், பொருந்துவது என்றும் கொள்ளமுடியாது.

ஒரு சில குறள் இன்றைய காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் பொருந்தி வருவனவாக அமையும். அப்படிப்பட்ட குறள் இல்லறவியலில் உள்ளதா? என்று இங்குக் காண்போம்.

இல்லறம்

வள்ளுவர் அறத்துப்பால் பற்றிக் கூறும் 38 அதிகாரங்களில் சமூகம் பற்றிய அற விளக்கத்தைக் கூறி வருகையில், ஒரு சில அதிகாரம் இல்லறம் பற்றிய விளக்கத்தையும் எடுத்துரைக்கின்றன. "இல்லறம்" என்பது சிறந்த இல்வாழ்க்கை பற்றியும், இல்லறக் கடமை பற்றியும் கூறுவதுடன், கணவன் - மனைவி சேர்ந்து நடத்தும் நல்லறமாக அமைய வேண்டும் என்று எதிர்ப்பார்க்கப் படுகிறது. ஒருவன் வாழ்வில் எவ்வளவு புகழை அடைந்தாலும், அவனுக்கு இல்லறவாழ்வு சிறப்பாக அமையவில்லையெனில் அவன் சமூகத்தினரால் மதிப்பிழக்கப்படுவான். அதேபோன்று கடமை தவறாத காவலானாகவும் செயல்படவேண்டும்.

பழந்தமிழ் அகப்பொருள் நூல்களில் குணத்தில் சிறந்தோரையே தலைவன் தலைவியராகக் கொள்ள

வேண்டுமென்று ஒரு வழக்கு இருந்தது. இறையனார் அகப்பொருள் உரையில் இவ்வழக்கு வலுப்பெற்றிருந்தது.

"இறையனார் அகப்பொருள் போன்ற நூல்கள் ஓர் இலக்கியல் சமுதாயத்தைச் சித்திரித்துக் காட்டாவிடினும் இலக்கியத் தலைவன் தலைவியின் அன்பு வாழ்க்கையைக் காட்டின"[3]

இவையனைத்தையும் நோக்கின் குறள் கூறும் சமுதாயம் ஓர் இலக்கியல் சமுதாயமா? ஓர் இலக்கியல் நாட்டையோ சமுதாயத்தையோ சித்திரித்துக் காட்டுவதை வள்ளுவர் தமது அடிப்படை நோக்கமாகக் கொண்டாரா? என்றால் இல்லை என்றே தோன்றும். திருக்குறள் முழுமையும் நோக்குங்கால் பொதுவான இலக்கியல் சமுதாயத்தைச் சித்திரித்துக் காட்டாமல் தனிப்பட்டோருக்குரிய அறங்களைக் கூறுவதே அவரின் நோக்கம் எனத் தோன்றும்.

வள்ளுவரின் குறள் வழி நன்மைகள் பலவற்றை எடுத்துக் கூறினாலும் ஒரு சில தீமையும் உள்ளது பற்றி விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அழுக்காறாமை என்ற அதிகாரத்தில் பிறர் செல்வத்திற்கு ஆசை வைப்பவனைப் பற்றிய செய்தி அன்றைக்கும் சரி, இன்றைய சமுதாயத்திற்கும் சரி பொருத்தமாக அமைந்துள்ளது. மேலும் ஓர் உதாரணம்; நன்மை செய்தவன் நற்பேறு பெற வேண்டும், தீமை செய்தவன் கெட்டழிய வேண்டும். இது தான் நீதி.

ஆனால் இன்றைய உலகில் நல்லதை நினைத்து வாழ்பவன் வறுமையில் வாடுகிறான். தீய காரியங்களைத் துணிந்து நடத்துபவன் செல்வத்தில் திளைக்கிறான். இதற்கு திருக்குறள் பதில் உரைக்கிறதா? என்று பார்த்தால்,

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்[4]

வள்ளுவர் கருத்துப்படி, தீய காரியங்களில் ஈடுபட்டுச் செல்வத்தில் திளைப்பதற்கு நேரடியாகப் பதில் கூறவில்லை. "நினைக்கப்படும்" என்று மட்டும் கூறிவிட்டார். "நினைக்கப்படும்" என்பதற்குப் பல்வேறு பொருள் கூறுகின்றார்கள். ஆனால் இக்கட்டுரை நினைக்கப்படும் என்பதற்கு விரிந்த பொருள் காண முயற்சிக்கிறது. தீயவன் ஒருவன் நல்வாழ்வு வாழ்வதையும், நல்லவன் ஒருவன் வறுமையில் வாடுவதையும், மக்களால் எண்ணிப் பார்ப்பதையே வள்ளுவர் இங்குச் சுட்டுகிறார் என்று

இக்கட்டுரையில் விளக்கியுள்ளேன். இக்கட்டுரையின் வாயிலாக இல்வாழ்வு தலைவன், தலைவி, மக்கட்பேறு பற்றியும் குறிப்பிடப்படுகிறது.

தலைவனின் கடமைகள்

"பொருள் ஈட்டுவது தலைவனின் கடமையாகும். அதுவும் நேர்வழியில் பொருள் ஈட்டி வாழ்க்கையைச் சீராக நடத்த வேண்டும்"[5] என்கிறது திருக்குறள்.

குடும்பத் தலைவனின் கடமைகள், பிறர் துன்பம் தீர்க்க வேண்டும். எதையும் தாங்குதல், பெற்றோர், சுற்றத்தாரை மதித்தல், வழிகாட்டல், அறவழியில் சென்று கடவுளையும் தொழவேண்டும். ''இறந்தவர்களை மதித்துப் பிதிர்க் கடன் செய்வதும், கடவுளை வழிபடுவதும் குடும்பத்தலைவனின் கடமைகள் ஆகும். இல்லறச் சுகத்தை அறியாதவர்கள் பொறுப்பைத் தட்டிக் கழிப்பார்கள். இன்றைய சமுதாயத்தில் எத்துணைப்பேர் குறளின் வழியில் வாழ்கிறார்கள் என்றால் அது கடினமே என்று எண்ணத் தோன்றும்.

தலைவியின் கடமைகள்

வள்ளுவரின் குறள் இன்றைய சமுதாயத்திற்குப் பயன்படுகிறதா? என்றால் சற்றுச் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். இன்றைய இல்லத்தரசிகள் வாழ்வை ஏதோ வாழ வேண்டுமே என்று சமூகத்திற்காக வாழ்கின்றனர். அவர்களது கடமைகளான கணவனின் தேவைகள், வரவிற்கேற்ற செலவு, குழந்தை வளர்ப்பு, அன்புடன் விருந்தோம்பல், சுற்றத்தாரை மதித்தல், அன்புடன் பழகுதல் போன்ற குணநலன்கள் அமையப்பெற்றுக் கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும். ஆனால் இன்று ஒரு சில கடமைகள் மட்டுமே நிறைவேற்றப்படுகின்றன.

உதாரணமாக இல்லாள் நற்குணம் படைத்தவளாய் இருப்பாளேயானால் அவளின் குடும்பத்தில் எல்லாம் நிறைவாய்க் காணப்படும். அதேபோன்று தீயகுணம் பெற்றிருந்தால் அனைத்தும் நிறைவாக இருந்தும் குறைவாகவே உணர்வர். இதற்குக் குறள் என்ன பதில் உரைக்கிறது என்றால்,

> **இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
> **இல்லவள் மாணாக் கடை**[6]

என்ற வள்ளுவரின் கருத்துப்படி நற்குணம் படைத்தவர் நிறைவையும், தீயகுணம் படைத்தவர் குறைவையும் அடைய

முடியும் என்று நேரடியாய்க் கூறாமல், மாண்பானால்? மாணாக்கடை? என்று கேள்விக்குறியாக எழுப்பியுள்ளார். மாண்பு என்பதற்குப் பல்வேறு பொருள் இருந்தாலும், இங்கு விரிந்தபொருள் காணலாம். நல்ல குணமுடையவள் துன்பம் அடைவதும், தீய குணமுடைய ஒருத்தி நன்மையால் இன்புறுவதும் மக்களால் எண்ணிப் பார்ப்பதையே வள்ளுவர் இங்குச் சுட்டுகிறார்.

வள்ளுவர் இல்லறக் கடமைகளில் தலைவனுக்கு நிகராய்த் தலைவியை உயர்த்திக் காட்டுகிறார். "தெய்வந் தொழஅள்". இங்குப் பெண்மை இழிவாய்ப் பேசப்படவில்லை. அதேபோன்று கொழுநனைத் தொழுதெழுவாள்". இங்குப் பெண்மை இழிவாகப் பேசப்படவில்லை. இந்த இரண்டும் ஒரு கவித்துவப் படிமமாகும். அவை கற்பு நெறியைக் குறிப்பிடுகின்றன. அக்கற்பின் பெண்ணிற்குப் பெய் என்றால் மழை பெய்யுமாம். இதன்மூலம் பெண்ணிற்கு மட்டும் கற்பு தனி என்றில்லாமல் ஒழுக்கமுள்ள கணவன், அதாவது ஆணிற்கும் கற்பு உண்டு என்று பொதுமைப் படுத்திக் கூறியுள்ளார்.

இக்குறளுக்குச் சிறந்த விளக்கவுரை வேண்டும் எனில் சிலப்பதிகாரத்தில் இவ்வாறு,

இன்துணை மகளிர்க்கு இன்றியமையாக்
கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்
வானம் பொய்யாது, வளம் பிழைப்பு அறியாது,
நீள்நில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு என்றும்
அத்தகு நல் உரை அறியாயோ நீ[7] *(15.142-148)*

என்ற பாடல் வழி அறிய முடிகிறது.

மக்கட் செல்வம்

ஒருவன் நல்ல பெண்ணை மணந்து சிறப்பாக இல்லறம் நடத்துகிறான் என்றால், அது அவனுடைய நற்செயலால் விளைவதாகும். அதேபோன்று நற்குணக் குழந்தையைப்பெற்று வளர்க்க வேண்டும். செல்வங்களில் எல்லாம் சிறந்த செல்வம் குழந்தைச் செல்வமாகும். ஒரு குடும்பத்தில் குழந்தையின் வரவு எப்படிப்பட்ட துன்பத்தையும் தீர்த்து விடும்.

நல்ல மகன் தந்தைக்கும், தந்தை மகனுக்கும் ஆற்ற வேண்டிய கடன் பற்றி வள்ளுவர் குறிப்பிடுகையில்,

தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்[8]

என்ற கருத்துப்படி, தந்தை மகனைச் சான்றோர் அவையில் முதலிடம் வகிப்பவனாக வளர்க்க வேண்டும் என்பதாகும். இங்கு அவையத்து என்பது அவையோர் முன்னிலை மட்டுமல்ல, எல்லா இடத்திலும் சிறந்த முதலிடம் வகிப்பவனாக வளர்க்க வேண்டும் என்பது கருத்தாக உள்ளது. ஆனால் இன்றைய கருத்து மகன் முதலிடம் வருவதற்காக ஒரு சில பெற்றோர் நேர் வழியை விட்டுத் தனி வழியை நாடி மகனையும், அவ்வழியில் இழுத்துச் சென்று குறளின் நீதியை மாற்றுவதாக அமைகிறது. ஒரு தாய் மகனைப் பெற்ற இன்பத்தை விட அவன் எல்லோராலும் சான்றோன் என்று கேட்கும் பொழுதே இன்பமடைகிறாள். இங்குச் 'சான்றோன் என்பது செல்வம், பதவி, புகழ் விரும்பாத நற்குணமுடையவனே சான்றோன்' என்று மறைமுகமாகக் கூறப்படுகிறது.

சமுதாயம் பற்றிய கருத்து திருக்குறளின் நீதிக்கு ஒத்துப் போகிறதா? என்று பார்த்தால் கால மாற்றத்திற்கேற்ப (கருத்து ஒன்று என்றாலும்), சிறிது வேறுபட்டாலும், குறளின் நீதியிலே சமுதாயம் வழிநடத்தப்படுகிறது.

அடிக்குறிப்புகள்

1. டாக்டர் கு. மோகனராசு - **கன்பூசியசும் திருவள்ளுவமும்**, சென்னை, ப. 45.
2. டாக்டர் வா.செ. குழந்தைசாமி - **வாழும் வள்ளுவம்**, சென்னை, 1990.
3. செல்வி காமாட்சி ஸ்ரீனிவாசன் - **குறள் கூறும் சமுதாயம்**, மதுரை, 1985, ப. 2.
4. மேலது, ப. 19.
5. டாக்டர் ரா. சீனிவாசன் - **திருக்குறள் செய்திகள்**, சென்னை, 1994, ப. 7.
6. டாக்டர் எஸ்.ஆர்.கே. - **திருக்குறள்**, சென்னை, 1991, ப. 23.
7. மேலது, பக்.23 முதல் 24 வரை.
8. டாக்டர் மு. கோவிந்தசாமி - **வள்ளுவர் காட்டும் குறள் உரை**, சிதம்பரம், 1996, ப. 17.

செய்தொழில் வேற்றுமை

நடேச நாராயணன்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் *(குறள் 972)*

என்பது வான்புகழ் வள்ளுவனின் தேன் தமிழ்க் குறளாகும். இக்குறளுக்குத் தவறாகப் பொருள்கூறி, வள்ளுவனின் சமத்துவச் சமுதாயக் கொள்கைக்கு மாசு கற்பிக்கின்றனர் சிலர். குறிப்பாகப் பரிமேலழகர் கூறும் உரை வள்ளுவனின் கருத்துக்கு முரணாக அமைந்துள்ளது.

'எல்லா மக்களுயிர்களும் பிறப்பால் ஒப்பானவையே, இருப்பினும் அவை சிறப்பால் வேறுபாடுவதற்குக் காரணம் அவ்வுயிர்கள் செய்யும் தொழில் வேறுபாடுகளேயாகும்' என்பதே இக்குறளின் கருத்து எனப் பரிமேலழகரும் பிறரும் கூறுகின்றனர்.



''எல்லா மக்களுயிர்களுக்கும் பொதுவாகிய பிறப்பியல்பு ஒக்குமே எனினும் பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள் ஒவ்வா,அவை செய்யும் தொழில்களது வேறுபாட்டால்"

"வினைவயத்தால் பஞ்ச பூத பரிணாமமாகிய யாக்கையைப் பொருந்திநின்று அதன் பயன் அனுபவித்தால் எல்லா வருணத்தார்க்கும் ஒத்தலின் 'பிறப்பொக்கும்' என்றும் பெருமை சிறுமைகளுக்குக் கட்டளைக் கல்லாகிய தொழில்பாகு பாடுகள் வருணந்தோறும் யாக்கை தோறும் வேறுபடுதலின் சிறப்பு ஒவ்வா என்றும் கூறினார்."

தாய்வயிற்றில் கருவாகிப் பிறப்பதில் மக்கள் அனைவரும் ஒப்பானவர்கள் என்பது வள்ளுவரின் கருத்து. ஆனால் பரிமேலழகரோ எல்லா வருணத்தாரும் யாக்கை தோறும் வினைப் பயனை அனுபவிக்கும் பிறத்தலால்தான் ஒப்பானவர்கள் என்கிறார்.

இவ்வாறு விளக்கம் தருவதன் வாயிலாக வருணாசிரம தருமத்தை உறுதிப்படுத்துகிறார். இப்படி மனுநீதியை அடிப்படையாக வைத்துக்கொண்டு இக்குறளுக்கு உரைகாண முற்பட்டதால்தான் தமிழர் தம் கொள்கைக்கு முரணாகவும், தமிழ்ப் புலவன் வள்ளுவனின் சமூகச் சமத்துவத்துக்கு எதிராகவும் உரைகாணத் துணிந்தார்.

தொழில்களின் வேறுபாட்டால் சிறப்பு வேறுபடும். அதாவது தொழில்களில் ஏற்றத் தாழ்வு உண்டு என்ற கருத்தை ஒப்புக்கொண்டால் பிறப்பிலும் அச்சிறப்பு வேறுபடும் (சாதி ஏற்றத்தாழ்வு உண்டு) என்பதை ஒப்புக் கொள்ள நேரும். ஏனெனில் தொழில்களில் ஏற்றத்தாழ்வு காணும்போது அத்தொழிலைப் பரம்பரையாகச் செய்யும் தொழிலாளர்களின் பிள்ளைகளையும் பிறப்பிலேயே ஏற்றத்தாழ்வு உடையவர் களாகத்தான் கருதநேரும். அவ்வாறு கருதினால் எப்படி சமூக சமத்துவம் நிலைக்க முடியும். வள்ளுவனின் கொள்கையை எப்படி உணர்ந்தவர்களாக ஆகமுடியும்?

'பிறப்பொக்கும்' என்பதற்கு, பிறப்பால் மக்கள் சமமானவர்களே எனப் பொருள் கொள்ளாமல், 'வினைப்பயன் அனுபவித்தல்' எனும் வகையில்தான் மக்கள் சமமாவார்களே யொழிய வருணத்தால் அல்ல' - எனத் தவறான உரையினைக் கூறத் துணிந்தார் பரிமேலழகர். அந்தத் துணிவால், 'தொழிற்பாகுபாடுகள் வருணந்தோறும் யாக்கை தோறும் வேறுபடுதலின் சிறப்பு ஒவ்வா' என வள்ளுவனின் கருத்துக்கு முற்றிலும் மாறாக முடிவும்சொன்னார்.

ஆனால் தொழில் ஏற்றத்தாழ்வு இல்லை என வள்ளுவர் கூறுவதாகப் பொருள் கொண்டால்தான், பிறப்பிலும் ஏற்றத்

தாழ்வு இல்லை என்பதை வள்ளுவர் வலியுறுத்துகிறார் என உணர்த்திட முடியும்.

ஒரு தொழிலைச் செய்கின்ற முறைகளின் வேறுபாடுகளுக்கு ஏற்பத்தான் சிறப்பு வேறுபடுமே யொழிய அந்தத் தொழிலின் வேறுபாடுகளுக்கு ஏற்பச் சிறப்பு வேறுபட்டு விடாது என்பதைத் திருவள்ளுவர் பல குறள்களின் வாயிலாகப் புலப்படுத்தியுள்ளார்.

தொழில் வேறுபாடு உண்டு என்பது உண்மையே! ஆனால் அந்தத் தொழில் வேறுபாட்டுக்கேற்பச் சிறப்பும் வேறுபட முடியுமா? முடியாது என்கிறார் வள்ளுவர். தொழிலில் பிரிவு உண்டு (Division in occupation). ஆனால் தொழிலால் பேதம் இல்லை (There is no difference in status due to occupation) என்கிறார்.

அரிய பெரிய தொழில் செய்கிறவர்கள், சிறுசிறு தொழில்களைச் செய்பவர்களைவிட உயர்ந்தவர்கள் என்று சிலர் கூறுவது பொருந்தாது.

வண்டியில் சக்கரம் ஒரு தொழிலைச் செய்கிறது. அச்சாணி (கடையாணி) ஒரு தொழிலைச்செய்கிறது. இவ்விரண்டும் வேறுபட்ட தொழில்கள்தான். அதனால் அவற்றின் சிறப்பில் வேறுபாடு இருக்க முடியுமா? அச்சாணி சிறிய தொழிலைச் செய்தாலும் அதுவும் பெருமைக்கு - சிறப்புக்கு உரியதே என்று கருதுகிறார் வள்ளுவர். அதனால்தான் பிறர் தாழ்வாகக் கருதும் உழவுத் தொழிலைப் பெருமைப் படுத்தி எழுதிய குறளில் அத்தொழில் செய்வோரை அச்சாணிக்கு உவமைப் படுத்திச் சிறப்பித்தார் (குறள் 1032).

மருத்துவத் தொழில் செய்பவரையும் ஆசிரியர் தொழில் செய்பவரையும் ஏற்றத்தாழ்வாக (சிறப்பில் வேறுபாடு உடையவர்களாக) எப்படிக் கருதமுடியும்? இருவரும் அவரவர் தொழிலுக்கேற்பச் சிறப்புக்கு உரியவரே. இருவரில் எவரேனும் தம் தொழிலுக்கு இழுக்கு நேரும் வகையில் தவறாகச் செயல்பட்டால் சிறப்புக் குன்றுவர். எனவே குறை ஏதும்இல்லாமல் செயல்படும்போது இரு தொழிலினரும் சிறப்பில் ஒப்பானவரே! எந்தச் செயலாயினும் அதனை அதற்குரிய நெறியில் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்தால், அந்தத் தொழில் சிறியதாயினும் சிறப்பு வேலையைச் செய்யும் முறைக்கே சிறப்புத் தருகிறார் வள்ளுவர். அதனால்தான், 'பெருமையுடையவர் (975) எனத் தொடங்கும் குறளில் மிக நினைவாக 'ஆற்றின்

ஆற்றுவர்' எனும் தொடரை இடம் பெறச் செய்துள்ளார். (ஆற்றின் ஆற்றுவர் = முறை அறிந்து செயல்படுவர். ஆறு = வழி.) இதில் வரும் 'ஆற்றின்' எனும் சொல், செய்யும் வேலையைக் குறிப்பிடாமல் (Occupation) செய்யும் முறையை (The manner of doing) குறிப்பிடுகின்றது. இவ்வாறே மற்றொரு குறளையும் (468) 'ஆற்றின் வருந்தாவருத்தம்' (முறையாகச் செய்யாதமுயற்சி) எனத் தொடங்கியுள்ளார்.

ஒரு தொழிலை மேற்கொண்டிப்பதனாலேயே சிறப்பு வந்திட இயலாது. அத் தொழிலைச் செய்கின்றமுறையில் தான் சிறப்பு வந்திட முடியும் என்பதே வள்ளுவரின் உறுதியான, இறுதியான கருத்து.

வேதம் ஓதும் தொழில் உயர்ந்த தொழில் என்றும் அதனைச் செய்வோர், சிறப்புக்குரியவர் என்றும் கருதுகிறோம். அந்தக் கருத்தை திருவள்ளுவர் அறவே மறுக்கிறார். அவரது குரல் கூறும் குறள் :

> **மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்**
> **பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்** *(குறள் 134)*
> (ஓத்து = வேதம்)

அஃதாவது பார்ப்பான் ஒருவன் வேதத்தை மறந்து விட்டாலும் மீண்டும் அதை ஓதிக்கொள்ளமுடியும். ஆனால் ஒழுக்கம் குன்றுமானால் சிறப்புக் கெடுவதோடு மட்டுமன்றி பிறப்பும் கெடும் என்கிறார் வள்ளுவர். இதனால், ஒழுக்கத்தால்தான் ஒருவன் சிறப்புப் பெறமுடியுமே தவிர வேதம் ஓதும் தொழிலால் மட்டுமே அதனைப் பெற்றிட முடியாது என்பதை உணரலாம். எனவே செய்யும் தொழிலுக்கேற்பச் சிறப்பு வேறுபடும் என்பது வள்ளுவர்க்கு உடன்பாடன்று என உணர்வோமாக.

மன்னனாக இருந்து செய்யும் ஆளுந்தொழிலால் மட்டுமே ஒருவனுக்குச் சிறப்பு வந்திடாது. அவன் குடிகள் அஞ்சத்தக்க செயல்கள் செய்வானாயின் வெங்கோலனாக கொடுங்கோலனாக இகழப்படுவான் (563) என்றும் கொடுங்கோல் ஆட்சி செய்தால் அவனுக்குப் பெருமை கிட்டாது (556) என்றும் பிற குறள்களில் கூறியுள்ளார். இதேபோன்று, அமைச்சனாகத் தொழில் புரிவதனாலேயே ஒருவனுக்குப் பெருமை வந்திடாது என்றும், அவன் செய்யும் செயலை யொட்டியே பெருமை சிறுமை (639, 640) அமையும் என்றும் பிற குறள்களில் கூறியுள்ளார்.

இப்படிப் பல இடங்களில் பல குறள்களில் கூறி இருப்பவர், ஒருவன் செய்யும் தொழிலைப் பார்த்த மாத்திரத்திலேயே அவனுடைய பெருமை சிறுமைகளை மதிப்பிடுவாரா?

எனவே நாம் எடுத்துக்கொண்ட குறளுக்கு (972) சரியான - உண்மையான - பொருளைக் கண்டால்தான் திருவள்ளுவரின் சமத்துவச் சமுதாயக் கொள்கையைத் தெளிவாக உணரமுடியும்.

மேற்குறளில் (972) 'தொழில்' என்று குறிப்பிட்டாலே போதும். அப்படியிருந்தும், 'செய்' எனும் முதல்நிலைத் தொழிற் பெயரை இணைத்துச் சொன்னது ஏன் என்பதை உணராமல், அதனைச் 'செய்தொழில்' என வினைத்தொகையாகக் கொண்டு பொருள் காண்பதால்தான் தவறான முடிவுக்கு வர நேர்கிறது.

'தொழில்' என்று சொன்னாலே போதாதா? தொழில் என்றாலே, செய்யப்படும் வேலைதானே! அப்படியிருக்கச் 'செய்' எனும் முதனிலைத் தொழிற்பெயரை இணைத்து வினைத் தொகைபோல் (செய்தொழில்) ஏன் கூறவேண்டும்?

செய்தொழில் வேற்றுமையான் என்பதற்கு, செய்கின்ற தொழில் வேறுபாடுகளால்' என்று நேராகப் பொருள் கொள்ளாமல், 'தொழிலைச்செய்கின்ற வேற்றுமையால்' என அந்வயப்படுத்திப் பொருள் கொள்ள வேண்டும் எனக் குறிப்பால் உணர்த்துகின்ற நோக்கோடுதான், 'செய்' எனும் முதனிலைத் தொழிற்பெயரை அடைமொழியாகச் சேர்த்துள்ளார். இந்த நுட்பத்தை உணர்ந்தால்தான் வள்ளுவர் கருத்துக்கு உகந்த முறையில் பொருள் கொண்டவர்களாக - உண்மைப்பொருள் கண்டவர்களாக - 'எனைவகையான்' (514) 'அறிந்தாற்றி' (515) எனும் குறள்களாலும் மிகத் தெளிவாக உணரலாம்.

வினைத்தொகையை வேறுவகையில் சொற்பிரித்துப் பார்க்கலாமா? அதற்கு இலக்கணம் இடந்தருகிறதா எனும் வினாக்கள் சிலரிடையே எழும். பரிமேலழகரே வேறொரு குறளில் வினைத் தொகையை மாற்றி வைத்துப் பொருள் கொள்கிறார்.

ஓ ஓதல் வேண்டும் ஒளி மாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர் *(குறள் 653)*

எனும் குறளின் வரும் 'செய்வினை' எனும் வினைத்தொகைச் சொல்லை 'வினைசெய்' என மாற்றிக் கூறுகிறார். 'செய்' எனும் முதனிலைத் தொழிற்பெயர் மாற்றப்பட்டது. அன்றி, 'செய்வினை' என வினைத்தொகை ஆக்கிய வழிப் பொருளின்மை அறிக' என விளக்கம் தந்துள்ளார் (பரிமேலழகர் 653ஆம் குறளுரை).

இதனால் வினைத்தொகை பொருள் தெளிவுக்கு இடையூறு செய்யுமாயின் அதனை மாற்றிவைத்துப் பொருள் கொள்ளலாம் என அறிகிறோம்.

இதேமுறையில் நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ள 'பிறப்பொக்கும்' (972) எனும் குறளில் வரும் செய் தொழில் என்ற வினைத்தொகையைத் 'தொழில் செய்' என மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும் என்று ஏன் பரிமேலழகருக்குத் தோன்றவில்லை?

காரணம் இதுதான் : சமூகச் சமத்துவத்தை வற்புறுத்தும் இத்திருக்குறளுக்கு, வருணாசிரம தருமத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு உரைகாண முற்பட்டதே காரணமாகும். அதனால்தான் வள்ளுவரது கருத்துக்கு முரணாக அவர் உரை காண நேர்ந்தது. இதேபோல்தான்,

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தா னிடை *(குறள் 37)*

என்ற குறளுக்கும் தவறான பொருளையே, வள்ளுவரின் கொள்கைக்கு மாறுபட்ட கருத்தையே உரையாகக் கூறியுள்ளார்.

'அறத்தின் பயன் இது என்று யாம் ஆகம அளவை யான் உணர்த்தல் வேண்டா. சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடை காட்சியளவை தன்னானே உணரப்படும்' (பரிமேலழகர் 37 ஆம் குறளுரை).

பல்லக்கைச் சுமப்பவனைப் பாவம் செய்தவன் என்றும் அதில் அமர்ந்து செல்வோனைப் புண்ணியம் செய்தவனென்றும், பார்த்த மாத்திரத்திலேயே கூறிவிடலாம் என்கிறார் பரிமேலழகர்.

சிவிகையைச் சுமப்பவன் மாசில்லாத மனத்தினனாக இருக்கவியலாதா? அன்றி அதில் அமர்ந்து செல்வோன்தான் பாவம் செய்தவனாக இருக்கக் கூடாதா? இதை எண்ணிப் பாராமல் காட்சியளவிலேயே ஒரு முடிவுக்கு வருவது சரியாகுமா?

காட்சியளவால் மதிப்பிடுவதைப் பல இடங்களில் கடிந்துள்ளார் வள்ளுவர். 'கூடா ஒழுக்கம்' எனும் அதிகாரம் (அதிகாரம் 28) இதற்குச் சான்று. 'புறங்குன்றி' (277) எனும் குறள் உணர்ந்தவர் எவரும், பார்த்த அளவிலேயே எதையும் நம்புவதை ஏற்கமாட்டார்கள்.

திருஞான சம்பந்தரின் பல்லக்கைத் திருநாவுக்கரசர் சுமந்தால் அவரை நல்லறத்தர் அல்லர் எனக் கூற முடியுமா?

மனத்தூய்மையில்தான் அறத்தினைக் காணவேண்டுமே தவிரப் புறச் செயலைக் கொண்டு அறத்தின் பயனை முடிவு செய்திடக்கூடாது என்று கருதுகிற (குறள் 34) தெய்வப் புலவர்க்குப் பரிமேலழகர் உரை ஏற்புடைத்தாகுமா?

மேலும் மற்றொரு குறளில்,

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல்லவர் *(குறள் 973)*

என்றும் கூறியுள்ளார். பல்லக்கில் அமர்ந்திருப்போனுக்கும் அதனைச் சுமப்போனுக்கும் கூட இக்குறளை ஒப்பிட்டுப் பார்ப்பதில் தவறில்லை

வள்ளுவரின் கருத்து இவ்வாறிருக்க, 'புறத்தோற்றத்தின் காட்சியாலேயே அறத்தின் பயன் இது என்று முடிவு செய்து விடலாம்' என வள்ளுவர் கூறுவதாகப் பரிமேலழகர் கூறுவது எப்படி நியாயமாகும்?

இங்கு இக்குறளுக்கு (37) இவ்வாறு பொருள் கொண்டதால்தான், நம் ஆய்வுக்குரிய 'பிறப்பொக்கும் (972) எனும் குறளுக்கும் வள்ளுவனின் கொள்கைக்கு மாறாகப் பொருள் கூறத்துணிந்தார் பரிமேலழகர்.

அவரவர் செய்கின்ற தொழிலைப் பார்த்தே இவர் உயர்ந்தவர், இவர் தாழ்ந்தவர் எனக் கருதும் போக்கினர் அல்லர் வள்ளுவர். எந்தத் தொழிலாயினும் அதனை எப்படிச் செய்கிறான் எனப் பார்த்தே ஒருவனை மதிப்பிடக் கூடியவர்.

ஒரு மேலதிகாரி தன் தொழிலைச் சரியாகச் செய்யாமல் கையூட்டு (லஞ்சம்) வாங்குதல் போன்ற இழி செயல் செய்யினும், அவரை அவர்தம் பதவி நிலையின் உயர்வைக் கொண்டே சிறப்பித்து விடுகிறோமா? இல்லையே! அத்தகையோரைத் தயங்காமல் தண்டனைக்கு ஆட்படுத்துகிறோம்.

ஓர் எளிய எழுத்தர் (Clerk) எவ்வளவுதான் சிறப்பாக உழைத்தபோதிலும் அவரது தொழில் நிலையின் சிறுமைகண்டு அவரை இகழ்கிறோமா? இல்லையே! அத்தகையோரை சிறப்புக்கு உரியவர்களாகக் கருதி மேற்பதவிக்கு உயர்த்திப் பாராட்ட வில்லையா?

எனவே, ஒருவர் செய்யும் தொழிலுக்கு ஏற்பவே அவர்களது சிறப்பும் தாழ்வும் அமையும் என்பது பொருந்தாது என நமக்கே புரியும்போது, வாழ்வியல் அறிஞரான வள்ளுவருக்குப் புரியாதிருக்குமா?)

எனவே செய்கின்ற தொழில் வேறுபாட்டுக்கேற்ப (Difference of occupation) சிறப்பு, வேறுபடுவதில்லை. தொழிலைச் செய்கின்ற முறை வேறுபாட்டுக்கேற்பவே (The manner of doing) சிறப்பு வேறுபடும் என்றுதான் வள்ளுவர் கூறியிருப்பார்.

மாறுவேடப் போட்டியில் (Fancy dress) ஒருவன் அரசனாக வேடம் புனைந்து நடிக்கிறான். மற்றொருவன் ஆண்டியாக வேடம் புனைந்து நடிக்கிறான் எனக் கொள்வோம். அரச வேடம் உயர்ந்ததுஎன்பதால் அவனே பரிசுக்குரியவன் என்றும், ஆண்டிவேடம் தாழ்ந்தது என்பதால் அவனுக்குப் பரிசில்லை என்றும், அவர்கள் மேற்கொண்டுள்ள வேடத்தைப் பார்த்தா மதிப்பிடுகிறோம்? இல்லையே!

அரச வேடம் பூண்டவன் தன் பாத்திரத்தை உணர்ந்து அதற்கேற்ப இயல்பாக நடிக்க வில்லை என்றாலும் அவனுக்குத்தான் பரிசு என்றோ ஆண்டிவேடம் பூண்டவன் தன் பாத்திரத்துக்கு ஏற்ப இயல்பாக நடித்திருந்தாலும் அவனுக்குப் பரிசில்லை என்றோ முடிவு செய்துவிடுகிறோமா? இல்லையே!

யார் எந்த வேடம் மேற்கொண்டிருந்தாலும் அந்த வேடத்தின் உயர்வு தாழ்வுகளுக்கு ஏற்ப அவர்களைப் பாராட்டாமல், அவர்கள் நடிக்கின்ற நடிப்பின் உயர்வு தாழ்வுகளுக்கு ஏற்பவே பாராட்டுகிறோம்.

எனவே 'செய்தொழில் வேற்றுமையான்' எனும் குறள் தொடரைத் 'தொழில் செய் வேற்றுமையான்' என மாற்றிப் பொருள் கொள்வதே மெய்ப்பொருளாகவும், வள்ளுவன் படைக்கும் சாதி பேத மற்ற சமத்துவ சமுதாயத்துக்கு அரண் செய்வதாகவும் அமையும் என்று கூறலாம்.

புறத்தோற்றத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே அறத்தின் பயன் இதுதான் என்று முடிவு செய்திடக்கூடாது என்பதை உணர்த்தவே 'அறத்தாறு' (37) எனும் குறளைப் பாடினார் எனவும், ஒருவன் செய்யும் தொழிலைப் பார்த்தே அவனுடைய பெருமை சிறுமைகளை மதிப்பிட்டுவிடக்கூடாது என்பதை உணர்த்தவே, 'பிறப்பொக்கும்' (972) எனும் குறளைப் பாடினார் எனவும் தெளிவடைவோமாக!

இவ்வாறு தெளிவடைந்தால்தான் வள்ளுவனின் சமத்துவச் சமுதாயக்கொள்கையை உணர்ந்தவர்களாவோம்.

வள்ளுவரின் சமுதாய நோக்கு

பி. மணி
சோ. பாலசுப்ரமணியன்

வாழ்வியல் விளக்கமாய்ப் படைக்கப் பட்ட திருக்குறள் தனக்கு அடுத்து வந்த அனைத்து நூல்களுக்கும் ஓர் கட்டமைப்பு இலக்கணமாக அமைந்திருக் கிறது. கடவுள் வாழ்த்துடன் துவங்குவது, முதல்பாடலில் உலகை முன்னிலைப்படுத்து வது எனத் தனக்குப்பின் வந்த நூல்களுக்கு எல்லாம் முன்மாதிரியாய்த் திகழ்கிறது. தனிமனித வாழ்விற்கும், சமூக வாழ்விற்கும் ஓர் சீரிய நெறி கற்பிப்பதாகவும் உள்ளது. சமூகத்தின் மீது வள்ளுவர் கொண்ட மித மிஞ்சிய காதல் அத்துணைக் குறட்பாக் களிலும் அருமையாக எதிரொலிக்கிறது. வள்ளுவர்க்குச் சமூகத்தின் மீது அளவு கடந்த பரிவு இல்லாவிடில் இவ்வளவு அருமையான நீதிநூல் நமக்குக் கிட்டியிருக்காது.



சமுதாய நோக்கில் வள்ளுவர் படைத்துள்ள அத்துணைக் குறட்பாக்களும் அக்காலத்திற்கும் சரி இக்காலத்திற்கும் சரி எக்காலத்திற்கும் பொருந்துவதாகவும் மிகவும் தேவையான தாகவும் இருக்கின்றன

என்பதை வலியுறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

1. திருக்குறளும் சமுதாயமும்

வள்ளுவர் தான் கண்ட சமுதாயத்தையும் காண விரும்பிய சமுதாயத்தையும் ஆய்ந்து அதனைத் திருத்தி உயர்த்த விரும்பியிருக்கிறார். அவர் கண்ட சமுதாயம் வரலாற்றிற்குரியது, காண விரும்பிய சமுதாயம் எதிர்காலத்திற்குரியது. ஒருக்கால் கனவுக்குரியதும் ஆகாலம். கனவு மெய்ப்படலாகின் நம் சமுதாயம் உலகிற்கு உதாரணமாய்த் திகழ்வது திண்ணம். குறளின் பால் காதல் கொண்ட அனைவரும் குறள் கூறும் சமுதாயம் சமைப்பதில் எழுச்சியும் உறுதியும் பூண்டு அதற்குரிய செயலில் தீவிரமாய் இறங்கிச் சமுதாயத்தின் மென்மேலும் உயர்த்தினால் நமக்கெல்லாம் நாளைய வரலாற்றில் இறவாப்புகழுடன் கூடிய இன்றியமையாத இடம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

2. மனித இலக்கண உடைமைகள்

அன்புடைமை (8), அடக்கமுடைமை(13), ஒழுக்கமுடைமை (14), பொறையுடைமை (16), பண்புடைமை (100), ஆள்வினை யுடைமை (25), அறிவுடைமை (43), ஊக்கமுடைமை(100), ஆள்வினையுடைமை(62) நாணுடைமை(102) என 10 உடைமை களாகத் தனித்தனி அதிகாரங்கள் படைத்துள்ளார். அன்பு வழி வாழ்வே அனைத்தும் நல்கும் என்கிறார் வள்ளுவர். மனம், மொழி, மெய்களை அடக்கிவாழும் வாழ்வு ஆக்கம் பெருக்கும். நன்னடத்தை உடையோராய் ஒழுக்கமுடன் வாழும் வாழ்வு உயர்வெலாம் தரும். பொறுமையுடையோர் பெருமை பெறுவார். நற்பண்புகளைப் பெற்றோரால் உலகம் உயர்வு பெறும். எல்லா உயிரிடத்தும் அன்பு பாராட்டும் அருள்நெறி அல்லல் அழிக்கும். அறிவுச்செல்வம் ஆக்கம் பெருக்கும். விடாமுயற்சியுடன் முயன்றால் முடியாததும் உண்டா? பழிச்சொல்லுக்கு வெட்கப்படாதோர் பாவியர் ஆவர். மக்கள் தலைவராயிருப் போர் மக்கள்மீது மிக்க பரிவுடையராக இருந்தால்தான் காலம்கடந்தும்பேசப்படுவர். 10 உடைமைகளையும் கொள்வோர் மனிதருள் மாமனிதராய் போற்றப்பவர். எக்காலத்திற்கும் சிறந்த மனித இலக்கணமாகப் உடமைகள் கூறப்படுகின்றன.

3. களைய வேண்டிய வாழ்க்கைச் சீர்கேடுகள்

அக்கால, இக்கால மக்களின் இயல்பான வாழ்க்கைச் சீர்கேடுகளை வரைவின் மகளிர்(92), கள்ளுண்ணாமை(93), சூது (94) நீநட்பு(82) மற்றும் கூடா நட்பு(83) என்ற தனித்தனி

அதிகாரங்கள் மூலமாக எதிர்த்துக்குரல் கொடுத்த முதல் தீரமிக்க படைப்பாளியாய்த் திகழ்கிறார். ஒருவனுக்கு ஒருத்தி என்ற நாகரிகம் வழக்கில் முழுமையாக இல்லாத காலக்கட்டத்தில் துணிந்து எழுதியதொடு வாழ்வாங்கு வாழ்ந்தும் காட்டிய அவர்தம் பேராண்மையை என்னவென்பது! இதனை முப்பால்களிலுமே வலியுறுத்துகின்றார். அறத்துப்பாலில் பிறனில் விழையாமை(15), பொருட்பாலில் வரைவின் மகளிர் (92), இன்பத்துப்பாலில் பரவலாக அனைத்து அதிகாரங்களிலுமே வலியுறுத்துகிறார். புலால் உண்பதை குரான், பைபிள் போன்ற நீதி நூல்களே நியாயப்படுத்தும் போது அவற்றுக் கெல்லாம் முன்பாகவே புலால் மறுத்தல் (26) கொல்லாமை (33) போன்ற அதிகாரங்களால் திருக்குறளை அவை அனைத்தையும்விட ஒரு படி உயர்ந்த படைப்பாக்கியருக்கிறார். எவ்வுயிர்க்கும் இன்னா செய்யாது அவ்வுயிர்களை ஓம்புபவராகத்திகழ வேண்டும் என்கிறார். ஈராயிரம் ஆண்டுகட்கு முன்வாழ்ந்த நம் மக்கள் கள்ளுண்ணுதலைத் தவறாகக் கருதவில்லை. புலவர்களும் அதனைக் கடிந்து ஒதுக்கவில்லை. மாறாக வாழ்த்துகின்றனர். பெருமைப்படுத்துகின்றனர். ஆயின் தெய்வப்புலவர் கள்ளின் தீமையை நன்குணர்ந்து வன்மையாக எதிர்க்கிறார். பிறனில் விழைதல்அறத்தைக் கொல்லும், வரைவின் மகளிர் நாட்டம் ஆக்கத்தையும் புகழையும் கெடுத்துத் தீராப்பழியைக் கொடுக்குமாதலால் தீவிரமாகக் கண்டிக்கிறார். சமுதாய அமைப்பை மாற்றியமைக்க விரும்பவில்லை; புரட்சியை வேண்டவில்லை; ஆயின் அமைதிப்புரட்சியை முனைப்புடன் நடத்திக்காட்டினார். ஆறறிவு படைத்தமைக்கு உரிய இயல்பான வாழ்க்கை வாழ அழைக்கின்றார்.

4. தனி மனிதனும் சமுதாயமும்

தனிமனித வாழ்வின் வெற்றியில்தான் சமுதாய முன்னேற்றமுள்ளது. எனவே நல்லிணக்கமான வாழ்வினை வாழ்வதற்கு அறன் வலியுறுத்தல் (4), விருந்தோம்பல்(9), இனியவை கூறல் (10) வெஃகாமை(18), பயனில சொல்லாமை(20& ஈகை(23), வாய்மை(30) இன்னாசெய்யாமை(32) பெரியாரைத் துணைக்கோடல்(45), சிற்றினம் சேராமை(46) வினைத் தூய்மை(66) போன்ற அதிகாரங்களை வழங்கியுள்ளார். ஊழல் பற்றிக் கூறும்போது பிறரை அழவைத்துக் கொண்ட பொருள் தம்மையும் அழவைத்து நீங்கிவிடும் என்கிறார்(659). தனிமனித வாழ்வில் பேணப்படும் முறைமைகளே சமுதாயத்தின் பிரதிபலிப்பாக விளங்குகின்றன. அறநெறி வாழ்வில் அனைத்தும்

பெறலாம். புதிதாக வந்தோர்க்கு விருந்தோம்புவது அரும்பெரும் வாழ்வு. பிறர்பொருள் விரும்பாதிருத்தல் வேண்டும். வெஃகுதல் செய்யின் அஃகுதல் ஆகும். இனிய சொற்களைக் கூறுவது இன்பம் பெருக்கும். பயனற்ற சொற்களைப் பேசுவோர் மனிதப் பண்பற்றவர்; ஈந்து மகிழ்தலே இணையில்லா இன்பம்; வாய்மையாளரை வையகம் போற்றும்; இன்னா செய்தார்க்கே இன்னா சேரும், வினைத்திட்டம் இடுதல் பனையளவு பெருமையாம் எனத் தனிமனித முன்னேற்றத்திற்கான வழி முறைகளை நலம்பட உரைக்கின்றார்.

5. கல்வி

கல்வியைப் போற்றுதற்குக் கல்வி, அறிவுடைமை, கேள்வி, கல்லாமை என 4 அதிகாரங்களைப் படைத்துள்ளார்.

5.1 **கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
நிற்க அதற்கு தக *(குறள் 391)*

என்கிறார். மக்கள் தலைவனுக்குக் கல்வி, கேள்வி, அறிவுடைமை ஆகியன இன்றியமையாதன என்பதன் மூலம் இன்றைய சீர்கேடுகளுக்கான காரணத்தைச் சூசகமாய்க் கூறுகிறார். பிறர் மகிழும் படியாக ஒன்று கூடிக் கலந்துரையாடி வருந்திப் பிரிதலே அறிஞர் தொழிலாகும். இத்தகைய அறிஞர்கள் கூட்டம் பற்றிக் கூறுகின்றார் (394). இன்றைய மாணவர்க்கு பணிவைக் கற்பிக்கும் முகமாக, செல்வர்முன் வறியோர் பணிவது போல் கற்றவரிடம் பணிந்திருப்பதால் கற்றவரே உயர்ந்தோர் என்கிறார்(395).

5.2 கல்லாமை

கல்லாமை பற்றிக் கூறும்போது கல்லாதவன் மிக்க அழகியவனாய் இருந்தாலும் அவன் அழகு மண்ணால் சிறப்புற செய்யப்பட்ட பொம்மையின் அழகிற்கு ஒப்பாகும் என்கிறார் (407). மேற்குடியில் பிறந்தும் கல்லாதவரை விடக் கீழ்க்குடியில் பிறந்த கற்றவரே உயர்ந்தவர் என்கிறார் (409). கல்லாதவரை விலங்கு என்கிறார் (410).

5.3 கேள்வி

கேள்வியில் செவிச்செல்வமே செல்வத்துள் தலை என்கிறார் (411). செவிக்கு உணவு இல்லாதபோதுதான் வயிற்றுக்கு ஈயப்படும் என்கிறார் (412). மேலும் கடுமையாக செவிச்சுவை

யுணராது வாய்ச்சுவை மட்டுமே உடையவர் செத்தால் என்ன? இருந்தால் என்ன? என்கிறார் (420).

5.4 அறிவுடைமை

அறிவுடைமையில், உயர்ந்தோர் வாழுமாறு வாழ்வதே அறிவுடைமை என்கிறார் (426). யார் கூறினாலும் அப்பொருளின் உண்மை இயல்பை ஆராய்ந்து அறிவது அறிவு என்று கூறுவது இன்றைக்கு மிகப்பொருந்தும் (423). உண்மையான சான்றோரைத் தழுவி வாழ்வது புகழ்நிலையாகும் (425). அவர்தம் உறவில் சுருக்கம் விரிவில்லாது வாழ்வது அறிவுடைமை. அறிவில்லாதார் எல்லாம் பெற்றிருந்தாலும் ஒன்றும் இல்லாதவரே (430).

6.1 இல்வாழ்க்கை

வாழும் முறை தவறாது வாழ்பவன் புகழுலகத் தெய்வங்களுள் ஒன்றாக வைத்துப் போற்றப்படுவான் (5). வாழவேண்டிய முறைகளை மிக நேர்த்தியாய்க் கூறுகின்றார். பிறரால் பழிக்கப்படாத இல்வாழ்க்கையே சிறந்த அறம்(49) இல்வாழ்வில் அன்போடு - அறம் செய்து வாழ்ந்தால் தான் அதன் முழுப் பயனையும் அடையலாம் (45).

6.2 வாழ்க்கைத்துணை நலம்

மனைவியின் நற்பண்புகள் காலம் கடந்து நிலைப்பதாய்க் கூறுகிறார். கணவனின் வருவாய்க்கேற்பச்செலவு செய்பவள் சிறந்த துணை(51). ஒருவனின் வாழ்வு எல்லாவகையிலும் சிறப்புடையதாயினும் மனைவியிடம் இல்லறப்பண்பு இல்லாதுபோனால் எப்பயனும் இல்லை(52). கணவனை மட்டும் தெய்வமாக எண்ணி வாழ்பவள் பெய் என்றதும் பெய்யும் எனக் கற்புநிலையை (55) கூறுகிறார். மகளிரைப் பிறர் அடக்கிக் காக்கும் காவலை அவர் விரும்பவில்லை. தம்மைத்தாமே காக்கும் காவலே சிறப்பு என்கிறார் (57). புகழத்தக்க நல்ல மனைவியைப் பெறாத கணவர்க்கு பெருமிதம் இல்லை என்கிறார்.

6.3 மக்கட்பேறு

சமுதாயத்திற்குப் பயன்பெறத்தக்க வகையிலே பெற்றோர், பிள்ளைகளின் கடமைகளை அருமையாய்க் கூறுகிறார். தந்தை மகனுக்கு செய்யக்கூடிய நன்மை அவனைக் கற்றறிந்த சான்றோர் அவையிலே முதன்மையாளன் ஆக்குவதே (67). தன்னை முன்னேற்றிய தந்தைக்கு மகன் செய்யும் பதிலுதவி இந்த நல்லவனை மகனாகப் பெற இவன்தந்தை என்ன தவம் செய்தானோ? என்று நல்லவர்கள் புகழும்படி வாழ்வதாகும் (70).

தம்மைவிட தம் மக்களை அறிவிற் சிறந்தவராக ஆக்குதல் இவ்வுலக உயிர்க்கெல்லாம் இன்பம் தரும். தன் மகனைச் சான்றோன் என உயர்ந்தோர் புகழக் கேட்ட தாய், அவனை ஈன்ற பொழுதைவிட அதிகம் மகிழ்வாள்(63) என்கிறார்.

7. அரசியலார்க்கு

நம் அரசியலார் விதி அறிதல், காலம் அறிதல், இடன் அறிதல் போன்ற அதிகாரங்கள் வழிநின்று திட்டங்கள் வகுப்பாராயின் நம் இந்தியத்திருநாடு பலதுறைகளிலும் வெற்றிமேல் வெற்றி குவித்து வெளிநாட்டுக் கடனெல்லாம் அடைத்துப் பார் போற்றும் வல்லரசாவது திண்ணம்.

8. சமுதாய நோக்கின் இறவாத்தன்மை

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த சமூகச் சிந்தனைகளும் இன்றைய சிந்தனைகளும் மாறுபட்டிருந்தாலும் வள்ளுவர் எக்காலத்திற்கும் பொருந்தும் சமுதாய நிலைப் பாட்டை மேல்வரிச்சட்டமாய்த் தந்துள்ளார். சொல்சிக்கனம் கருதி வார்த்தைகளில் அடர்த்தி அதிகமிருப்பதால் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வெவ்வேறு பொருள் கொள்ளப்பட்டுப் புதுப்புதுச் சிந்தனைகளைத் தோற்றுவிக்கிறது. இத்தாலிய ஏந்தல் வீரமாமுனிவர் 1730இல் திருக்குறளை இலத்தீன் மொழியில் பெயர்த்தார். எல்லீசர் ஆங்கிலத்தில் முயன்றதைத் தொடர்ந்து ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பேரா. சார்ச்சு யுக்ளே போப் 1886 இல் ஆங்கிலத்தில் பெயர்த்தார். ஆங்கிலத்தில் மட்டுமே ஏறத்தாழ ஐம்பதின்மர் மொழி பெயர்த்துள்ளனர். நரிக்குறவர் பேசும் வக்கிரபோலி மொழியிலும் வெளிவந்து ஒளி தந்துள்ளது. 125 மொழியெர்ப்புகள் எழுந்துள்ளன. மணக்குடவர் தொடங்கி எண்பதிற்கும் மேற்பட்டோர் உரை தீட்டியுள்ளனர். அத்துணை பேரும் தத்தமது வாழ்க்கைச்சூழல், வாழ்க்கை முறைகள் மற்றும் தமது சமயம் சார்ந்த கருத்துகளை உரையில் ஏற்றிக் கூறியிருந்தாலும் இவ் ஞானவிளக்கு பல விதங்களில் சுடர்விடுகின்றது.

இந்திய நூலக இயக்கத்தின் தந்தை சீ.இரா. அரங்கநாதன் அவர்கள் இறவா இலக்கியத்தைப் பற்றிப் பொதுவாய்க் கூறியிருப்பது திருக்குறளுக்கு மிகவும் பொருந்தும். அவை, இறவா இலக்கியம் என்பது

1. படைத்தவரையும் விஞ்சி நிற்கும்
2. படைப்பாளியின் விஞ்சிநிற்கும் குணநலன்களை வெளிப்படுத்தும்

3. புதிய சிந்தனைகளைத் தூண்டி புதுப்புதுக் கண்டு பிடிப்புகளுக்கு வழிவகுக்கும்.

எத்துணை எத்துணை ஆராய்ச்சிகள் திருக்குறள் மீது எத்துணை விதம் விதமான பார்வைகள், பல்வேறு வகையான அணுகுமுறைகள், எண்ணிலடங்கா மாநாடுகள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், திருக்குறளைக் கருப்பொருளாய்க் கொண்டு எத்துறைக்கும் வழி காட்டியாய் இனிய துணையாய், நண்பராய், இன்றியமையாத வாழ்வியல் விளக்கமாய், மதுரை தமிழ்நாகனார் கூற்றுப்படி எல்லாப் பொருளும்இதன்பால் கொண்டுள்ளது.

இந்நாட்டிற்கேயன்றி எந்நாட்டிற்கும் அக்கால இக்காலங்களுக்கு மட்டுமேயன்றி எக்காலத்திற்கும் அச்சமயம் இச்சமயம் என்றன்றி எச்சமயத்திற்கும், அக்குலம் இக்குலம் என்றன்றி எக்குலத்தினருக்கும், அம்மொழி இம்மொழி என்றன்றி எம்மொழிக்கும், அத்துறை இத்துறை என்றன்றி எத்துறைக்கும் வாரி வழங்கியுள்ளார். இவ்வாறு அச்சூழல் இச்சூழல் என்றன்றி எச்சூழலுக்கும் ஏற்பப்பொதுப்படவே கூறிச்செல்லும் வள்ளுவத்திற்கே உரிய தனிச்சிறப்பு அதற்கு உலகப் பொதுமறை என்ற பட்டத்தையும் பெறவைத்தது.

துணை நூல்கள்

1. கருத்தரங்கக் குழுவினர், **உலகக் திருக்குறள் மாநாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைக்கோவை** தொகுதி II முதல் ப்திப்பு டிசம்பர், 1999, பக்.563, 564
2. பேரா. சரவண ஆறுமுக முதலியார், **திருமதி சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு** 2-ம் பகுதி முதல்பதிப்பு 1971, பக். (i) 22, 25,143
3. திருக்குறள் மூதறிஞர், ஆ.வே. இராமசாமி, **திருக்குறள் எளிய தெளிவுரையும் பொன்மொழியும்**, மூன்றாம்பதிப்பு, 2003, பக்.9,11,13,15,79,81,83,85
4. வழக்கறிஞர் எஸ்.இராஜு செட்டியார், **திருக்குறள் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பகுதி I** முதல்பதிப்பு அக்டோபர் 1982, பக்.11,12,13,14
5. செல்வி மீனாட்சி ஸ்ரீனிவாசன் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், **குறள் கூறும் சமுதாயம்**, முதல்பதிப்பு 1975, பக்.(ii) (iii). 44.56.78,222

※ ※ ※

நூறு நாடுகளுக்குச் சென்று செய்வதை ஒரு நாட்டின் வாயிலாகச் செய்ய முடியும் - ஓர் ஆய்வு

ஆ. கந்தையா

திருக்குறளின் உயர்வையும் சிறப்பையும் உலகறியச் செய்வதற்கு உகந்த நாடு எது? நூற்றுக்கும் அதிகமான நாடுகளில் இருந்து குடிவந்துள்ள மக்கள் வாழும் நாடு; நூற்றுக்கு அதிகமான மொழிகளைப் பேசுகின்ற நாடு; உலகத்திலுள்ள சமயங்கள் எல்லாம் நடைமுறையிலுள்ள நாடு. அந்த நாடு ஆஸ்திரேலியா. தமிழ் மொழியைச் செம்மொழியாக உலகம் ஏற்றுக்கொள்ள ஆஸ்திரேலியாவில் திருக்குறளைப் பரப்புவோம். உலகம் அதை ஏற்றுக் கொள்ளும் நிலையில், இந்திய நடுவண் அரசும் ஏற்கும். இக் கருத்துகள் ஒளிப் படங்கள் வாயிலாக வலியுறுத்தப்படும்.



ஆஸ்திரேலியா ஆறு மாநிலங் களையும் இரண்டு மண்டலங்களையுமே கொண்டது. எல்லா மாநிலங்களிலும் மண்டலங்களிலும் மக்கள் வாழ்கின்றனர். 2001ஆம் ஆண்டு மேற்கொண்ட குடித் தொகை மதிப்பீட்டின்படி ஆஸ்திரேலியாவில் கிட்டத்தட்ட 20 மில்லியின் மக்கள் இருக்கின்றனர். இவர்கள் நூற்றுக்கும் அதிகமான நாடுகளில் இருந்து

ஆஸ்திரேலியாவுக்குக் குடிவந்துள்ளனர். எனவே ஆஸ்திரேலியாவில் நூற்றுக்கும் அதிகமான மொழிகள் பேசப்படுகின்றன; வேறுபட்ட பல பயன்பாடுகள் நிலவுகின்றன; பல்வேறு சமயக் கோட்பாடுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஆஸ்திரேலிய அரசும் பல் கலாசாரத்தை மேம்படுத்த மக்களை ஊக்குவிக்கின்றது; உதவியும் செய்கின்றது.

2001ஆம் ஆண்டு மேற்கொண்ட குடித்தொகை மதிப்பீட்டின்படி ஆஸ்திரேலியாவில் 24,067 தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்கள் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, பிஜித் தீவு ஆகிய நாடுகளில் இருந்து ஆஸ்திரேலியா வுக்குப் புலம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் ஆஸ்திரேலியாவில் எல்லா மாநிலங்களிலும் மண்டலங்களிலும் பரந்து வாழ்கின்றனர். 2001ஆம் ஆண்டு நடந்த குடித்தொகை மதிப்பீடு இதனைத் தெரிவிக்கிறது.

ஆஸ்திரேலியாவில் நூற்றுக்கும் அதிகமான இனத்தைச் சேர்ந்தமக்கள் மத்தியிலேயே தமிழர்கள் வாழ்கின்றனர். ஆஸ்திரேலியாவின் ஆட்சி மொழி ஆங்கிலம். எனினும் ஒவ்வோர் இனத்தவருக்கும் தத்தம் மொழியையும், பண்பாட்டையும், சமயத்தையும் வளர்க்கவும் பேணிக்காக்கவும் உரிமை உண்டு. அவற்றுக்கு மக்களை ஆஸ்திரேலிய அரசு ஊக்குவிக்கின்றது; உதவியும் செய்கின்றது. தமிழர்கள் தமது மொழியை வளர்க்கவும் பண்பாட்டைப் பேணவும் சமயத்தைக் கடைப்பிடித்து வாழவும் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். தமிழைக் கற்றுக் கொடுக்கத் தமிழ் வகுப்புகளை நடத்துகின்றனர்; தமிழ் மொழியை வளர்க்கவும் பேணவும் தமிழ் மன்றங்களை அமைத்துள்ளனர்; சமயத்தைக் கடைப்பிடித்து வாழக் கோயில்களைக் கட்டியுள்ளனர். இவ்வமைப்புகள் ஆஸ்திரேலியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் மண்டலங்களிலும் உண்டு.

தமிழர்களின் இந்த அமைப்புகள் வான்புகழ் வள்ளுவரின் திருக்குறளை ஆஸ்திரேலிய மக்கள் அறிந்து போற்றப் பெருமளவில் உதவலாம். திருக்குறள் எந்நாட்டவர்க்கும், எம்மதத்தினர்க்கும், எம்மொழியினர்க்கும் பொதுவான நெறியைப் போதிக்கும் தலைசிறந்த ஓர் இலக்கியம். இதனை ஆஸ்திரேலியாவில் வாழும் நூற்றுக்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த மக்கள் அறிந்து போற்ற வழிசெய்ய வேண்டும். அவர்கள் வாயிலாகத் திருக்குறள் காலம் கடந்த தனிப்பெரும் இலக்கியம் என்பதும், உலகப் பொதுமறை என்பதும் நூற்றுக்கும் அதிகமான உலக நாடுகளிலுள்ள மக்களைச் சென்றுசேரவேண்டும்.

சிட்னியில் திருக்குறள் விழா

2000 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் நாள் சிட்னியில் திருக்குறள் விழா நடைபெற்றது. இது ஆஸ்திரேலியாவில் முதன்முதல் நடைபெற்ற திருக்குறள் விழா. 'அறவாழ்வுக்கு வழிநடத்தும் குறள்' என்பது இவ்விழாவின் கருப்பொருள். உலகத்தில் தலைசிறந்த புலவராகவும் மேதையாகவும் திகழும் வள்ளுவரை ஆஸ்திரேலியாவில் வாழும் தமிழர்கள் அல்லாத ஏனைய இனத்தவர்களுக்கும் அறிமுகம் செய்வதே இவ்விழாவின் நோக்கமாகும். தமிழ் அலுவல்களோடு தொடர்புடைய அரசு, தனியார் நிறுனவங்களைச் சேர்ந்த தமிழர்கள் அல்லாத நூற்றுக்கும் அதிகமான அலுவலர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழர்கள் அல்லாத நூற்றுக்கும் அதிகமான அலுவலர்களுடன் தமிழ்த் தலைவர்களும் இந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், உருது ஆகிய மொழிகளைப் பேசுகின்ற இந்தியர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டனர். சிட்னியில் இவ்வாறு முதன்முதல் நடந்த திருக்குறள் விழா வரலாற்று முக்கியத்துவத்தைப் பெற்றது.

இவ்விழாவில் புதிதாக வெளிவந்த இரண்டு திருக்குறள் நூல்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. ஒன்று அமெரிக்காவைச் சேர்ந்த சற்குரு சிவாய சிவசுப்பிரமணிய சுவாமிகள் வண்ணப் படங்களோடு அமெரிக்க ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள 'திருக்குறள்' என்ற பெயருடன் புதிதாக வெளிவந்த நூல்; மற்றையது அருட்செல்வர், முனைவர் நா. மகாலிங்கம் அவர்களின் Tirukkural with Translation and Explanation என்ற நூல்.

இக்கட்டுரையாளரும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர், பேராசிரியர் முனைவர் வ. ஜெயதேவன் அவர்களும் ஆஸ்திரேலிய பல்கலாசாரச் சமுதாயத்துக்குச் சாலச் சிறப்புடைய 100 குறள்களைத் தெரிந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். அம்மொழிபெயர்ப்பு, Gleanings for Tirukkural for a Multicultural Society என்ற தலைப்பில் கைந்நூலாக வெளிவந்துள்ளது.

அக்கைந்நூல் கடந்த ஆண்டில் இருந்து ஆஸ்திரேலியாவின் ஆறு மாநிலங்களிலும் இரண்டு மண்டலங்களிலுமுள்ள நூலகங்களில் இடம்பெற்றுள்ளது. சிட்னியில் நடந்த திருவள்ளுவர் விழாவில் கலந்துகொண்ட மற்றைய இனத்தவர்களுக்கு இக்கைந்நூல் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அக்கைந் நூலிலுள்ள திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்த

பலர் திருக்குறளின் உயர்வையும் சிறப்பையும் பெரிதும் பாராட்டியுள்ளனர். கட்டுரையாளருடன் திருக்குறளை மொழிபெயர்த்த Mr Lewis Buckingham அவர்கள் Dr. Zakir Hussain கூறியுள்ள பின்வரும் கருத்தை வலியுறுத்தினார்:

> "Tirukkural was a treasure house of worldly knowledge, ethical guidance and spiritual wisdom. In the majority of its 1330 couplets even where the theme was common place the treatment was artistic and the play of sentiment, image and sound had a perennel interest."

குறளகம்

கட்டுரை ஆசிரியர் தம் இல்லத்தில் 'குறளகம்' ஒன்றையும் நிறுவியுள்ளார். அந்தக் குறளகத்தில் இன்று நானூற்றுக்கும் அதிகமான தலைப்புகளில் வெளிவந்த திருக்குறள் பற்றிய நூல்கள் உள்ளன. அவற்றுள் திருக்குறள் மூலம், திருக்குறள் மூலமும் உரையும், திருக்குறள் பற்றிய ஆய்வுகள், மொழிபெயர்ப்புகள், திறனாய்வு நூல்கள் என்பன குறிப்பிடத்தக்கவை. இருபதுக்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புகளும் குறளகத்தை அழகு செய்கின்றன.

திருக்குறள் வெளியீடுகளுக்கெனத் தமிழ் நாட்டில் ஒரு சில 'குறளகங்கள்' நிறுவப்பட்டுள்ளன. ஆனால் வெளிநாடுகளில் அத்தகைய நூலகங்களை யாருமே நிறுவவில்லை. திருக்குறளின் சிறப்பையும் உயர்வையும் ஏனைய இனத்தவர்களும் அறிந்து கொள்ள நூற்றுக்கும் அதிகமான மொழிகளைப் பேசும் பலவின மக்கள் வாழும் ஆஸ்திரேலியாவில் குறளகம் ஒன்றை அமைப்பது சாலப் பொருத்தமாகும்.

ஆஸ்திரேலியா பரந்த கண்டம். பரந்த கண்டத்தில் பரந்து வாழும் தமிழர்கள் அல்லாத மற்ற இன மக்களும் பயன்பெற, இத்தகைய பணிகள் ஏனைய மாநிலங்களிலும் மண்டலங்களிலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

வள்ளுவர் கோட்டம்

சென்னையில் ஒரு வள்ளுவர் கோட்டம் உண்டு; தமிழ் நாட்டுக்கு வெளியே கோலாலம்பூரில் பத்து மலையிலும் ஒரு வள்ளுவர் கோட்டம் இருக்கிறது. இவ்வள்ளுவர் கோட்டம் ஒரு குகையில் உள்ளது. வள்ளுவரின் திருக்குறள் அதிகாரங்கள் மலைக் குகைச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளன. அழகிய சிலைகளும் சித்திரங்களும் குறள்களின் பொருளை சித்திரிக்கின்றன. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் நிலைத்து நிற்கக்

கூடியதாய்க் குறள்கள் பொறிக்கப்பட்டுள்ளன; சிலைகளும் சித்திரங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

இந்த வள்ளுவர் கோட்டத்தைத் தினமும் ஐந்நூற்றுக்கும் அதிகமாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுகின்றனர். அவர்களுக்கு வள்ளுவர் கோட்டம் பற்றி விளக்க 'வழி நடத்தும் ஒலி நாடாக்கள்' உண்டு. அந்த ஒலி நாடாக்கள் வாயிலாகத் திருக்குறளின் உயர்வையும் சிறப்பையும் அவர்கள் அறிந்து வியப்படைகின்றனர்.

இன்று தமிழர்கள் 48 நாடுகளில் வாழ்வதாகக் கூறப்படுகிறது. அந்த நாடுகளில் எல்லாம் வள்ளுவர் கோட்டம் அமைத்துத் திருக்குறளின் பெருமையை உலகறியச் செய்வது தமிழர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

திருக்குறள் மொழிபெயர்ப்புகள்

திருக்குறளின் திறமான புலமையை உலகம் அறிந்து போற்ற அதனை உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்க வேண்டும். இன்று முப்பத்திரண்டு மொழிகளில் மட்டும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 13 இந்திய மொழிகளிலும், 7 ஆசிய மொழிகளிலும், 12 ஐரோப்பிய மொழிகளிலும் மொழியாக்கம் பெற்றுள்ளது. ஐரோப்பிய மொழிகளுள் முதன்முதல் இலத்தீன் மொழியிலேயே மொழிபெயர்க்கப் பட்டது. இம்மொழிபெயர்ப்பு 1730 ஆம் ஆண்டு வெளிவந்தது.

இலத்தீன் மொழிபெயர்ப்பு வெளிவந்தபின்னர், பிரான்சு மொழிபெயர்ப்பு 1767ஆம் ஆண்டு வெளிவந்தது. இம்மொழி பெயர்ப்புகளுக்குப் பின்னரே திருக்குறள் ஆங்கிலத்தில மொழி பெயர்க்கப்பட்டது. அதுவும் 63 அதிகாரங்கள் மட்டும் மொழி பெயர்க்கப்பட்டன. இம்மொழி பெயர்ப்பு 1840ஆம் ஆண்டு வெளிவந்தது. தற்போது ஆங்கிலத்தில் ஐம்பதுக்கும் அதிகமான மொழிபெயர்ப்புகள் இருக்கின்றன.

மற்றைய மொழிகளிலும் திருக்குறளை மொழி பெயர்ப்பதற்கு அரசாங்க மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்; தனியார் மட்டத்திலும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

திருக்குறள் மொழிபெயர்ப்புகள் பற்றி அண்மையில் சென்னையிலுள்ள ஆசியவியல் நிறுவனம் மேற்கொண்ட மதிப்பீட்டின்படி பல உண்மைகள் தெரியவந்துள்ளன. 13 இந்திய மொழிகளில் வெளிவந்த மொழிபெயர்ப்புகளில் வங்காளம், குசராத்தி, இந்தி, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம், சௌராத்திரம், தெலுங்கு, உருது ஆகிய ஒன்பது மொழிகளில் ஒன்றுக்கும் அதிகமான மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன.

எண்	மொழி	மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கை
1.	வங்க மொழி (Bengali)	2
2.	குசராத்தி (Gujarathi)	9
3.	இந்தி (Hindi)	9
4.	கன்னடம் (Kannada)	4
5.	மலையாளம் (Malayalam)	13
6.	மராட்டியம் (Mahratta)	1
7.	ஒரியா (Oriya)	1
8.	பஞ்சாபி (Panjabi)	1
9.	இராசத்தானி (Rajasthani)	1
10.	சமஸ்கிருதம் (Sanskrit)	7
11.	சௌராத்திரம் (Saurashtra)	2
12.	தெலுங்கு (Telugu)	11
13.	உருது (Urdu)	2

அதே மதிப்பீடு 7 ஆசிய மொழிகளில் வெளிவந்துள்ள மொழிபெயர்ப்புகளில் அரபு, பீஜியன், மலாய்மொழி, சிங்களம் ஆகிய நான்கு மொழிகளிலும் அதிகமான மொழிபெயர்ப்புகள் உள்ளன என்று கூறுகின்றது. ஏழு ஆசிய மொழிகளையும் மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கையையும் அட்டவணையில் காணலாம்:

எண்	மொழி	மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கை
1.	அரபு மொழி (Arabic)	2
2.	பர்மிய மொழி (Burmese)	1
3.	சீனமொழி (Chinese)	1
4.	பீஜியன் மொழி (Fijian)	2
5.	ஜப்பானிய மொழி (Japanese)	1
6.	மலாய்மொழி (Malay)	3
7.	சிங்களம் (Singhalese)	3

மேலும் அதே மதிப்பீடு 12 ஐரோப்பிய மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றது. 12 ஐரோப்பிய மொழிகளும் மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கையும் :

எண்	மொழி	மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கை
1.	ஆர்மினியன் மொழி (Armenian)	1
2.	ஸ்லேவானிக்மொழி (Czech)	1
3.	நெதர்லாந்து மொழி (Dutch)	1
4.	ஆங்கிலம்	50
5.	பின்லாந்து மொழி (Finnish)	1
6.	பிரஞ்சு மொழி (French)	9
7.	ஜெர்மன் மொழி (German)	6
8.	இத்தாலிய மொழி (Italian)	1
9.	இலத்தீன் (Latian)	1
10.	போலந்துமொழி (Polish)	1
11.	ருசிய மொழி (Russian)	2
12.	ஸ்வீடிஷ் (Swedish)	1

திருக்குறள் 32 மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளதாகப் பெருமையடைகிறோம். ஆனால் 32 மொழிபெயர்ப்புகளையும் ஓர் இடத்தில் கண்டுகொள்ள முடியுமா? ஆஸ்திரேலியாவில் நூற்றுக்கும் அதிகமான மொழிகள் பேசும் மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் தத்தம் மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட வேண்டுமெனப் பெரிதும் விழைகின்றனர். அவர்களின் விருப்பம் நிறைவேறுமா?

திருக்குறளின் உயர்வையும் சிறப்பையும் உலகறியச் செய்வதற்கு உகந்த நாடு ஆஸ்திரேலியா. நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் 12,087 தமிழர்கள் வாழ்கின்றனர். விக்டோறியாவில் 7,968 தமிழர்கள்; மேற்கு ஆஸ்திரேலியாவில் 1,368 தமிழர்கள்; குயின்லாந்தில் 1,149 தமிழர்கள்; ஆஸ்திரேலியத் தலைநகர் மண்டலத்தில் 751 தமிழர்கள்; தெற்கு ஆஸ்திரேலியாவில் 536 தமிழர்கள்; வட மண்டலத்தில் 126 தமிழர்கள்; தஸ்மோனியாவில் 82 பேர். இவர்களின் உதவியுடன் தமிழ் மொழியைச் செம்மொழியாக உலகம் ஏற்றுக்கொள்ள ஆஸ்திரேலியாவில் திருக்குறளைப் பரப்புவோம். உலகம் அதை ஏற்றுக்கொள்ளும் நிலையில், இந்திய அரசும் அதை ஏற்றுக்கொள்ளும்.

REFERENCES

1. The following tables from the Australian Bureau of Statistics:
   a. 2001 Census of Population and Housing Table 2, Persons

Speaking Tamil at Home, Age, Year of Arrival and Birthaplace, States and Territories, Australia.

b. 2001 Census of Population and Housing Table I, Persons Speaking Tamil by Age (Selected Ranges).

c. ABC, 2001 Census of Pupulation and Housing Table I, Persons SpeakingTamil at Home by year of Arrival.

2. Census of Population and Housing, Ethnicity Thematic Profile, Australian Bureau of Statistics, 1996.

3. Tamils in Australia, Dr. A. Kandiah, Natanalaya Publication, Sydney, 1996.

4. Tamils in Australia - An updated Survey, Dr. A. Kandiah,Natanalaya Publication, Sydney, January, 1998.

5. Tamil Community in Australia, An update survey based on 2001 Census, Natanalaya Publication, Sydney, 2003.

6. Hindu Temples in Australia, Dr. A. Kandiah, Natanalaya Publicaiton, Sydney, January, 1996.

7. Quest for Tamil Identity, Dr. A. Kandiah, Natanalaya Publication, Sydney, January, 2001.

8. கங்காரு நாட்டில் கன்னித் தமிழ், கலாநிதி ஆ. கந்தையா, நடனாலய வெளியீடு, டிசம்பர், 2000.

9. Gleanings from Tirukkural for a Multicultural Society, Dr. A. Kandiah & Prof. V. Jayadevan, Natanalaya Publicaon, Sydney, 2002.

10. Tributs and Translations of Tirukkural, M.A. Manickavelu & Dr. K. Thirunavukkarasu, Maniaym Publication, Dec. 1986.

11. ஆசியவியல் நிறுவனம் திருக்குறள் மொழிபெயர்ப்புப் பற்றி மேற்கொண்ட ஆய்வு அறிக்கை, 2000.

***

LEADERSHIP SKILLS

Ponnammal Natarajan

Most of us reading this have been leaders while assuming any one of the following roles: Group leader, class pupil leader, college union president, association leader, head of an office, head of a family etc. We also come across people who assume roles as, panjayat leader, religious leader, political head, social head, etc. We either, admire and like a leader or we criticize the actions of a leader. Very often we admire certain acts and we criticize certain other acts of the same leader. An effective leader need not be admired or appreciated by all, at all times. Effective leadership is to be considered with respect to the situation and it cannot be simplified into a set of do's amd do'nts. Yet underlying all types of situations a head or a leader is expected to possess the ability to guide, command or direct; possess the ability to motivate or inspire willingness on the part of others to follow or obey. There are many theories on leadership skills in modern management books and many case studies



of leadership as practiced by different leaders are available. In this paper a sample of 20 Thirukkurals are studied and a leadership skill that it addresses is derived. The couplets are selected as per the serial number in Thirukkural.

93. Better even that a generour gift (incentive) are sweet words and a kind gracious look.

Motivate or inspire by kindness

129. The burn caused by fire heals in the course of time, but the wound burned by the tongue does not heal.

Communication. Avoid wounding words or words that cause negative feeling

200. If you speak, speak what is useful, relevant, speak not useless words.

Communication, what to say

292. Do not hold as truth what your heart knows to be false; your own conscience will burn you when the truth comes to light.

Communication. Be truthful, add value to the system

305. If you want to look after yourself, control your anger else it destroys you.

Attitude, Avoid negative feelings

411. The most precious of treasures is the treasure of the ear, it is the crown among all wealth.

Listening. The power of listening provides information

429. To a man of foresight who is armed with knowledge for every contingency there is no sudden crisis.

Planning. Information and knowledge leads to effective planning and preparedness

434. Guard yourself against weakness for they are the foes that lead you to ruin.

Self discipline. Self correction for the system

466. There are things that ought not to be done and if you do them you will be ruined. There are things that ought to be done and if you do not do them you will be ruined also.

Deliberation. Right action should guard against errors of commission and omission

469. There is fault even in rendering a good deed to a person if it is not according to the human nature of the recipient.

Action. Personalize or customize your work

471. Get a full picture of the difficult nature of the operation, your own strength, the strength of your adversary and also the strength of your allies before starting on a venture.

Analyse before acting, simulation is important

490. When the time is against you feign inaction like the stork, but when the tide is on, act with the swiftness of the stork's strike.

Judge time. Choose the appropriate time (not auspicious time)

495. All powerful is the crocodile in deep water, but out of water it is no match for its foes.

Judge place. Choose the right place for action

504. Weigh a persons's good as well as his evil; whichever is predominant take that to be his nature.

Team building, how to judge people

509. Never judge people without trying them and after trying them give each one of them the work for which he is fit.

Team building, how to select team

515. Work should be entrusted to persons in consideration of their expert knowledge nd capcity for ptient exertion and not their love for you.

Team building, be impartial

595. The length of a flower stalk will be proportional to the depth of water, the elevation of a man in life is in proportion to his thinking.

The power of positive thinking

605. Postponement, forgetfulness, laziness and oversleep are the four cozy pleasure boats of those that are destined to perish.

Work style, what to avoid

612. Beware of leaving any work unfinished, for the world does not care for those who do not complete the work that they have once begun.

Work style, how to work

626. If you develop the attitude of even-mindedness and do not become attached to your fortunes you will not be stressed in your misfortune.

Develop mental balance

Thus we see that even 2000 years ago Thirukkural has emphasized the skils: Motivation, proper communication, listening, positive attitude, avoiding negative attitude, importance of information, knowledge, self-discipline, simulation, judging time, place and people, work style and mental balance. A complete reading of the entire adhigaram from which these couplets are selected will give more insight into leadership skills.

REFERENCES

1. Thirukkural (1997), English translation by Rev. Drew and John Lazarus, edited by Dr. S. Meyyappan, Manivasagar Pathippagam, Chennai - 600 108.
2. Desk book of Executive Excellence and Stress Management (1993), S.A. Sami, Ph.D., Minibook Publishing Co., Montgonmery WV, USA.

※ ※ ※

வள்ளுவம் வழங்கும் பாதுகாப்புப் பணி - ஓர் ஆய்வு

ந. செண்பகராமன்

தமிழ் மொழியில் அரசியல், நற்பொருளாதாரம் தருகின்ற நூலுண்டா என்பார் நோக்கி, ஏற்றமிகு கௌடில்யர் நூலும் இதற்கு இணையில்லை என்று எடுத்தியம்ப, வந்து போன சந்ததிக்கும், வாழ்ந்து வரும் சந்ததிக்கும், வரப்போகும் தலைமுறைக்கும், அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகுத்தித் தானே முழுதுணர்ந்து, எல்லாப் பொருளும் இதன் பாலுள, இதன் பாலில்லாத எப்பொருளும் இல்லை எனக் கூறி,

அரசியல் ஐயைந்துஅமைச்சியல் ஈரைந்
துருவல் அரணிரண்டு ஒன்றொண் கூழ்- இருவியல்
திண்படை நம்பு பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொருள் ஏழாமிவை

எனச் சிந்தைக்கினியதாய்ச், செவிக்கினியதாய், வாக்கிற்கினியதாய், ஓதற்கெளிதாய், உணர்தற்கறிதாய், ஐயன் திருவள்ளுவர் வழங்கியது வள்ளுவம்.



கலைமகள் அறியாத வித்தைகளா! கண்ணன் புரியாத லீலைகளா! வள்ளுவம்

வழங்காத பாதுகாப்புப் பணியா! வள்ளுவம் வழங்கும் பாதுகாப்புப் பணி எக்காலத்திற்கும் ஏற்றது எனத் தொகுத்தாய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும். மக்களாட்சி, மன்னராட்சி - இரண்டிற்குமே பாதுகாப்புப் பணி இன்றியமையாதது. குடிமக்கள் வாழ்வு மற்றும் உடைமைகளைப் பாதுக்காக ஒரு நிறுவனம் அல்லது நிருவாகம் அவசியமானது. இக்கருத்தை வள்ளுவர்,

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு

என்று குறிப்பிடுகின்றார். இதில் காத்தல் என்பதற்குப் பாடுபட்டுச் சேர்த்த பொருளை, கள்வராலும், பகைவராலும் கவரப்படாமல் படை போன்ற வலிமையால் மன்னன் காத்தல் என்று பொருள் தருகின்றார். இங்குப் பாதுகாப்பின் பணி மற்றும் அதன்சிறப்பு வலியுறுத்தப்படுகின்றது.

ஒரு நாடு எப்படி இருக்கவேண்டும் என்பதற்குத் தெய்வப்புலவர்,

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு

என்று இலக்கணம் வகுத்துள்ளார். நாடு வளம் பெற, தனி மனிதன் வளம் பெற அரச நீதி அவசியமானது. இதனையே,

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை

என்று குறிப்பிடுகிறார். இக்கருத்தையே, இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் "அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவ தூஉம்" என்றார்.

மனித சமுதாயத்தின் அடிப்படைத் தேவை உணவு, உடை, உறையுள் என்பதனை ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையும், சங்க இலக்கியமாம் புறநானூறும் வலியுறுத்துகின்றன. இதனையே இன்றைய மனித உரிமைச் சிந்தனையாளர்களும் வலியுறுத்துகின்றனர். பாதுகாப்புப் பணி மூலமே குடிமக்களுக்கு மேற்கூறிய மூன்று அடிப்படைத் தேவைகள் கிடைக்கப்பெறும் என்பதனை அறிந்த வள்ளுவர் ஓர் அரசு நடைபெறத் தேவையான ஆறு அங்கங்களில் படையை முதன்மையாகக் குறிப்பிடுகின்றார். அதே குறளில் எல்லைப் பாதுகாப்பாகிய அரணையும் சுட்டுகின்றார். ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு நாட்டுப்பற்றுடன் கூடிய குடிமக்கள் தேவை. நாட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்கப் பொருள் தேவை.

பொருளைப் பெருக்கிட நல்ல அமைச்சர் தேவை. பிற நாடுகளோடு இயன்றவரை நட்புணர்வோடு இருத்தல், எதிரி நினைத்தவுடன் தாக்காதிருக்க நல்லரண் தேவை. எனவே, ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் இந்த ஆறு அங்கங்களையும்

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு

என்று வள்ளுவர் தொகுத்துக் கூறுவது நுட்பமிக்கது. மேலும், இறைமாட்சியில் செந்நாப்போதார்,

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு

தேவை என்று வலியுறுத்துகிறார். இம் மூன்று பண்புகளும் தொடர்ந்து இருப்பதால் தான் இன்றைய உள்நாட்டுப் பாதுகாப்பும், வெளிநாட்டு ஆக்கிரமிப்பைத் தவிர்க்கும் திறனும் கொண்ட பாதுகாப்புப் பணி நம் நாட்டில் செவ்வனே நடைபெறுகிறது.

இதன் தொடர்ச்சியாய் மன்னன் மக்களைப் பாதுகாப்பதைக் குறிப்பிடும் வள்ளுவர்,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்

என்றார். இக்குறளுக்கு நேராகப் பொருள் காணின் குடிமக்களைக் காப்பாற்றும் என்பதே பொருளாகும். ஆனால், பரிமேலழகர் குடிகளுக்குத் தான் முறை செய்து, பிறர் அதனால் நலியாமல் காத்தலைச் செய்யும் அரசன் என்று நயம்பட உரைக்கின்றார். ஒருவருக்கு முறை செய்யும் போது பிறர் நலியாமல் பாதுகாத்தல் முக்கியம். இதைத்தான் இன்று மனித உரிமைக் கழகங்கள் வற்புறுத்துகின்றன. வள்ளுவம் காலம் கடந்து என்றும் புகழுடன் நிற்பதின் வெற்றி இதுவேயாகும்.

செங்கோன்மை சிறந்து விளங்கினால்தான் குடிமக்களும், ஆட்சியாளரும் பாதுகாப்புடன் இருக்கமுடியும் என்பதனை வள்ளுவர்,

இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்

எனும் குறட்பாவில் செங்கோன்மையின் சிறப்பை எடுத்தியம்பு கிறார். பாதுகாப்பற்ற அரசு எவ்வாறு பாதிக்கப்படும் என்பதை வள்ளுவர் பின்வருமாறு உரைக்கின்றார்.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்

ஓர் அரசனுக்குப் படையும், அரணும் மட்டும் பாதுகாக்கும் கருவியா, வேறு தேவையில்லையா என்று நமக்குத் தோன்றும். இக்கேள்வி வள்ளுவருக்கும் தோன்றவே,

அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்

என்று அறிவுதான் அழிவு வராமல் காக்கும் கருவி. அந்த அறிவு அரசனுக்கு இல்லையேல் அரணாலும், படையாலும் பயனில்லை என்கிறார். அறிவுடைய அரசனின் திட்டங்கள் பகைவரை நடுங்க வைக்கும் என்கிறார் வள்ளுவர். எனவே, பாதுகாப்பின் தன்மையை எல்லாத் துறைகளிலும் வற்புறுத்துகின்றார்.

ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு ஒற்றாடல் தேவையானது. இன்று உளவுப்படை என்று அழைக்கின்றோம். எனவேதான் வள்ளுவம் நல்ல ஒற்றாடலை மன்னனின் கண்ணாகக் குறிப்பிடுகின்றது.

ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்

பாதுகாப்பு வியூகத்தில் அமைச்சரின் பங்குபோல், தூதரின் பங்கும் சிறப்பானது. பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீய நாடகத்தில் குடிலனின் மகன் பலதேவன் தூதுசென்றதை இங்கு எண்ணிப் பார்த்தல் சிறப்பாக அமையும். தனக்கு மரணம் ஏற்படினும் தன் நாட்டின் கருத்தை எடுத்துரைப்பவனே நல்ல தூதன் என்கிறார் வள்ளுவர். இதற்குக் கம்பன் காட்டும் அனுமன் நல்ல எடுத்துக்காட்டாகும்.

ஒற்றாடல் அதிகாரத்தில் ஒரு செய்தியை ஒருவர் மூலமாக மட்டும் சேகரித்து உறுதி செய்யாது குறைந்தது மூவர் மூலம் சேகரித்து உண்மையைத் தெளிந்தறிதல் வேண்டும் என்பதை,

ஒற்றொற் றுணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும்

என்கிறார். இதை இன்றைய அரசு மத்தியப்புலனாய்வுப் பிரிவு, மாநிலப் புலனாய்வுப் பிரிவுகள், உலக நாடுகளில் உளவுப் பிரிவுகள் என்ற அங்கங்கள் மூலம் பல உண்மைச் செய்திகளை உறுதி செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கின்றது. இரகசியத் தன்மையை வெளிப் படை ஆக்கக் கூடா; இரகசியம் இரகசியமாகவே காக்கப்பட வேண்டும்.

சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தான் ஆகும் மறை

என்னும் இக்கருத்தைக் காவல்துறை முழுமையாகச் செயல்படுத்தினால் பாதுகாப்புப் பணி சிறப்புற அமையும்.

பாதுகாப்பிற்குப் பல இடங்களில் வள்ளுவர் ஏமாப்பு எனும் சொல்லை ஆளுகின்றார். அரணியலில் சிறந்த பாதுகாப்புள்ள நாடுதான் நல்ல நாடு என்பதனை ஆணித்தரமாக

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற் கிவ்வைந்து

என்கின்றார்.

இயற்கை அரணோடு செயற்கை அரணும் தேவை. எளிதில் எட்ட முடியாத, உயர்ந்த, அகலமான, அருமைமிகு மதில் தேவை என்கிறார் வள்ளுவர். மதில் அகலமாய் இருப்பின் படைக்கருவிகளை மறைத்துவைத்து எதிரியைத் தாக்க இயலும் என்கிறார். இவை இன்றைய விமானத் தாக்குதலில் பயனற்றவை என்றாலும், இன்றும் பல இடங்களில் இத்தகைய அரண்கள் பயன்பாட்டில் உள்ளன. மேலும், பகைவீரரர்கள் இது போன்ற வலிமையான அரண்களைப் பார்க்கும்போது மனத்தால் நடுங்குவர். அது அவர்கள் தோல்விக்குக் காரணமாய் அமையும் என்கிறார் வள்ளுவர்.

உயர்வுஅகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவுஅரண் என்றுஉரைக்கும் நூல்

வள்ளுவம் மதில் பற்றிச் சுருக்கமாய்க் குறிப்பிட, விரிவாய்ச் சிலப்பதிகாரம் மதுரையிலிருந்த மதிலைப்பற்றிக் குறிப்பிடுவதைப் படிக்கும்போதே வியப்பாகவும், மகிழ்வாகவும் உள்ளது. அரணுக்கு விளக்கமளிக்கும் வள்ளுவர், பகைவரால் கைப்பற்ற முடியாததாய், கையிருப்பில் பலவகை உணவுப்பொருட்களைக் கொண்டதாய், உள்ளே இருப்பவர்கள் பயமின்றி இருக்க ஏற்றதாய் உள்ளதே சிறந்த கோட்டையாகும் என்பதை,

கொளற்கரி தாய்க்கொண்ட கூழ்த்தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீரது அரண்

எனும் குறட்பாவில் தெளிவாக்குகிறார். இக்கோட்பாட்டை உலகிலுள்ள எல்லா நாடுகளும் தற்காத்துக் கொள்வதற்குச் சிறந்த கொள்கையாக இன்றும் பின்பற்றி வருகின்றன. மேலும், முற்றுகையிட்டாலும், முற்றுகையிடாமல் திடீரெனப் போர் செய்தாலும், வஞ்சனையாக நெருங்க முயன்றாலும் பகைவரால் வெல்ல முடியாத தகுதியுடையதாக விளங்குவதே அரணாகும் என்பதை,

முற்றியும் முற்றா தெறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற் கரியது அரண்

என்றவாறு விளம்புகிறார் வள்ளுவர்.

காலத்தையும், இடத்தையும் பாதுகாப்போடு இணைக்கின்றார் வள்ளுவர். காலமறிந்து பகையை எதிர்கொள்ளும் மன்னனே வெற்றிபெற முடியும் என்கிறார். கூகை - காகம் இவற்றை உவமையாக்கி, எளிமையாக்கிக் காலத்தின் மேன்மையை எடுத்துரைக்கின்றார்.

பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது

இடனறிதலும் அரசர் வாழ்க்கையில் இன்றியமையாத தாகும். தோல்வியையே சந்திக்காத நெப்போலியன் உருசிய நாட்டின் தட்பவெப்ப நிலையறியாது போர்தொடுத்துத் தன் படைவீரரர்கள் பலரைப் பறிகொடுத்துப் போரில் பின்னடைவு ஏற்பட்டுத் திரும்பினான். எனவேதான் வள்ளுவரும் நீரில் எளிதாய்ப் பகையை வெல்லும் முதலை, நிலத்தில் வரின் சாதாரண விலங்குகள் கூட அதனை வென்று விடும் என்கிறார்.

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற

இதனை மேலும், எளிமைப்படுத்தி விளக்க வள்ளுவர் அடுத்து ஓர் உவமையைக் கையாளுகிறார். நெடுந்தேர் கடலில் ஓடாது. கடலோடும் கப்பல் நிலத்தில் ஓடாது.

கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து

இந்த உண்மையை உணர்ந்து அரசுசெயல்பட்டால் மக்களுக்குப் பாதுகாப்பு உறுதி என்கிறார். பாதுகாப்பிற்குப் புறப்பொருள்களாகிய படை, அரண் ஆகியவற்றைக் குறிப்பிட்ட வள்ளுவர் கண்ணால் காண இயலா அறிவையும் குறிப்பிட்டதைக் காண்போம். அடுத்துப் பாதுகாப்பில் மனத்தையும் சேர்க்கிறார். புறப்பாதுகாப்புகள் எல்லாம் மனம் வலிமையில்லாதபோது பயனற்றவை எனும் பொருளில்,

அச்சம் உடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு

என்கிறார். இக்கருத்து இன்றும் ஏற்புடையதாகும். இன்றும்கூடச் சிறிய நாடுகள் மனவலிமையால் பெரிய நாடுகளை எதிர்த்து நிலைகுலையச் செய்வதைக் காணமுடிகிறது.

மாவீரன் அலெக்சாண்டர் பெரும்படையுடன் வந்து இந்தியாவில் பெரும் வெற்றி பெற்றான். இறுதியில் மனவலிமை பொருந்திய சிறிய படையுடன் கூடிய மன்னன் புருசோத்தமனை எதிர்க்க இயலாது தவித்தான். இது வரலாறு உணர்த்தும் பாடமாகும்.

படையியலில் வள்ளுவன் பகைவரால் அழிக்கமுடியாததாய், பகைவர்களின் வஞ்சக சூழ்ச்சிகளுக்குப் பலியாகாததாய், தொடர்ந்து போர்புரியும் நெஞ்சுறுதி மிக்க வீரர்களை உடையதாய், எதிர்நோக்கி வரும் பகையைத் தடுத்து நிறுத்தும் வகையில் பகைவரின் முன்னணிப் படையாகிய தூசிப் படையைத் தாக்கி, முன்னேறிச் செல்லும் வலிமை மிக்கதே நாட்டைப் பாதுகாக்கும் சிறந்த படையாகும் என்பதனை வள்ளுவர்,

அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து

என்கிறார். பகைத்திறம் தெரிதலில், வள்ளுவர் வகையறிந்து தன் வலிமையறிந்து தக்க தற்காப்புடன் தன்னைத் தயார் செய்து கொண்டால் தன்னை எதிர்க்கும் பகைவனின் கர்வம் தானாகவே அழிந்துவிடும். அத்துடன் சிறிய முட்செடி, மரமாய் வளர்வதற்கு முன்னரே வெட்டிவிடுதல் எங்ஙனம் எளிதோ, அதுபோன்று பகைமை உணர்வு சிறியதாய் இருக்கும்போதே அழித்துவிடுவது சிறந்தது என்பதை வள்ளுவர்,

வகையறிந்து தற்செய்து தற்காப்பு மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து

என்பதாகப் பாதுகாப்புப் பணியின் சிறப்புத் தன்மையைக் குறிப்பால் உணர்த்துகிறார்.

வள்ளுவம், அரசன் குடிமக்களுக்குச் செய்ய வேண்டிய பாதுகாப்புகளைக் குறிப்பிட்டது போன்று பெரியபுராணமும், அரசன் தன் குடிகளுக்குத் தன்னால், தன் பரிவாரத்தால், பகைவர்களால், கள்வர்களால் மற்றும் தீய உயிரினங்களால் இடையூறு நேராமல் பாதுகாத்தலே கடமை என்கிறது.

திருக்குறள் நெறியே தமிழர் நெறி. மூவடியால் உலகை அளந்தான் வாமனன். மூவடிக்கும் குறைந்த அடியில் வானளந்த வள்ளுவன் வகையளந்து மக்கள் மனமளந்து, குணமளந்து, செல்லும் வழியளந்து, நிலையற்ற வாழ்வினை வாழும் வகைதந்து வாழ்கின்றார். அந்த வாழும் வள்ளலின் உள்ளம் மெய்ப்பட, உலகை மேம்பட, முக்காலமும் பயன்படும் வகையில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாதுகாப்புப் பணிகளைத் திட்டமிட்டுத் திறம்பட வகுத்தளித்துள்ள அப்பெருமானின் தொலைநோக்குப் பார்வையினைப் போற்றி வணங்குவோம்.

வள்ளுவத்தில் உலகப் பொதுமைக் கூறுகள்

தி. தாமரைச்செல்வி

உலகம் முழுமைக்கும் உரிய, ஒப்புயர்வற்ற நூல் திருக்குறள் என்பதை அடையாளம் காட்டுவதற்காக,

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்று பாரதியார் திருவள்ளுவரைப் போற்றுகிறார். தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித்தரும் திருக்குறள் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற பொதுமைத் தன்மையை மையமாகக் கொண்டு யாக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட இனத்தார்க்கு மட்டும் கூறும் அறமாக இல்லாமல் உலகம் முழுமைக்கும் அந்நூல் அறங்கூறுகிறது. உலகில் தோன்றிய அனைத்து மனிதர்களுக்கும் "அறம்" பொதுவானது. சில கடமைகள் பொதுவானவை என்பதை முப்பால் எடுத்து இயம்புகின்றது.



"ஒவ்வொரு துறையிலும் வானுயர்ந்த நிலைக்கு வையகம் ஏற

வழிகாட்டும் வள்ளுவர் அன்றாட வாழ்வில் தவிர்க்க முடியாத கடமைகளை ஆற்றுவதிலும் வினை செய்வதிலும், அறம் செறிந்த ஆனால் நடைமுறைக்கு ஏற்ற வழிகளையும் இலக்கணத்தையும் வகுக்கிறார். எனவே, வள்ளுவம் இலக்கியல் நிலையை மனத்தில் கொண்டு, இயல்வதான வாழ்வியலை எடுத்து வைக்கும் நூலாகும். எனவேதான் அஃது இன்றையத் தேவையை நிறைவேற்றுகிறது. நாளையக் கனவையும் பிரதிபலிக்கிறது. அதனால் அது காலம் கடந்து, இடத்தைக் கடந்து நிற்கும் சிறப்பைப் பெறுகிறது"[1] என்கிறார் அறிஞர் வா.செ. குழந்தைசாமி.

உலக மொழிகளில் தோன்றிய நூல்களான பகவத்கீதை, கௌடில்யம், பைபிள், குர்ஆன் ஆகியவை முறையே தத்துவ நூலாகவும், அரசியல் நூலாகவும், சட்ட நூலாகவும், மத நூலாகவும் இருக்கின்றன. ஆனால் குறள் நூலோ, அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கிய ஒன்றாகத் திகழ்கிறது. அதனால்தான் திருக்குறள் இவ்வரிசை நூல்களில் இடம்பெறாது தனித்து இன்றளவும் நிலைத்து நிற்கிறது.

மேலும் குறள் நூலில் எந்தச் சமயக் கருத்தோ, சாதிக் குறிப்போ, குலத்தைப் பற்றிய அடையாளமோ அணுவளவும் இல்லை. தமிழன், இந்தியன் என்ற நிலைகட்கு அப்பால் மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தவே குறள் எழுதப்பட்டது. இவ்வுலகில் மனிதர்களை நல்வழிப்படுத்தும் ஒரு முழுமையான வாழ்வியல் நூலாகத் திருக்குறள் திகழ்கிறது. அதனால்தான், அவர் எங்கும், எவ்விடத்திலும் தமிழ் என்றோ, மொழி என்றோ பிரித்துப் பேசவில்லை.

அவ்வாறு அவர் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பாரே யானால், இந்நூல் ஒரு குறுகிய எல்லைக்குள்ளேயே அடைந்து கிடந்து இருக்கும். இஃது உலகம் முழுவதும் உள்ள மக்கள் போற்றும் நூலாக வெளியே தெரிந்திருக்காது. இங்கு ஓர் அறிஞரின் கருத்து எண்ணுதற்குரியது:

> "வள்ளுவர் குறளில் சொல்லின் வன்மை பற்றிப் பேசுவார். ஆனால் எந்த மொழியின் பெயரையும், தம் தாய்மொழியான தமிழ் உட்படக் குறிப்பிடமாட்டார். நாடு பற்றிப் பேசுவார். ஆனால், எந்த நாட்டின் பெயரையும் குறிப்பிடமாட்டார். நீரைப் பற்றிப் பேசுவார். நதி வளத்தின் தேவை பற்றிப்பேசுவார். ஆனால் எந்த நதியின் பெயரையும் குறிப்பிடமாட்டார்: அரசு, அமைச்சு, ஆட்சி பற்றிப் பேசுவார். நாடு பற்றிய பெயரோ

குறளில் இடம்பெறாது. பேசுவது அனைத்தும் பொதுவாகவே கூறப்படுகிறது"[2]

பிறர்க்குத் தீமை செய்யாமல் இருப்பதே வாய்மை எனவும், பிறர் நாண நன்னயம் செய்துவிடல் உயரியது எனவும் கூறுவார். இது பாருலகம் முழுக்க மேற்கொள்ளப்பெற வேண்டியது. சூது, கள்ளுண்ணாமை, புலால் உண்ணாமை, பிறனில் விழையாமை, ஒழுக்கமுடைமை, புறங்கூறாமை, அழுக்காறாமை முதலிய கருத்துகளைக் கூறும் பகுதிகள் யாவும் எல்லா மனிதருக்கும் உரிய பொதுக் கருத்துகளாகும். சான்றுக்குச் சில:

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு *(குறள் 190)*

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும் *(குறள் 169)*

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு *(குறள் 148)*

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் *(குறள் 131)*

குளிர்நாடுகளில் வசிக்கும் மக்களுக்கு மதுவருந்துதல் தேவையான ஒன்றாகக் கருதப்படுகிறது. எனவே, அப்பகுதியில் வாழும் மக்களுக்குக் கள்ளுண்ணாமை, அதிகாரத்தில் வரும் கருத்துகள் ஏற்புடையதாக இருக்க வாய்ப்பில்லை என்பர். இதேபோன்று, தங்களுடைய வாழ்க்கைச் சூழலுக்கேற்பக் கருத்துகளை விட்டுவிட்டுத் தேவையான கருத்துகளை மட்டும் எடுத்துக் கொள்வது பொருந்தாது. உடலை, உள்ளத்தை, சுற்றுப் புறத்தைப் பாழ்செய்யும் எதுவும் தீமையானதுதான்.

'பகவத்கீதை'யை அருளிச்செய்த கண்ணபிரான், அருச்சுனனைப் பார்த்து உபதேசம் செய்யும் போதும் அறங்கள் பேசப்படும். ஆனால், அங்கு வர்க்க பேதங்கள் உண்டு. வருணாச்சிரம தருமம் உண்டு. ஆனால், உலக மக்கள் யாவரும் சிறந்து விளங்க வேண்டும் என்ற உயரிய நோக்கினால், மனிதகுலம் அனைத்திற்கும், உரிய பொதுவான அறங்களை விளக்கிச் செல்கிறார் வள்ளுவர். தமக்குப் பின்பற்றுவதற்கு எளியதாக இல்லை என்ற காரணத்தினால் இதனைப் புறக்கணிக்க முயற்சி செய்வது ஏற்புடையதாகாது. வள்ளுவருக்குப் பின் 2000 ஆண்டுகள் கழித்துச் சமுதாயநிலை எவ்வளவோ மாறியும்

வளர்ந்தும் காணப்படுகிறது. காலத் தேவைக்கேற்ப நாமும் மாற வேண்டியது தேவைதான். ஆனால், எக்காலத்திற்கும் ஏற்ற கருத்துகள் எவ்வளவோ திருக்குறளில் பொதிந்து கிடக்கின்றன. இங்கு ஓர் அறிஞரின் கருத்து இச்சிந்தனைக்கு அரண்சேர்ப்பதாக உள்ளது.

"வள்ளுவர் வாக்கிலும், நோக்கிலும் நிலம், மாநிலம், வையம், ஞாலம், உலகம் என்ற பரந்த நோக்குடைய குறிப்புகளே மிகுதி. 'நாடு' பற்றிய தனியதிகாரம் அமைத்திருப்பினும் உலகநாடுகள் அனைத்துக்கும் பொதுவாகப் பொருந்தும் கருத்துகளையே கூறியுள்ளார். கீதாசாரியன் பார்த்தனைப் பார்த்து உபதேசம் செய்ததைப் போல வள்ளுவர் தனி யொருவனைச் சுட்டாது, உலகெங்கும் பரவுதல் மனித குலத்திற்குப் பொதுவாகப் பொருந்தும் அறங்களையும், நீதிகளையும் வரையறுத்துள்ளார். ஒரு குறிப்பிட்ட பகுதியினரால் பின்பற்றுவதற்கு எளிமையாக இல்லை என்பதால், குறள் கருத்துகளைப் புறக்கணிக்கச் சிலர் முற்படலாம். கால மாறுபாடு, சமுதாய மாறுபாடு, விஞ்ஞான வளர்ச்சி, அரசியல் மாற்றங்கள், பல்வேறு புரட்சிகளின் விளைவாகத் திருக்குறளில் சிலபல கருத்துகள் சிலருக்குப் பொருந்தாமல் தோன்றலாம். ஆனால், கடையில் வாங்கும் மருந்திற்குத்தான் காலாவதி உண்டே தவிர, திருக்குறள் சிந்தனைகளுக்குக் காலப் புறக்கணிப்போ, மதிப்புக் குறைபாடோ ஒரு நாளும் வருவதில்லை"[3]

இவருடைய உலகம் தழுவிய பொதுமைக்கு மேலும் சில சான்றுகள்.

> **இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து**
> **கெடுக உலகியற்றி யான்** *(குறள் 1062)*

> **ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு**
> **இரவின் இளிவந்த தில்** *(குறள் 1066)*

> **ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
> **சான்றோர் பழிக்கும் வினை** *(குறள் 656)*

என்ற குறள்களின் மூலம் இரந்து உயிர்வாழ்பவர்களை வெறுக்கிறார் வள்ளுவர். இந்த இரப்பவர் என்பவர்கள் அன்றும் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர். உலகம் முழுவதும் பரந்து காணப்படுகின்றனர். ஒரு சமூகத்தில் இந்நிலை மாறவேண்டும். இந்நிலை மாறினால்தான் வள்ளுவர் காண நினைத்த,

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு *(குறள் 734)*

என்ற குறளில் சுட்டப்படுகின்ற நாட்டின் வளத்தைக் காண இயலும்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதில்லார்
தோன்றலின் தோன்றாமை நன்று *(குறள் 236)*

எனும் குறளில் ஒரு தனிமனிதனின் கடமையை வலியுறுத்துகிறார். இது உலகம் முழுமையிலும் உள்ள மனித சமூகத்துக்கும் பொருந்தும். இதுபோலத் தனிமனிதக் கடமைகள், குடும்பக் கடமைகள், சமூகக் கடமைகள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் எவையெவை எனத் தனித்தனியாகப் பட்டியலிடுகிறார்.

இனிய முகத்தோடு தன் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை உபசரிக்கும் பண்புடையவன் இல்லத்தில் திருமகள் வீற்றிருப்பாள் (குறள் 84) என்கிறார். தன்னுடைய வீட்டில் உள்ள பொருளைத் தான் மட்டும் உண்ணாமல், வரும் விருந்தினர்க்கும் கொடுத்து மகிழ்ந்து வாழ்பவன் வீட்டில் செல்வம் எப்போதும் நிறைந்து இருக்கும். இவ்வாறு மனித சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் நினைப்பானே யானால் அவன் நாடும், அவன் சார்ந்த சமூகமும் மேன்மையடையும். இதையேதான் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்ப வேண்டும்' என்று வலியுறுத்துகிறார்.

எந்த அறச் செயல்களில் இருந்து நழுவி நடந்தாலும், அதனிலிருந்து விடுபட வழியுண்டு. ஆனால் செய்ந்நன்றி கொன்றவர்க்கு உய்வே இல்லை என்று செய்ந்நன்றி (குறள் 110) எனும் அதிகாரத்தில் சுட்டுகின்றார். மேலும் ஒருவன் செய்த நன்மையை மறக்கக்கூடாது. ஆனால், அவன் செய்த தீமையை அன்றே மறப்பது நன்றே (குறள் 108) என்றும் 'செய்ந்நன்றி' அறிதலின் சிறப்பை அறிந்து உலக மக்கள் பயன்பெறும்படி கூறுகிறார். அடுத்து ஒரு தனிமனிதனுக்கு வேண்டிய குணங்களில் இன்றியமையாதது அடக்கமுடைமை. இதன் சிறப்பை மிக எளிமையாக, தெளிவாக ஆணித்தரமாகப் பின்வரும் குறளில் குறிப்பிடுகிறார்.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும் *(குறள் 121)*

அடக்கம் என்று குறிக்கப்படுவன நாவடக்கம், பொறியடக்கம் போன்றன ஆகும்.

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு *(குறள் 305)*

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் *(குறள் 131)*

எல்லாவற்றிற்கும் மேலாக ஒழுக்கம் ஒருவனுக்கு இன்றியமையாத ஒன்றாகிறது. அதனால் வள்ளுவர் ஒழுக்கத்தை உயிரை விட மேன்மையாகக் கருத வேண்டும் என்கிறார் (குறள் 131). இங்கு 'ஒழுக்கம்' என்று பொதுப்படையாகத் தானே சொல்லுகிறாரே தவிர, ஒழுக்கம் இவை இவை எனப் பட்டியலிடவில்லை. காரணம், ஒழுக்கமானது இனத்துக்கு இனம், சமூகத்திற்குச் சமூகம், நாட்டிற்கு நாடு மாறுபடும் தன்மையுடையது. அதனால்தான் வள்ளுவர், உலகப் பொதுமையைக் கருதி ஒழுக்கம் என்பதனை "உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" (குறள் 140) என்று வரையறை செய்கிறார்.

மேலும் பிறனில் விழையாமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை போன்ற ஒழுக்கங்களும் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிமுறைகள் ஆகும்.

எந்தச் சமூகமும் சீராக அமைவதற்குத் தனிமனிதனின் ஒழுக்க நெறிகள் முக்கியக் காரணங்களாக அமைகின்றன. வாய்மை, அன்பு, அருள், பொறுமை, இன்சொல் கூறல், அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, செய்ந்நன்றி அறிதல், புறங்கூறாமை, அழுக்காறாமை, இன்னாசெய்யாமை, வெகுளாமை போன்ற முக்கியப் பண்புகள் தேவையாகின்றன. இவற்றை மனிதன் சரிவரத் தன் வாழ்க்கையில் பின்பற்றுவானேயானால் நல்லொழுக்கம் தானாகவே வந்துவிடும். இஃது உலகில் உள்ள அனைத்து இனத்தார்க்கும் பொருந்தும்.

அதேபோல் வாழ்வில் கடைப்பிடிக்கக் கூடாதவை: புறம் பேசுதல், பிறனில் விழைதல், களவு, பொய், இன்னாசெய்தல், கள்ளுண்ணல், புலால் உண்ணல், அழுக்காறு கொள்ளல், வரைவின் மகளிர் உறவு, போன்ற குணங்கள் மனித சமூகத்துக்கு இன்னலைத் தரும். இவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்காமல் இருத்தல் வேண்டும் என்கிறார். இவற்றைப் புறந்தள்ளாமல் பின்பற்றுவோமேயானால் கொடிய தீமைகளுக்கு ஆளாக வேண்டியதுதான். 'வரைவின் மகளிரின்' தொடர்பு எவ்வளவு பெரிய துன்பத்தைத் தரும் என்பதை,

வரைவுஇலா மாண்இழையார் மென்தோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு *(குறள் 919)*

என்ற குறளில் தெளிவுபடுத்துகிறார்.

இன்று இம்மாதிரியான ஒழுக்கக்கேடுகளில் ஈடுபடும் மாந்தர்களுக்குக் கொடிய ஆள்கொல்லி நோயான 'எய்ட்ஸ்' வந்து தாக்கும் என்பது மருத்துவ உண்மை. இந்நோயின் முடிந்த எல்லை 'மரணம்' தான் என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது. 2000 ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளுவர் தம் குறளில் இன்ப வாழ்க்கையில் கட்டுப்பாட்டைத் தெளிவுபடுத்துகிறார். இந்த ஒழுக்க நெறிமுறைகள் தனிமனிதனுக்கு மட்டுமன்றிச் சமுதாயம் முழுமைக்கும் தேவையான ஒன்றாகும்.

இவர் அறத்துப்பாலில் மட்டும் இவ்வாறு பல அரிய பொதுமைக் கூறுகளைக் கூறவில்லை. அவை பொது வாழ்வில் ஈடுபடும் அரசர் வாழ்க்கையிலும் தொடர்கின்றன. அக்கருத்து களையும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் அரசனுக்கு என்று கூறாமல், உலக நன்மை கருதிப் பொதுவானதாகவே கூறுகிறார்.

ஓர் அரசன் எல்லோர்க்கும் எளியவனாகவும், இனிய சொற்களைப் பேசுபவனகாவும், பகைவரிடமிருந்து மக்களைக் காக்கும் திறமை உடையவனாகவும், பிறர் இடித்துக் கூறும் போது ஏற்றுக் கொள்ளும் பண்புடையவனாகவும் இருத்தல் வேண்டும்.

காட்சிக்கு எளியன் கடும்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம் *(குறள் 386)*

என்று மன்னனின் இலக்கணத்தை எடுத்தியம்புகிறார். இதுவும் பொதுவான ஒன்றே. இவன் ஒரு காரியத்தில் ஈடுபடும்போது, ஒரு முறைக்குப் பலமுறை சிந்தித்து அக்காரியத்தின் தன்மையைப் பொறுத்து ஆராய்ந்து செய்ய வேண்டும். அப்போதுதான் அவன் நினைத்த காரியம் கைகூடும். எனவேதான் வள்ளுவர் ஒரு குறளில் காலம், இடம், வலிமை இவை மூன்றையும் சீர்தூக்கவேண்டும் என்கிறார் (குறள்கள் 485, 471).

வள்ளுவ நூலில் இடம்பெறும் மன்னன், தானாகவே, எந்த மன்னனிடமும் சென்று போர் தொடுப்பதில்லை. தம்மைத் தாக்க வருபவர்களிடம் இருந்து தம் மக்களைக் காத்தலையே தன் கொள்கையாகக் கொண்டு இருந்தான். தற்காப்பிற்காக மட்டுமே போரும் போர்க்கருவிகளும் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இக்கருத்தினை ஒட்டியே இன்றைய நாடுகளும் தங்களுக்குள்ள பகைகளை மறந்து, தற்காப்பிற்காக மட்டுமே படையைப் பயன்படுத்தினால் உலகநாடுகள் அனைத்தும் ஒற்றுமை கொண்ட நாடுகளாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் போரை விரும்பாமல் இருந்தால் வள்ளுவர் நினைத்த உலகப் பொதுமை உணர்வை, போரற்ற ஒரு சமதர்ம சமூகத்தை நிர்மாணிக்க முடியும்.

அதே போல் வள்ளுவர் கூறும் கல்விச் சிந்தனைக் குறிப்புகளும் நினைவுகூரத்தக்கனவே.

"தேர்ந்த கல்வி ஞானத்தினாலும், ஒள்ளிய அறிவாற்றலினாலும் நல்ல பண்புகளினாலும் ஒரே உலகம் படைக்க முடியும் என்பது வள்ளுவரின் உள்ளமாகும். கணியன் பூங்குன்றனார் எனும் சங்கப்புலவர் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடி பாரகம் முழுவதும் தன் ஊரகமாகவும், உலகத்தாரைத் தன் உறவினராகவும், கருதிய பாங்கினைப் பலரும் சுட்டிக் காட்டுவர்"[4]

யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு *(குறள் 397)*

எனும் திருக்குறளில் ஒருவன் சாகும் வரையில் கல்வி கற்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். ஒருவனுடைய நோக்கு விசாலமடைவதற்குக் காரணம் அவன் கற்கும் கல்வியே என்று ஆணித்தரமாகக் கூறுகிறார். முடிவில் ஒருவன் எவ்வளவு கற்றவனாக இருந்தாலும் அவன் செயல் முறையிலும், ஒழுக்கங்களிலும் உலகப் போக்குடன் ஒத்துப் போக வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். உலகத்தோடு ஒத்துப்போகத் தெரியாதவர்கள் கற்றிருந்தாலும் அவர்கள் அறிவிலாதாரே என்று சாடுகிறார் (குறள் 140). மேலும் உலகம் பழித்துக் கூறுவனவற்றை ஒழித்து விட வேண்டும் என்கிறார் (குறள் 280).

வள்ளுவர் உலகிற்குப் பொதுமைப்படுத்திக் கூறும் கருத்துகள் பல உள. அவற்றுள் சில வருமாறு:

கல்வியை வள்ளுவர் பெரிதும் வலியுறுத்துகிறார். கல்வி, கல்லாமை, கேள்வி என மூன்று அதிகாரங்களிலும் கூறப்படும் கருத்துகளில் கல்வியின் இன்றியமையாமையைக் கூறுகிறார். கல்லாமையினால் வரும் தாழ்வினையும் கூறுகிறார். ஆனால் இன்ன கல்விதான் கற்க வேண்டும் என்று பட்டியலிடவில்லை. 'கற்பவை கற்க' என்று கூறுகிறார். அதேபோல் படைமாட்சியில்

அரசனது படை பற்றிப் பேசுகிறார். ஆனால் எந்த வகைப் படை என்று ஓரிடத்தில் கூடக் குறிப்பிடவில்லை.

உறுப்பமைந்து ஊறுஅஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை *(குறள் 761)*

என்கிறார். இவ்வாறு பல பொதுமைக் கூறுகளை, ஒருமைப் பாட்டுச் செய்திகளைப் பட்டியலிடலாம்.

திருக்குறளில் உலகப் பொதுமைக் கூறுகள் மிஞ்சி இருக்கின்றன. அதனால்தான் எந்நாட்டு, எம்மொழி பேசும் எவ்வின மக்களும் விரும்பிப் படிக்கும் நூலாகத் திகழ்கிறது என்பதற்குச் சமீபத்தில் படித்த செய்தி இங்கே சிந்திக்கத்தக்கது.

''ஒருமுறை தெ.பொ.மீ. அவர்கள் 1960-களில் பல்கலைக்கழக நிதிக்குழுவின் சார்பில் ஒரு பண்பாட்டுக் குழுவின் உறுப்பினராகச் சோவியத் நாட்டுக்குச் சென்றார். அப்போது, அங்கே மாஸ்கோவில் காரோட்டும் ஒருவர், நாள்தோறும் படுக்கைக்குப் போகும் முன்பு ஒரு குறளைக் குறித்து நீள நினைந்து அதன் ஆழத்தில் முழுகிப்போவது உண்டு என்று அவர் அறிந்தார். அதனோடு, ரஷிய மொழிபெயர்ப்பில் திருக்குறளின் 50,000 படிகளும் சில நாட்களில் செலவழிந்த செய்தியையும் கேட்டாராம்."

மொழிபெயர்ப்பில் விடுதலைக்குப் பின்னே இந்தியப் பெருநாடு பண்பாட்டு ஒருமைப்பாடு பெற்று வருதலை நினைக்கத் தோன்றுகிறது. அவ்வழியில் கன்னடம், மலையாளம், தெலுங்கு, வங்காளம், இந்தி என்னும் மொழிகளில் வெளிவந்த நூல்களில் குறளே சிறந்தது என்பது ஓர் உண்மை."[5]

மற்றொரு செய்தி, "அமெரிக்காவில் கலிபோர்னியாவில் வாழ்ந்த ஓர் அமெரிக்கப் பெண்மணி இந்துவாக மாறிக் குடும்பத்தோடு சென்னைக்கு வந்து அடையாறு கலாசேத்ராவில் தங்கியுள்ளார். அவர்கள் தமிழ்ப்பண்பாட்டில் ஊறித் திளைத்துத் தமிழர்களாக வாழ்கின்றார்கள். தமிழ் மணமும் தமிழ் நிறமும் கொண்ட அவர்கள் வாழும் வாழ்க்கை தமிழர் வாழ்க்கை. அத் தம்பதியின் பெயர் ஈசானி, துர்வாசர். மூன்று பெண்கள்; ஏராளமான நூல்கள் அவர்கள் இல்லத்தில், திருக்குறள் குறித்து அவர்கள் ஒரே குரலில் மகிழ்ந்து கூறியது: "திருக்குறள் மாதிரி அற்புதமான நூலைப் படித்ததேயில்லை" திருக்குறள் மீது பற்றுக் கொண்ட மகிழ்ச்சி அவர்கள் குரலில்".[6]

இவ்வாறு திருக்குறளில் உலகம் முழுமையும் உள்ள மனிதர்களால் போற்றிப் பாராட்டக்கூடிய ஒப்புயர்வற்ற

கருத்துகள் பல உள்ளன. தனிமனிதனுடைய ஒழுக்கத்தையும் அவன் சார்ந்து வாழும் சமூகம், நாடு, அரசு, அமைச்சு அனைத்தும் எவ்வாறு திகழ வேண்டும் என்பதையும் அழகாக எடுத்துக் காட்டுகிறது. காதல் வாழ்வையும், இல்லறத்தின் மேம்பாட்டையும் விளக்கி மனிதனே நீ மனிதனாக வாழ் என்று அறிவுறுத்தி வையத்துள் அவன் வாழ்வாங்கு வாழ வழி காட்டுகிறது.

சமயத்தைக் கடந்து உலக சமுதாயம் அனைத்தும் ஒற்றுமையுடன் திகழ வழிகாட்டும் திருக்குறள் உலகப் பொதுமைக் கூறுகள் சின்னமாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

அடிக்குறிப்புகள்

1. வா.செ. குழந்தைசாமி, **வாழும் வள்ளுவம்**, ப.111.
2. மேலது, ப. 49.
3. சோ.ந. கந்தசாமி, 'வள்ளுவரின் உலக நோக்கு' - **வள்ளுவம்**, கார்த்திகை - மார்கழி இதழ், ப. 69.
4. மேலது, ப. 70.
5. **தினமணி** 11.01.2000 அன்புள்ள ஆசிரியர்க்கு, கடிதப்பகுதி, 'குறளுக்கு ஒப்பான நூல் இல்லை' - இர. குழந்தைவேலு, கோவை - 14.
6. **வள்ளுவம்** - கார்த்திகை - மார்கழி இதழ், பெட்டிச் செய்தி, ப. 71.

※ ※ ※

திருவள்ளுவரின் கல்விக் கோட்பாடுகள்

க. கோபால்

வளர்ந்த நாடுகள், வளர்ந்து வரும் நாடுகள் என இரு கூறுகளாகப் பிளவுபட்டு, வளர்ந்த நாடுகள் வளர்ந்து வரும் நாடுகளை மறைமுகமாகச் சுரண்ட எத்தனிக்கும் இக்காலச் சூழலில் இரு சார் நாடுகளுள் அவ்வவ் நாட்டு மக்கள் அமைதி வழி வாழ - வழிகாட்டும் மறை நூலாகக் கைக்கொள்ள வேண்டுமெனில் அந்நூல் நம் தமிழ் மறையாம் "திருக்குறள்" என்று உரக்கச் சொல்லலாம். அது மாந்தர் வாழ்க்கை முறையை இல்லறம் - துறவறம் என இரு பெரும் நெறிகளாக வகுத்து, இரு சாராரும் பின்பற்றி வாழ்வாங்கு வாழ்ந்து சிறக்க அறநெறிகளைக் கூறியுள்ளது. அத்தோடு ஒரு நாட்டை ஆள்பவன் - ஆளப்படுவோன் என்ற இரு பிரிவினரும் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய அறநெறிகளைப் பட்டியலிட்டுள்ளது. திருவள்ளுவர் காண விழைந்த குறளிய குமுகாயம் அமையுமானால் அங்கே எல்லோர்க்கும் எல்லாம் என்ற நிலை நிறைவேறி, கெட்ட போரிடும் உலகம்



இல்லாது ஒழிந்து, இப்பூவுலகு அமைதிப் பூங்காவாக மாறும் என்பது திண்ணம்.

இற்றைச் சூழலில் இப்பூவுலகைப் பெரிதும் அச்சுறுத்திக் கொண்டு இருக்கும் இருபெருங் கேடுகளாக,

1. போரும் - போரினால் விளைந்த சூழல் மாசும் (மற்றும்)
2. தனி மாந்த ஒழுக்கக் கேடும் - அதனால் ஏற்பட்ட ஆட்கொல்லி நோயான எயிட்சு என்னும் தேய்வு நோயும்

என்று உறுதிபடக் கூறலாம். மேற்கூறிய இரு பெருங் கேடுகளைக் களைய வேண்டுமெனில் திருவள்ளுவரின் கல்விக் கொள்கையை உலக மாந்தர் அனைவரும் பின்பற்றக் கடமைப்பட்டவராவர்.

1. திருவள்ளுவரின் கல்விக் கோட்பாடுகள்

திருவள்ளுவர் தம் நூலை யாத்ததன் நோக்கமே "அறன் வலியுறுத்தற்கே" எனலாம். தனி நெஞ்சத் தூய்மை என்னும் மாசில்லா மனம் பெறுதலைச் சார்ந்தே அவரின் கல்விக் கோட்பாடுகள் அமைகின்றன. "அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்."

1. தனி மனிதக் கல்வி
2. குடும்பத்தில் கல்வி
3. குமுகாயத்தில் கல்வி
4. கல்லாதவர்க்கும் கல்வி
5. ஆன்ம நேயக் கல்வி

திருவள்ளுவரின் கல்விக் கோட்பாடுகளின் பயனாக மாந்தர் அனைவரும் முதற் கண் தம் உடல், மன வளத்தைப் பெருக்கி, தம்மைச் சார்ந்த இன நலத்தையும் தூயதாக்கி, ஒட்டு மொத்த குமுகாய நலஞ் சிறக்கும் வகையில் வினை நலம் பேண வேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமெனில் தனி நெஞ்சத் தூய்மையுடன் வினையாற்றுதலை (உழைப்பை) முதன்மைப் படுத்தி உழைப்பால், அறிவால் உலக நலம் சிறக்க வேண்டும் என்பதுவே அவரின் விழைவு ஆகும்.

2. தனி மனிதனுக்குக் கல்வி

கண்ணுடைய மக்கட் பிறவி இரு பாலர்க்கும் கல்வி பொதுவானதாகும். ஆகவே ஆண், பெண் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் கல்வி நல்க வேண்டும். ஆனால் பெரும்பாலான நாடுகளில் மக்கட் தொகையில் சரி பாதியாக விளங்கும்

பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டே வந்திருக்கின்றது. இந்நிலை மாற வேண்டும். கல்லாத மாந்தரைப் பார்த்து முகத்தில் கண்ணுக்குப் பதில் இரு புண்களை உடையோர் எனச் சாடுகிறார் வள்ளுவர்.

"இன்று ஒரு சமுதாயத்தின் உயர்வு, ஒரு இனத்தின் முன்னேற்றம், அதன் அறிவு வளர்ச்சி நிலையை, அறிவுத் துறைகளில் ஏற்படும் வளர்ச்சியைக் கூர்ந்து கவனிக்கும் விழிப்பை, அதை வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளும் திறனைப் பொறுத்தது"[1] என்பார் அறிஞர் வா.செ. குழந்தைசாமி.

ஆகவே சமுதாயத்தின் உயர்வு அல்லது மேம்பாடு அச்சமுதாயத்தின் கல்வியறிவையும், துறைசார்ந்த அறிவையும், விழிப்புணர்வையும், அதனைப் பயனாக்கிக் கொள்ளும் திறனையும் சார்ந்தே அமையும் என்பது வெளிப்படை.

'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்பது வள்ளுவம். ஆகவே கண்ணுடைய இரு பாலரும் "எண்" எனப்படும் கணிதக் கல்வியையும் (அறிவியல்) எழுத்து எனப்படும் கலையியல் (இலக்கியம்) கல்வியையும் கற்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாவர்."[2]

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு *(குறள் 392)*

கற்க வேண்டுவன காலத்துக்குக் காலம் வளருபவை, விரிபவை. அதனைக் கருத்தில் கொண்ட வள்ளுவர் இன்னின்ன நூல்களைப்படி என்று கூறாமல் விடுத்து, 'கற்பவை கற்க' என்று கற்றலைப் பொதுமைப்படுத்தி, காலம், இடத்திற்குத் தக்கவாறு வேண்டும் நூலறிவைப் பெறுதற்குரிய கல்வியைக் கற்கப் பணிக்கிறார்.

அ. கல்வி கற்கும் முறைகள்

1. காலம், இடத்திற்கேற்பக் கற்க வேண்டிய நூல்கள் அனைத்தையும் கற்க வேண்டும். 2. தம் மனத்தில் படியும் மாசுகள் நீங்கும் வகையிலும் தெளிவுபெறும் வகையிலும் கற்க வேண்டும். 3. கற்று முடிந்த பின்னரும் கற்க வேண்டும். 4. கசடறக் கற்ற செய்திகளைப் பின்பற்றி நடைமுறைப்படுத்தி வாழக் கற்க வேண்டும்.

கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக *(குறள் 391)*

5. உடையார் முன், இல்லார் பணிவுடன் திகழ்வது போல், செருக்கற்றுப் பணிவுடன் அமைந்து கற்றல் வேண்டும்.

6. சாகுந் தறுவாய் வரையில் கற்க வேண்டும். (காட்டு) சாக்ரடீசு நஞ்சு அருந்தி மரணமடையும் தறுவாயில் கூட நூல் படிக்க விரும்பியதை இவண் ஒப்பு நோக்குதல் தகும்.

7. ஒன்றுபட்ட உள்ளத்தோடு (ஒருமையுடன்) கல்வி பயில வேண்டும். (காட்டு : வள்ளலார், விவேகானந்தர் போன்றோர் கற்ற முறை)

8. கற்றோர் அவையில் அஞ்சாமல் மறுமொழி கூறும்பொருட்டு முறையாகவும், அளவறிந்தும் கற்றல்வேண்டும்.

9. பயன் தராத சொற்களைச் சொல்லாதிருக்குமாறு ஆய்ந்து ஆய்ந்து கற்றுப் பயன் தரும் சொற்களை மட்டுமே மொழியுமாறு கற்றல் வேண்டும். "பயனில சொல்லாமை" என்ற அதிகாரம் யாத்த வள்ளுவர் கூறுவது அனைத்தும் பயன் கருதியே.

10. தாம் கற்றதைப் பிறர்உணரும் வகையில் மொழியும் நாவன்மை மிக்கவராக அறிவுத் தெளிவுடன் கற்றல்வேண்டும். அத்தகைய நா நலமிக்கார் தம் பொழிவைக் கேட்போரை வயப்படுத்தும் வகையிலும் கேளாதவரையும் கேட்கத் தூண்டும் வகையிலும் மணம் பரப்பும் மலர் போன்று ஈர்க்கும் வகையிலும் கற்றுத் தெளிவு பெறல் வேண்டும்.

11. ஆக்கம் தரும் சொற்களை மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும். தாம் சொல்லும் சொல்லை வெற்றி கொள்ளும் சொல் இல்லா வகையிலும் திறனறிந்து சொல்லாட்சியைப் பயன்படுத்தும் வகையிலும் மீள மீள ஓதிக் கற்றல் வேண்டும்.

12. சாவாக் கல்வி குறித்தும் பயில்தல் வேண்டும்.

13. "உணவே மருந்து" "மருந்தே உணவு" என்ற சித்த மருத்துவ மரபுப்படி, மிகினும் குறையினும் நோய் செய்யும், மாறுபாடான உணவை மறுத்து உண்க; அற்றது போற்றி உண்க; துய்க்கத் துவரப் பசித்து உண்க போன்ற உணவுக் கொள்கைகளைக் கடைபிடித்து உடல் நலம்பேணும் கல்வியையும் கற்றல் வேண்டும்.

14. மன நலமே மன்னுயிர்க்கு ஆக்கம் என்பதால் மனதில் எளிதில் பற்றும் மாசுகளான பேராசை, பொறாமை, கடுஞ்சினம்,

வன்சொல், போன்றவை மனத்தில் படியா வண்ணம் பயிற்சி மேற்கொண்டு மனநலம் பேணும் கல்வியையும் கற்றல் வேண்டும். இத்தகைய குற்றங்கடிதலுக்குச் சிற்றினத் தொடர்பை விலக்கியும், அறத்துடன் வாழும் முதிர்ந்த அறிவுடைய பெரியாரைத் துணைகொண்டும் வாழ்தல் நலம் பயக்கும்.

இங்ஙனம் குறள் வழிப் பயின்ற கல்வியாளர்கள் அறிவால் அகன்ற ஆன்றோர்களாகவும், பண்பால் மிளிரும் சான்றோர்களாகவும் திகழ்வர். அவர்கள் அன்பு, அடக்கம், ஒழுக்கம், பொறை, அருள், அறிவு, ஊக்கம், ஆள்வினை, பண்பு, நாணுடைமை ஆகிய பத்து உடைமைகளைத் தம் அணி கலன்களாகக் கொள்வர். இவர்கள் (அ) கல்வி கேள்விகளால் கேட்கப்பட்ட செவி உடையவர்களாகவும் (ஆ) கண்ணோட்ட முள்ள கண் உடையவர்களாகவும் (இ) நாவடக்கம் உடைய நா உடையவர்களாகவும் (ஈ) மூக்கிற் கரும்புள்ளி போன்ற அளவுகூட கூடா ஒழுக்கமில்லாதவர் களாகவும், நாறும் மணத்தை முகரும் மூக்கு உடையவர் களாகவும் (உ) நிறை குணங்கள் அனைத்தையும் ஒருங்கே கொண்ட, விருப்பு, வெறுப்பற்ற தனக்கு நிகரில்லாத வாலறிவனின் தாளைக் கைகூப்பி வணங்கும் தலையுடையவர் களாகவும் திகழ்வதோடு, நன்றியின் பால் செலுத்தவல்ல பகுத்தாயும் மனமுடையவர்களாகவும் பரிணமித்து உயர்வர். அவர்கள் தன்னலம் அழித்து, உலகவர் நலம்பேணும் மாந்த நேயப் பற்றாளர்களாகவும், அதற்கும் ஒருபடி மேலேறி மன்னுயிர் அனைத்தையும் காக்கும் ஆன்மநேயப் பற்றாளர்களாகவும் செந்தண்மை பூண்டு ஒழுகும் அந்தணராகவும், அருளாளராகவும் வாழ்ந்து சிறப்பர்.

சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு *(குறள் 27)*

ஆ. கல்வியின் குறிக்கோள்

உலக மாந்தர் ஒவ்வொருவரும் கல்வி கேள்விகளால் தாம் பெற்ற அறிவின் துணையால் தன்னுயிர்க்கு இன்பம் நல்கும் உடல்நலம் பேணி, மனப் பயிற்சியால் மனமாசுகளை நீக்கி, தன்னுயிர்க்கும் மன்னுயிர்க்கும் இன்பம் நல்கும் மனநலம் பேண வேண்டும். உடல் மற்றும் மனநலமுடைய மாந்தன் தன்னைத் தற்காத்தலோடு தான் சார்ந்த இனம் நலம் பெறும் வகையில் முயற்சி மேற்கொள்ள வேண்டும். அதற்குத் துணைநலம் ஆக்கமும் ஊக்கமும் நல்கும். துணை நலம் என்று கூறுங்கால் வளத்தக்க வாழ்வும் மனைத்தக்க மாண்பும் பொருந்திய

துணையோடு, அறத்தோடு வாழும் முதிர்ந்த அறிவுடைய நல்வழி காட்டும் பெரியாரின் துணையையும் கொள்ள வேண்டும் என்ற குறிப்பையும் திருவள்ளுவர் தருகிறார். உடல்நலம், மனநலம், இனநலம், துணைநலம் ஆகிய நான்கின் இறுதிக் குறிக்கோளே "செயல்". செயல் "உழைப்பு" என்ற வினைநலம் சிறப்பதற்கேயாம். உழைப்பில் உடல் உழைப்பு, மூளை உழைப்பு என இருகூறுகள் இருப்பினும் இரு உழைப்புகளுமே நாட்டின், உலகின் மேம்பாட்டிற்கே பயன் நல்க வேண்டும். அழிவிற்குப் பயன்தராமல் ஆக்கத்திற்கே ஊக்கம் அளிப்பதாக இருத்தல் வேண்டும்.

துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாந் தரும் *(குறள் 651)*

3. குடும்பத்தில் கல்வி

"குடும்பம் என்ற சொல்லாட்சி திருக்குறளுக்கு முந்தைய இலக்கியங்களில் கையாளப்பட்டதாகச் சான்று இல்லை."[3] திருக்குறளிலே இச்சொல்லாட்சி முதன் முதலாகப் பயிலப்பட்டுள்ளது. குடும்பமே இந்த மக்கட் சமுதாயத்தின் அடிப்படை அலகு. அந்தக் குடும்ப உறுப்பினர்கள் இல்லாழ்வான், வாழ்க்கைத் துணை, இல்லறத்தின் பயனாகக் கிட்டும் நன் மக்கட்செல்வங்கள் ஆவர். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கல்வி பயில வேண்டிய கடப்பாடு, உடையவர்களாவர். அதுவும் அறிவறிந்த, பழிச்சொல்லுக்கு ஆளாகாத பண்புடைய மக்கட் செல்வங்களே ஒவ்வொரு குடும்பத்தின் விழுமிய செல்வமாகும்.

தம்பொருள் என்ப தம் மக்கள் *(குறள் 63)*

குடும்பத் தலைவனான இல்வாழ்வான் இயல்புடைய தாய், தந்தை, மனைவி மூவரையும்"[4] (குறள் 41), அயல்புடைய மூவராகிய பற்றற்ற துறவி, வறியவர், குடும்பத்தை விட்டு வெளியேறி இரந்து வாழ்பவர் ஆகியோரையும் (குறள் 42), மற்றும் தெளிந்த அறிவர், வாழ்வாங்கு வாழ்வோர், விருந்தினர், சுற்றத்தாரோடு தன்னையும் (குறள் 43) பேணிக் கொள்ளக் கடப்பாடு உடையவராகிறார். குடும்பத் தலைவியோ தன்னை முதற்கண் பேணிக் கொண்டு, தன் கணவனையும் பேணி, நாவடக்கம் உள்ளவளாகவும் முயற்சியாளியாகவும் திகழ வேண்டும். இல்லறத்துணைவர் இருவருமே உட்பகைக்கு அஞ்சித் தற்காத்து வாழ்தல் பயன் நல்கும். அவர்கள் தம் மக்கட் செல்வங்களுக்குக் கல்வி கேள்வி வழங்கிச் சான்றோர் அவையில் முதல்வராகச் செய்தல் வேண்டும் (குறள் 67).

மக்கட் செல்வங்கள் பேதமை, புல்லறிவு, காரறிவு இவற்றை நீக்கி, நன்றின்பால் அறிவைச் செலுத்தி ஐம்புலனடக்கத்துடன் பகுத்தறிவு, பேரறிவு வாலறிவு என்ற வகையில் உயர்ந்து, அன்பு, நாணம், ஒப்புரவு, அருள், வாய்மை ஆகிய சான்றாண்மைப் பண்புகளுடன் "சான்றோன்" எனப் பிறர் பாராட்டும் வகையில் சிறக்க வேண்டும். அப்போது பெற்றோரும் அவர்களுடைய தவ வாழ்விற்காகப் பாராட்டப் பெறுவார்கள்.

குறள் வழி குடும்பக் கல்வி பெற்றோர் போர்க்களத்தில் தலைமை தாங்குவோர் போன்று குடும்பத் தலைமைப் பொறுப்பேற்று சிறப்பாகத் தாங்குவர். குடும்பத்தை உயர்த்த நினைக்கும் அவர்கள் காலநேரம் கருதாது, சோம்பல் கொள்ளாது, மானம் கருதாது, உடல் துயருக்கு இடங் கொடுக்காது "என் கடன் பணி செய்து கிடப்பதுவே" என்ற ஒரே கோட்பாட்டில் பெருமையுடன் செயலாற்றுவர். இவர்களையே உலகம் சுற்றமாகத் தழுவிக் கொள்ளும். வாழ்வாங்கு வாழ்வோரும் வரிந்து கட்டிக் கொண்டு உதவ முன் வருவர்.

4. குமுகாயக் கல்வி

திருக்குறள் முழுமையுமே வாழ்க்கைக் கல்வியின் வழிகாட்டி. இந்நூலில் இல்வாழ்வான் - துறவி என்னும் இரு நெறியில் வாழும் குடிமக்கள், குடிகளை ஆளும் ஆட்சியாளர், அமைச்சர், தூதர், ஒற்றர், படைஞர், உழவர், மருத்துவர் போன்றோரைச் சுட்டி அவரவர்கட்குரிய வாழ்வியல் அறங்களைக் கூறியுள்ளார். வாழ்க்கைக்குப் பொருள் முதன்மையாகும். அதனால் தான் "செய்க பொருளை" என்றும் (குறள் 759), சோம்பலில்லாமல் முயன்றால் அடியளந்தான் விரும்பியதைக் காட்டிலும் கூடுதலாக நிலமாண்டுப் பொருளைக் குவிக்க முடியும் என்றும் (குறள் 610) உழைப்பின் உயர்வை முதன்மைப்படுத்தியுள்ளார்.

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" (குறள் 1031), உழுவார் உலகத்தார்க்கு ஆணி (குறள் 1032) உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் (குறள் 1033) ஆகிய, தொடர்கள் வாயிலாகப் பற்றற்ற துறவி, நாட்டை ஆளும் அரசன் உள்ளிட்ட அனைவரும் தம்முடைய உணவுத் தேவைக்காக உழவுத் தொழிலை மேற்கொள்ளும் உழவர்களையே சார்ந்துள்ளனர் என்று கூறி உழைப்பின் சிறப்பை, மேன்மையைத் தலைப்படுத்துகிறார்.

கல்லாதவர்க்கும் கல்வி

கல்வி கற்க நல்ல வாய்ப்பு அமையவில்லையா? கவலை வேண்டாம். நல்ல செவி மட்டும் இருந்தால் போதுமானது. செவி வழி கற்றல் இயலும் எனக் கல்லாதவர்களுக்கும் கல்வி பயில வாய்ப்பு உண்டு என ஆற்றுப்படுத்துகிறார். நன்கு வேகவைத்துப் பக்குவப்படுத்தப்பட்ட அவி உணவு நாவிற்கு விருந்தாவது போல, ஒழுக்கமுடையார் ஆற்றும் பொழிவைக் கேட்டுச் "செவி உணவு" கொள்ள வேண்டும்.

இத்தகைய செவி உணவு, ஆற்று நீரற்ற வறண்ட காலங்களில் பயன்படும் ஊற்று நீர் போலவும், வழுக்கல் நிலத்தில் நடப்பவர்க்குப் பயன்படும் ஊன்று கோல் போலவும் பயன் நல்கும் என்பது அவர் தரும் அரவணைப்பாகும். (குறள் 414, குறள் 415).

ஆகவே செவி உணவு எவ்வளவு சிறிதளவாக இருப்பினும் அந்த நல்லுணவைக் கேட்டு நன்மை பெறுதல் கல்லாதார் கட்டாயம் செய்ய வேண்டிய கடப்பாடாகும்.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும் *(குறள் 416)*

ஆகவே தோடுடைய செவியல்ல; கல்வி கேள்விகளால் தோட்கப்பட்ட செவியே வள்ளுவர் விரும்பும் செவியாம். அவையே உண்மைச் செவியாம்; பிறவெல்லாம் செவியிருந்தும் கேளாச் செவிட்டுச் செவியே என்பது அவர் தரும் முடிந்த முடிவு ஆகும்.

5. ஆன்ம நேயக் கல்வி

தனி மனிதக் கல்வி வாயிலாக உடல், மன நலம் பேணி, வினை நலம் சிறக்கப் பணியாற்றுவதே வள்ளுவரின் விழைவு. மேற்கண்ட கல்வி வாயிலாகப் பெற்ற அறிவின் பயன் என்ன? அறிவின் பயனாக வள்ளுவர் இயம்புவது யாதெனின் மனித நேயம் போற்றுவதும் அதன் மேல் நிலையாக ஆன்ம நேயம் போற்றுவதும் தான்.

அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல் *(குறள் 203)*

தன்னைத்தான் காதல னாயின் எனைத் தொன்றும்
துன்னற்க தீவினைப் பால் *(குறள் 202)*

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல் *(குறள் 316)*

அறிவினா னாகுவதுண்டோ பிறிதின் நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை *(குறள் 315)*

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர் *(குறள் 997)*

மேற்கண்ட குறட்பாக்கள் அனைத்தும் மாந்த நேயத்தை வலியுறுத்தும் குறட்பாக்கள் என்றால் மிகையில்லை.

எல்லா உயிர்களிடத்தும் இரக்கமுடையவராக இருந்தாலும் அவற்றை எக்காரணம் கொண்டும் கொல்லாதிருத்தலுமே ஆன்ம நேயம் எனப்படும். உங்கள் உயிர் உங்கள் உடலில் நிலைத்து இருத்தல் வேண்டுமா? இதோ கடைப்பிடித்து ஒழுக வேண்டிய குறட்பாக்கள் இரண்டு:

அன்பின் வழியது உயிர்நிலை அஃதில்லார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு *(குறள் 80)*

(புலால்)

உண்ணாமை உள்ளது உயிர்நிலை, ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு. *(குறள் 255)*

அன்புள்ளம் கொண்டோரிடமும், அருளாட்சி போற்றுபவர்களிடமும் மட்டுமே உயிர் நிலைபெற்றிருக்கும் என்பது வள்ளுவரின் உறுதியான நம்பிக்கையாகும்.

ஆகவே அவர் கீழ்க்காணும் அறிவுரைகளை வழங்குகிறார்.

1. தன் உடலை வளர்க்கப் பிறிதொன்றின் உடலைத் தின்னாதே. (குறள் 251)
2. அருளாளியாக விளங்க வேண்டுமெனில் புலாலை மறுத்துவிடு. (குறள் 252)
3. புலால் மற்றொரு உயிரின் புண் என்று உணர்க, ஆகவே புண்ணை (ஊனை) உண்பதைத் தவிர்க்க. (குறள் 257)
4. ஓர் உயிரைக் கொன்று உண்ணாதிருத்தலே சிறந்த வேள்வியாகும். (குறள் 259)
5. ஊன் உண்டவர் மனம் நல்லதை நினைக்காது. (குறள் 253)
6. கொல்லான், புலால் மறுத்தானை உலகத்து உயிர்கள் கை கூப்பித் தொழும். (குறள் 260)

7. அங்ஙனமே தன்னுயிர்ப் பற்று, தன்னுடல் பற்று - இவற்றை விட்டு விட்டுத் தவ வாழ்வு வாழ்வோரை எல்லா உயிர்களும் கை கூப்பித் தொழும். (குறள் 268)

ஆகவே கொல்லாமையும், கொன்று தின்னாமையும் கடைப்பிடிக்கும் தவத்தவர், கூடா ஒழுக்கத்தையே அறவே விலக்கி, அளவறிந்த நெஞ்சத்தோடு "களவை" நீக்கி, மனமார வாய்மையை உரைத்தல் வேண்டும். மாசற்ற உள்ளம் எண்ணுவதையே உரைத்தல் மற்றும் செயலில் காட்டல் வேண்டும். மாசற்ற மனம் கொண்டோரின் கொள்கை நெறி பிறர்க்கு இன்னா செய்யாமையேயாம். (குறள் 311, 312). அவரின் செயலறம் (1) கொலை செய்யாமையேயாம். (குறள் 323), (2) பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலேயாம். (குறள் 322).

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று *(குறள் 323)*

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை *(குறள் 322)*

வள்ளுவர் வழங்கும் கல்வி தனி மனித நலம், குடும்ப நலம், குமுகாய நலம் பேணத் துணை புரிவதோடு கல்லார்க்கும் கல்வி நல்கி, மனித நேயத்துடன், ஆன்ம நேயம் போற்றி, அனைத்து உயிர்களும் வாழ வழிகாட்டும் வாழ்வியல் கல்வி என்றால் மிகையில்லை.

இக்காலச் சூழலில் திருவள்ளுவரின் கல்விக் கோட்பாடுகள் நாடு, மொழி, இனம், மதம் கடந்து உலக மாந்தர் ஒவ்வொருவரும் பயில வேண்டிய கோட்பாடுகள் தாம். அறிவியல் துறைகளில் மாந்த இனம் பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டிருப்பினும் மனிதனை மனிதன் நேசிக்கும் மாந்த நேயப் பண்பு பழங் காலத்தில் இருந்த நிலையிலிருந்து எள்ளளவும் முன்னேற்றம் பெறவில்லை என்பது கண்கூடு.

இந்நிலை மாற்றம் பெறுதல் பொருட்டு ஒவ்வொரு நாட்டு அரசும் திருக்குறளைப் பொதுமறையாக ஏற்று, திருக்குறளின் வாழ்வியல் கருத்துகளை வெகு மக்களுக்கு நவீன தகவல் தொடர்புச் சாதனங்களின் மூலமாகப் பரப்புதல் செய்தல் வேண்டும். திருக்குறள் வாழ்வு வாழ்ந்து வருகின்ற சான்றோர் பெருமக்களை முதன்மைப்படுத்திச் சிறப்பிக்க வேண்டும். தொடக்கக் கல்வி முதல் உயர் கல்வி வரை திருக்குறளைக் கட்டாயப் பாடமாக வைத்தல் வேண்டும். பல்வேறு பாட

வேறுபாடுகள் கொண்ட திருக்குறள் உரைகளைத் தரப்படுத்திச் செம்மையான வாழ்வியல் கருத்துகளைக் கொண்ட உரையைப் பரிந்துரை செய்தல் வேண்டும். உலக மாந்தர் அனைவரும் தங்கள் மறைநூல் (மறை = பாதுகாப்பு) என்று கைக் கொள்ளும் வகையில் ஆற்றுப்படுத்தி அதனை வழிகாட்டி நூலாகப் பயன் கொள்ள வேண்டும். அப்போது தான் கெட்ட போரில்லாத நோயற்ற புத்துலகம் அமையும்.

அடிக்குறிப்புகள்

1. வாழும் வள்ளுவம், டாக்டர் வா.செ. குழந்தைசாமி - நான்காம் பதிப்பு, ஜூலை 1989, பக். 26-27.
2. மேலது, பக்.63-67.
3. சங்க இலக்கியத்தில் குடும்பம், உடைமை, அரசு, முனைவர் அ. ஆறுமுகம்.
4. திருக்குறள் வாழ்வியல் உரை - புலவர் இரா. இளங்குமரனார்.

துணை நூல்கள்

1. திருக்குறள் வாழ்வியல் உரை - புலவர் இரா. இளங்குமரனார்.
2. திருக்குறள் தெளிவுரை, டாக்டர் மு. வரதராசனார்.
3. திருக்குறள், பரிமேலழகர் உரை.
4. வாழும் வள்ளுவர், டாக்டர் வா.செ. குழந்தைசாமி.
5. சங்க இலக்கியத்தில் குடும்பம், உடைமை, அரசு, முனைவர் அ. ஆறுமுகம்
6. குறளியம் (திங்களிதழ்), 1.8.2002, திருவள்ளுவரின் கல்விக் கோட்பாடுகள், மருத்துவர் க. கோபால்.

திருக்குறளில் உரிமையும் கடமையும்

ஏவி.கே. எழில்மணி

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஒவ்வொரு குடிமகனின் உரிமைகள் என்னென்ன, கடமைகள் எவையெவை என்பனவற்றைக் கோடிட்டுக் காட்டுகிறது. அதில் ஒவ்வொரு விதிமுறைக்கும், மூலம் வள்ளுவத்தில் காணப்படுகின்றது.

சட்டத்தின் கண்களில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை உண்டு. இதனைச் சொல்ல வந்த வள்ளுவர், கணவனைச் சரியாக வழி நடத்திப் புகழும், பேரும் உடையவனாக ஆக்கும் மனைவி வானவர் உலகம் போற்றும் பேற்றைப் பெறுவாள் என்ற பொருளில் இந்தக் குறளைத் தருகின்றார்.



பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு *(குறள் 58)*

சரி சமமாக உரிமை பெற்று வாழ விரும்புகின்ற மனைவி செய்யும் கடமை இதுவெனக் காட்டுகின்றார். விவிலியம் கூட,

Her Husband is known at the gates, when he sits among the elders of the land. (Proverbs 31:23)

இத்தகைய பெண்கள் பூம்புகாரின் கண்கள் எனப் 'பரிபாடல்' கூறுகின்றது.

பெற்றார் பிழையாத பெண்டிரும் *(பரிபாடல் 2:25)*

அப்படிப்பட்ட பெண் தனக்கு மனைவியாக வாய்க்காவிட்டால் சம உரிமை நாடுகின்ற அந்தக் கணவன் சிங்கம் போன்ற தனிக் கம்பீரத்தை இழந்து கூனிக்குறுகி வாழ்வான் எனச் சுட்டிக் காட்டுகின்றன இந்த ஒன்றே முக்கால் அடிகள்.

புகழ்புரிந்தஇல் இல்லோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை *(குறள் 59)*

நாடக மன்னர் சேக்சுபியர் இந்தப் பண்பினைக் கூற வருங்கால் "A light wife doth make a heavy Husband" என நகைச்சுவையாகக் கூறுகின்றார். இந்தச் செய்தியைப் பைபிளும் உறுதிப்படுத்துகின்றது.

Droping hands and weak knees
Are caused by the wife who does
Not make her husband happy.

தன் உரிமையை நிலைநாட்டாமல் தன் கடமையை மறந்த ஒருவனுக்கு அந்தப் பெண் தானாக விரும்பினாலன்றி உடன் இருக்கும் உரிமையைக் கூட இழக்கும் வாய்ப்பு உள்ளது என உணர்த்திக் காட்டுகின்றார் வள்ளுவர்.

அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல் *(குறள் 909)*

இந்தக் குறளை விளக்க வந்த வா.வே.சு. ஐயர் ஆங்கிலத்தில்

"Behold the man that submit to Petti-coat Government, neither righteousness not wealth, not even the joy of love will be found with them"

என மொழிபெயர்த்துள்ளார். மனைவியானவள் தாயாகும் பொழுது "ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே" எனப் புறநானூறு கடமையை வலியுறுத்துகின்றது. அந்த மகன் சிறந்தவனாக அமைய வேண்டும் என்று வள்ளுவரின் தாய் விரும்புகின்றாள்.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன்எனக் கேட்ட தாய் *(குறள் 69)*

இதையே புறநானூறும் வலியுறுத்தி

வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டனனென்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே *(புறம் 277:2-4)*

இந்தக் குறள்களின் உள் நோக்கங்களைக் கொண்டுதான் குழந்தை நலச் சட்டங்களும், குழந்தை இல்லாத பொழுது தத்தெடுத்துக் கொள்ளலாம் எனும் சட்டங்களும் Adoption Law இயற்றப்பட்டுள்ளன.

மக்களின் கடமை என்னென்ன, அவர்களின் உரிமைகள் என்னென்ன எனத் தொடங்கிய வள்ளுவர் முதலில்,

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல் *(குறள் 70)*

என அவனின் முதற் கடமை தன் தந்தைக்கு நல்லதோர் பெயரைப் பெற்றுத்தருதல் எனக் காட்டுகின்றார்.

கல்விபெறுவது அவனது உரிமை; தந்தையின் சொத்துகளைப் பெறுவதும் அவனது பிறப்புரிமை. இதனை அன்றைய இந்துச் சட்டக் கோட்பாடுகளும், இன்று இயற்றப் பட்டுள்ள இந்துத் திருமணச் சட்டமும் (Hindu Succession act, Hindu minority and guardianship act) போன்ற சட்டங்கள் கடமைகளையும், உரிமைகளையும் பேசுகின்றன.

Gains of Learning act என்பதும் இவ்வாறு பிறந்த ஓர் சட்டம் தானே.

வள்ளுவர் வகைப்படுத்தலைக் காணும் பொழுது நமக்கு வியப்பு மேலோங்குகின்றது. அந்தக் கடமைகளை கொள்ளத்தக்கன மற்றும் தள்ளத்தக்கன என்று இருவகையில் பார்ப்போம். ஆனால் அவை பயன் தரும் வகையிலே நமது பார்வையில் படுகின்றன.

உரிமையோடு கூடிய கடமை வாழ்வில் கொள்ளத்தக்கன.

அன்றறிவாம் என்னாது அறஞ் செய்க...... *(குறள் 36)*

காக்க பொருளா அடக்கத்தை .... *(குறள் 122)*

யாகாவாராயினும் நாகாக்க...... *(குறள் 127)*

சொல்லுக சொல்லின் பயனுடைய....... *(குறள் 200)*

குற்றமே காக்க பொருளாக.......... *(குறள் 434)*

தோன்றின் புகழோடு தோன்றுக......... *(குறள் 236)*

நல்லாற்றான் நாடி அருளாள்க......... *(குறள் 242)*

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க *(குறள் 305)*

வேண்டின் உண்டாகத் துறக்க........ *(குறள் 342)*

கற்க கசடற கற்பவை......... *(குறள் 391)*

ஆற்றின் அளவறிந்து கற்க........... *(குறள் 725)*

எனைத்தானும் நல்லவை கேட்க......... *(குறள் 416)*

கற்றிலாயினும் கேட்க........... *(குறள் 414)*

திறனறிந்து சொல்லுக சொல்லை....... *(குறள் 644)*

அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக..... *(குறள் 711)*

இடைதெறித்து நன்குணர்ந்து சொல்லுக *(குறள் 712)*

கடிதோச்சி மெல்ல எறிக....... *(குறள் 562)*

பரிந்தோம்பி(க் காக்க ஒழுக்கம்)....... *(குறள் 88)*

ஒற்றொற்ற உணராமை ஆள்க....... *(குறள் 589)*

எண்ணித் துணிக கருமம்........... *(குறள் 467)*

தூங்குக தூங்கிச் செயற்பால......... *(குறள் 672)*

இடுக்கண் வருங்கால் நகுக......... *(குறள் 477)*

மருவுக மாசற்றார் கேண்மை....... *(குறள் 800)*

மறவற்க மாசற்றார் கேண்மை...... *(குறள் 106)*

வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக......... *(குறள் 861)*

வாள்போல் பகைவரை அஞ்சற்க............ *(குறள் 882)*

உட்பகை அஞ்சி தற்காக்க......... *(குறள் 883)*

அற்றால் அளவறிந்து உண்க........ *(குறள் 943)*

தூங்கற்க தூங்காது செய்யும் வினை........ *(குறள் 672)*

துறவற்க துன்பத்துள் துப்பாயர் நட்பு..... *(குறள் 106)*

ஆற்றின் அளவறிந்து ஈக........... *(குறள் 74)*

என்று 'கடமையையும் உரிமையையும்' பட்டியலிட்ட பொய்யா மொழிப்புலவன்,

வேண்டற்க வெஃகியாம் ஆக்கம்........... *(குறள் 177)*

தீப்பால தான்பிறர்கண் செய்யற்க....... *(குறள் 206)*

இலனென்று தீயவை செய்யற்க........ *(குறள் 205)*

மறந்தும் பிறன் கேடு சூழற்க........ *(குறள் 204)*

தன்னெஞ்சு அறிவது பொய்யற்க........ *(குறள் 293)*

புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க....... *(குறள் 719)*

சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க........ *(குறள் 590)*

தேறற்க யாரையும் தேராது........ *(குறள் 509)*

உள்ளற்க உள்ளம் சிறுகுவ........ *(குறள் 798)*

எற்றென்று இரங்குவ செய்யற்க........ *(குறள் 655)*

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை........ *(குறள் 439)*

நோவற்க நொந்தது அறியார்க்கு........ *(குறள் 877)*

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க.... *(குறள் 827)*

வேண்டற்க வென்றிடினும் சூதினை........ *(குறள் 931)*

நயவற்க நன்றி பயவா வினை........ *(குறள் 439)*

கொள்ளற்க அல்லல்கண் ஆற்றறுப்பார் நட்பு... *(குறள் 798)*

கொள்ளற்க சொல்லேர் உழவர் பகை........ *(குறள் 872)*

செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை........ *(குறள் 656)*

என்று 'தள்ளத்தக்கன' வற்றையும் கட்டளையாலே சுட்டிக் காட்டி கடமையை வலியுறுத்துகிறார்.

'உரிமை (Right), கடமை (Duty), பொறுப்பு (Liabilities) இவற்றைத் தோற்றும் நடத்தை ஒழுங்கு படுத்துதல் சட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இந்தச் செயல்களை இயங்கும் செயல் (Act of Commision or Possitive Act) என்றும், இயங்காச் செயல் (Act of Commission or Negative Act) என்றும் இருவகைப் படுத்திச் சட்டம் குறிப்பிடுகின்றது.

'மனித இச்சைக்குக் கட்டுப்பட்ட நிகழ்ச்சிகளையே சட்டத்தின் செயல்கள் எனக் குறிப்பிடுகின்றோம்.' இது சட்ட மேதை சால்மண்ட் கருத்து.

வள்ளுவன் தொகுத்துத் தந்திருக்கின்ற கடமைகள் சட்ட மேதை சால்மண்ட் கருத்துகளுடன் இயைந்துள்ளன. வள்ளுவன் தொகுத்துத் தந்திருக்கின்ற கடமைகள் சட்டமேதைகள் சால்மண்ட்டும், ஆஸ்டினும் வள்ளுவரைப் படித்த பின்புதான் கூறினர் என்று கூறினால் அது மிகையாகாது.

Bundle of Rights and duties என்று சால்மண்ட் குறிப்பிடுவது வள்ளுவத்தின் பகுதியே. 'நல்லவை எல்லாம் செய்வது உன் கடமை' என்று எவ்வளவு நயமாகக் கூறியுள்ளார்.

இதிலிருந்து விரிவு கொண்டு 'தந்தையின் கடன்', 'மகனின் கடன்', 'வாழ்க்கைத் துணைவியின் கடன்', 'உழைப்பவனின் கடன்', 'ஒற்றனின் கடன்', 'உயர்ந்தோரின் கடன்', என்று இப்படிப் பல கடன்களைச் சொன்னார். இயற்கையான மழையைப் பார்த்து 'மழையின் கடன்'களைக் கூடச் சுட்டிச் சென்றுள்ள 'ஞானம்' எந்த ஞானத்தைவிடக் குறைவானது? ஆயின், எல்லோருடைய

கடனும் "நல்லவை செய்வதற்காக" இருக்கட்டும் என்று ஒருவரியில் சொன்னவர்க்கும் ஓர் ஐயம் பிறந்தது. அந்த 'நல்லவை' எவை என்று கேட்பர் சிலர் என்பதைப் புரிந்து கொண்டு 'நல்லவை'களைப் பட்டியலிடுகிறார் பாருங்கள்!

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு........	(குறள் 40)
மனத்துக் கண் மாசிலன் ஆதல்........	(குறள் 34)
அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை........	(குறள் 49)
அன்பின் வழியது உயிர்நிலை........	(குறள் 72)
நன்றி மறப்பது நன்றன்று........	(குறள் 108)
அடக்கம் அமரருள் உய்க்கும்........	(குறள் 121)
எல்லார்க்கும் நன்றாம் பணிதல்........	(குறள் 125)
ஒழுக்கம் உடைமை குடிமை........	(குறள் 133)
ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை........	(குறள் 137)
பரிந்தோம்பி(க் காக்க ஒழுக்கம்........)	(குறள் 132)
வறியவர்க்கு ஒன்று ஈவதே ஈகை........	(குறள் 221)
அற்றார் அழிபசி தீர்த்தல்........	(குறள் 226)
அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்.......	(குறள் 241)
உண்ணாமை வேண்டும் புலால்........	(குறள் 257)
செல்லா இடத்துச் சினந்தீது........	(குறள் 302)
ஒன்றாக 'நல்லது' கொல்லாமை........	(குறள் 323)
ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்........	(குறள் 36)
அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை........	(குறள் 343)
"பற்றுக பற்றற்றான் பற்றினை"........	(குறள் 350)
கேடில் விழுச்செல்வம் கல்வி........	(குறள் 400)
அறிவற்றம் காக்கும் கருவி........	(குறள் 421)
மெய்ப்பொருள் காண்பது அறிவு........	(குறள் 355)
"உலகம் தழீயது ஒட்பம்"........	(குறள் 425)
எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும்........	(குறள் 470)
முயற்சி திருவினை ஆக்கும்........	(குறள் 616)
துணைநலம் ஆக்கம் தரூஉம்........	(குறள் 651)
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்........	(குறள் 972)
பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்........	(குறள் 996)
நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும்........	(குறள் 960)
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்........	(குறள் 1033)

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்........ (குறள் 131)

இனநலம் எல்லாப் புகழும் தரும்........ (குறள் 457)

முயற்சி மெய்வருத்தக் கூலி தரும்........ (குறள் 619)

உலகத்து இயற்கை அறிந்து செயல்........ (குறள் 637)

என்று இப்படியாகப் பல 'நல்ல கடன்களை' இன்னும் பலப்பல அடுக்கிக் கொண்டே செல்கிறார். எண்ணிலடங்கா அறங்களைச் சொல்லிச் செல்கின்றார்.

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலை'த் தலையாய அறமாக இயம்புகிறார்.

அறம், பொருள், இன்பத்தை - அறவழியில் பொருளீட்டி அடைக! என்று கடைமையாக வலியுறுத்துகிறார். இந்தச் சட்டதிட்டத்திலிருந்து வழுவி நடந்தால் உங்கள்

பொருளாயம் புறமே போ (போய்) ஒய்ப் படும்
சிறுமை பலசெய்து சீரழிக்கும்
பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
பொருள் கெடுத்து அல்லல் உழப்பிக்கும்

என்றெல்லாம் இடித்துக் காட்டுகின்றார். தன் உரிமையைப் பற்றிப் பேசும்பொழுது மற்றவர் உரிமையை மீறலாகாது என்பது வள்ளுவர் விதிக்கின்ற விதி. உரிமைகள் பறிக்கப்படுகின்ற பொழுது நீதிமன்றங்களின் உதவி நாடப்படுகின்றது. எனவேதான் பிறர் உரிமைகளை மதித்து அவரவர் உரிமைகளை அவரவர்களுக்கும் கொடுப்பது சிறப்பு என வள்ளுவர் மொழிகிறார்.

தகுதிஎன ஒன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின். *(குறள் 111)*

இதனைத்தான் வேதநூல் கூட,

Do not with hold good from those whom it is due,
when it is your power to do it *(Proverb 3:27)*

இதனைத் தான் இசுலாம் கொள்கையின் மூலாதாரமான குரான் கூட

Do justly that is nears to your duty.
Your duty to Allah *(Holy Koran)*
(Chapter 6 Rukoo 5)

உரிமையும் கடமையும் இயற்கையின் நெறியின்பால் பிறந்தவை. ஆங்கில நாட்டின் தெய்வீகப் பேரவையினர் இதைப் பற்றிக்

கூறும்பொழுது: இயற்கை நெறி (அறம்) என்பது ஆண்டவனின் கட்டளையாகும் மக்கள் இனம் அதற்குப் பணிந்து நடத்தல் வேண்டும். கடவுளுக்கும் மனித இனத்திற்கும் ஒருவன் ஆற்ற வேண்டிய புனிதமான கடமைகளையே அறம் விதிக்கின்றது. அக் கடமைகளை ஆற்றுபவர்க்கு நலவாழ்வு உண்டு என்று அறம் கூறுகிறது. மாறுபட்டு நடப்பவர்க்கு மரணம் தான் என்றும் அறம் அச்சுறுத்துகிறது - இவ்வாறு ஆங்கில நாட்டுத் தெய்வீகப் பேரவையினர் பதினேழாம் நூற்றாண்டில் கூறியுள்ளனர்.

பிற்காலத்தில் இங்கிலாந்தில் வாழ்ந்த பிளாக்ஸ்டோன் என்ற சட்ட வல்லுநர் அறத்தின் இலக்கணத்தைக் கூற முற்பட்டார். "அறம் என்பது மனித இனத்தோடு பிறந்ததாகும். அது இறைவனால் உருவாக்கப்பெற்றது. மற்றைய கடமைகளை எல்லாம்விடச் சிறந்தது. உலகனைத்திற்கும் பொதுவானது. எல்லா நாடுகளுக்கும் எக்காலத்திற்கும் பொருந்தவது" என்று அவர் விளக்கியுள்ளார்.

வள்ளுவர் காட்டுகின்ற நெறிகள் முற்காலத்திலேயே நிறைந்திருந்த நெறிகளின் மூலமே ஆகும். அதனைப் புரிந்து பிற்காலத்தில் சட்ட மேதைகள் எல்லா மொழிகளிலும் அவரவர்கள் வழியினில் வடித்துக் காட்டினர். அவர்கள் வடித்துக் காட்டியது நம்மூரில், நம்மண்ணில் விளைந்தவை என்பதற்கு மேற்கூறிய சான்றுகளே எடுத்துக்காட்டு.

⁂

சமூகப் புரட்சிச் சிந்தனையாளர் வள்ளுவர்

ச. சிவகாமி

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு *(குறள் 731)*

எனச் சிறந்த நாட்டிற்கு வள்ளுவர் அளிக்கும் விளக்கம் சமூக அமைப்பிற்கும் பொருந்தும். குறைவற்ற வேளாண்மை, சிறந்த தகுதி வாய்ந்த மக்கள், நிறைந்த செல்வம் எனும் மூன்றினையும் நல்ல தொரு நாட்டிற்கு, சமுதாயத்திற்கு இன்றியமையாத தாக்கும் வள்ளுவர்,

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண் *(குறள் 983)*

என்று தக்காருக்கு - தகுதி வாய்ந்த குடிமகனுக்கு இலக்கணம் வகுத்துள்ளார். தனி மனிதச் சீர்மை சமுதாயச் செம்மைக்கு, செழுமைக்கு ஆணிவேர் ஆதலின் தம் சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகளில் அதற்கும் இடமளித்துள்ளார்.



சமுதாய உயர்வினை, மேம்பாட்டினை மட்டுமே முழுமையாகச் சிந்தித்த முதல் தமிழ்ச் சமுதாயச் சிற்பியாக வள்ளுவர் ஒளிர்கிறார். சுமார் 2000 ஆண்டுகட்கு முன்பே முற்போக்கு விதைகளை விதைத்துத்

தமிழுக்கு உலக அரங்கில் உயரிய, உன்னதமான இடத்தைப் பெற்றுத் தந்துள்ளார். அவர் விதைத்தவை எம்மண்ணுக்கும் எக்காலத்துக்கும் பொருத்தமாக இருப்பதே இதற்கு அடிப்படை என்பது அனைவரும் உணர்ந்த உண்மை.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் *(குறள் 1062)*

என்று தம்மைச் சமுதாயப் புரட்சியாளராக இனங்காட்டும் வள்ளுவரின் செம்மாந்த சிந்தனைகள் இன்றைய சமூக மேம்பாட்டிற்கும் வழிகாட்டி நிற்கிறது.

திருக்குறள் படைப்பு நோக்கம் – சமுதாயப் புரட்சி

இலக்கிய உலகில் பொருண்மை (அறம்), வடிவம் (குறள் வெண்பா) எனப் புதுப்பாதை படைத்தவர் வள்ளுவர். புதுமை விரும்பியான அவர் தம் காலச் சமுதாயச் சீர்கேடுகளைக் களைய முனைந்ததன் வெளிப்பாடே திருக்குறள். அது , பிறப்பாலும் பொருள் வளத்தாலும் ஏற்றத்தாழ்வு, கள், பரத்தமை முதலான வற்றில் முடங்கிக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்திற்குப் புத்துயிர் ஊட்டும் மருந்தானது.

சமுதாய அமைப்பில் மலிந்து கிடக்கும் முரண்பாடு களையும் கொடுமைகளையும் சுட்டிக்காட்டி அவ்வமைப்பில் அடிப்படைநிலையில் மாற்றம் ஏற்படத் தூண்டுவது... பகுத்தறிவின் அடிப்படையில் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி மனிதநேயம் மிக்க சமுதாய அமைப்பை ஏற்படுத்த இயலும் என்பது இதன் அடிப்படைக் கருத்தாகும் என்பது புரட்சிச் சமூகவியலுக்கு வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி 12, ப.748) அளிக்கும் விளக்கமாகும்.

மாயோன், சேயோன், இந்திரன், வருணன், கொற்றவை, சிவன் எனப் பல தெய்வ வழிபாடும், பல சமயக்கொள்கைகளும் போற்றப்பட்ட சூழலில் சமயப் பொறையை, பொதுமையைக் காட்டியவர் (கடவுள் வாழ்த்து); ஆடவர் வாழ்வின் ஓர் அங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பரத்தமைக்குத் தடை விதித்தவர் (இன்பத்துப்பால்); சமூக அங்கத்தினரிடையே எக்காடுப்பாடு மின்றித் தண்ணீராய்ப் பெருகிநின்ற கள் குடித்தலுக்குக் கதவடைத்தவர் (கள்ளுண்ணாமை);

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்

என்று வேடதாரிகளை எதிர்த்தவர் (280); சமுதாயச் செயல் பாட்டிற்குத் தேவையானதும் இல்லறமே, துறவறமன்று எனத் துணிந்தவர் (46,47,48,49,50); சமூக நோக்கு, விழிப்புணர்வு அற்றவரை

ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும் *(குறள் 214)*

எனச் சாடியவர் என்று வள்ளுவரின் புரட்சி மனப்பான்மைக்கு, மனிதநேயத்தோடு கூடிய சமுதாய அடிப்படை மாற்ற முயற்சிக்குச் சான்றுகளை மேலும் அடுக்கலாம். இவற்றை நோக்க வள்ளுவரின் உலகப் பொதுமறைக்கு, திருக்குறளுக்குச் சமுதாயப் புரட்சி விழைவே அடிப்படை இலக்கு என்பது தெளிவாகிறது.

தொடர்ந்து நிகழ்ந்த போர்களால் ஏற்பட்ட பொருளிழப்பு, பொருட்சேதம், மானிடரழிவு, ஒழுக்கச்சீர்கேடு, புறச்சமய, இனத்தார் வரவு எனத் தமிழ்ச் சமுதாயத்தின் இடர்ப்பாடுகளைக் களைந்து மிகச் சிறந்த சமுதாயமாக அது உயர்வு பெற எண்ணியதன் விளைவே திருக்குறள் படைப்பு எனும் பொது நோக்கினையும் இவண் எண்ணலாம்.

இனி, வள்ளுவர் ஒரு சமூகப் புரட்சிச் சிந்தனையாளர் என்பதை வெளிப்படுத்தும், உறுதிபடுத்தும் அவரின் சமூக மேம்பாட்டுச் சிந்தனைகளுள் சிலவற்றைக் காணலாம்.

1. சமுதாய மேம்பாட்டிற்குச் சமூக அங்கத்தினர் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுதல் தேவையாகும். அதற்குச் சமுதாய உணர்வு இன்றியமையாததாகும். இதனைச் சமூகவியலறிஞர் நாம் எனும் உணர்வு (we - feeling), பங்கு உணர்வு (Role feeling), சார்பு உணர்வு (Dependency feeling) என மூன்றாகப் பிரிப்பர் (வாழ்வியற் களஞ்சியம், ப.470). வள்ளுவரின் விருந்தோம்பால் நாம் எனும் உணர்வினையும், சமூக அங்கத்தினர் கடமைகளைக் காட்டுதல் (தந்தை - 67, மகன் 70, சான்றோர் - 118, வணிகர் - 120, தலைமையாளர் - இறைமாட்சி, அமைச்சர் - அமைச்சு) பங்கு உணர்வினையும் உணர்த்துகின்றன. நட்பு, பொறையுடைமை, சுற்றந்தழால், கண்ணோட்டம் போன்ற அதிகாரச் செய்திகள் சமூக அங்கத்தினர்கள் தம்முள் ஒருவரை ஒருவர் சார்ந்தே வாழ வேண்டியுள்ளதால் இருக்கவேண்டிய சார்புணர்வின் பெருமையை, சிறப்பை, தேவையை இயம்புகின்றன.

2. சமூக அடுக்கமைப்பில் அந்தணரைச் சிறப்பிக்கும் வள்ளுவர் இதில் பெரிதும் ஈடுபாடு காட்டவில்லை. அந்தணர் என்போர் அறவோர் (30), அறு தொழிலோர் (560) என அவரை முதன்மைப் படுத்தியுள்ளதை மறுத்தற்கில்லை. எனினும் இதனினும் சமூகத் தகுநிலையை நிலைநாட்டுவதில்தான் அதிக நாட்டம் காட்டியுள்ளார். சான்றோனாக வாழ்தலே சமூகத் தகுதியைப் பெறுதற்குரிய வழியாக உணர்த்துகிறார். தக்கார் (114, 446) என்ற ஒற்றைச் சொல்லால் சமூக அங்கத்தினரின் இயல்பினை வரையறுத்துள்ளார். மக்கட்பண்பினை உடையோராக இவரைச் சுட்டும் வள்ளுவர் இத்தகையோரை ஆன்ற குடிப்பிறந்தார் (681),

மேற்பிறந்தார் (409), நல்லினத்தார் (460), தெரிந்த இனத்தார் (462) எனப் போற்றுகின்றார். இவர்கள் மூத்த அறிவுடையோராக, பெரியோராகவும் (441) பொலிவுறுகின்றனர். சமூக அங்கத்தினர் அனைவரும் இத்தகுநிலை பெற்றோராக விளங்குதல் வேண்டும் என்பதே வள்ளுவரின் வேட்கை என்பது திருக்குறள் முழுமையும் இழையோடக் காணலாம். இதிலிருந்து மாறுபடுவோரை, முரணாக ஒழுகுவோரைப் பூரியர் (241), கீழ் (கயமை, 1074, 1075) சிற்றினம் சேராமை) என ஏசுகின்றார்.

இவற்றை நோக்க வள்ளுவரைப் பொறுத்தமட்டில் சமூகத்தில் வாழ்வோர் இரு இனத்தவர். ஒருவர் நல்வழியில் ஒழுகும் சிறந்த மக்கட் பண்புடையோரான மேலினத்தார்; அவ்வாறின்றித் தமக்கும் தாம் சார்ந்த சமூகத்திற்கும் தீங்கு விளைவிப்போராக அமையும் கீழ் இனத்தார் மற்றவராவார். எனவே 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' (972); அவற்றிடையே உயர்வு தாழ்வு கற்பித்தல் பிழை' என்பது வள்ளுவர் கருத்தாகும். இக்குறளின் எஞ்சிய பகுதியான 'சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்பது நல்லனவற்றை உருவாக்குதல், தீயனவற்றை அழித்தல் எனச் சமூகத்திற்குத் தேவையானவற்றைச் செய்தலால் சிறப்பும், அதற்கு மாறுபட்டு ஒழுகுதலால் இழிவும் வரும் என்பதை வலியுறுத்துவதாகக் கருதலாம். ஒருவர் உயர்ந்தவர் மற்றவர் தாழ்ந்தவர் எனும் வேறுபாடு அவர்களின் செயற்பாட்டில்தான் அமைகிறது; பிறப்பாலோ, பொருளாலோ அல்ல என்பதும் புலனாகிறது. ஆகவே சமுதாயத்தில் காணப் படும் இனப்பாகுபாட்டில் வள்ளுவருக்கு உடன்பாடில்லை எனவும் எண்ணலாம்.

3. குறளின் குடிசெயல்வகை அதிகாரம் நல்ல தலைவனுக்குரிய இலக்கணத்தை வரையறுக்கிறது. கடமையைச் சோம்பல், பின்வாங்கல் இன்றி நிறைவேற்றுதல் (1021), முயற்சியும் நிறைந்த அறிவும் உடையோராதல் (1022), துன்பத்தை எதிர்த்துப் போராடி (1030), குற்றமற்றவனாய்த் (1025) தன்னைச் சூழ்ந்துள்ளோரைக் காப்பாற்றுதல் (1026, 1027) என்பன இங்குச் சிறப்பாகச் சுட்டப்படுகின்றன. இறைமாட்சியதிகாரமும் இதன்பாற்படுவதே. சமூகத்தை நல்வழியில் நடத்திச் செல்வதற்குச் சிறந்ததொரு தலைவன் தேவையாதலின் வள்ளுவர் தவறாது இதனை வலியுறுத்தியுள்ளார்.

4. சமூக மேம்பாட்டிற்குரிய காரணிகளையும் வள்ளுவர் தெளிவுபடுத்தியுள்ளார். அவற்றுள் முதன்மையானதாக அவர் முன்னிறுத்துவது கல்வியாகும் (கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை). மற்றும் கடுமையான உழைப்பே முன்னேற்றத்திற்கு அடிப்படை என்பதை உணர்த்துவதற்காக ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை, ஊக்கம் உடைமை போன்ற அதிகாரங்களையும் படைத்துள்ளார். எச்சமுதாயமும் உணவு

உற்பத்தியில் தன்னிறைவு பெறுதல் இன்றியமையாதது ஆதலின் உழவுத்தொழிலுக்கும் தனிச்சிறப்பளித்துள்ளார். சமூக இயக்கத்திற்கு, செயற்பாட்டிற்குப் பணப்புழக்கமும் தேவை. எனவே அதன் சிறப்புக் குறித்தும் (247, 252) பொருள் செயல்வகை குறித்தும் (76ஆம் அதிகாரம்) விளக்கமாகப் பேசியுள்ளார்.

இவை தவிர நடுவுநிலைமை, பெரியாரைத் துணைக் கோடல், பெரியாரைப் பிழையாமை போன்ற அதிகாரங்களின் வழியும் சமூக மேம்பாட்டிற்கு வழிகாட்டியுள்ளார்.

5. சமூக மேம்பாட்டினை நிலைபெறச் செய்வதற்குச் சில சமூகக் கட்டுப்பாடுகள் தேவையாகின்றன. சமூக அங்கத்தினர் பின்பற்ற வேண்டியதாகிய இவ் ஒழுங்கு முறைகளைச் சமூகவியலார் அகவயச் சமூகக் கட்டுப்பாடு, புறவயச் சமூகக் கட்டுப்பாடு என இரண்டாகப் பகுத்துரைப்பர். வள்ளுவமும் இக்கட்டமைப்பைப் போற்றியுள்ளது. தனிமனித ஒழுக்கச் சீர்மைக்கும் மேம் பாட்டிற்கும் அறிவுறுத்தப்படுவன அகவயச் சமூகக் கட்டுப் பாடாகின்றன. கள்ளாமை, அழுக்காறாமை, கூடா ஒழுக்கம் கடிதல், புறங்கூறாமை போன்றவற்றுடன் அன்புடைமை, அடக்கமுடைமை, பொறையுடைமை எனப் பிறவும் இதனுள் அடங்குகின்றன. இத்தனிமனிதன் தன் புறவாழ்க்கையில் சமூகத்தோடு பலவாறாகக் கலந்து நிற்கிறான். அப்போதைய அவன் செயற்பாடும் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிநிற்றல் சமூக அமைதிக்கு வேண்டப்படுகிறது. இக்கட்டுப்பாட்டிற்கு அதாவது சமூக நடத்தை விதிமுறைகளுக்குச் சமூக அங்கத்தினன் உடன்படல், மீறாதிருத்தல் அவனது சமூகப் பொறுப்புணர்வைச் சுட்டும். மறுப்போர் அல்லது மீறுவோர் தண்டனைக்குள்ளாதல் (879) இதனுள் அடங்கும். குற்றங்கடிதல் அதிகாரத்துள் இக்கருத்தினை வள்ளுவர் தெளிவாக்கியுள்ளார்.

6. என்னதான் அறிவுறுத்தினாலும், எவ்வளவுதான் கட்டுப்பாடுகளை விதித்தாலும் சமூக மேம்பாட்டிற்கு இடையூறாகப் பல எப்படியேனும் ஊடுருவி விடுகின்றன. சமூக நோய்களாக இவை குறிக்கப்படுகின்றன. வரைவின் மகளிர், கள், சூது, உட்பகை, கயமை, கல்லாமை, தீ நட்பு, பேதைமை, பிறனில் விழைதல், கொடுங்கோன்மை என இப்பட்டியலும் நீண்டமைகிறது. இவற்றின் இயல்பினையும் ஒழிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வள்ளுவர் பலவாறாக வலியுறுத்தியுள்ளார்.

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய் *(குறள் 848)*

செவியற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என் *(குறள் 420)*

எனச் சமூக நோயாளிகளை, நோய்பரப்புநரைக் கடுமையாக விமர்சித்துத் தம் அஞ்சாமையை, புரட்சி மனப்பான்மையை வள்ளுவர் வெளிப்படுத்தியுள்ளார்.

சமூக நோய்களுள் மிகக் கொடுமையானதாக வறுமையை வள்ளுவர் உணர்த்துகிறார். அவர் நெஞ்சை வறுமை சுட்டதன் காரணமாக அருளுடைமை, அறன் வலியுறுத்தல், இரவு, இரவச்சம், ஈகை, ஒப்புரவறிதல், கண்ணோட்டம், சுற்றந்தழால், நல்குரவு எனப் பல அதிகாரங்களில் அதனைப் பேசுகிறார். உயர்வான வாழ்விற்கு இறை நம்பிக்கையை வலியுறுத்திய வள்ளுவர்,

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் *(குறள் 1062)*

எனத் தூற்றியிருப்பது வறுமையை ஒழிக்கத் துடிக்கும் அவர் வேகத்தைப் புலப்படுத்துகிறது. சமூக மேன்மையில், நல் வாழ்வில் வள்ளுவர் கொண்ட அக்கறைக்கு, காட்டிய விழிப்புணர்விற்கு இது போன்ற குறட்பாக்கள் நற் சான்றுகளாகும்.

❋ ❋ ❋

திருவள்ளுவரின் நவீன சிந்தனை

எஸ். குமரன்

திருக்குறள் தோன்றிய காலம் முதல் தலைமுறை தலைமுறையாகப் பல்லோரால் அது நன்கு போற்றப்படும் நூலாகவே இருந்து வந்துள்ளது. தமிழ் நாட்டாரை மட்டுமல்லாமல் உலகச் சிந்தனையாளர்களையும் கவர்ந்த நூலாக விளங்கி வருகின்றது. திருக்குறளின் இலக்கணச் செம்மை குறித்தும், இலக்கியச் செழுமை குறித்தும் பல நூற்கள் வெளியிடப்பட்டுள்ளன. திருவள்ளுவரின் சீரிய சிந்தனைகளை உலகப் பேரறிஞர்களின் சிந்தனைகளுடன் ஒப்பிட்டாயும் நோக்குடனும் பல நூற்கள் எழுதப் பட்டுள்ளன. நவநாகரிக உலகத்தில் இயந்திரமாகச் செயல்படும் மனுக் குலத்திற்கு எக்காலத்தும் சிந்திக்கக்கூடிய நவீன சிந்தனைகளைத் திருவள்ளுவர் வெளிப்படுத்தியிருப்பது திருக்குறளை ஆழ்ந்து ஆய்வதில் தெளியலாம். அவரின் நவீன சிந்தனைகள் கல்வி, ஒழுக்கம், சமூகவியல், பொருளாதாரம், அரசியல் எனப் பல்துறைகளிலும் ஊடுருவியுள்ளது.



கற்கத் தகுந்த நூற்களை நன்கு கற்றவர்க்கு உலகில் உள்ள எந்த நாடும், எந்த ஊரும், தம் ஊர் போன்றதேயாகும். கல்வியின் முதிர்ச்சியால் பெறும் அறிவின் பயனே பிறர் துன்பங்களை மட்டுமேயல்லாமல், பிற உயிர்களின் துன்பங்களையும் தம் துன்பம்போல் கருதி அவற்றை நீக்குவதும் ஆகும். இல்லையேல் எத்துணை நுண் அறிவு இயல்பாகப் பெற்றிருந்தாலும் பயனில்லை எனக் கருதியே

அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை

என்று கூறியுள்ளார்.

கல்வியின் சிறப்பை எல்லாம் குறிப்பிட்ட திருவள்ளுவர். இந்தக் கல்வியைத்தான் கற்க வேண்டும் எனப் பெயரிட்டுக் கூறவில்லை. "கற்பவை கற்க" என்பதால் கற்க வேண்டுவன வற்றைக் கற்க எனப் பொதுமையாகக் கூறினார். கற்க வேண்டியவை ஒவ்வொரு துறையிலும் காலத்திற்குக் காலம் வேறுபடுபவை; விரிபவையாகும்.

சமுதாயம் வாழ, வளரப் பயனுடையதாக விளங்க ஒழுக்கம் மிகவும் இன்றியமையாதது ஆகும். சமுதாய உறுப்பினர்களாக இருக்கும் ஆண்டி முதல் அரசன் வரை எல்லாரும் கடைப்பிடிக்க வேண்டிய உயரிய பண்பே ஒழுக்கமாகும். அதனால்தான்

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்

என்பார். இதைச் சற்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். சில நெருக்கடிகளில் உயிரா? ஒழுக்கமா? எனக் கேள்வி எழும்போது, ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதே திருவள்ளுவர் கொள்கையாகும். அதனால்தான் "ஓம்பப் படும்" என எதிர்காலத் தொனியில் கூறியுள்ளார். ஏனெனில் காலம் முழுவதும் ஒழுக்கத்தைப் பேணி வாழ்ந்தவன் இறந்துவிட்டாலும் அவன் புகழ் எஞ்ஞான்றும் நிலைத்து நிற்கும் என்று வள்ளுவர் உறுதியோடு கூறுகின்றார்.

❋ ❋ ❋

வள்ளுவரின் கரங்களிலே இன்றைய மாணவர்

கிருஷ்ணவேணி அருணாசலம்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட து தமிழ்நாடு. இன்றைய சூழலில் தன் எண்ணற்ற சிக்கல்களைத் தீர்ப்பதற்குக் குறளை அரு மருந்தாய்ப் பயன்படுத்தினால் உலகிற்கே கலங்கரை விளக்காக அமையும் என்பது உறுதி. "கேடில் விழுச்செல்வம் கல்வி". "வெள்ளத்தால் போகாது வெந்தணலால் வேகாது கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் குறையாது." இத்தகைய அழிவற்ற செல்வத்தைத் தம் மக்களுக்கு வாரி வழங்கி அவையத்து முந்தி இருப்பச் செய்தல் வேண்டும் என்ற குறிக்கோளை வறுமையில் வாடும் எளியோர் முதல் செல்வச் சீமான்கள் வரை பெரிதும் விரும்புகின்றனர். அரசு நிதி ஒதுக்கீட்டிலும் பெரும்பகுதி கல்விக்கே ஒதுக்கப் படுகின்றது. ஒரு கல்விச்சாலை திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது என்பார்கள்.



இத்தகைய சிறப்புமிக்க கல்வியின் தரம் பெரிதும் குறைந்து கல்வி இன்று வெறும் ஏட்டுக் கல்வியாக, வாழ்க்கைக்குப் பயன்படாத கல்வியாக, பண்புகளை வளர்க்காத கல்வியாக, தொழில் திறனை உருவாக்காத

கல்வியாக, ஒரு வாணிபப் பொருளாக மாறி விட்டது என்று பல கல்வியாளர்கள் பெரிதும் வருந்துகின்றனர்.

வள்ளுவன் என்ற மருத்துவர் இந்நோய் தீர மருந்து தருகின்றார். கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, பெரியாரைத் துணைகோடல், மடியின்மை, நட்பு, புல்லறி வாண்மை போன்ற பல அதிகாரங்களில் அவரது மணியான கருத்துகள் இக்காலக் கல்வி முறைக்கும் மாணவர்க்கும், ஆசிரியர்க்குமே எழுதப் பட்டவை போல் தோன்றுகின்றன. முருகனின் வேல்போல் எதனையும் ஆழமாக அகலமாகக் கூர்மையாகக் கற்க வேண்டும் என்பர்.

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு

என்ற குறள் கூறுகிறது. இறைக்க இறைக்க ஊறும் கிணறு போல் மேன்மேலும் கற்கக் கற்க அறிவு வளர்கிறது. எனவே பொருள் புரியாது, மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் உதவாக்கரை கல்வி, அறிவை வளர்க்காது என்கின்றார்.

தேர்வு முடிந்த அன்றே 'மூளைக்கு ஓய்வைக்கொடு; படித்ததை மறந்து வாழ்க்கையை ரசிக்க கற்றுக்கொள் என்கின்ற இன்றைய தத்துவம் சினேகா (SENECCA) கூறிய வாழ்நாள் முழுவதும் கல்வி (EDUCATION FOR LIFE) என்பதற்கு முற்றிலும் மாறுபட்டது. அறிவின் வெடிப்பு என்ற நிலையில் ஒவ்வொரு நொடியும் புதிய செய்திகள் தொழில் நுட்பங்கள் கண்டு பிடிப்புகள் பெருகி வரும் வேளையில்,வாழும் வரை நாம் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும்.

"கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு" என்கிறார் அவ்வை. மிகச் சிறந்த சிற்பி என்ற பெயர் பெற்ற நிலயில் கூட மைக்கேல் ஆஞ்சலோ "இன்னும் கற்றுக்கொண்டே இருக்கிறார்" என்பார்கள்.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு

கற்றோர்க்கு யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற வகையில் எல்லா நாடுகளிலும், எல்லா ஊர்களிலும் சிறப்பு என்கின்ற போது ஒருவன் சாகும் வரை கல்லாமல் இருப்பது ஏனோ! கல்வி ஒருவருக்கு உயர்குடிப் பிறப்பினைத் தானே தருகிறது.

குறள் 409இல் கற்றவர்களே மேற்குடியில் பிறந்தவர் என்று கருதப்படுவர். மக்களாக மதிக்கப்படுவர்; குறள் 410இல் கல்லாதவர் விலங்குகளுக்கு ஒப்பாவார் என்று உறுதியாகக் கூறுகிறார். காந்தியடிகள் கொடுத்த கல்வியின் வரையறை - "கல்வி என்பது குழந்தை, மனிதனின் உடல், உளம், ஆன்மாவின் மிகச்சிறந்த சக்திகளை வெளிக்கொணர்தலே" என்கிறார்.

மனிதனை உருவாக்கும் கல்வியையே விவேகானந்தர் வேண்டுகின்றார். பலகற்றும் பலகேட்டும் மனம் வெளுக்க வழியில்லை. பேதமைக்கு மாற்றில்லை என்று முத்துமாரியிடம்

முறையிடும் பாரதியார், "வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே" என்று சமூகத்துக்குப் பயன் தரும் கல்வி, மனத்தைத் தெளிவாக்கி அறியாமையை அகற்றி அச்சத்தை நீக்கிப் பண்பை வளர்க்கும் கல்வி வளர விரும்புகின்றார்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

இலக்கியமோ, வரலாறோ, அறிவியலோ எதனைப் படித்தாலும் குற்றமறக் கற்று, கற்றதற்கேற்ப நடக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார் வள்ளுவர். எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் எல்லாத் துறைகளிலும் அடிப்படையாகிய கணக்கின்பால் வெறுப்புக் காட்டாது கண்ணாகப் போற்றிக் கணக்கையும் கற்று உயர வேண்டும் என்று குறள் 392இல்

எண்ணென்பஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

எனக் காண்கிறோம். செல்வர் முன் வறியவர் பணிவோடு நிற்பதுபோல் ஆசிரியர் முன் செருக்குக் கொள்ளாது வணங்கி நின்று கற்பவரே உயர்ந்தவர். அவ்வாறு கல்லாதவர் கடைநிலை மாந்தரே. இதனையே "பிற்றை நிலை முனியாது கற்றல் நன்று" என்கிறது புறம் 183. இன்றைய மாணவனின் கொடிய எதிரி சோம்பல்.

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்

என்ற குறளின் படி சோம்பல், காலம் தாழ்த்திச் செய்தல், மறதி, பகல் தூக்கம் ஆகிய நான்கும் விரைவில் கேடு அடைய விரும்புவார் ஏறும் மரக்கலம் ஆகும் என்று அச்சுறுத்துவதன் மூலம் மாணவர்களைச் சுறுசுறுப்பாக இயங்க வழிகாட்டு கின்றார்.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்

என்ற குறள் மூலம் உலகத்தையே வெற்றி காண்பது எப்படி என்கிறார். தகுதியான காலத்தை அறிந்து இடத்தோடு பொருந்தச் செய்யும் தொழில் மூலம் ஒருவன் உலகையே வசப்படுத்தலாம் என்று உற்சாகப்படுத்துகிறார்.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்

அறம் முதலாயவற்றைப் பற்றிய எச் சிறிய கருத்தையும் கருத்தூன்றிக் கேட்டு மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய கேள்விச் செல்வம் நிறைந்த பெருமையைத் தரக்கூடியதாகும். ஆனால் அதே சமயம் மத இன வெறி கொண்ட பேச்சுகளில் மயங்கி எடுப்பார் கைப்பிள்ளையாக முறையற்றுச் செயற்படும் மாணவர்க்குக் கூறுகிறார்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்றபடி கேட்கப்படும் கருத்துகள் எத்துணைப் பெரியவர் களிடம் இருந்து வந்தாலும் ஆராய்ந்து அதன் உண்மைப் பொருளை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும்.

"பெரிசு ஏதோ உளறுகிறது. அதனைக் கண்டு கொள்ளாதீர்கள்" என்று சிறுசுகள் கூறும் இக்காலத்திற்காகவே பெரியாரைப் பிழையாமை, பெரியாரைத் துணைக்கோடல் என்ற இரு அதிகாரங்கள் ஒதுக்கி,

பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாரால்
பேரா இடும்பை தரும்

என்று ஆசிரியர், பெற்றோர், அனுபவம் மிக்க முதியவர் போன்ற பெரியோரை மதிக்காமல் நடந்தால் நீங்காத பெருந்துன்பம் நேரும் என்று எச்சரித்துத் தலைமுறை இடைவெளிக்குப் பாலம் கட்டுகிறார். மதுவிடம் நெருங்காதே, போதை மருந்துகளுக்கு அடிமையாகி உன்னை அழுத்திக் கொள்ளாதே என்று இளைய சமுதாயத்தை அக்கறையோடு எச்சரித்து வரும் சமூகத்திற்குப் பக்கப் பலமாகக் கள்ளுண்ணாமை என்ற அதிகாரத்தில் அவர் கூறும் பத்து முத்தான பாடல்களும் அமைந்துள்ளன.

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி

கள்ளருந்தி மயங்கிடும் தன் மகனை, அவன் குற்றங்களை மன்னிக்கக் கூடிய தாயே காணச் சகிக்கமாட்டாள் என்கிறபோது ஏனைய சான்றோர்கள் அவனை எப்படிச் சகித்துக் கொள்வார்கள்? நட்பு, நட்பு ஆராய்தல், தீ நட்பு, கூடா நட்பு, சிற்றினம் சேராமை, என்று 50 பாடல்களைத் தந்துள்ளார்.

அழிவி னவைநீக்கி ஆறுஉய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு

அழிவைத் தருகின்ற தீய வழிகளில் இருந்து ஒருவனை விலக்கி நல்ல வழியிலே நடத்தி ஊழினாலே துன்பம் வந்த போது அதைத் தாமும் பகிர்ந்து கொண்டு வாழ்வதே நட்பு ஆகும் என்று மிக அழகாகக் கூறுகிறார்.

அறிவியல் வளர்ச்சி; அகிலத்தையே ஆட்டிப் படைக்கும் இன்றைய நிலையில் மனிதநேயம் குறைந்து மன அமைதி இழந்து தவிக்கும் நம் சமுதாயத்திற்கு ஆறுதல் தந்து ஊக்கமூட்டும் குறள்,

ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்

இங்குத் திருவினையாக்கவல்ல விடாமுயற்சியின் வலிமையை விளக்குகிறார். வள்ளுவன் காட்டும் வழியில் மாணவர் உலகு முனைந்து சென்றால் பாரதி அழைக்கும் இணையிலா இளைய பாரதம், ஒளி படைத்த பாரதம் விரைவில் நம் கரங்களில்.

பிறமொழி ஒப்பீடு

THIRUKKURAL'S INFLUENCE ON THE THEORIES OF T.S. ELIOT

R. Chandrasekar

Sainthood is the highest attainment to which a very few have got heightened. A critic says "the greatness of literature cannot be determined solely by literary standards", [1] Wellek and Warren support "to evaluate the literariness of literature by aesthetic criteria and the greatness of literature by extra-aesthetic criteria".[2] Valluvar is the one who has gained the credit as a saint poet for his couplets which provide food for the way of living with all values and it stands the test of time. The very first couplet of Thiruvalluvar,

> **A begins the alphabet**
> **And God, primordial, the world** *(Kural 1)*

conveys that a language has its origin with the first letter 'A' 'அ' or 'a' sound by all animates of the existing world and likewise the world has God as its origin. We are not much sure about valluvar's age or the exact period he belongs to, but he is conscious of the sense of tradition in concern about alpha-bet of any language, and God to any religion.



Tradition is a matter of much wider significance and is obtained by hard labour of

knowing the writers of the past. In this sense, Eliot involves a preception, "not only of the pastness of the past but also of its presence".[4] It is realised that the past exists in the present and that the past and the present form one simultaneous order. According to him, tradition is not anything fixed and static, it is constantly changing, growing and becoming different from what it is. The past directs and guides the rpesent, so the present alters and modifies the past.[5] The relationship between the past and the present is a reciprocal relationship. Tradition in the real sense means, consciousness of the main current, which does not flow invariably through the most distinguished reputations".[6] hence it is a sense of tradition that Valluvar has focussed on the alphabet and Omnipotence paving the way to T.S. Eliot to conceive his concept of tradition in Tradition and the Individual Talent.

Valluvar has depersonalised his emotions in talking about God-omnipotence and clings not to any particular mode of worship of God, or religion and there his idea of a relition self is also unidentified. This is conceived in Eliot's Impersonality theory. For Eliot, the personality of the artist is not important, as his sense of 'tradition' is the more important one. The artist is supposed to forget his personal joys and sorrows, and be absorbed in acquiring a sense of tradition and express it in a work of art. Thus the personality of the poet is merely a medium, as a catalytic agent in a chemical reaction. constant formation of emotions and experience paves the way to new wholes but this new combination does not contain a trace of the mind of the poet. Eliot stresses the need of an extinction of personality. This impersonality is achieved only when there is a complete surrender to the work and awareness not only of what is dead, but of of what is already living'7 and concludes saying, "poetry is not a turning loose of emotion, but an escape from emotion , it is not an expression of personality, but an escape from personality".[8]

Valluvar's greatness is tested not merely by the pleasure that Thirukkural gives but the moral elevation it leads to. An artist has to surrender himself to obtain the highest result as an artist and a man. Hence, the artistic mission is nothing but a kind of self martyrdom when surrendering the ego. Thus, Valluvar, the artist becomes martyr to attain peace for the whole world. Sucha concept of concentration on form and order in human actions and feelings, makes us conscious of order in reality.

The phrase 'objective correlative' was coined by Eliot and he defines it as "a set of objects a situation, a chain of events, which shall be the formula"[9] for the poet's emotion and "when the external parts are given the emotion is at once evoked".10 It is a way of conveying emotion without direct verbal expression by presenting certain situations and events which arouse a similar emotion in readers.

When the artist surrenders his personality fully to his object, the outcome becomes vital-otherwise he suffers from a fragmented personality which Eliot call 'Dissociation of sensibility'. He means that "Unification of Sensibility" is a fusion of though and feling, and explains:

> Tennyson and Browning are poets; and they do not feel their thought as immediately as the odour of a rose. A thought to Donne was an experience; it modified his sensibility. When a poet's mind is perfectly equipped for its work, it is constantly amalgamating disparate experiences, the ordinary man's experience in chaotic, irregular, fragments. The latter falls in love, reads spinoza, and these experiences have nothing to do with each other, or the smell of cooking; in the mind of the poet these experiences are alwsays forming new wholes.[11]

Valluvar brings down the visual or general concept of the universal first sound of the alphabet to make clear and focussed his convergent idea that God, Omnipotence, is the highest of all mankind. The way he narrows down from the known to the unknown gets a creation into shape. Such a kind of creation is valued for its clarity, formal perfection and artistic 'self-effacement' which is essential for 'great art' Valluvar's notion of greatness plays a vital role in T.S. Eliot, a renowned stalwart in the whole of English literature who is fully conscious of his own generation, of his place in the present but also acutely conscious of his relatonship with the writers of the past and proves himself in his concept of "Tradition and the individual Talent". Thus, it is evedent that the effect of Thiru valluvar's Thirukkural has been nurtured in the mind of T.S. Eliot.

Works cited

1. "Religion & Literature: p. 43, Eliot T.S., In five approaches of Lit. Criticism. By Wilburscott, New York; Collier MacMillan, 1977, P.43.

2. "Theory of Literature", C. 1949; Rene Wellek and Austin Warren, rpt. Reading: Penquin (OX and Wyman, 1980). p. 239.

3,4,5,6."Tradition and the individual Talent", Eliot T.S., in 20th Century Literary criticism. Ed. David Lodge, London and New York; Longman, 1983, pp. 22-24.

7-11. "Selected Essays", Eliot T.S., Faber & Faber, London, 1951, pp. 29-112.

※ ※ ※

THIRUVALLUVAR AND FRANCIS BACON ARE SOCIAL AND ETHICAL PHILOSOPHERS - A COMPARATIVE STUDY

V. Neelakandan

This paper brings out some similarities of social thoughts between Thiruvalluvar and Bacon. Thiruvalluvar is the only poet and philosopher to the world. He is á social reformer, critic, and well-wisher of the world. Francis Bacon, the father of the English essay, echoes Thiruvalluvar's social and ethical philosophies. Both have tried to instill culture, good manners and morals and principles of the life among their people. An innovative attempt is made to proclaim that Kural is an immortal classic and age cannot wither it.

This paper tries to explore the fact that great writers of world literature reflect the thought and concept of Thiruvalluvar. The word 'ethic', itself is coined from the Greek 'ethos', meaning customs, usages or habits, or more comprehensively character.



Ethics is concerned with the norms of human social behaviour. It lays down a code of conduct and tells what men do, and not what they ought to do. It instils culture, good manners and morals, and the principles of life. The Brahadaranyaka Upanishad summarises a whole

ethical philosophy in three words: daamyata, datta and dayadhvam - self control, charity and compassion. Social philosophy attempts to give civilized societies and increases human welfare and happiness. Its reforms at the same time show a way of life. It tells of the purity of living and the excellence of a good society which make good men and women. It gives a harmonious development to society.

Thiruvalluvar and Bacon whose philosophies are what do you mean for society. Writers who want to build utopian societies produce their works based on ethical and social philosophies. Their main motto is to make a flawless society. Thiruvalluvar has been the forerunner among these writers. He is the only poet and philosopher to the whole world. He took a cudgel in the form of Kural approximately 1500 years before. Kural means anything short. It contains 1330 couplets. There are one hundred and thirty-three chapters, each chapter containing ten couplets. It is an ethical philosophy. Thiruvalluvar's ideas are mainly concerned with the present and this world. To Thiruvalluvar, how one lives is a matter of supreme importance. He emphasizes right behaviour social as well as personal conduct for all people under all circumstances.

Thiruvalluvar does not address any group of people, any religion, caste or community. His philosophy is universal. He speaks to all mankind, not only of his time but of all time. He talks of the high and the low, but the distinction is based not on birth, wealth and poverty, but on conduct, character and wisdom. Therefore he is essentially humanistic, interested in the welfare of people. Kural is an immortal classic and age cannot wither it. The ideas of Kural have a uniqueness and freshness that have lasted throughout the ages. So Kural is important to the world as the Bhagavad Gita to Hindus, the Bible to Christians and the Kuran to Muslims.

Bacon, father of the English essay, plays the role of a practical moralist and presents his philosophy. He reflects a Thiruvalluvarian thought. Bacon's essays have dealt with the ethical qualities of men. Bacon's stock of words is exceptionally rich. The method of Bacon is to discover the fundamental principles of conduct, the influence, the actions of men. His essays appeal to men at all times and constitute a hand book of practical wisdom, enclosing in their shortest maxims an astonishing treasure of insight.

Thiruvalluvar composed Kural in the form of verse, but Bacon wrote in the form of prose at the end of the 16th century. Bacon has echoed Thiruvalluvar's ethical values and philosophy. He worked for the goal which Thiruvalluvar had accomplished. Hence, their works have been epigrammatic and speaking of the unchanging eternal realities of human life.

Thiruvalluvar and Bacon have exposed consequences of good and bad which means people should follow and lead a meaningful life in all its features. The following chapter reveals some similar ideas of

Thiruvalluvar and Bacon on 'studies' and friendship. These ideas prove that Thiruvalluvar and Bacon are good teachers and have paid great attention to a meaningful society. Even though a lot of similarities are found between Thiruvalluvar and Bacon, this paper discusses only some main ideas. For instance, Thiruvalluvar speaks about the system of learning and how a person should study, understand and follow it in the 40th chapter 'Education' (Kalvi).

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக *(குறள் 391)*

"Study and learn with clarity what is worthy to learn, and stand firm by their norms of virtue".
(Narayanaswamy. 106).

Bacon adopts the same idea in his 'Of Studies'. There are some books the contents of which are to be read very thoroughly and inwardly digested.

Another identical idea is to be seen in their works on friendship. Thiruvalluvar says that friendship releases the pent up feelings and emotions of the heart, in the 79th chapter 'Friendship' (Natpu).

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு *(குறள் 788)*

"As hands that comes to the rescue when one's garment slips, friendship unburdens one's sorrows and feelings|". *(Narayanaswamy 199)*

Bacon repeats the same thought in his 'Of Friendship'. A principal fruit of friendship is the case and discharge of the fullness and swelling of the heart, which passions of all kinds do ease and induce.

This paper certainly functions as the damaru (drum) held in the upper right hand of Lord Siva. The function of this paper is to manifest that Kural has a universal appeal and contains everything.

REFERENCES

1. **Tirukkural** (An Ancient Tamil Classic), Sreenivasan, Kasthuri. Mumbai : Bhratiya Vidya bhavan, 1969, p. 44.
2. Ibid. p. 83.
3. *திருக்குறள், நாராயணசாமி, ஜெ, கோயம்புத்தூர், 1998, ப. 106.*
4. Ibid p. 199.
5. Kamban's Treatment of Tirukkural, Sankaran, Srimathi Kamala, Chennai, Pooram publications, 1978.
6. Bacon's Essays, Lahiri. J and A.L. Ganguli. Agra: Lekshmi Narain Agarwal Educational Publishers.

THIRUVALLUVAR AND FRANCIS BACON - A COMPARATIVE STUDY

P. Nagaraj
M. Selvaraj

This paper focuses the ideals of Tiruvalluvar and Francis Bacon related to education and in particular about learning. A comparative study of the universal poet Tiruvalluvar and the father of English Essays Francis Bacon were taken as the theme by the authors. The similarities of their writings found in the Tirukural (Chapter 40 Education) and in Bacon's essay "Of Studies" are analyzed by the authors.

Tiruvalluvar's mind is so extraordinary that we should feel grateful and thrilled to see human life through his eyes. He contemplates the grand spectacle of the phenomenon of man in its earthly and cosmic contexts and ses in in all its totality in the clear day light of unclouded faith.



Francis Bacon was a contemporary of Shakespeare. He speaks of his essays as 'certain brief notes set down rather significantly curiously; of a kind where of men shall find much in experience and little in books'. The essays cover a wide field of topics and convey profound and condensed thought. It is upon the Essays that Bacon's appeal to the common reader of today is based. They are compendiums of practical, worldly

wisdom. Though many of them are steeped in the spirit of the age, yet a few of them transcend the limitations of time and place and are of interest to every man, at any time and any place.

The first thing laid down in Kural dealing with learning is the duty of relating one's conduct to one's knowledge. The Tamil classics lay very great emphasis on learning. It is often considered as important as the moral virtues.

Valluvar like Karl Marx, Nietzehe and Jean Paul Sartre was an existentialist, because like them, he held that the only knowledge worth learning is knowledge that bears directly upon the human experience. According to Valluvar, the entire purpose of learning is to make us live better. Any learning unconnected with an irrelevant to living was discarded by him as useless.

Francis Bacon, "the father of the English essay" 's appeal to the common reader of today is based on his practical, worldly wisdom and transcends the limitations of time and place and are of interest to every man, at any time, at any place. Like Marlowe's Dr. Faustus he thirsted for knowledge infinite. "I have, 'wrote Bacon once' taken all knowledge to be my province".

Bacon, who in words reminiscent of Socrates, asserted "without philosophy I care not to live"- what Americans may term as "Operator", who cares more for ends than means. He was in the words of Long, "one of those complex and contradictory natures which are the despair of the biographer".

Tiruvalluvar says about "Learning" in Kural No. 391 as

Lore worth learning, learn flawlessly
Live by that learning thoroughly

Learning is imperishable and flawless wealth; other kinds of wealth, as gold and property, are not so real. A scholar is a mine of wisdom; for him there is not a land which is not his own; there is not a town which is not his own; wherefore should men abandon learning unto the end of life? He alone acquired learning who, in humility, stands like a begger at a rich man's door, and learns at the feet of his master. Let your learning be perfect; and the test of your learning is that you follow it in your daily life. the more you learn, freer does flow the pure stream of wisdom.

Bacon in his "Of Studies" stresses "Some books are to be tasted, others to be swallowed and some few to be chewed and digested". That is, some books are to be read only in parts, others to be read wholly and with diligence and attention. Learning serves for delight, for Ornament, and for Ability; for Ornament, as in discourse; and for Ability, in the judgement and disposition of business.

Some books also may be read by deputy, and extracts made of them by others. But that would be only in the less important arguments. He also says "Reading maketh a full man; conference a ready man; and writing an exact man". He also elaborates his statement further, pleasure they give one when one is spending leisure hours in seclusion. they are indeed a potential source of entertainment in privacy. Material for ornament they give for embellishing our conversation. The language of a well-read man has a peculiarly learned flavor, which distinguishes it from the language of the vulgar ability provide to man in tackling practical affairs of life. Studies improve a man's judgement and eifficiency in planning and executing practical matters and thus make him a more successful man of the world.

Thiruvulluvar says education opens the eyes of man

The learned alone have eyes on face
The ignorant to scars of disgrace *(Kural 391)*

We must note that Bacon was a utilitarian to the core. For him a thing is good if it is useful irrespective of the fact whether or not it has some intrinsic merits of its own. Even while he is discussing studies he has an eye on the use to which they can be put. He is no armchair philosopher. He likes that knowledge, which leads to action and action which leads to profit.

How does a learned man become more efficient in planning and executing practical affairs? To make the point clear Bacon compares an experienced man. "In Business" but without learning, with a well-read man; the former has edge over the later in dealing with individual matters. He will show such power of judgement and ability of execution when he comes across such individual success issues, mainly on account of his of his long experience.

Both universal matters picture the love and mastery over various branches of "Learning" by treating the same subject with different treatment and outlook. Thus they both pertain to study for time more ages to come.

BIBLIOGRAPHY

1. Thirukkural with English couplets Yogi Suddhananda Bharati (1897).
2. World Teachers on education, T.S. Avinashilingam, K. Swaminathan (1958).
3. Thiruvalluvar, S. Maharajan (1979).
4. Kural. C. Rajagopalachari (1965).
5. English Essayists, Susanta K. Sinha (1987).
6. Education-Swami Vevekananda, T.S. Avinashilingam (1943).

திருக்குறளும் பிறமொழி இலக்கிய ஒப்பீடுகளும்

ந. தேவி

சமூகக் கட்டமைப்பிற்குத் தனிமனித ஒழுக்கமே அடித்தளமாக அமைகின்றது. இதுவே அறம் என்றும் போற்றப்படுகின்றது. வள்ளுவர், தம் உலகப் பொதுமறையில், அறம் குறித்த சிந்தனைகளை எடுத்து உரைக்கின்றார். இவ் அறம் உலக உயிர்கள் அனைத்திற்கும் பொதுவானது. உலகில், பல இலக்கியவாதிகளும் அறம் குறித்த சிந்தனைகளைத் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். அக்கருத்துகள் திருக்குறளின் சிந்தனையொடு ஒத்துச் செல்கின்றன. இவ் ஆய்வுக் கட்டுரை கிரேக்க இலக்கியச் சிந்தனையார் அரிஸ்டாடில், சாக்ரடீஸ், சீனப் பேரறிஞர் கன்பூசியஸ், லாவோட்ஸீ, இலத்தீன் பேரறிஞர் வர்ஜில் ஆகியோரின் சிந்தனைகள் ஒத்திருப்பதை எடுத்துரைப்பதை நோக்கமாய்க் கொண்டுள்ளது.



மனித இனம் தோன்றி வளர்ந்து பல சமூகக் குழுக்களாக வாழ்கின்றபோது, அவன் படைத்த நிறுவனங்கள், அமைப்புகள் இவற்றில் காலந்தோறும் பலவிதமான முரண்பாடுகள்-வேறுபாடுகள் தோன்றுவது

இயல்பே. இவற்றைக் களைந்து, நல்லொழுக்கத்தைப் பெற்று, மனித சமுதாயம் உயர்வு பெற, ஒவ்வொரு காலகட்டத்தில் உயர்ந்த இலக்கியச் செல்வங்கள் அறிஞர் பெருமக்களால் இயற்றப்பட்டு உள்ளன. ஏனெனில் 'எவ்வழி ஆடவர் நல்லவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' (புறம்) என்பது தமிழறிஞரின் கோட்பாடு. எனவே சமூக உயர்வுக்குத் தனிமனித ஒழுக்கம் இன்றி யமையாத ஒன்று. இத்தகைய தனிமனித ஒழுக்கத்தை வலியுறுத்திக் கூறும் பல இலக்கியங்களை இலக்கியப் பாதையில் பயணம் செய்கின்றபோது உணரமுடிகின்றது. இவ் இலக்கியங்களுள் முதன் நூலாய், தமிழ்ப் பண்பாட்டை, நாகரிகத்தை உலகிற்கு எடுத்துரைக்கும் புதுநூலாய், அனைத்துலக மக்களும் போற்றிப் பாராட்டும் பெருநூலாய்த் திருக்குறள் திகழ்கிறது.

உலக மொழிகளுள், திருக்குறள் இதுவரை 35 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு 122 மொழி-பெயர்ப்புகள் வெளி வந்துள்ளன. ஏனெனில், திருக்குறள் மனித இயல்புகளின் அடிப்படைப் பண்புகளைத் தெளிவுபடுத்துகிறது. நாட்டையும், மொழியையும், காலத்தையும், இடத்தையும் கடந்து எக்காலத்திய மக்களுக்கும், எந்நாட்டு மக்களுக்கும், எம்மொழி பேசும் மக்களுக்கும், எந்நிலையில் வாழும் மக்களுக்கும் பயன்படத்தக்க அரிய உண்மைகளை நயமாக எடுத்துரைக்கும் திறன் திருக்குறளின் தனிச்சிறப்பாகும்.

'இப்பாலுள் இல்லாத எப்பொருளும் இல்லை' என்று போற்றப்படும் திருக்குறளில் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் செறிந்திருந்தாலும் பொருள், இன்பம் இரண்டிலும் கூட அறம் என்னும் நூலிழை பின்னிப் பிணைந்திருப்பதை இந்நூலில் காணமுடிகின்றது. அறம் என்பதற்குக் கடமை, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், புண்ணியம், அறநூல், அறக் கடவுள் எனப் பல பொருள்களைத் தமிழ்-அகராதி தருகிறது. க.த.திருநாவுக்கரசு, ஒரு மனிதன் ஒரு சமூகத்தைச் சேர்ந்து வாழ் வதற்கும் அல்லது தனியே நின்று தனி மனிதனாக இயங்குவதற்கும், அத்தகைய மனிதனுடைய பண்பு நலனை உருவாக்கி வைக்கும் குறிக்கோள்களுக்கும், நோக்கங்களுக்கும், செல்வாக்குகளுக்கும், நிலையங்களுக்கும் அறம் என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது..... நேர்மையான வாழ்க்கை வாழ்வதற்குரிய சட்டமாக அறம் விளங்குகிறது என்று குறிப்பிடுகின்றார். இத்தகைய அறமே மானிட சமூகக் கட்டமைப்பிற்கு ஒன்றாக, வள்ளுவரின் குரலாய்த் திருக்குறளில் ஒலித்துக் கொண்டிருப்பதை உணர முடிகின்றது.

அறம் என்னும் பொதுமைக் கோட்பாடு தனிப்பட்ட இனத்துக்குரிய கோட்பாடு மட்டுமல்ல. உலகம் அனைத்திற்கும்

பொதுவான ஒன்று. சான்றோர், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் பொது உணர்வு உடையவராதலால் கிரேக்க அறிஞர்களாகிய ஹெஸியட், சாக்ரடீஸ், அரிஸ்டாட்டில், இலத்தீன் அறிஞர்களாகிய வர்ஜில், சீன அறிஞர்களாகிய கன்பூசியஸ், லாவோட்ஸ் ஆகியோரின் இலக்கியங்களிலும், திருக்குறளின் குரலொலியைக் காணமுடிகின்றது. கிரேக்கம், இலத்தீன், சீனம் ஆகிய நாடுகளில் காணப்பெறும் பண்பாடும் நாகரிகமும் மாறுபட்டாலும், 'அறம்' என்னும் நிலையில் 'பொதுமைக்குரல்' ஒலிப்பதை உணரலாம்.

தனிமனித அறக்கோட்பாடு : அறிவு

ஒரு செல் உயிரி முதல் பல செல் உயிரி வரை அனைத்து உயிரையுமே அறிவுடையதாய்த் தான் இறைவன் படைத்துள்ளான். இவ் உயிர்களில் மனிதன் ஆறறிவு படைத்தவனாகத் திகழ்கின்றான். அறிவாற்றல் படைத்த மனிதன் அவ் அறிவைப் பயன்படுத்தாது மனம் போன போக்கில் ஈடுபடுகின்றான். எனவே, வள்ளுவர் மனம் போன வழி போகாது அறிவு நெறிப்படி செயல்பட மனிதனுக்கு அறிவுறுத்துகின்றார். அறிவு என்பது என்ன? அது எவ்வகையில் செயல்பட வேண்டும் என்பதனை,

> **சென்ற இடத்தாற் செலவிடாது தீதொரீஇ**
> **நன்றின்பால் உய்ப்பது அறிவு** (குறள்.422)

என்று மொழிகின்றார். அறிவு என்பது, மனம் போகின்ற போக்கில் மனத்தை அலையவிடாது, நல்ல செயல்களில் ஈடுபடுத்துவது என்று குறிப்பிட்டுத் தனி மனித ஒழுக்கத்திற்கு அறிவு அடித்தளமாக அமையும் பான்மையினைத் தெளிவுறுத்து கிறார். கிரேக்க தத்துவ மேதை சாக்ரடீஸ் நல்லொழுக்கமே அறிவு (Virtue is knowledge) என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒழுக்கம்

அறிவார்ந்த, பண்பார்ந்த சமூகத்தை உருவாக்கும் மனிதன் ஒழுக்கத்தோடு அற வாழ்க்கையை மேற்கொள்பவனாக இருத்தல் வேண்டும். அதற்கு அம்மனிதன் தன் மனத்தில் குற்றமின்றி இருத்தலோடு, மனத்திலிருந்து அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்ற நான்கு எதிர்மறைப் பண்புகளையும் நீக்கிவிட வேண்டும். இதுவே அறம் (குறள்கள் 34, 35) என்று உணர்த்துகிறார். இக்கருத்தினையே சாக்ரடீஸ் தம் நூலில், தன்னுடைய குறைகளை உணர்ந்து அவற்றை நீக்கி வாழ முயலுவதே அறநெறிப்பட்ட வாழ்க்கை என்று நவில்கின்றார்.

அன்பு

மேற்கூறப்பட்ட தீய பண்புகளை நீக்கி, மனிதநேயம் மிக்க சமூகக் கட்டமைப்பு உருவாக வேண்டுமானால், மனித மனத்தின் சூழ்நிலையில் அன்பு என்னும் நீரூற்று எப்போதும் சுரந்து கொண்டே இருக்க வேண்டும். இவ் அன்பே மனிதர்களைப் பிணைக்கும் சங்கிலியாய்க் காட்சி தருகின்றது. மனிதனோடு மனிதனை மட்டுமல்ல, இறைவனைப் பிணைக்கவும் கூட அன்பே காரணமாய்ச் செயற்படுகின்றது. அதனாலேயே இறைவனை அன்பே சிவம் என்றும், அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலையாகவும் நமது சான்றோர்கள் உருவகித்தனர். இத்தகைய அன்பு உயிராய்த் தொழிற்படுவதை வள்ளுவர்,

> **அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
> **என்புதோல் போர்த்த உடம்பு** *(குறள் 80)*

என்றும்

> **அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
> **நண்புஎன்னும் நாடாச் சிறப்பு** *(குறள் 74)*

என்றும் குறிப்பிடுகின்றார். உலகில் அன்பே மக்களை ஆளுகிறது என்று இலத்தீன் பேரறிஞராகிய வர்ஜிலும் மனிதர்கள் அனைவரிடத்திலும் அன்பு செலுத்துவதே அறச்செயல் விருப்பமாகும் என்று சீனப் பேரறிஞர்கள் கன்பூசியஸும் வள்ளுவர் வாய்மொழியை வழிமொழிகின்றனர்.

கைவிட வேண்டிய அறமற்ற பண்புகள்

அன்பென்னும் நீரூற்று வற்றாத ஜீவநதியாய்ப் பெருக வேண்டுமானால் தனி மனிதன் தன் மனத்திலிருந்து ஒழுக்கக் கேடான, சமூகக் கட்டமைப்பிற்கு ஊறுவிளைவிக்கக் கூடிய அறச்செயலுக்கு ஒவ்வாத பண்பு நலன்களைக் கைவிட வேண்டும். அப்போதுதான் ‘புதியதோர் உலகம் செய்வோம்’ என்ற நம்முடைய குறிக்கோளை அடைய முடியும். சமூகத்தின் உயர்நிலைக்குச் செல்ல விரும்பும் எந்தவொரு மனிதனும் கைவிட வேண்டிய பண்புகளுள் முதன்மையானது கோபம். இரண்டாவது, அறியாமல் மெதுவாக ஊர்ந்து மனத்தை முழுமையாக ஆட்கொள்ளும் பொறாமை. இவ்விரண்டு பண்புகளையும் வள்ளுவர்,

> **தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்**
> **தன்னையே கொல்லும் சினம்** *(குறள்.305)*

என்றும்

அழுக்காறு எனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும் *(குறள் 168)*

என்றும் எடுத்துரைக்கின்றார்.

லாவோ-ட்ஸீ (lao-Tzu) என்னும் சீனப்பேரறிஞர் இன்னும் ஒரு படி மேலே சென்று, பொறாமை என்னும் தீய பண்பே சீற்றத்தை உருவாக்குகிறது என்று எடுத்தோதுகின்றார். மேற்கூறப்பட்ட பொறாமை, கோபம் இவற்றை அடக்கி ஆள்வதால் மட்டும் மனிதன் உயர்ந்து விட இயலாது. அவனிடத்தில் அடக்கம் என்னும் உயர்ந்த பண்பு மிகுந்து இருக்க வேண்டும். அடக்கம் அமரருள் உய்க்கும் என்று நுவன்ற வள்ளுவர், அடக்கத்திற்கு நேர் எதிரியாக அமைந்து விடும் நாவைப் பற்றி எடுத்துரைத்து அடக்கத்துள் நாவடக்கமே பெரிது என்றும், அதை அடக்க இயலாதவன் சமூகத்தால் ஒதுக்கப் படுவான்; அறுவெறுக்கப்படுவான் என்ற தம் கருத்தை,

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு *(குறள் 127)*

என்ற குறள் மூலம் ஒலிக்கச் செய்கிறார். இக்கருத்தினையே, ஒருவன் தன் நாவினை அடக்கியாளுதலால் உண்டாகும் நன்மையைப் போன்று வேறொரு நன்மையும் இல்லை (719-720) என்று கிரேக்கப் பேரறிஞர் ஹெஸியட்டும் நாவடக்கம் இல்லாமையால் உண்டாகும் நன்மை யாது? அதனால் அவர்கள் அடைவது வெறுப்பும் மனச்சோர்வும் அல்லாமல் வேறு ஒன்றும் இல்லையென இன்னும் விளக்கமாகப் பேரறிஞர் கன்பூசியஸும் தங்கள் நூல்களில் வள்ளுவன் பொதுமறையை அப்படியே எடுத்தாண்டு தனிமனிதப் பண்பிற்குரிய பொதுமையை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

கைக்கொள்ள வேண்டிய பண்புகள்

கோபம், பொறாமை, நாவடக்கமின்மை போன்ற பண்புகள் கைவிடத்தக்கன என அறிவுறுத்தும் இப்பெரியோர்கள் கைக்கொள்ள வேண்டிய உயர்ந்த பண்புகளைக் குறித்த நிலையில் ஒன்றுபட்ட மனத்தினராய் மதம், இனம், மொழி, நாடு கடந்த பான்மையினராய்த் தங்களது கருத்துகளை முன் வைத்துள்ளனர். சமூக மேம்பாட்டிற்கு வழிகோலும் தனிமனிதன் முதலில் சொல்லிய வண்ணம் செய்யும் வல்லமை பெற்றவனாய்த் திகழ வேண்டும் என்பதனை வள்ளுவர்,

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல் *(குறள் 664)*

என்னும் குறளின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். அதுமட்டு மல்லாது, சொல்லிய வண்ணம் செயலாற்றும் செயல்திறன் மிக்க சான்றோனுக்கு அணிகலன்களாக, வாழ்க்கை என்னும் மாளிகை வீழாது காத்து நிற்கும் தூண்களாக ஒருசில பண்புகளை எடுத்துக் கூறி அதுவழி நடக்கும்படி அறிவுறுத்துகின்றார். இக்கருத்துகளை,

> **சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்**
> **கோடாமை சான்றோர்க்கு அணி** *(குறள்.118)*

என்பதன் மூலமும்

> **அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு**
> **ஐந்துசால்பு ஊன்றிய தூண்** *(குறள். 983)*

என்பதன் மூலமும் உணர்த்துகின்றார். இக்கருத்துகளை அப்படியே எதிரொலிப்பவர்களாக இலத்தீன் பேரரறிஞர் வர்ஜில், சீனப் பேரரறிஞர் கன்பூசியஸ் மற்றும் லாவோ-ட்ஸீவும் திகழ்கின்றனர்.

வேற்றுமை

பல நிலையில் ஒன்று பட்டுத் திகழும் இவ் அறிஞர்கள் பண்பாட்டின் காரணமாய் நாட்டின் அரசியல் சூழல் காரணமாய் வேறுபட்ட சிந்தனையாளர்களாகத் திகழ்வதையும் உணர முடிகின்றது.

சாக்ரடிசு

பயன்பாடு கோட்பாட்டாளராகத் திகழும் கிரேக்க அறிஞர் சாக்ரடீஸ் எப்பொருளையும் அதன் பயன்பாட்டைக் கொண்டுதான் நல்லதா? தீயதா? என முடிவு செய்ய வேண்டும் என்கிறார். இக்கருத்தினையே வள்ளுவரின் வாய்மொழியாக,

> **நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த**
> **தன்மையால் ஆளப்படும்.** *(குறள் 511)*

என்ற குறளின் மூலம், பயன்பாட்டைக் கொண்டுதான் செயல் படும் என்று தெளிவுறுத்துகின்றார். ஆனால் சாக்ரடிசின் நன்மை தரும் பொருள் அழகாக இருக்கும் என்னும் கோட்பாட்டில் மட்டும் கருத்து வேறுபாடுடையவராய்த் திகழ்கிறார்.

அரிஸ்டாட்டில்

அரிஸ்டாட்டில், தன்னையே கொல்லும் சினம், சினம் காக்க வேண்டிய ஒன்று என்ற வள்ளுவரின் கோட்பாட்டிலிருந்து சிறிது விலகி, சரியான பொருளிடத்தும் பொருத்தமான

மனிதர்களிடத்தும் சரியான முறையில், சரியான சமயத்தில் பொருத்தமான கால அளவிற்கு ஒரு மனிதன் சினம் கொண்டால் அதனால் புகழே உண்டாகும் என்றும் அறிவுறுத்துகிறார்.

கன்பூசியஸ்

திருவள்ளுவர் மானிட இனத்தை வாழ்வளிக்கும் பண்புகளுள் ஒன்றாக மன்னிப்பையும் அன்பையும் குறிப்பிட்டு, எவனொருவன் தீங்கு செய்தாலும் அவனுக்கு மீண்டும் தீங்கு செய்யாது நன்மை புரிதலே உயர்ந்த வாழ்வியல் தத்துவம் என்று சமூகத்திற்கு,

> **இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
> **நன்னயம் செய்து விடல்** *(குறள் 314)*

என்ற குறளின் மூலம் வழிகாட்டுகின்றார். ஆனால் கன்பூசியஸோ தீமையை நேர்மையால் தான் வெல்ல வேண்டுமே ஒழிய அன்பு காட்டுவதன் மூலம் அதைப் போக்கி விடலாம் என்று கருதுவது தவறு என்று மாறுபட்ட கருத்துடையவராய்த் திகழ்கின்றார்.

இவ் ஆய்வின் மூலம் கீழ்வரும் உண்மைகள் உணர்த்தப் படுகின்றன.

1. காலதேச வர்த்தமானங்களால் வேறுபட்டிருந்தாலும் மெல்லிய நூலிழையாய், ஒருமித்த சிந்தனைகள் ஊடுருவி நிற்பதைக் காணமுடிகின்றது.
2. ஒழுக்கமே தலைசிறந்த பண்பாகவும் அறநெறிப்பட்ட வாழ்வியல் சிந்தனை வாழ்வை உயர்த்தும் என்ற கோட்பாடும் உலகின் பலவிடங்களிலும் பரவி நிற்பதை உணர முடிகின்ற.

துணைநூல்கள்

1. அனவரத விநாயகம் பிள்ளை, எஸ்., **கழகத் தமிழ்க்கை யகராதி**, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், (1940), 1987.
2. சிவ சூரியன், அ., **திருக்குறள் உரை வரலாறு**, சென்னை, மணிவாசகர் பதிப்பகம், 2001.
3. திருநாவுக்கரசு, க.த., **சான்றோர் கண்ட திருவள்ளுவர்**, சென்னை, மணியகம், 1979.
4. நாமக்கல் கவிஞர், **திருக்குறள் மூலமும் தெளிவுரையும்**, சென்னை, வர்த்தமானன் பதிப்பகம், 1998.

***

WALKING WITH KINGS, NOR LOSING THE COMMON TOUCH: KIPLING, BADEN-POWELL AND THE LEGACY OF THIRUVALLUVAR

Gregory James

In December, 1895, Leander Jameson led a group of troops and police into the Boer republic of the Transvaal, to take over Johannesburg - ostensibly to protect the politically disadvantaged British gold-rush immigrants ('Uitlanders'): "unarmed men, women and children... at the mercy of well armed Boers"[2], but in reality to add the mineral-rich region to the British Empire. A simultaneous Uitlander rising had been promised, but when Jameson learnt that it had not occurred, he realised he was trapped.

> **Jameson and his officers well knew what England expected of them. This was the moment they had trained for ever since boyhood. It was the picture of the Last Stand above the fire-place in the schoolroom and the mess and the rectory. The Gatling has jammed[3]; the colonel, eyes uplifted, grasps his sword; the little band sings 'God save the Queen'; and, one by one, they fall.** *(The Boer War, 1979: 4) [6]*



Jameson surrendered, and was convicted for "unlawfully prepar(ing) and fit(ting) out a military

expedition... (against) the South African republic".[4] Although the Raid[5] was doomed to failure [13], Jameson was celebrated for his daring and courage, his integrity and chivalry, virtues which inspired Kipling to pen the poem, *If* - [1], echoing the precepts of Polonius to his son Laertes in Shakespeare's *Hamlet*.[6]

The what are perceived as elitist institutionalised values that underpinned Newbolt's and Kipling's principles of conduct are not popular now. Nurtured in the rarefied atmosphere of the all-male public school, many of the turn-of-the-century leaders of British society shared an upbringing which placed a high value on jingoistic heroism and patriotism., The experiences of the young officers in the Egyptian and South African campaigns did not prepare them for the trenches of Flanders, Cf. Lt Graham Greenwell in 1916[7]:

> **I wandered on around these awful remains of trenches, simply sickened by the sights and smells... I shall never look on warfare either as fine or sporting again.**

Thousands of young soldiers were sent to slaughter by purblind generals, such as Douglas Haig - "unequal to the prodigious scale of events" [15] - who, even in 1926, was to write that he saw aircraft and tanks as mere accessories to the horse.[8] For such officers, the army was a locus of cultivation, an apprenticeship for life. Typical is the outlook of Lord St. Vincent, who said in 1883 [16]:

> **[t]he army was a better school for him... than ever his native village was likely to be, for while drill tended to develop his body, military education expanded his mind, and taught him to act and to think for himself.... [T]he strength of the army did not lie so much in its actual numbers as it did in the civilising and educational influences which were brought to bear upon each one of its members.[9]**

Scouting was born in such a context. B-P recounts the formation of a cadet force during the 217-day siege of Mafeking in 1899-1900,

> **And a jolly smart and useful lot they were. Previously, we had used a large number of men for carrying orders and messages, keeping lookout and acting as orderlies, and so on. These duties were now handed over to the boy cadets... These boys... were always ready to carry out orders, though it meant risking their lives...10**
>
> *(Camp Fire yam 1) [2]*

Before the Great War, B-P had conceived of the concept of 'peace scouting'. In his introduction to Scoutcraft, in *Scouting for Boys* [2], he wrote:

> A scout in the army... is generally a soldier who is chosen for his cleverness and pluck to go out in front to find out where the enemy is... [But] there are also peace scouts - men who in peace time carry out work which requires the same kind of pluck and resourcefulness... [Y]ou need not have a war in order to be useful as a Scout. As a peace scout there is lots for you to do.... wherever you may be.

B-P was greatly affected by the war, not only because he lost friends, but also because one country's Scouts were killing those of another. He had always conceived of the Scout 'brotherhood', of Scouts as patriots as well as world citizens; cf. Camp fire yarn 2 [2]:

> Don't be content... to pay other people ... to fight your battles for you. Do something yourself to help keep the Flag flying. If you take up Scouting in that spirit, you will be doing something... [B]y doing so you will be preparing yourself to be a good citizen not only of your country but of the whole world. Then you will have in you the truest spirit of patriotism, which every boy ought to have...

It is in this tenor that he compares the honour of Scouts to the chivalric code (ibid.)[11]:

> In the old days the Knights were the real Scouts and their rules were very much like the Scout Law which we have now... Just like Saint George[12]... the Boy Scouts of today fight against everything evil and unclean... [Knights]... every day they had to do a Good Turn to somebody, and that is one of our rules.

This was formalised into a precept (ibid). "As a Scout, you are obligued to do at least one Good turn every day." A similar aspiration was formulated by Thiruvalluvar.

> வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
> வாழ்நாள் வழியடைக்குங் கல்.

> Allowing not a day to pas without doing some good
> Is a boulder that will block your passage on the path to rebirth[13] *(Kural 38)*

The Victorian public-school tradition had a strong classical element, with study of Latin, and often also Greek, throughout the curriculum. The attention to Classics meant also the inculcation of the principles and values of the ancients - e.g. Seneca (1st cent. AD) [30]:

> Wherever there is a human being, there is an opportunity to do a kindness.

The "milk of human kindness"[14] transcends time and culture.

Kipling's *If*-

- ***If you can keep your head when all about you.***
  Are losing theirs and blaming it on you...

In these first lines, Kipling focusus on self-control: a crisis calls for calm, and sobriety of judgement. B-P gives similar advice (Camp fire yarn 24 [2]):

> **When there is a panic among those around you... [d]on't catch the panic, as you see other do - keep you head and think what is the right thing to do, and do it at once.**

No less an ambition was defined by Thiruvalluvar many centuries before:

> காக்க பொருளா ஆடக்கத்தை ஆக்கம்
> அதனினூஉங் கில்லை உயிர்க்கு
>
> **Guard your self-control as a precious treasure,**
> **For there is no greater wealth in life than this** *(Kural 122)*
>
> இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
> புணரின் வெகுளாமை நன்று
>
> **Even when others inflict wrongs as painful as the touch of blazing Torches, it is good if a man can refrain from anger** *(Kural 308)*

- ***If you can trust yourself when all men doubt you,***
  But make allowance for their doubting too...

This sentiment of confidence with becoming magnanimity is expressed in *Thirukkural:*

> அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
> இகழ்வார்ப் பொறுத்தல் தலை
>
> **Just as the Earth bears those who dig into her,**
> **It is best to bear with those who despise us.** *(Kural 151)*

- ***If you can wait and not be tired by waiting...***

Similarly,

> நிறையுடமை தீங்காமை வேண்டின் பொறையுடைமை
> போற்றி ஒழுகப் படும்
>
> **Desiring that his greatness should never cease,**
> **Let a man's conduct foster forbearance.** *(Kural 154)*

- ***Or being lied about, don't deal in lies...***

B-P's advise also finds expression in *Thirukkural:*

> பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை

எல்லா அறமும் தரும்

No prestige surpasses the absence of falsehood;
All other virtues flow from it effortlessly. *(Kural 296)*

- ***Or being hated, don't give way to hating***

Thiruvalluvar also condemns hatred and enmity even in the face of hatred and enmity:

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று

Though unjustly aggrieved, it is best to suffer the suffering
And refrain from unrighteous retaliation *(Kural 157)*

எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது அடிஉறைந் தற்று

One can escape from hate-filled enemies,
But one's own hateful acts will relentlessly pursue and destroy him *(Kural 157)*

கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள்

It is the principle of the pure in heart never to injure others,
Even when they themselves have been hatefully injured
(Kural 207)

இன்னாசெய் தாரை ஒறுத்தல்
அவர்நாண நன்னயம் செய்துவிடல்

If you return kindness for injuries received and forget both,
Those who harmed you will be punished by their own shame
(Kural 314)

- ***And yet don't look too good, not talk too wise***

Although they were generally superior to other people in fighting or campaigning, they never allowed themselves to swagger about it. So don't swagger.

Modesty and humility are prized virtues of self-control of the worldly:

எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு

It is wisdom to live in the world
As the world lives *(Kural 426)*

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை

Never indulge in admiring yourself.
Never desire deeds that do not benefit others *(Kural 439)*

- ***If you can meet with Triumph and Disaster***
  And treat those two impostors just the same

In a trope reminiscent of Bunyan's *Pilgrim's progress* [31], Kipling personifies Triumph and Disaster both as false characters; likewise, Thiruvalluvar advises men not to be deceived either by கேடு or பெருக்கம் by.

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

Adversity and prosperity never cease to exist. The adornment
Of great men's minds is to remain unswervingly just under both
(Kural 115)

- ***If you can make one heap of all your winnings***
  And risk it on one turn of pitch-and-toss,
  And lose, and start again at your beginnings
  And never breathe a word about your loss;

Thiruvalluvar offers a series of maxims on the evils of gaming (சூது), e.g.

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்று இல்

Gambling brings on many woes and erodes a man's good name.
There is nothing which ends in more wretched poverty *(Kural 934)*

Such a sentiment is equally echoed by B-P, who highlights the gambler's fallacy:

> **No body who makes bets ever wins in the end... yet there are thousands of fools who go on putting their money on, because they won a bit once or hope to win some day.**
>
> (camp fire yarn 22) [2]

Kipling's lines would appear to offer an alternative value: that playing games of chance is acceptable conduct. However, he is merely illustrating here that risk assessment is a combination of subjectivity and objectivity, and taking even judicious risks can be an unforgiving activity.[15] The game represents a sudden reversal of fortune, exemplifying the adversities and setbacks to be expected in life, which one can build upon to go forward.

- ***If you can force your heart and nerve and sinew***

To serve your turn long after they are gone,
And so hold on when there is nothing in you
Except the Will which says to them: "Hold on!"

B-P [32] calls this 'sticktoititus':

> **[I]t is a very common fault with men to give in to trouble or fear long before there is any necessity.... So when things look bad, just smile and sing to yourself, as the thrush sings: "Stick to it, stick to it, stick to it," and you will come through all right** (Camp fire yarn 21) [2]

In *Thirukkural,* a similar message of endurance ("pluck, patience, and strength"[16]) is brought home by an apposite analogy:

> சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
> பட்டுப்பா டூன்றும் களிறு
>
> **The elephant stands firm even wounded by a barrage of arrows. The strong-willed are not discouraged when they encounter disaster** *(Kural 597)*

- ***If you can talk with crowd and keep your virtue.***
  Or walk with Kings -nor lose the common touch

For all the criticism of Kipling's class consciousness, perhaps here we can see an element of his subversiveness. B-P's insistence on social broad-mindedness among Scouts, embodied in the Scout Law [2], was no less subversive in the colonial era:

> **A Scout is a friend to all, and a brother to every other Scout, no matter to what country, class or creed the other may belong.**

Perhaps there is a parallel in Thiruvalluvar's democratic ideal,

> கெடுவாக வையாது உலகம் நடுவாக
> நன்றிக்கண் தங்கியான் தாழ்வு
>
> **Though a man is profoundly impoverished,**
> **If he remains just, the world will not regard him as poor**
> *(Kural 117)*

- ***If neither foes nor loving friends can hurt you.***
  If all men count with you, but none too much

B-P's advice to Scouts is an extension of this principle of the recognition of everyone's personal dignity and worth:

> **[I]f you despise other boys because they belong to a poorer home than yourself you are a snob. If you hate otherboys**

because they happen to be born richer than you, you are a fool. *(Camp fire yarn 26) [2]*

This echoes a like sentiment we find enunciated several times in *Thirukkural:*

ஒருத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பணபே தலை

To grant forbearing kindness even to those
Who grieve us is the foremost of virtues *(Kural 579)*

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்

Those desiring gracious goodness above all else could accept with
Friendliness poison they watched their host prepare and serve *(Kural 580)*

தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்

Justice may be called good when it acts impartially Toward enemies, strangers and friends *(Kural 111)*

If you can fill the unforgiving minute
With sixty seconds' worth of distance run
Yours is the Earth and everything that's in it,
And - which is more - you'll be a Man, my son!

B-P translates this reflection, with a spoting analogy, into enthusiasm and assiduity:

Scouting is a fine game, if we put our backs into it and tackle it well, with real enthusiasm. As with other games, too, we will find that we gain strength of body, mind and spirit from the playing of it. *(Camp fire yarn 26) [2]*

[B]oys should be trained to manliness and not be allowed to drift into being poor-spirited wasters who can only look on at men's work. If every boy works hard at Scouting he will, at the end of it, have some claim to call himself a Scout and a man, and will find that he will have no difficulty in looking after himself. *(Camp fire yarn 5) [2]*

Thiruvalluvar takes a more homely outlook: that of a mother's delight at seeing her son become accepted as a mao in society:

ஈன்று பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

When a mother hears her son heralded a good and learned man,
Her joy exceeds that of his joyous birth. *(Kural 69)*

Renvoi

Kipling's verse was inspired by Jameson, and the raid - the grand gesture of the adventurer and risk-taker. Perhaps this, too, is illustrative of his subversiveness. But is social and military terms, prudent daring and calculation of chance are attributes of the active leader rather than the passive follower. B-P distilled these emotions through a practical pedagogy which has enthused and animated generations of youngsters throughout the twentieth century to our own times, But "there is nothing new under the sun. Is there anything of which one can say, "Look! This is something new"? It was here already, long ago; it was here before our time."[17] There is no evidence that either Kipling or B-P was aware of the teachings of *Thirukkural*, but the essence and character of successful human relationships, identified and recorded by Thiruvalluvar, are the very same as those which inspire members of the Scout movement all over the world today.

REFERENCES

1. *If-*. In *Rewards and fairies.* Rudyard Kipling, London: Macmillan, 1910.
2. Scouting for boys: A handbook for instruction in good citizenship. Robert Baden-Powell. London: C. Arthur Pearson, 1908.
3. *Vitai lampada.* Sir Henry Newbolt. In *Admirals all, and other verses* London: Elkin Mathews *(The Shilling Garland No. 8), 1897.*
4. *The poetry of Henry Newbolt: Patriotism is not enough.* Vanessa F. Jackson. Greensboro NC: ELT Press, University of North Carolina, 1994, pp. 65-88.
5. *Scouting games.* Robert Baden-Powell. London: C. Arthur Pearson, 1910.
6. *The Boer War.* Thomas Pakenham. London: Weidenfeld & Nicolson, 1979.
7. *The Jameson raid,* Hugh M. Hole. [London] P. Allan, 1930.
8. *The life of Jameson,* Ian D. Colvin. London: Arnold, 1922
9. *Dr. Jameson's raid. Its causes and consequences.* James King. London & New York: G. Routledge & Sons, 1896.
10. *The raid on the Transvaal by Dr. Jameson.* P.E. Aston. London: Dean & Son, 1897.
11. *The Jameson raid.* Jean Van Der Poel. Cape Town: Oxford University Press, 1951.
12. *Jameson's raid: The prelude to the Boer War.* Elizabeth, Countless of Longford. London: Panther, 1982.

13. *Following the equator: A journey around the world*. Mark Twain. New York: P.F. Collins, 1897, Ch. ixvi.

14. *British butchers and bunglers of World War One*. John Laffin. Cloucester; A Sutton, 1989.

15. *London to Ladysmith via Pretoria*. Winston Churchill. London: Longmans, 1900.

16. *Norton Disney, Obituary*. 1885. *www.ndstory.freeserve.co.uk/notice/obituary.html*.

17. *Baden-Powell: The two lives of a hero*. William Hillcourt, with Olave, Lady Baden-Powell. London: Heinemann, 1964.

18. *Young knights of the Empire, their code and further Scout yams*. Robert Baden-Powell. London: C. Arthur Pearson, 1916.

19. *The history of chivalry; or, Knighthood and its times*. Charles Mills. London: Longman, Rees, Orme, Brown & Green, 1826. London: Elliot Stock, 1890. [London : Kegan Paul International, 2003].

20. *The spirit and influence of chivalry*. John Batty. London: Elliot Stock, 1890. [London: Kegan Paul International, 2003.].

21. *The knight & chivalry*. Richard W. Barber. New York: Scribner, 1970.

22. *Knights and the age of chivalry.*, Raymond Rudorff. New York: Viking Press, 1974.

23. *Chivalry*. Maurice H. Keen. New Haven CT: Yale University PRess, 1984.

24. *The origins of courtlines: Civilizing trends and the formation of courtly ideals, 939-1210*. Stephen C. Jaeger. Philadelphia PA: University of Pennsylvania Press, 1985.

25. *Catholic encyclopedia*. 1909. Vol. VI. *St. George*, by Herbert Thurston. Online ed., 2003. *www.newadvent.org/cathen/06453a. htm*.

26. *The story of Saint George*. Anthony Cooney. Cheltenham: This England Books, 1999.

27. *St. George: Hero, martyr, and myth*. Samanatha Riches. Stroud: Sutton, 2000

28. *St. George: Patron saint of England*. Christopher Stace. London: Triangle, 2002.

29. *The Holy Kural*. Translation and commentary by Satguru Sivayu Subramuniyaswami. Kapaa HI: Himalayan Academy, 1995. *www.mountainman.com.au/kural/kural-cr.htm*.

30. *De vita beata* ['On the good life']. Lucius Annaus Seneca. [In John W. Basore (Tr.), *Moral essays*. Vol. 2. London: William Heinemann (Loeb Classical Library 214), 1928, essay 24].

31. *The pilgrim's progress from this world, to that which is to come; delivered under the similitude of a dream.* John Bunyan. London: Nath[aniel]. Ponder, 1678.

32. *Life's snags and how to meet them.* Robert Baden-Powell. London: C. Arthur Pearson, 1927.

Notes

1. B-P cites the poem in *Scouting games* [5] for recitation and dramatisation.
2. *The Boer War* (1979:2) [6]; cf. *The Jameson raid* (1930:222) [7].
3. *Vitai lampada,* stanza 2 [3].
4. *The life of Jameson* (1922:II:148) [8].
5. See *The life of Jameson* (1922:II:56-84) [8]; *The Boer War* (1979:1-5) [6]; also [7], [9], [10], [11], [12].
6. *Hamlet* i.3.62-84. Polonius' death, and Hamlet's desire to avenge his own father's murder, unleash a chain reactionwhich engulfs the prince's environment. In a parallel, Jameson was perceived as a scapegoat for politicians and big businessmen.
7. *British butchers and bunglers of World War One* (1989: 191) [14].
8. *British butchers and bunglers of World War One* (1989: 168) [14].
9. A Captain in the 16th Lancers, St. Vincent was killed at the Battle of Abu Klea in 1885.
10. See also *Baden-Powell* (1964: 178-9, 192-3) [17]; *The Boer War* (1979:403) [6].
11. See e.g. [18]; and [19], [20], [21], [22], [23], [24].
12. St. George is the Patron Saint of England and of the Boy Scouts. He was probably martyred in Palestine e. 3rd cent. AD. The details B-P gives of St. George's life in Camp fire yarn 20 [2] are not considered by scholars to be accurate. See e.g. [25], [26], [27], [28].
13. The translations cited are taken from *The Holy Kural* (1995) [29].
14. Shakespeare, *Macbeth,* i. 5.6.
15. In the *Oxford English Dictionary,* at *pitch-and-toss,* Kipling's quotation is given as a figurative usage.
16. Camp fire yarn 17 [2]
17. Ecclesiastes 1:9-10

திருவள்ளுவரும் பர்தருஹரியும்

சண்முக. செல்வகணபதி

உலக மக்கள் ஒவ்வொருவர்க்கும் இறைவன் ஓர் அழகிய சொல்லைத் தாரக மந்திரமாக ஓதி அனுப்பினான், இதனையே உலகிற்கு வழங்கும் நற்செய்தியாக எடுத்தியம்பும்படி உரைத்தார், எகிப்து மக்களுக்குச் 'சமயம் என்ற சொல்லையும் ஈரானியர்க்குத் 'தூய்மை' என்ற சொல்லையும் கிரேக்கர்களுக்கு 'அழகு' என்ற சொல்லையும் உரோமனியர்க்குச் 'சட்டம்' என்ற சொல்லையும் தந்தார். தம்முடைய குழந்தைகளுள் மூத்த குழந்தையாகிய இநதிய மக்களுக்குப் பிற நாட்டினர்க்குத் தந்த சொற்களின் பொருள்களை எல்லாம் ஒன்றாக இணைத்துத் 'தருமம்' என்ற சொல்லை வழங்கினார்[1] என்று அன்னி பெசன்ட் அம்மையார் குறிப்பிடுவர். இவர் குறிப்பிடுவதுபோல் தருமம்என்ற சொல் பல் பொருள் ஒரு சொல்லாக விளங்குகிறது. இச் சொல்லுக்கு இணையான சொல்லாகத் தமிழில் அறம் என்ற சொல் உள்ளது தருமம் என்ற சொல்லினும் ஆழ்ந்த, அகன்ற பொருளுடையது.



இந்திய மொழிகளின் தாயாக சமஸ்கிருதமும் தமிழும் உள்ளன. இவ்விரு மொழிகளிலும் ஏராளமான அற நூல்கள் உள்ளன. வடமொழியில் தரும சாத்திரங்கள், மூதுரைகள், பழமொழி நூல்கள் பல உள. இவை தத்துவ நூற்களாக விளங்குகின்றன. அற இலக்கியப்பண்பு நிறைந்த நூற்களாக கி.பி. ஏழாம் நூற்றாண்டளவில் வடமொழியில் பர்தருஹரியின் நீதிசதகம், வைராக்கியசதகம், சிருங்காரசதகம் என்ற மூன்று சதக நூற்கள் உள்ளன. ஐரோப்பாவின் முதன் முதல் சிறப்புநிலை பெற்ற வடமொழிப் புலவராக பர்தருஹரி திகழ்கிறார்.[2] இவரின் நூல்கள் கி.பி. 1651இல் டச்சு மொழியில் பெயர்க்கப்பட்டன. பர்தருஹரி என்ற பெயரில் கி.பி. 1200 இல் ஒரு புலவர் வாழ்ந்துள்ளார்.

பர்தருஹரியின் இம்மூன்று சதக நூற்களும் பல்வேறு காலங்களில் படைக்கப்பட்டவை என்ற ஒரு கருத்தும் உண்டு. இது தவறு என்று வடமொழி இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். நூலமைப்பாலும், கூறும் பொருளமைதியாலும், கூறும் முறையாலும் இதனை உறுதி செய்கின்றனர்.

தமிழ் மொழியில் அற நூல்கள் உள. தமிழர்களை 'அறவர்' என்றும் அழைப்பர். கால்டுவெல் குறிப்பிடுவதுபோலத் தமிழ் இலக்கியமே ஏனைய மொழி இலக்கியங்களைக் காட்டிலும் அற நூல்களும் அறத்துறைகளும் நிறைந்ததாகக் காணப்படுகின்றனவாதலின் அறம் மலிந்த கொள்கையர் என்பதால் அறவர் எனப்பட்டனர்.[3] தமிழில் உள்ள அறநூல்களில் தலைசிறந்த நூலாகத் திருக்குறள் போற்றப்படுகிறது. இதற்குத் திருவள்ளுவரின் ஆளுமையே காரணமாகும். திருவள்ளுவர் ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோராக மட்டும் விளங்கவில்லை. செம்பொருள் கண்ட செம்மலாக மட்டும் திகழவில்லை. சிறந்த அறிஞராகவும், கலைஞராகவும் காட்சி தருகிறார். இவருடைய ஆளுமையில் அறிஞர்க்குரிய மதிநுட்பமும், கலைஞர்க்குரிய கலையுணர்வும் சான்றோர்க்குரிய சான்றாண்மையும் ஒருங்கே வெளிப்படுகின்றன. இவ்வாளுமையின் படைப்பாகத் திருக்குறள் திகழ்கிறது.[4]

திருக்குறளும் சதகங்களும்

அறநெறிக் கருத்துகளைக் கூறுவதனைத் தனது முதன்மை நோக்கமாகத் திருக்குறள் கொண்டுள்ளது. அத்துடன் அக்கருத்துகளை எடுத்துரைக்கும் முறையில் ஓர் ஒருமைப்பாடும், ஒத்திசைவும், சுடரொளியும் கொண்டு திகழ்கிறது. வடநூல் ஆசிரியர்கள் கூறுவதுபோல நல்ல செய்திகளை எடுத்துக்கூறிக், கேட்போரைச் செயற்படுத்தும் நிலையில் ஒரு பொருளை

மறைநூல் கூறுவது தலைவன் தன் பணியாளனுக்கு இடும் கட்டளையைப் போன்றது. அதனையே அறநூல் ஓர் அன்பன் தன் நண்பனுக்கு அறிவுரை கூறுவதைப் போன்றதாகும். காப்பியம் அறக்கருத்துகளைக் கூறுவது அன்புறு காதலி தன் இன்புறு காதலனுக்குக் கொஞ்சு மொழியில் அன்பையும் இன்பத்தையும் குழைத்துத் தருவது போன்றதாகும் என்பர்.[5] இந்நிலையில் உள்ளம் கவர் நிலையில் இதமாக அறநெறிகளைக் கூறவும், தவறு கண்ட பொழுது கடிந்தும் உரைக்க வேண்டும் என்ற நிலையில் திருவள்ளுவர் ஒவ்வொரு அதிகாரத்தின் முதல் ஏழெட்டுக் குறட் பாக்களில் நயமாகவும் இதமாகவும் கருத்துரைப்பார். அக்கருத்து களைச் சிறிது கடுமை கலந்த குறளில் வற்புறுத்திக் கூறுவார்.

திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் போல் அமைப்புநிலையில் நீதிசதகம், வைராக்கிய சதகம், சிருங்கார சதகங்கள் உள்ளன. இச்சதகங்கள் ஒவ்வொன்றும் நூறு பாடல்களால் அமைந்துள்ளன. திருவள்ளுவர் அறத்துப்பாலில் இல்லறத்தில் வாழ்வின் மாட்சியுடைய வாழ்க்கைத் துணையைப் பெற்று, அன்புடையவனாகி, அறத்தின் வழி நின்று, கடுஞ்சொல் நீக்கி, எவர்மாட்டும் இன்சொல் கூறி, புறங் கூறலின்றி, பொய்யுரைபேசாது, மெய்ம்மையேபேசி, பயனில சொல்லாது, பிறர் செய்த நன்றியை மறவாது, பிறர் ஆக்கங்கொண்டு பொறாமை யடையாது, இன்னோரன்ன பண்புகளும் செயற்பாடுகளும் உடையவராய் விளங்குதல் வேண்டும் என்கிறார்.[6]

தனிமனித ஒழுகலாறுகளை அறத்துப்பாலில் எடுத்துரைக்கும் வள்ளுவர் சமுதாய நிலைகளைப் பொருட் பாலில் கூறுகிறார். பொருட்பாலின் தலைசிறந்த அரசியல் ஞானியாக விளங்குகிறார். நாட்டின் சிறப்பு வெறும் நிலவளத்தால் மட்டும் அமையாது இயற்கை வளமும், மனிதகுல வளமும் சேர்ந்து அமைதல் வேண்டும் என்கிறார்.

> **தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
> **செல்வரும் சேர்வது நாடு** *(குறள் 731)*

காமத்துப்பாலில் ஒப்பற்ற கவிஞராகக் காட்சியளிக்கிறார்.

பர்தருஹரியின் நீதி சதகம் பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. மூர்க்கரின் இயல்பு, பொருளின் மாட்சி, ஆக்கநெறி, ஊழின் ஆற்றல், நல்வினையினால் உண்டாகும் பயன் போன்றன கூறப்பட்டுள்ளன. மனிதனுக்கு மனவுறுதியைப் போன்ற சிறந்த அணி வேறு ஒன்றும் கிடையாது என்கிறார்.

சதகத்தில் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமைகளைக் கூறுகிறார். தமிழ் இலக்கியத்தில்

காணப்படும் காஞ்சித்திணைப் பாடல்களைப்போல் இவை உள்ளன. உலகில் சிறப்புற்று விளங்கும் பொருள்கள் எல்லாம் காலவெள்ளத்தால் அழிந்துபோகும் (வை. ச. 4) என்றும் மனிதன் நடிகனைப் போன்று திரைக்குப் பின்னால் மறைந்து போகிறான் (வை. ச. 51) என்றும் கூறுகிறார்.

சிருங்கார சதகத்தில் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்ற கொள்கையுடையவராய் விளங்குகிறார். இன்பத்தைத் துய்ப்பதற்கே மனிதன் பிறந்திருக்கின்றான். பெண்கள், ஆண்கள் உள்ளத்தைக் கவரும் கருவி (சிரு. 8) என்கிறார். இச்சதகத்தில் முதல் 60 பாடல்களில் மகளிர் மாட்சி பற்றியும், 61 - 80 வரையுள்ள பாடல்களில் பெண்களை நம்பாதே என்றும், 81 - 100 வரையிலான பாடல்களில் அறுவகைப் பருவங்களைப் பற்றியும் கூறுகிறார்.

ஒன்றுபட்ட செய்திகள்

மனித நலக் கோட்பாட்டினராக விளங்கும் இருவரின் கருத்துகளில் ஒன்றுபட்ட கருத்துகள் மிகுதியாகக் காணப்படுகின்றன,

1. கல்வியை விடச் சிறந்த அழியாத செல்வம் வேறில்லை.

> **கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**
> **மாடல்ல மற்றை யவை** *(குறள். 401)*

இதனைக் கற்றோர் விலை மதிக்க முடியாத மாணிக்கமாகப் போற்றப்படுவார் என்று நீதி சதகம் (11) கூறுகிறது.

2.
> **அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்**
> **அல்லல் உழப்பதாம் நட்பு** *(குறள். 787)*

என்று நட்பிற்குத் திருவள்ளுவர் உரைத்த கருத்தைப் பத்ருஹரியார் நண்பன் மூலம் விளக்குகிறார். தன்னோடு தோழமை கொண்டவனிடத்து, இன்பத்திலும், துன்பத்திலும் பங்கு கொள்பவனே நண்பனாவான் (நீதி. ச. 39) என்கிறார்.

3. வாழ்வின் நோக்கம் புகழ்பட வாழ்தல் என்பதனை,

> **ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
> **ஊதிய மில்லை உயிர்க்கு** *(குறள். 231)*

என்ற கருத்து, பிறவிப் பயனாகிய புகழைத்தேட முயலும் பெரியோர் அமுதொக்கும் அறச் செயலுடையவராய்ப் பிறருக்கு உதவி செய்வதையே பெரிதாகப் போற்றுவார் என்று நீதி சதகம் (46) கூறுகிறது. இவைபோல் ஒன்றுபட்ட செய்திகளை நிரம்பக் காணலாம்.

மாறுபட்ட செய்திகள்

இருவரின் அறக் கருத்துகளில் மாறுபட்ட செய்திகளும் உள. பெண்மையைத் திருவள்ளுவர் போற்றிய அளவிற்குப் பர்தருஹரியார் போற்றவில்லை. பெண்ணின் பெருந்தக்க யாவுள என வினவி, பெண்மையே பெருமையுடைத்து என்று கூறி, பெண்ணின் பெருந்தக்கதில் என்று கூறும் நிலையைப் பர்தருஹரியிடம் காண இயலவில்லை. பெண் ஒரு மாயை என்றும், பெண்ணை நம்பாதே என்றும் கூறுகிறார்.

திருவள்ளுவரின் காமத்துப்பாலும், பர்தருஹரியின் சிருங்கார சதகமும் ஒன்றுபோல் தோன்றிடினும் ஒழுக்கத்தை உயிரெனப் போற்றும் வள்ளுவரின் கவர்ச்சியூட்டும் நிலையில் பர்தருஹரியின் தலைவியும் விளங்குகின்றனர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழும் சான்றோரைத் திருவள்ளுவர் கூறுகிறார். காதலும் துறவுமே வாழ்க்கை என்று பர்த்ருஹரியார் கூறுகிறார்.

திருக்குறள் சதக நூல்களிலிருந்து பல்வேறு வகையில் உயர்வு பெற்று விளங்குகிறது. கருத்து முதிர்ச்சியாலும், கருத்து ரைக்கும் முறையாலும் கருத்தை விளக்க எடுத்துக்கொண்ட வடிவாலும் திருக்குறள் உயர்வு பெற்று விளங்குகிறது. ஜி.யு. போப் அவர்கள் கூறுவது போல் மனித இனத்தின் வேதமாக விளங்கும் திருக்குறளில் மில்டனின் கவி நலனும், தாந்தேயின் காப்பிய அழகும், செகப்பிரியரின் உலகப் பொதுமையும், அரிஸ்டாட்டிலின் தெளிந்த அறிவும், பிளாட்டோவின் இலட்சிய நோக்கும், மார்க்கஸ் அரேலியசின் அறவேட்கையும் ஏற்ற அளவில் இணைந்தும் கலந்தும் காணப்பெறுகின்றன.[7]

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்த விடல் *(குறள். 314)*

எனும் கருத்தை எடுத்துரைக்கும் முறையில் உலகின் முதன்மைப் பாவலனாகத் திகழ்கிறார். இது செய்தற்குரியது (31), இது செய்யத்தகாதது (171), இதனினும் இது பெரியது (102), இதனினும் இது இனிது (181), இதனினும் இது தீது (182), இதனினும் இது நன்று (183), இதனினும் இது இன்னாதது (230) எனப் பல்வேறு நிலையில் பாங்கும் உரைக்கும் பான்மையை எண்ணி எண்ணி வியக்க வேண்டியுள்ளது.

அறம் உரைக்க வள்ளுவர் எடுத்துக்கொண்ட கவிதை வடிவம் அவரின் ஆழ்ந்து அகன்ற புலமையைக் காட்டுகிறது. தமிழ் யாப்பின் கொடுமுடி குறள் வெண்பா. இதனைத் தெரிவு செய்த நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும் மென்மையும்

விளங்க இவ்வடிவத்தைப் பயன்படுத்தியுள்ளார். யாப்பால் நூல் பெயர் பெற்றது.

திருக்குறளைப் பின்பற்றிப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சினேந்திர வெண்பா, நீதி சூடாமணி, தினகரவெண்பா, வடமலை வெண்பா, முதுமொழிமேல் வைப்பு, சோமேசர் முதுமொழி வெண்பா, வள்ளுவர் நேரிசை, திருக்குறள் குமரேச வெண்பா போன்ற நூல்கள் தோன்றியது போல பர்தருஹரியின் சதகங்களைப் பின்பற்றி இரசிய பாசானம் பல்லட சதகம், விதக்கமுகமண்டமை, சுவாஷித நீவி திருஷ்டாந்த சதகம் என்ற நூற்களும் தோன்றின.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து

வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்று கூறமாறு போல் உலகின் தலை சிறந்த அற இலக்கியப் பாவலனாகத் திருவள்ளுவர் விளங்குகிறார். ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு இத்தகு பண்பாட்டுச் சிந்தனை இவருக்கு எப்படிக் கிடைத்தது என்று எண்ணி வியக்க வேண்டியுள்ளது. மொழி பெயர்ப்பால் உலக இலக்கியமாக விளங்குகிறது.

பிரெஞ்சு நாட்டு அறிஞர் ஏரியல் கூறுமாறு போல் திருக்குறள் தமிழ் இலக்கியத்தின் தலை சிறந்த படைப்பு. மனிதச் சிந்தனையில் முகிழ்த்த சிறப்பும் தூய்மையும் வாய்ந்த இலக்கியப் பெட்டகம்.

அடிக்குறிப்புகள்

1. Annie Universal Text Book of Religion and morals Part II, p.41, Theosophical Publishing House, Adayar, 1901.
2. நாவலியூர் நடராசன், **வடமொழி இலக்கிய வரலாறு**, ப.217, கலைஞன் பதிப்கம், சென்னை.
3. Caldwell R. **A Comparative Grammar of Dravidian Language**, p.15, 1956.
4. க.த. திருநாவுக்கரசு, **திருக்குறள் நீதி இலக்கியம்**, 1977, ப.355, சென்னைப் பல்கலைக்கழகம்.
5. Mammata : *Kavyaprakasha* pp.1-2. Tr. by Ganganatha Jha, 1925.
6. டி.எஸ். கந்தசாமி முதலியார், "திருவள்ளுவர் நீதி", கி.வி. ஜகந்நாதன், **திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு**, ப.137, ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன் வித்தியாலயம், கோவை.
7. *திருவள்ளுவர் திருநாள் மலர்*, ப.62, மேற்கோள் திருக்குறள் நீதி இலக்கியம், 1977.

❋ ❋ ❋

THIRUVALLUVAR'S "THIRUKKURAL" & R.W. EMERSON'S "SELF-RELIANCE"

T. Santhosa Priya

R.W. Emerson's "Self-Reliance" reflects the mettle of Thiruvalluvar's "Thirukkural". Emerson quotes from "Satires" by Persius which unveils the essence of "Self-Reliance" in the very first line,

[5]"Ne te quaesiveris extre"
(Persius, Satires, 1, 7)
meaning "do not seek outside yourself"
(Emerson 61)

The first chapter of 'Thirukkural' is titled "Kadavul Vaazhthu". A critic says "கட" means "go beyond". "உள்" represents "the mind". Therefore through the title "கடவுள் வாழ்த்து", Valluvar tells us to go beyond the mind to perceive the sanctum sanctorum of the Self. Emerson trumpets that "Trust - thy-self" is the predominant principle of great men.



[1]"One's glory doth consist in our own
glowing, powerful will
One's disgrace lies in saying: we will
live without it still" *(971)*

He says a man with will-power attains glory where as a man without will-power attains disgrace. Men with will-power are like magnetized steel which is capable of lifting about 12 times its own weight, whereas men without will-power are like demagnetized steel unable to life even a feather. They are surrrounded with fear and less confidence. Emerson's view on man coincides with Valluvar. Emerson says,

> [5]"To believe your own thought, to believe that what is true for you in your private heart is true for all man-that is genius" *(Emerson 61)*

[6]M.H.Abrams says, this is what Jung calls " 'the collective unconcious', shared by all individuals in all cultures, which he regards as the repository of 'racial memories' and of primordial images and patterns of experience that he calls 'archetypes' "M.H. Abrams 251).

Man must act according to the instincts of the Divine Wisdom that Dwells within him. One who realizes this universality is a genius. Thiruvalluvar claims that one

> [1]"who speaks truth conscientious is indeed the most supreme
> Amongst the men of true penance and charity, we deem"
> *(295)*

The Divine Wisdom is innate in man. When one realizes the 'Self' all one's physical, mental and spiritual illness will vanish. Valluvar depicts that this realization of the 'Self' eradicates obstacles in life.

> [3]"Comtemplation and understanding body and life mechanism enables one to chart his path without impediments"
> *(357)*

The transcendental universal Self is present in every individual. This realization can be achieved through contemplation of one's mind. To attain this state man should have a deeper insight- [8]"Inscape". Hopkins coined this word. Accoring to him, the prefix, "In" represents the "inner core of distinctiveness" or the "self" in all things. "Scape" emphasizes vastness or totality. "It is a mode of perception, a moment of concentrated awareness which helps one to feel the essence of being embedded in the objects or creatures".

Valluvar apparently enlightens this view.

> [1]"Whate'er may be the nature of just whate'er object eyed,
> 'Tis wisdom's part to see and grasp its core of truth inside"
> *(355)*

He emphasizes that it is wisdom, which grasps the core truth of a matter. All the laws of nature are within man, hence he becomes universal.

[1]"It is in him who knows the nature of the five- the sight,
the taste, the touch, the sound and smell that bides the
world aright:. *(27)*

World is within one who understands the real core of five senses

Man is a marvellous creation on earth. நன்னேல் says

[7]'மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளின்
ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமே லுணர்
ஓரறி வாதியா வுயிரைந் தாகும்"

Living things are catergorized according to their perceptibility to the senses. They range from plants with the sense of touch to animals with the sense of taste, smell, audio and vision. The sense organs are arranged hierarchically from the lowest sense of touch to highest sense of vision. Emerson says,

[5]"Self-existence is the attribute of the Supreme Cause, and it constitutes
the measure of good by the degree in which it enters into all lower forms" *(Emerson 73)*

This is valluvar says to rise above all the five senses to perceive the sixth sense which is the goal of man's life. The xisth sense is nothing but Divine Wisdom.

[1]"The one who controls senses five thro' th' hook of wisdon's might
Is deemed as fertile seed which yields the heavenly world of light" *(24)*

If a man controls his five sense, he will be a seed sowed in the land of the ascetic. But man is reduced to the masses because of his ignorance of the "self"

[1]"The beauty great and good of one sans subtle wisdom grand
Is like the beauty of a doll of clay adorned by hand: *(407)*

Valluvar says, men without mental acumen are mere beautiful dools.

The doctrine of self-reliance indued sman to live in peace. It prevails in one, who trusts himself and his principles. Virtues are more

important in a man's life. The soul is moving towards eternity. The soul is subjected to the constraints of the body. This limitation is transient.

[1]"The nexus 'twixt the soul and body is like that betwen

The fledgling and the egg abandoned by the fledgling green"
(338)

Accrding to [1]"Kuraloviam", man is exalted to the position of God when he adheres to the moral principles of life.

[1]"The one who leads an ideal houshold life upon this earth,

Should well be dded indeed as one of heavenly gods of worth"
(50)

What are moral principles? How can one recognize and follow moral principles? Gernerally, principels differ from man to man. Moral principle are the rudimentary principles of man that are symmetrical throughout the world. They are found in each and every individual. Thes can be recognized by man's faithfulness to his own cconsicence which is guided by Divine Wisdom. Valluvar says,

[1]"Pray, what could be the use of all the learning they have got,
The good feet of the Sacred Wise One if they worshipped
not?" *(2)*

If an educated man fails to recognize and worship the Sacred wise One-Divine Wisdom his education become futile. Man acts accroding to the suggestion of his pure mind conscience. This is the invisible omni resnet God present in each and every individual.

When the mind is coated with the normal principles, it reflects the "image of Purity", God. Purity is the seat of self-trust. Physica. mental and spiritual purity emerges from moral principles. The seed of will-power is sowed in the land of the ascetic. The water of moral principles and the light of wisdom are showered. The scissors of self-control eradicates the weeds in the garden, to maintain the virtue of purity. The manure of self-trust nourishes the plant to make bloom the flower of Divine Wisdom.

Valluvar picturesquely reveals his idea of wisdom in his couplet,

[1]"Which restrain mind from reaching w\here'er it would stray into,
And which deflects the mind from i1lls to th' good is wisdom
true" *(422)*

Emerson says.

> [5]"Nothing canbring your peace but yourself" and your "triumph of principles" (Emerson 82). Valluvar exemplifies that firmness, self-control and serenity are virtues greater than a mountain. Emerson says 5"the present hour is the decisive hour and everyday is doomsday". (Emerson 38). So man must be sincere and authentic. Self-Reliance eradicates sociological evils persisting in society. If once a man cultivates Self-reliance, he can achieve a great many things in life.

Emerson exemplifies man's way of living to achieve higher goals and to lead a blissful life. Emerson mirroredValluvar's idealman in the nineteenth century. "Thirukkural" is universal because, it reflects the thoughts, which are hidden in the core of all men. 'Thirukkural' says not what is man but how a man should lead a life to achieve his goals, without impediments.

References

1. Tirukkural English Translation, Tiruvachakamani, The Manali Lakshmana Mudaliar Specific Endowments, 1962, p: 3, 7, 11, 61, 69, 73, 85, 89.
2. Emerson Selected Poems and Essays, Dr. Varshneya, Student Store, 1996, P: 38, 61, 73, 82.
3. Thirukkuralh, J. Narayanasamy, Gemini Art Printers, 1988, P. 91.
4. *உலகப் பொதுமறை திருக்குறள் உரை விளக்கம், வீ. முனிசாமி, திருமகள் நிலையம், 1987,*
5. American Literature Of the Nineteenth Century, Ed. J. William Fisher, Eurasia Publishing House (Pvt.) Ltd., 1996, P:61-82.
6. The Glossary of Literary Terms, M.H. Abrams, Harcourt College Publishers, 2001, P. 251.
7. *நன்னூல் மூலமும் விருத்தியுரையும், சங்கரநமச்சிவாயப் புலவர், ஆறுமுக நாவலர் வி. அச்சகம். 1966 ப. 444,*
8. Selected poems, G.M. Hopkins, Macmillan India Ltd., 2001.
9. *குறளோவியம், கலைஞர் மு. கருணாநிதி, பாரதி பதிப்பகம், 1992, ப, 11.*

※ ※ ※

வேமன்னா - திருவள்ளுவரின் சமுதாயச் சிந்தனைகள்

சி. சாவித்ரி

தெலுங்கு மொழியில் பாலுக்குறிகி சோமன்னா, தூர்ஜடி- போன்ற சிறந்த இலக்கியப் படைப்பாளர்களுக்குத் தமிழ் மொழி இலக்கியங்களோடு தொடர்புள்ள தாகக் கருதப்படுகிறது. ஒப்பீட்டு நோக்கில் தமிழ்-தெலுங்கு இலக்கியங்களை ஆராயும் போது அந்தந்தக் கவிஞர்கள் வெளியிட்டுள்ள கருத்துகளில் ஒற்றுமை இருப்பதைக் காணலாம். பண்பாடு மட்டுமன்றி மொழி ரீதியாகவும் தெலுங்கர்களும், தமிழர்களும் நெருங்கிய தொடர்புள்ளவர்கள் என்பது அனைவரும் அறிந்ததே. இந்நோக்கில் திருவள்ளுவர் கூறிய கருத்துகளை வேமன்னா சதகத்தோடு ஒப்பிட்டு இருவருக்கு மிடையே உள்ள கருத்து ஒற்றுமைகளை இக்கட்டுரையில் காணலாம்.



வேமன்னா சதகம் அறநூலாகும். இது மொழிபெயர்ப்பு நூல் இல்லை. வேமன்னா தாமாகவே இயற்றியது. தெலுங்கு மக்களுக்கு வேமன்னா சிறந்த ஒரு யோகி (துறவி)யாகத் திகழ்கின்றார். இவர் மக்களிடையே வாழ்ந்து கொண்டு மானிட

வாழ்வின் உண்மைப் போலிகளைக் கண்டறிந்து விமரிசனம் செய்த ஒரு ஞானியாவார். இவர் தாம் கண்ட அனுபவங்களை 'ஆடவெலதி' என்ற யாப்பில் தெலுங்கு மக்களுக்கு அளித்தார். இவர் பாடல்களை அறியாதவர் யாரும் இருக்க முடியாது. இவர் காலத்தைப் பற்றியும், பிறந்த இடத்தைப் பற்றியும் விவாதங்கள் எழுந்தன. இருப்பினும் வேமன்னா கி.பி. 1650 - 1700இல் வாழ்ந்தவர் என்று எஸ்.கோபி என்பவர் தம் ஆராய்ச்சியின்வழி உறுதிப்படுத்தியுள்ளார். இவர் பாடல்களை, சி.பி. பிரௌன் என்ற ஆங்கிலேயர் 1829இல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிட்டுள்ளார். தமிழ், கன்னட மொழிகளிலும் வேமன்னா பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

திருக்குறளின் தாக்கம் தெலுங்கு இலக்கியங்களில் காணப் படவில்லை என்றாலும் போஜராஜியம் (அனன்தா மாத்யுடு), பாகவதம் (போதனா), காசிக்கண்டம் (ஸ்ரீநாதுடு), சுமதி சதகம் (பத்தெனா), வேமன்னா சதகம் (வேமன்னா) போன்ற இலக்கியப் படைப்புகளில் சில பகுதிகளைக் குறளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இவற்றுக்கிடையே சில ஒற்றுமைகள் இருப்பது தெரிய வருகிறது. இருப்பினும் வேமன்னா - "திருவள்ளுவர் சமுதாயச் சிந்தனைகள்" என்னும் தலைப்பில் இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளமையால் வேமன்னா சதகத்தோடு மட்டும் திருக்குறள் ஒப்பிட்டு ஆராயும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

வள்ளுவர் இயற்றிய திருக்குறளும் வேமன்னா இயற்றிய சதகமும் அறநூல்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. வள்ளுவர் இயற்றிய திருக்குறள் மூன்று இயல்களையும், 133 அதிகாரங் களையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு குறளும் இரண்டு அடிகளில் எழுசீரைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

வேமன்னா பாடல்கள் நான்கு அடிகளைக் கொண்டுள்ளன. முதல் இரண்டு அடிகள் ஏதாவது ஒரு கருத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. மூன்றாம் அடி அக்கருத்தை ஒரு பொருளோடு ஒப்புமைப்படுத்தும் வகையில் அல்லது கேள்வி கேட்கின்ற வகையில் அமைந்துள்ளது. நான்காம் அடி அனைத்துப் பாடல்களிலும் 'விஸ்வதாபிராம வினுரவேமா!' என்ற மகுடத்தைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. வேமன்னா பாடல்கள் மிகவும் எளிமையான நடையில் பாமரனும் கேட்டுப் புரிந்துகொள்ளும் அளவில் அமைந்துள்ளமையால் இப்பாடல்கள் தெலுங்கு மக்களிடையே மிகவும் புகழ்பெற்று விளங்குகின்றன. வேமன்னா சதகம் அத்தியாயங்களாகப் பிரிக்கப்படவில்லை. ஆனால், குறளில் உள்ள கருத்துகளைப் பரவலாகக் கூறியுள்ளார்.

சமுதாய அறக்கோட்பாடுகள் குன்றும்போது அச்சமுதாய மேன்மைக்கான கருத்துகளைத் தாங்கி அறநூல்கள் தோன்றுகின்றன.

தமிழ்கூறு நல்லுலகில் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட கலகங்களும் சமுதாயச் சீர்கேடுகளும் அற இலக்கியங்களைத் தோற்றுவித்தன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் அறத்தை வலியுறுத்துவனவாய் அமைகின்றன. இவ்வகையில் தோன்றிய அறநூல்களில் ஒன்று திருக்குறள்.

சமுதாயக் கவிஞராகிய வேமன்னா தமது பாடல்களின் வாயிலாகச் சமுதாயத்தின் குறைகளைச் சுட்டிக்காட்டி நல்ல பண்புகளை எடுத்துரைத்துள்ளார். இத்தகைய சீர்திருத்தக் கவிஞராகத் திகழ்ந்த வேமன்னாவின் சமுதாயச் சிந்தனைகளையும், தமிழுலகில் தெய்வப் புலவராகத் திகழ்கின்ற திருவள்ளுவரின் சமுதாயச் சிந்தனைகளையும் ஒப்பிட்டுக் காணலாம்.

பரம்பொருள் சிந்தனை

திருவள்ளுவர் பரம்பொருள் சிந்தனையைப் பற்றி 10 குறள்களில் எடுத்துரைத்துள்ளார். எல்லாக் குறள்களிலும் பரம்பொருளை வணங்க வேண்டும், வணங்கினால் அவர்களுக்கு எவ்விதக் குறைப்பாடுகளும் அண்டா என்று கூறுகிறார்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு *(குறள் 1)*

என்ற குறளின்வழி இறைவனின் உலகப் பொதுமை வெளிப்படுகிறது.

'அ'கரம் எழுத்துகளுக்கெல்லாம் முதன்மையாகத் திகழ்வது போல் பல்வேறு பிறவிகளை உள்ளடக்கிய இவ்உலகிற்கு முதன்மையானவனாக இறைவன் திகழ்கின்றான். இதன்வழி உலகத் தோற்றத்திற்குக் காரணமாகிய இறைவன் ஒருவனே என்ற வள்ளுவரின் பரம்பொருள் சிந்தனை வெளிப்படுகிறது. இதேபோல வேமன்னாவின் பரம்பொருள் சிந்தனையை வெளிப்படுத்தும் வகையில்,

பசுல வன்னெ வேறு பாலேக வர்ணமெள
புஷ்பசாதி வேறு பூஜ யொகடே
தர்ஸனமுலு வேறு தைவம் பொகடே
விஸ்வதாபிராம வினுரவேமா!

(தெலுகு சாகித்ய சரித்ர, ப.191)

The great Chinese teacher Master King, often called Confucius who lived in the days of state decay (6th 5th c BC) preached morality to his country men. Confucius is a teacher of morality, on the many great teachers honored in Chinese tradition. In essence he is the founder of the great Chinese intellectual and cultural heritage. His teachings may be found in the Ch'un Ch'tu (Spring and Autumn Annals) and the Lun Yu (Analects).



In Valluvar's view love and anpu is the great virtue and the corner stone of the entire moral structure. It is a well known fact that love is the basic virtue which has been preached by the founders of all religions. Thiruvalluvar who is always brief in his expressions has devoted one full chapter (10 couplets) on love

(anputaimai). Man is expected to keep his body and mind filled with love. 'Those that love not live only for themselves: as to those that love, they will give their very bones for helping others (kural 72). Such was the intensification of anpu for Thiruvalluvar.

For Confucius jen is the fundamental virtue of life. It is the essential relationship that should exist between two men. Jen is humanness, humanity and includes love, fellowship, charity and kindness. All the dimensions of love are embedded in jen. Thus jen is the very foundation of Confucian ethics and politics.

Thiruvalluvar's concept of love takes the shape of non-violence. His concept of non-violence is so divine in character that he says that non-violence means not only refraining from doing harm, but also doing well to evil. He says that "They are fools who say that love is for the righteous alone: But even against the evil minded, love is the only ally for a man" (kural 76).

Confucius speaks of jen in the Analects. "It is the only man of jen who knows how to love and how to hate people (4/3). Confucius stresses that jen must begin at home with fundamental family relationships. Hsiao, filial piety with young son bearing up his old father, Ti, fraternal love, and Hao, good those whom one loves, namely wife and children. Beginning with the family hsiao and ti are to be extended to all men in social solidarity.

Though Thiruvalluvar has not elaborated the functions of love in each and every family member, he consciously declares that love is the only means of binding forced within the family and also in the society at large. He has the firm opinion "If love aboundeth in the home and righteousness doth prevail, the home is perfect and its end is all fulfilled". He refers "the end" in his Thirukkural is the society (kural 45).

The duties of father to a son and the commitments of the son to the father are also explained on the basis of filial piety by Thiruvalluvar:

"What is the duty of the father to his son? It is to make him worthy to sit in the front rank in the assembly" (kural 67)

"What is the duty of his son to his father? It is to make the world ask: for what austerities of his hath he been blessed with such a son" (kural 70)

As love in Thirukkural jen is the central theme of Confucius ethics and government. While the ideologies of both Thiruvalluvar and Confucius on virtues are common, they differ in their purpose. Thiruvalluvar's concept of virtue – especially love – is mainly focused

on human and society. But Confucius concept of love directed towards government. It is a teaching about a proper government about the conscientious execution of civil service and proper behaviors in family life. The reason because in his days china was in a state of decay, anarchy reigned, emperor's court filled with concubines, wives, children. For a while, Confucius served as chief minister in the court but resigned to profess morality.

The situation is different for Thiruvalluvar. His period i.e., after the heroics cankam period witnessed a calm and quiet settled society giving mare importance to ethical subjects. Hence this period is called the ethical period or aranerikkaalam. During his time works on ethics enjoyed superior status with the advent of Jain and Buddhist monks. Hence the motive of Thirukkural confined with the ethics mainly focused on man and society.

On the basis of the above explained facts we can summarize the concept of love in both Thiruvalluvar and Confucius as follows:

Both for Valluvar and Confucius love for humanity to be called as 'human'. Valluvar is very confident that those who live for anpu will not only love themselves, but they will also give their life for the sake of anpu. According to Thiruvalluvar, this basic instinct of anpu is the real ambrosia on which thrives the humanity. This concept is seen in Confucius but in a different form. He asserts that one who practices jen is the royal line, the Lord's son, chun-tsu, a prince and a true gentleman. He is the extreme opposite of the hsiao jen, the small man.

The striking resemblance in Thiruvalluvar and Confucius is their relating the anpu and jen with the family relationship. For Confucius jen is the fountain head of filial piety, hsiao, fraternal love, ti and love for wife and children, hao. Before professing anpu, in the chapter anputaimai, Thiruvalluvar enumerates ilvalkai (family life) valkai tunainalam (good life mate) and makkatperu (offspring) which culminates in anputaimai.

REFERENCES

Dimensions of Love - East and West, James A. Mohler, S.J., Doubleday & Co, New York, 1975.

A History of Religion – East and West, Trevor Ling, Macmillan, 1968.

Thirukkural, English Translation by V.V.S.Aiyar, Sri Ramakrishna Tapovanam, Tiruchirapalli, 1989.

⁂ ⁂ ⁂

பொது

வரலாற்றில் வள்ளுவம்

புலவர் செ. இராசு

தமிழக அரசர்கள் மனுநெறிப்படி ஆட்சி புரிந்ததாகவே கூறிக்கொண்டனர்.[1] ஆனால் கொங்குநாட்டுப் பாளையக் காரர்கள் வள்ளுவர் கூறிய குறள்வழியில் ஆட்சி புரிந்தோம் எனத் தம் ஆவணங்களில் எழுதினர்.

'பூந்துறை நாட்டான் மேலோலை' என்னும் வரலாற்று ஆவணம்

'இன்சொல்லால் இனிதளித்து
வன்சொல்லால் மறங்கடிந்து
வள்ளுவர் உரைத்த முப்பால்
மொழியின்படியே
அறவே அறிந்து நல்லவைநாட்டி
அல்லவை கடிந்து



ஆட்சி புரிந்தோம் என்று கூறுகிறது. பல்லடம் செப்பேட்டில் 'வள்ளுவர் மரபு காத்து' ஆட்சி செய்த திறம் கூறப்படுகிறது. பழனிமலைச் செப்பேடு, வீரமுடியாளர் செப்பேடு,[2] கரையூர்ச்செப்பேடு[3]

திருக்குறள் கல்வெட்டு

சேலம் மாவட்டம் மல்லூரை அடுத்துள்ள பொன்சொரி மலை அடிவாரத்தில் தாமரைப்பாழி என்னும் இடத்தில் சமண முனிவர்கள் தங்கிய இயற்கைக் குகையின் மேல்பகுதிப் பாறையில் 'புலால் மறுத்தல்' அதிகாரத்தில் உள்ள,

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள் *(குறள் 251)*

என்று முதற்குறள் 14ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் கல்வெட்டாக உள்ளது.[4] சமணர்கள் திருக்குறளை 'எம் ஒத்து' எனக் கூறுவதைக் காணுகிறோம்.[5]

எல்லிஸ் கல்வெட்டுகள்

சென்னை மாவட்ட ஆட்சியர் ஃபிரான்சிஸ் வைட் எல்லிஸ் (Francis Whyte Ellis) 1812இல் திருக்குறள் அறத்துப்பாலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

1818இல் சென்னையில் கடும் தண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டது. வள்ளுவரின் கருத்தை உணர்ந்து எல்லிஸ் 27 கிணறுகளைத் தோண்டிக் கல்வெட்டும் பொறித்தார். நீண்ட அக்கல்வெட்டில் திருக்குறளைப் பற்றிய பகுதி

புலவர்கள் பெருமான் மயிலையம் பதியான்
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
திருக்குறள் தன்னில் திருவுளம் பற்றி
'இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு'
என்பதன் பொருளை என்னுள் ஆய்ந்து'

என்பதாகும்.[6]

அலுவல் காரணமாக இராமநாதபுரம் சென்றபோது 9-3-1819இல் எல்லிஸ் மரணமடைந்தார். கல்லறையில் இரங்கற்பாக் கல்வெட்டில் எல்லிஸ் திருக்குறள் பணி மிகவும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

திருவள் ளுவப்பெயர்த் தெய்வம் செப்பிய
அருங்குறள் நூலுள் அறப்பா லினுக்குத்[7]
தங்குபல நூலுதா ரணங்கள் தலைப்பெய்து
இங்கிலீசு தன்னில் இணங்கமொழி பெயர்த்தோன்

என்பது அப்பகுதி.

தமிழகத்தில் சில பகுதிகட்கு 'வள்ளுவநாடு' என்று பெயர் வழங்கியுள்ளது கல்வெட்டுகளால் தெரியவருகிறது.

மலைநாட்டு வள்ளுவநாட்டு புருஷோத்தமங்கலத்து
துக்கையன் சாத்தன்[8]

மலைமண்டலத்து வள்ளுவநாட்டு முரணோத்த
மங்கலத்து வர்த்தகன் செம்மாசெட்டியார்[9]

மலைநாட்டு வள்ளுவநாட்டு ரவிமங்கலத்து
மலையாளன் ஸ்ரீதரன் குமரன்[10]
குந்தன் செல்வனான வள்ளுவப்பாடி நம்பி

கரிகாலக்கன்ன வளநாட்டு வள்ளுவப்பாடிநாடு
காணியுடை ஸ்ரீகோபாலர்[11]

என்பன கல்வெட்டுத் தொடர்கள்.

'வள்ளுவநாடாழ்வான் இருங்கோளர்' என்ற தொடரும் கல்வெட்டில் காணப்படுகிறது.[12]

வள்ளுவர் குலமும், பெயரும்

நாமக்கல் மாவட்டம் கபிலமலைச் செப்பேட்டில் 'சம்பந்தமூர்த்தி சிஷ்யன் வள்ளுவரின் பெருமாள் தம்பிரான்' என்ற பெயரும்,[13] சோழநாட்டுத் திருப்பூந்துருத்திக் கல்வெட் டொன்றில் 'வள்ளுவன்' என்ற பெயரும் காணப்படுகின்றன.[14]

தமிழ்மறை

பழைய கோட்டைப் பட்டக்காரர் மரபில் குமாரரத்தின கவுண்டர் ஏற்படுத்திய பள்ளியில் 'சங்கீதப் பண்ணுடன் சொல்லுகின்ற தமிழ்மறை சங்கநூல்கள் நிகண்டும்' கற்றுக் கொடுக்கப்பட்டது.[15] தமிழ்மறை - திருக்குறள்" என்று ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது.[16]

திருவள்ளுவன் குறள்

கம்பராமாயணம், வில்லிபாரதம், நம்பியகப் பொருள் எனச் சில இலக்கிய இலக்கணங்கள் ஆசிரியர் பெயருடன் அழைக்கப்படுவது போலத் திருக்குறளும், 'திருவள்ளுவன் திருக்குறள்' என அழைக்கப்பட்டுள்ளது.[17]

புனிதக்குறள்

இராசிபுரம் அரசு மருத்துவனையில் 75 ஆண்டுகளுக்கு முன்பு மாவட்ட ஆட்சியர் மனைவி திறந்து வைத்த பிரிவில்

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின் *(குறள் 217)*

என்ற குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பை எழுதி The Sacred Kural எனக் கீழே எழுதப்பட்டுள்ளது.[18]

திருவள்ளுவர் காசு

1796இல் கிழக்கிந்தியக் கம்பெனிப் பணியில் சேர்ந்த ஃபிரான்சிஸ் வைட் எல்லிஸ் சென்னையில் மாவட்ட ஆட்சியராகவும், கருவூலகத்துறைத் தலைவராகவும் இருந்தபோது (1840-1819) திருவள்ளுவர் உருவமும், ஐந்துமுனை நட்சத்திரமும் பொறித்த 'இரட்டை வராகன் - நட்சத்திரப் பகோடா' தங்கக் காசுகளை வெளியிட்டார். அக்காசுகளில் இரண்டு இலண்டன் பிரிட்டிஷ் மியூசியத்திலும், இரண்டு கல்கத்தாவிலுள்ள இந்திய அருங்காட்சியகத்திலும் உள்ளன.[19]

நில உரிமை ஆவணங்கள்

சென்னை மாவட்ட ஆட்சியர் எல்.ஜி.கே. மர்ரே 28-2-1807 அன்று வருவாய் வாரியத்துக்கு அனுப்பிய மானியப்பட்டியலில் 2 காணி 9 குழி நிலம் சாந்தோமில் திருவள்ளுவர் கோயிலுக்கு உரியதாய்க் கூறப்பட்டுள்ளது.

17-4-1817இல் சென்னை மாவட்ட ஆட்சியர் ஃபிரான்சிஸ்வைட் எல்லிஸ் நிலமானியப் பட்டியலிலும் திருவள்ளுவர் கோயில் நிலம் குறிக்கப்பட்டுள்ளது.

மயிலாப்பூர் வட்டாட்சியர் அலுவலக நிலவரித் தள்ளுபடிப் பட்டியலில் பிளாக் எண். 17, டி.எஸ். 1815ன்படி 1 காணி 1 குழி நிலமும் (இன்று திருவள்ளுவர் கோயில், கோயில் திருமண மண்டபம் உள்ள இடம்) டி.எஸ்.எண். 3746ன்படி 1 காணி 2 குழி நிலமும், டி.எஸ்.எண். 3780ன்படி 1 காணி 6 குழி நிலமும் திருவள்ளுவர் கோயிலுக்கு உரியதாகக் கூறப்பட்டுள்ளது. திருவள்ளுவர் கோயிலுக்குரிய நிலங்கள் அரசு ஆணை 3648 தேதி 26-09-1956ன் படி மாநகராட்சிக்கு கிரவுண்டு 900 ரூபாய் வீதம் மாநகராட்சிக்கு விற்கப்பட்டன. பதிவு எண். 1080/1957 ஆகும். பின்னர் அவை தனியார் வீட்டு மனைகள் ஆயின.[20]

திருவள்ளுவர் சிலை

இன்றுள்ள மயிலாப்பூர் திருவள்ளுவர் கோயில் சிலை 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. 27-4-1973இல் அமைக்கப்பட்ட திருப்பணிக்குழுவின் திருப்பணியின்போது திருவள்ளுவரின் சிதைந்த தொன்மையான சிலையொன்று கிடைத்தது.[21]

அடிக்குறிப்புகள்

1. விசுவலோகத்தும் விளங்க மனுநெறி நின்று
அசுவமேதம் செய்து அரசுவீற் றிருந்த! (முதல் இராசாதிராசன்)

'மாப்புகழ் மனுவுடன் வளர்த்த கோப்பரகேசரி' (அதிராசேந்திரன்)

'அமைவில்லா மனுவொழுக்க ஆதியாம்படி நிலைநிற்க'
(இரண்டாம் இராசாதிராசன்)

சதாசிவ பண்டாரத்தார், தி.வை. **பிற்காலச் சோழர் வரலாறு**, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974 பக். 613, 624, 649.

2. இராசு, செ., **கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள்**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1991, பக். 122, 273, 292, ARE 35 of 1947; ARE 1 of 1910.

3. அருணாசலக்கவுண்டர், கு. **பட்டக்காரர் நாட்டுப் பாடலும் பூர்வ பட்டயமும்**, ஸ்ரீராமமந்திரம், கள்ளிப்பட்டி, 1964, ப. 20.

4. கிருட்டிணன், அ. **சேலம் நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள்**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2000, ப. 89.

5. நீலகேசி. மொக்கலவாதச் சருக்கம் உரை, பாடல் எண் 60, 87.

6. இக்கல்வெட்டு மதுரை திருமலை நாயக்கர் மகாலில் உள்ள தமிழக அரசு தொல்லியல் துறை அருங்காட்சியகத்தில் உள்ளது.

7. 1798இல் எழுதப்பட்ட தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் கையெழுத்துப் பிரதியிலும், 1935இல் வ.உ.சி. வெளியிட்ட நூலிலும் 1840இல் வெளியிட்ட இராமனுசக் கவிராயர் நூலிலும் 'அறப்பால்' என உள்ளது.

8. S.I.I. xxiv 12; ARE 65 of 1939.

9. S.I.I. xix 23; ARE 596 of 1907.

10. S.I.I. xix 87; ARE 263 of 1910.

11. S.I.I. xxiv 333; ARE 61 of 1937.

12. S.I.I. xxvi 333; ARE 315 of 1909.

13. இராசு, செ. மேல் குறித்த நூல், ப. 314.

14. S.I.I. xix 463; ARE 104 of 1931.

15. அருணாசலக்கவுண்டர், கு. மேல் குறித்த நூல், பக். 32-33.

16. 1861இல் சரவணப் பெருமாள் அய்யரும், 1932ல் ஈரோடு எச்.ஏ. பாப்லியும் திருக்குறளைத் 'தமிழ்வேதம்' என்று பதிப்பித்துள்ளனர்.

17. 1840இல் இராமாநுசக் கவிராயர், டபிள்யூ. எச்.ட்ரு. ஆகியோர் வெளியிட்ட நூலில் 'திருவள்ளுவர் செய்த குறள் என்றும், 1848இல் இ. ஏரியல், 1885இல் லாசரஸ் மொழிபெயர்ப்பைப் பதிப்பித்த திருமயிலை முருகேச முதலியார், 1911இல் கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள், 1916இல் வ.வே.சு. ஐயர் ஆகியோர் தாங்கள் பதிப்பித்த திருக்குறளை, 'திருவள்ளுவர் குறள்' என்றே கூறியுள்ளனர். 1798இல் எழுதப்பட்ட தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் கையெழுத்துப் படியிலும் 'திருவள்ளுவன் குறள்' எழுதப்பட்டுள்ளது.

18. The wealth of Generous soul is like the tree that healing balm distils for every ill.

19. தினமணி சுடர், 4-3-1995, ஐராவதம் மகாதேவன் கட்டுரை.

20. தினமணி, 25-6-1997, பா. கண்ணையன் கட்டுரை.

21. சட்டக்கல்வி மற்றும் உதவி நிறுவனம் வெளியீடு, 1-7-1997, ப. 7.

வள்ளுவர் கண்ட நல்லாசிரியர்

நு.ர. ஆறுமுகம்

வள்ளு வர்பெருந் தகைய னார்திருக்
குறளில் ஓதும், ஆசிரியர்கள்
உலகி லுள்ளஎவ் வுயிர்க ளுக்கும், செந்
தண்மை பூண்ட, ஒழுக்கினர்
உள்ளி டும்பொருள் அனைத்தி லும்உயர்ந்
தோங்கும் ஒன்றையே உள்ளுவர்
ஒழுக்கம் ஒன்றையே விழுப்ப மாகக், கொண்
டுயிரினும், மிகுத் தோம்புநர்
தள்ளொ ணாத்துயர் தொடர்ந்த போதிலும்
தரும நன்னெறி தவறிடார்
தமைவ ருத்திடும் வறுமை யாம்பசி
தாக்கும் போதிலும் செம்மையாய்க்
கள்ளம் ஒன்றனைக் கருதி டாஉளக்
கட்டுப் பாட்டொடும் வாழுநர்
கசடற கற்றநற் கல்வி யாம், அமிழ்
தூட்டு கின்ற, ஆசிரியரே!

(வேறு)



உலகத்தோ டொட்ட ஒழுகி,
உயர்ஞானக் கோர்வை யாகிப்
பலகற்றும் கல்லார் என்னும்
பழிக்கஞ்சும் புனித ராகி

நலமொத்த கல்வி கேள்வி
நயனத்தைப் பெற்றா ராகிப்
புலமெல்லாம் போற்ற வாழும்
பொன்மனத் தாசன் வாழி!

(வேறு)

பேராசை கோபம் இன்றிப் பிணித்திடும் காமம் இன்றித்
தீராத ஐயம் ஒன்றைத் திறன்படவே தீர்த்து வைத்தே
சீரான மெய்யு ணர்வைச் சிந்தைசெய் செல்வ ராகித்
தாராள மாகக் கல்வி தரவல்லான் நல்லா சானே!

(வேறு)

எண்ணும் எழுத்தும் கண்ணாக,
இயம்பும் மொழியே உயிராக
எண்ணும் இனிய எண்ணத்தில்,
ஏழமை கொள்ளா தென்றென்றும்
திண்ணம் உறவே செயலாற்றும்
திறன்கள் மேவு திண்ணியராய்
வண்ணம் பலவும் சிறக்கச் செய்
வண்டமிழ் ஆசான் வாழியவே!

குற்றம் இன்றிக் கல்வியினைக்,
குறைவின் றோதி அதன்படியே
அற்றம் நீக்கும் கருவியென,
அறமும் பொருளும் ஒருசேரப்
பெற்றி மிகுக்கும் இன்பமதைப்,
பேணும் குரவராய், விளங்கி
வெற்றிக் கொடியை நாட்டிடுவர்,
வள்ளுவ ரின்நல் லாசிரியர்!

இதனை இதனால் இவன்முடிப்பான்,
என்றாய்ந் ததனை யவன்கண்ணே
இதமாய்த் தந்தே இனிதுவக்க,
இயம்பிய வண்ணம் அவன்முடிக்கப்
பதமாய்ப் பேசிப் பக்குவமாய்,
படிப்பில் ஆர்வம் ஊட்டிமகிழ்
உதயக் கதிரோ னாய், விளங்கும்,
ஒப்பில் ஆசான் வழியவே!

(வேறு)

சொலல்வல்லன் சோர்வில்லன் சொல்லின் செல்வன்
சிலசொல்லிக் காமுறவே வைக்கும் நல்லன்

கலைவல்லன் கவிவல்லன் கட்டு ரைக்கும்
நலம்மிக்க நல்லாசான் வாழ்க! வாழ்க!

எப்பொருள் எவ்வெவர் வாய்க்கேட்ட போதும்
அப்பொருள் மெய்ப்பொருள் காணும் அறிவை
இப்புவி மீதினில் ஈந்திட வல்லான்
ஒப்பிலா வள்ளுவன் ஓதும், ஆசானே!

(வேறு)

'நாநலம்' என்னும் நலமுடையான்,
நயந்துரை வழங்குந் திறமுடையான்
பாநலம் பகரும் பண்புடையான்,
பாவுரை நல்கும் பேறுடையான்
மாநிலம் போற்றும் மாண்புடையான்,
மாணவர் நலத்தில் மனமுடையான்
தேநிகர் கல்வித் திருவுடையான்,
திருவள் ளுவராம் ஆசானே!

(வேறு)

'எழுத்தறி வித்தவன் இறைவன் ஆவான்' எதனாலே? - அவன்
'இன்ப துன்பம் இரண்டும் அற்றான்' அதனாலே!
'வழுத்திடு பள்ளியைக் கோவில் என்றார்' எதனாலே? - அதில்
வாழும் இறைவன் 'நல்லா சிரியன்' அதனாலே!
'கல்விக்கூடம் வேள்விக்கூடம்' எதனாலே - ஒரு
'குற்றமும் அற்றார் கூடும் இடமாம்' அதனாலே
கல்விக் கழகு கடசற மொழிதல்' எதனாலே? - அதனைக்
கற்றுத் தந்தவன் நல்லாசிரியன் அதனாலே!
'எல்லாம் வல்லான் ஆசான் என்றார்' எதனாலே! - அவன்
'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பான்'
அதனாலே!
'செய்யும் தொழிலே தெய்வம் என்றார்' எதனாலே? - உயர்
சிந்தையும் செயலும் ஒன்றிடச் செய்யும் அதனாலே!
'பொய்யும் புரட்டும் மேலோர்க் கில்லை' எதனாலே? - உயர்
'பண்பை யளித்தவன் நல்லா சிரியன்' அதனாலே!

❋ ❋ ❋

EUPHEMISMS IN TIRUKKURAL

M. Sadasivam

The euphemism is an idirect and refined expression replacing what is considered as a vulgar, obscene, rude or slang expression. Generally, some explicit expressions regarding sex, debauchery, death, toilet etc., offend the sensitivity of the listeners or readers. Hence the same ideas are expressed by good writers in a refined and elegent manner. The more the wirtter is skilled the more polished are his expressions.

Tiruvalluvar, the author of Tirukkural, is universally acknolwedged as the greatest poet in Tamil. His Tirukkural is the greatest didadic and secular work dwelling on three great themes of Virtue, Wealth and Love. It contains only 1330 couplets. No other small work in the whole wrold contains such profound thoughts as Tirukkural. The Tamil people are rightly proud of Tirukkural, whose merit is greater than the Vedas of the Aryans. Being a great poet, Tiruvalluvar has used several stylistic traits in order to embellish his ethical work. The third poet of his work which deals with love is a veritable treasure-house of poetic beauties such as excellent poetic imagination, beautiful metaphore and similes and sweet dramatic monologues.



As a great poet of culture and literary talents Tiruvalluvar has employed many euphemisms in all the three part of his work. This paper enumerates and enlists the euphemisms found in TIrukkural. The number of the coup;et is invariably given here along with the quotations.

1. Tiruvalluvar says that evil things produce only evil results and hence they should be dreaded more than the blazing fire (202). Hence he want to avoid the use of the word 'evil things'. In the following verse he denotes the idea of evil things by using the word 'allavai'. which measn the opposite of good thins.

allavai theeya aram perukum nallavai
naadi iniya colin *(96)*

2. He describes the most vicious people as "those who are at they tag end of Virtue" viz., arankatai ninraar.

arankatai ninraaru ellaam pirankatai
ninraarin peetaiyaar il *(142)*

3. The word'mikkavai' in Tamil means 'the excess' Tiruvalluvar who is always desirous of shunning the word 'evil things' uses this word euphemistically to mean 'evil things'.

mikutiyaan mikkavai ceytaarait taamtam
takutiyaan venru vital *(158)*

4. Tiruvalluvar exhorts us the eschew eating jmutton. He wants to imress on us the fact that mutton is nothing but the wounded flsesh (pun) of the animals killed. Thus eating mutton means eating the dead body of the animals. Is there any one who would like to eat mutton when he realises that it is but the dead body of the killed animal or bird.

unnaamai veentum pulaal piritonran
punatu unaravaarp perin *(257)*

5. He described hell as the dark and harmful world (irul ceernta innaa ulagam). He assures us that virtuous people endowed with the quality of 'grace' will never enter hell.

arul ceernta nenjinaark killai irulceernta
innaa ulagam pukal *(243)*

6. He wished to avoid the expression 'the dead man' and uses instead the word 'illaar' which means those who are no more.

ular eninum illaarootu oppar kalanajik
karra celac collaataar *(730)*

7. Similarly he wants to avoid the phrase 'the killers of the people' but uses the phrase 'uyir utampin niikkyaar' which means those who forcibly drive away the souls from the bodies.'

uyir utampin niiikkiyaar enpa ceyir utampin
cellaat tii valkkai yavar *(330)*

8. He describes ruffians and professional rowdies as

kotiru utaikkum kuunaiyar

which literally means 'those who would forecefully break others' cheeks by using their clenched fists.

9. He wishes to described a poverty - stricken man as one from whose house the Goddess Lakshmi turns away asking her sister (i.e., the Goddess of poverty) to dwell there.

avvittu alukkaaru utaiyananaic ceyyaval
tavvaiyaik kaatti vitum *(167)*

10. He euphemistically describes a drunken stupor as 'meyyariaamal' which means "unconsciousness of the body" (925).

11. 'Kalaak kaal' (840) is an euphemism for "the unwashed feet which are smeared with human dung."

12. Tiruvalluvar has employed several euphemisms for adultery practised by man. The following phrases are used to denote the adulterer in Tirukkural.

    a. Il irappaan (145,. 146) - one who transcends the boundary of this own home and enters into another man's house.

    b. piran iyalaal penamai nayappavan (147) one who is found of the femininty of a woman who legally beongs to another man.

    c. tinaittuNaiyum teeraan piran il pukal (144) - one who enters into another man's house with the evil intention of adultery, without in the least thinking of the evil. Incidentally, the number of this verse, 144 reminds us of the police rule of the same numberj giving an injunction to abstain from an offense.

    d. pirarku uriyaal tool tooypavar (149) - those who indulge in the heinous act of adultery with a woman belonging to another man.

    e. piranvaraiyaal penmai nayavaamai (150) - having an intense desire to have sex with another man's woman

    f. telintaar il tiimai purintu olugu vaar (142) - one who indulges in a sin with a woman beloning to another man who has put

faith in the virute of his friend. Hence the act of adultery is a clear breach of confidence by one's friend.

13. Tiruvalluvar eulogises the eperson who never possesses the evil intention of adultery, as a man of great heroism. He adds that this (non-adultery) is not only a great virtue but also the virtuous code of the noble man.

piran manai nookkata peeraanmai aanroorkku
aran onroo aanra olukku *(148)*

14. It is said that the prostitution is an old as humanity itself. Tiruvalluvar condemns the practics of prostitution in the same tone as he condemns tha adulterer. It is to be noted here bthatj in the Sangam Age which was previous to Tiruvalluvar's period, prostitution was prosperous in society. Tiruvalluvar was the first poet who boldly condemned this practices.

While condeming prostitutes who by their physical charm ensnare the men, with the sole aim of obtaining as much mony as possible, Tiruvalluvar condems also men who indulge in prostitution as the basest of men, and men without good sense and as men without a steady mind.

As Tiruvalluvar was a great humanist, he was unwilling to condemn prostitutes using strong terms. He seems to have a sympathy for the lot of prostitutes who were outcast by the society. In his opinion prostitution should not be a means of livelihood.

The following euphemistic terms have been used to denote prostitutes.

a. potunalattaar (915) - (Sarcastically) those who are doing 'public service' (They are used as an outlet for sexually hungry men. As prostitutes generally do not care for the status, rank and caste of customers but look only for the money they would offer to them, they are called 'public women').

b. Porut pentir (913) - a general term for prostitutes as their only concern is money (porul)

c porut porulaar (914) is a new coinage of Tiruvalluvar, porul means both money and concern.

d. takai ceukkip punnalam paarippaar (916) - Those who show off their physical charms and give men 'mean' happiness.

e. pira nenjil peenip punarpavar (917) - those who are willing to have sexual union with different men.

f. ananku (918) - Sexually attractive girls who haunt the minds of men and arouse their sexual hunger.

g. maaya makalir (918) - Zthose who have irresistible sexual attraction.

h. Varaivilaa maanilaiyaar (919) - those who shun marriage and adorn themselves with beautiful ornaments in order jto entice the man of unsteady mind.

i. irumanap pentir (920) - those who are endowed with 'double minds' i.e., those who do not have a single-minded devotion to only one person.

j. porul vilaiyum aaytotiyaar (711) - beautiful damsels whose desire is only begetting money and who have no real interest in the sexual act.

k. payan tuukkip panpu uraikkum panpu il makalir (912) - Those who are destitute of good character and who please men according to the amount of money they are ready to offer them.

15. Even though Tiruvalluvar has used the world 'punarpavar' which means those who indulge in the sexual act, he has other euphemistic synonyms for the sexual act like manattal (1221, 1226), kuututal (1330), muyankutal (1330), muyakku (1107) mentool tuyil (1103) (literally the sleep on the soft shoulders.)

Some of the words used by Tiruvalluvar have now become unparlimentary words. The words mayir (964, 969) (hair) mulai (482, 1087) (a woman's breast) are now considered to be unparliamentary words. They are now replaced by Muti and nakil respectively.

The word alhul (a woman's private part) was freely in use in Sangam poetry. But Tiruvalluvar has never used this word even in the third part of Tirukkural which deals with Love. In Kaamattuppaal the lover describes the beauty of his lady-love's fave, eyes, cheek, shoulders and body in general but not her thighs or private parts. Sangam poets freely describe the private parts of Women.

The avoidance of such unparliamentary words and the use of euphemisms foslang and obscene words testify to the fact that Tiruvalluvar was a man of Culture and civilized manners.

⁂

திருக்குறளும் திருவாசகமும்

செ. திருஞானசம்பந்தம்

தமிழ் நூல்களில் சிறப்புடையவற்றைத் தொகுத்துக் கூறும் வெண்பா ஒன்று திருக்குறளுக்கு அடுத்தபடி திருவாசகத்தைக் கூறுகிறது.

> வள்ளுவர்நூல் அன்பர்மொழிவாசகம்
> தொல்காப்பியமே
> தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை -
> தெள்ளியசீர்த்
> தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
> தண்டமிழின் மேலாறு தாம்

என்பது அவ்வெண்பா. உலகப்பொது நூலாகிய திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த டாக்டர் ஜி.யு. போப் பாதிரியார் அதை அடுத்துத் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவற்றால் திருக்குறளும், திருவாசகமும் அறிஞர் உலகத்தில் எவ்வளவு சிறப்புப்பெற்று விளங்குகின்றன என்பதை அறிய முடிகின்றது. இவ்விரு நூல்களிலுள்ள கருத்துகளை ஒப்பிட்டு உரைப்பதே கட்டுரையின் நோக்கமாகும்.



திருக்குறள்

தமிழில் தோன்றிய நீதி நூல்களிலெல்லாம் தலைசிறந்து விளங்குவதும் காலத்தால் முந்தியதும் திருக்குறளேயாகும். திருவள்ளுவர் இயற்றிய இந்நூல் உலகின் பலமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமையே இதன் சிறப்பைக் காட்டும்.

கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்

என்று இடைக்காடர் திருக்குறளைப் பாராட்ட, ஔவையாரோ,

அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்

என்று பாராட்டினார். மேற்கண்ட பாராட்டுகள்,

எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்

என்ற மதுரைத் தமிழ்நாகனாரின் கருத்தை வலியுறுத்துகின்றன.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்று தமிழ்நாடே வள்ளுவரால் புகழ்பெற்றது எனப் பாரதியார் போற்றுகிறார். மேலும்,

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுறு
நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ?

என்று சான்றோர்கள் போற்றும் தன்னிகரற்ற நூல் திருக்குறள். இந்நூல் தமிழ்நாட்டின் அறிவுக்களஞ்சியம். அதில் அறம், பொருள், இன்பம், வீடு என்று நாற்பொருளும் விளக்கமாகக் கூறப்படுகின்றன. உலக நீதி கூறும் திருக்குறள் தமிழர்தம் அடிமனத்திலிருந்து எழுந்த எழுச்சிக்குரலாகும். அந்த எழுச்சிக் குரலில் தமிழ்ப் பண்பையும் பக்தியையும் காணமுடிகின்றது.

நூல் அமைப்பு

குறள் வெண்பாவினால் இயற்றப்பட்டதால் இது திருக்குறள் எனப்பட்டது. இந்நூல் அறத்துப்பால் (38), பொருட்பால் (70), காமத்துப்பால் (25) என்ற முப்பொருள் பிரிவுகளையும் 133 அதிகாரங்களில் ஓர் அதிகாரத்துக்குப் பத்து என்ற கணக்கில் 1330 குறட்பாக்களையும் உடையது. அறத்துப்பால் இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்ற மூன்று இயல்களை உடையது. பொருட்பால் அரசியல்,

அங்கவியல், குடியியல் என்ற மூன்று இயல்களை உடையது. காமத்துப்பால் களவியல், கற்பியல் என்ற இரண்டு இயல்களை உடையது. திருவள்ளுவர் உலக அறத்தையும் அரசியலையும் மக்களின் நல்வாழ்வின் வளத்திற்காகவே விளக்கிக் கூறுகின்றார். இவரின் கருத்தோட்டச் சாயல் படியாத தமிழ் நூல்களே இல்லை.

திருவாசகம்

இடைக்காலத்தில் தலைசிறந்த புலவர்கள் நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஆவர். இவர்களால் தமிழ் இசையுடன் வளர்ந்தது. சங்க காலத்தில் மிக அருகிக் காணப்பட்ட இசையும், பக்தியும் இடைக்காலத்தில் கிளைத்துச் செழித்தன. நாயன்மார்களில் புலமையும் பக்தியும் நிறைந்த பாடல்களை வரைந்தவர்கள் நால்வருமாவர். அந்நால்வரில் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட இறைவனைப் பாடியவர் மாணிக்கவாசகர். மாணிக்க வாசகர் அருளிய திருவாசகம், தமிழில் உள்ள பக்தி நூல்களில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. இதன் பக்தியின் சிறப்பை,

திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்

என்னும் பழிமொழியும்,

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னுந் தேன்

(திருவாசகம் நூற்சிறப்பு வெண்பா - கழகவெளியீடு)

என்னும் தனிப்பாடலும்,

திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின், கருங்கல்
மனமுங் கரைந்துருகக் கண்கள் தொடுமணற்
கேணியிற் கரந்து நீர்பாய, மெய்ம்மயிர்
பொடிப்ப, விதிர் விதிர்ப்பெய்தி யன்பு ராகுந ரன்றி
மன்பதை யுலகில் மற்றைய ரிலரே *(நால்வர் நான்மணிமாலை)*

எனும் பாடலும் தெள்ளத் தெளிய விளக்குகின்றன.

நூல் அமைப்பு

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும், திருக்கோவை யாரும் எட்டாம் திருமுறையாக வகுக்கப் பட்டுள்ளன. திருவாசகம் சிவபுராணம் தொடங்கி, அச்சோப்பதிகம் வரை 51 பிரிவுகளில் 4 அகவல்களும், 652 விருத்தங்களுமாக 659 பாடல்களைக் கொண்டது.

திருக்குறளும் திருவாசகமும்

திருக்குறள் மனிதனை மேலான அறிஞனாக்குகிறது. கல்வி, அறிவு, ஒழுக்கம், உலகநேயம், பகுத்துண்ணல் இவற்றை யெல்லாம் அது வற்புறுத்துகின்றது. திருவாசகம் சமயத் துறையில் எழுந்ததொரு நூல் எனினும் அது திருக்குறள் போன்று யாவரானும் மதித்துப்போற்றப்படும் சிறப்புடையது. திருவாசகம் இறைவனியல்பையும், உயிரின் இயல்பையும், பாசத்தின் இயல்பையும் இனிதுணர்த்துகின்றது. அடிகளது சிவானுபவ நிலையை உணர்த்தும் பகுதிகள் பல. அவை யாவர்க்கும் உருக்கத்தைத் தருவன.

பணிவுநிலை

திருவாசகத்தில் காணப்படும் மற்றொரு தனிச்சிறப்பு பணிவுநிலை. அஃதாவது தம்மைத் தகுதியுடையராக மதித்துப் பெருமை கொள்ளாமல் தமது சிறுமையை எண்ணித் தமக்குக் கிடைத்த பேற்றிற்கு மகிழ்தல். இது,

> **பணியுமாம் என்றும் பெருமை சிறுமை**
> **அணியுமாம் தன்னை வியந்து** *(குறள் 978)*

என்னும் திருக்குறளிலும் குறிப்பால் உணர்த்தப்பட்டது. பணிவு நிலை மாணிக்கவாசகரிடத்து மிகப்பெரிய அளவில் காணப்படுவதை அவரது திருவாசகத்தால் அறிய முடிகின்றது.

> **கடையவ னேனைக் கருணையினாற் கலந்தாண்டு**
> **கொண்ட விடையவனே** *(திருவாசகம் 6.1.)*

என்பதில் மாணிக்கவாசகர் தம்மைக் கடையவராகவே கருதினமை வெளிப்படுகின்றது. மேலும்,

> **நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்**
> **தாயிற் சிறந்த தயாவான தத்துவனே** *(சிவபுராணம் 60-61)*

என்று தம்மை நாயோடு ஒப்புமைப்படுத்தலேயன்றி, நாயினுங் கீழ்ப்படுத்திக் கூறுதலையும் காணமுடிகின்றது.

அன்பு கொள்ளுதல்

திருவள்ளுவர் அன்பைப் பற்றிக் கூறும்போது

> **அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
> **நண்பென்னும் நாடாச் சிறப்பு** *(குறள் 74)*

என்கிறார். அதாவது அன்பு தன் உள்ளத்தை மென்மைப்படுத்தி அனைவரிடத்திலும் நட்பைச் செலுத்த ஏதுவாகிறது.

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் எல்லையற்ற பரம் பொருளாகிய "அன்பே சிவம்" என்ற தத்துவரூபமான சிவன் பால் கொண்ட தலைசிறந்த அனபின் வெளிப்பாடேயாகும். "கோயில் திருப்பதிகத்தில்" சிவபெருமானைத் துதிக்கும் பொழுது அடிகளார்,

இன்பமே! என்னுடைய அன்பே!

(திருவாசகம் 22. கோயில் திருப்பதிகம் 1)

என்றும்,

ஆடகச்சீர் மணிக்குன்றே! இடைஅறா அன்பு உனக்கு என்
ஊடு அகத்தே நின்று, உருகத்தந்தருள்; எம்உடையானே!

(திருவாசசம் 5. திருச்சதகம் 11)

என்றும் இறைவன்பால் உண்மையான அன்பு வேண்டுமென்று மனம் நெகிழப்பாடுகிறார். இவ்வாறு மாணிக்கவாசகர் மனம் அழுங்கி அழுது அழுது இறைவனை வேண்டுவதால், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் அழுது அடி அடைந்த அன்பர் என்று குறிப்பிடுகின்றார்.

இறைவழிபாடு

இறைவனின் கருணையும், அவனுடைய ஒப்புயர்வற்ற பேரின்பமும் திருவாசகத்தில் முழுவதும் புகழ்ந்து பாடப் பெற்றிருக்கின்றன. இத்திருவாசகத்தை இறை இன்ப ஊற்று என்றே கூறலாம்.

இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் *(சிவபுராணம் 2)*

என்ற சிவபுராணத் தொடர்

இன்பம் இடையறா தீண்டும் *(குறள் 369)*

என்ற திருக்குறள் தொடரோடு தொடர்புகொள்கிறது. இறைவனை இடையறாது நெஞ்சில் நினைக்க வேண்டும் என்பது கருத்து. ஆசையை விட்டவர்கள் இறைவனையே எண்ணுவர். அந்த எண்ணம் இடையறாத பேரின்பத்தைத் தரும். திருக்குறளும் திருவாசகமும் கடவுள் நெறியில் எவ்வாறு இணைந்திருக்கின்றன என்பதை இக்கருத்து உணர்த்துகின்றது. இறைவழிபாட்டில் ஈடுபடின்,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் *(குறள் 10)*

என்றும்,

இருள்சேர் இருவினையும் சேரா *(குறள் 5)*

என்றும் திருவள்ளுவர் குறிக்கின்றார்.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்(டு)
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே

என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இசைக்கின்றார். இதில் நெஞ்சம் கடவுளை நினையாதபோது வாழா நெஞ்சமாக இருக்கின்ற தன்மையை உணர்த்துவதுடன், வினையிலிருந்து தப்புவதற்கு இறைவனின் திருவடித்துணை வேண்டுமென் பதையும் புலப்படுத்துகின்றார். வினை அழியின் பிறவி கெடும். வினை அழிய இறையருள் வேண்டும்.

மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே *(சிவபுராணம் 87)*

வற்றல் மரம்போல் நிற்பேனோ
பற்றாங்களை யற்றீர் பற்றும் பற்றாங்கவது பற்றி
யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டுவனாகி

என்ற திருவாசகத் தொடர்களுடன் முறையே

மற்றீண்டு வாரா நெறி *(குறள் 356)*

வற்றல் மரம் தளிர்த்தற்று *(குறள் 78)*

பற்றுக பற்றற்றான் பற்றினை *(குறள் 350)*

யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் *(குறள் 346)*

என்ற திருக்குறளடிகளுடன் ஒப்பிட்டுத் திருவாசகத்திற்கும் திருக்குறளுக்கும் கருத்தில் எத்துணை ஒற்றுமை உள்ளது என்பதை ஊகித்து உணரமுடிகின்றது.

இதுகாறும் கூறியவற்றான் ஒவ்வொரு மதமும் ஒண்டமிழ் ஓங்கச் செவ்வரும் நூல்கள் செப்பியிருப்பினும், அவற்றுள் தேவர் குறளும், மாணிக்கவாசகரின் வாசகமும் தமிழுக்கு அளித்த தலையாய கொடையாகும். சைவ நெறியையும், செந்தமிழ் இலக்கியத்தையும் ஒருங்கே வளர்த்த பெருமை இருவர்க்கு உண்டு. இத்தகைய நல்லிலக்கியங்களைக் கற்பது போலிச்சுவையும், மதப் பூசலும், சாதிச் சண்டையும் தமிழர் வாழ்விலிருந்து விலக வழிகோலும்.

⁂ ⁂ ⁂

திருக்குறள் பிரிப்பு - ஒரு சிந்தனை

கொடுமுடி சண்முகன்

திருக்குறள் நம் கையில் கிடைத்துள்ள ஓர் அறிவு நூல். பல்துறை அறிவுகளைச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றது. அதனை அறநூல் என்பர் சிலர். இலக்கியம் என்பர். சிலர். வாழவழிகாட்டும் நூல் என்பர். அறிவுநூல் என்று சொல்லும் போது இவை அனைத்தும் அதில் அடங்கிவிடுகின்றன.

திருக்குறளைச் செய்தவர் யார்? இதுபற்றி ஏராளமான பேர் ஆராய்ந்து திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர் என்று கூறியுள்ளனர். சரி, இந்தத் திருவள்வுரைப் பற்றி என்ன தெரியும்? ஒரு சில செவி வழிச் செய்திகள், சில காலத்தால் பிந்திய பழம் பாடல்கள் மயிலாப்பூர் திருவள்ளுவர் கோயில் இவை தவிர வேறு ஆதாரபூர்வம் கொண்ட எழுத்துகளோ, கல்வெட்டுகளோ ஏதுமில்ரைல அதனால் அவர் மீது ஏராளமான புனை கதைகள் வந்துவிட்டன. அவை இருந்துவிட்டுப் போகட்டும் அவற்றைப் பற்றி இப்போது கவலைப்படவேண்டாம்.



திருக்குறள் எப்போது இயற்றப்பட்டது. திருவள்ளுவர் பிறப்பு கி.மு. 31 என்று தமிழறிஞர் குழாம் கூடிச் சுமார் முப்பது ஆண்டுகளுக்குமுன் முடிவு செய்தனர் அதற்கான காரணங்கள் இப்போது கிடைக்கவில்லை. எனினும் இந்தக் காலக்கணக்கு சற்றுப் பொருத்தமாகவே இருப்பதால் இதனை யாரும் பெரிதாக எதிர்க்கவில்லை நாமும் அதனை ஏற்றுக் கொள்வோம்.

திருவள்ளுவர் இயற்றிய குறட்பாக்கள் 1330 தற்போது நமக்குக் கிடைத்துள்ளன. அவை அதிகாரத்திற்குப் பத்து என்ற வகையில் 133 அதிகாரங்களாய்ப் பகுக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட ஒத்த கருத்துடைய குறட்பாக்கள் பத்து ஒரு அதிகாரமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. சில குறட்பாக்கள் வேறு ஒரு அத்தியாயத்திலிருந்தால் சரியாக இருக்கும் என்று தோன்றும். பத்து என்ற வரன்முறை வைத்துக்கொண்டதால் இது தவிர்க்க முடியாததாகி விட்டது. ஒரே பொருளுக்கு மூன்று அல்லது நான்கு அதிகாரங்கள் கூட இருப்பதைக் காணலாம். சில குறட்பாக்கள் இரண்டு அதிகாரத்திற்குப் பொருந்துமாறு இருந்தாலும் அதனை ஒன்றில் தானே வைக்க இயலும்.

தான் பாடிய குறட்பாக்கள் அனைத்தையும் திருவள்ளுவரே தொகுத்தாரா என்பது இன்பொரு கேள்வி. அப்படி இருக்க வாய்ப்பே இல்லை. குறட்பாக்கள் அனைத்தும் தம் அனுவத்தைக் கொண்டு அவ்வப்போது எதிழுதியவையாகத் தான் தெரிகின்றன. அவர் அவ்வப்போது எழுதிப்போட்ட குறட்பாக்களைப் பின்னர் யாரோ தொகுத்துள்ளனர். இதுவே சங்ககால வழக்கமாக இருந்துள்ளது. மற்ற இலக்கியங்களைத் தொகுத்தது யார் என அதன் பாயிரத்தில் குறித்திருப்பார்கள் திருக்குறளில் அத்தகைய குறிப்பு ஏதும்இல்லை.

திருக்குறள் பகுப்பு முறை சரியாக இல்லை என்று யாரும் கூறமுடியாது. நமக்குச் சிறப்பாகத் தெரியவில்லை என்று வேண்டுமானால் கூறலாம். அக்கால சமூகம், கல்வி, அறிவு, அனுபவத்தின்படி அவை மிகச்சிறந்தவையே என்பதில் ஐயமில்லை. வான்சிறப்பு ஒரு மிகச்சிறந்த அதிகாரம். அதன் அதிகாரத்திற்கு நீர்வளம் என்று இப்போது பெயரிடலாம். குடும்பம் என்று ஒருபொதுத் தலைப்பு இருந்தால் அதில் இன்பத்துப்பால் அடங்கவேண்டும். இதன் தொடர்ச்சியாக 5இல் வாழ்க்கை, 6இல் வாழ்க்கைத் துணைநலம், 7ல் மக்கட்பேறு 9இல் விருந்தோம்பல். 15இல் பிறனில் விழையாமை ஆகிய அதிகாரங்கள் சேர்ந்து வரலாம். ஒன்று நிச்சயம் 1330 குறள்கள் எழுதிவிடவும் அவற்றைப் பகுத்துப் பிரித்துப் பல அதிகாரங்களாகத் தொகுத்தவர் பெரிதும் மண்டையை உடைத்துக் கொண்டிருப்பார்.

சரி, இன்றைய நிலையில் 1330 குறட்பாக்களையும் நம்மிடம் கொடுத்து ஏதாவதொரு வகையில் தொகுக்குமாறு வேண்டுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம் நாம் எப்படித் தொகுப்போம்?

இக்கால அறிவு நிலை, நம் பின்புலம், உலகத்தின் போக்கு அனைத்தும் கருதிப்பார்க்கத்தக்கன. நமக்குக் கட்டுப்பாடுகள் ஏதுமில்லை. அதிகாரத்திற்குப் பத்து என்ற வரையறை இல்லை. ஒரு குறள் ஒரு அத்தியாயத்தில் தான் இருக்க வேண்டுமென்ற தேவையில்லை.

தற்போதைய பகுப்புக் கலை, அறிவியல் என்று இரண்டாகப் பிரியும். அறிவியலில் அடிப்படை அறிவியல் பயன்பாட்டு அறிவியல் பொறியியல் தொழில்நுட்பவியல், மருத்துவ அறிவியல், உயிரியல், வனவியல் என்றவாறு பிரியும். இன்னும் பல உட்கூறுகளாகவும் பிரியும் கலையியலை எடுத்துக் கொண்டால் வரலாறு பூகோளம், பொருளியல், சட்டம், அரசியல், மேலாண்மை பழகும் பாங்கியல் என்பது போலப் பலவாக விரியும்.

ஒவ்வொரு உட்பிரிவும் மேலும் பல கிளைகளாகப் பிரியமே. அந்த உட்பிரிவுகளும் மேலும் பல கூறுகளாகப் பிரியும் மேலே கண்ட புரிவகுள் பெரிதும் மேலோட்டமானவை. எல்லா உட்பிரிவுகளிலும் குறட்பாக்கள் இருக்க வேண்டிய தில்லை. அணுப்பிளவைப் பற்றிய குறள் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அதனால் குறளின் பெருமை ஒன்றும் குறைந்துவிடாது.

சரியான பிரிவுகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அவற்றின் படிப் பகுக்கலாம். நான் பிரிக்கும் பகுப்பு இன்னொருவருக்குப் பொருத்தமாக இல்லை என்று கருதினால், அவர் வேறு பகுப்பைக் கையாளலாம்.

இதுவரை அத்தகைய பகுப்புகள் ஏன் வரவில்லை? திருக்குறள் பொதுநூல் என்ற கருத்தை இந்த அறிவியல் எடுத்துக் கொள்ளாமல் அது ஏதோ புலவர்கள் நூல் என்று அதனுள் தயங்கித் தயங்கி நுழைவதும் ஒரு காரணம். நமக்கு என்ன தெரியும் என்ற தன்னடக்கம் ஒரு காரணம் நாம் ஏதாவது கூறினால் புலவர்கள் ஏதாவது கூறிவிவார்களோ என்று அச்சமும் ஒரு காரணம். நாடறிந்த தமிழறிஞர் ஒருவர் இவ்வாறு கூறுவதுண்டு. பொறியாளர்களெல்லாம் உங்கள் பாடத்தில் ஆராய்ச்சி செய்வதைவிடுத்து ஏன் தமிழின் பக்கம் தலை காட்டுகிறீர்கள் என்பார். அதுவும் சில வேளைகளில் சரியாகத் தான் உள்ளது. சிலர் தமிழைச் சற்று ஆழப் படியாமல் தன் பதவி காரணமாகவும் தான் செல்வதற்கு ஆமாம் போட ஆளிருப்பதாலும் எதையாவது அரைகுறைச் செய்திகளைக் கூறிவிட்டு அப்போது கைதட்டலைப்

பெற்றுக் கொள்வதுண்டு. அதற்குப் பின்னர் மறுப்புகள் கூறித் தவறான கருத்தை நேர் செய்ய நீண்டகாலம் பிடித்துவிடுகிறது. நன்றாக ஆராய்ந்து பேசும் அறிவியலாருக்கு இது பொருந்தாது அதற்காகத் தமிழ் எப்படியோ போகட்டும் என்று அவர்கள் ஒதுங்கியிருக்கவும் முடியாது.

திருக்குறள் பலராலும் நன்றாகப் படிக்கப்பட்டு ஆராயப்பட்டால் அதிகம் மகிழ்பவர்கள் நம் தமிழறிஞர்கள் தான். ஏனெனில் எல்லா அறிவியலாரும் பள்ளியில் தமிழாசிரியரிடம் பயின்றிருப்பர் அதனால் அவர்களின் மாணவர்களின் முயற்சி அவர்களுக்கு இன்பமே தரும். திருக்குறள் பல பாக்களுக்கு அறிவியல் கண்ணோட்டம் இல்லாதால் முழுக்கத் தவறான பொருளை எல்லா உரையாசிரியர்களும் கூறியிருக்கின்றார்கள் சான்றாக 523 ஆம் குறள் உரையில் கரையில்லாத குளம் போன்று என்று உரையாசிரியர்கள் கூறுவர். கரையில்லாவிட்டால் அது குளமே அல்ல. கோடு என்ற சொல்லுக்கு ஒரு முனை என்ற பொருள் இருந்தும் அதனை மறந்து கோடு என்பதனைக் கரை என்று மட்டும் எடுத்துக் கொண்டதால் வந்த வினை.

இனி, சில குறட்பாக்களைக் காண்போம்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு *(குறள் 396)*

கல்வி என்னும் அதிகாரத்தில் உள்ள திருக்குறள் இது. இதற்கு ஒரு மணற்பாங்கான பூமியில் தோண்டிய கிணற்றை உவமானமாக்கு கிறார். இந்தக் குறள் நீர் வளயியலிலும் இடம்பெறவேண்டும்.

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று *(குறள் 523)*

சுற்றந்தழால் என்னும் அத்தியாயத்தில் வருகிற குறள் இது. அளவளாவு என்றால் பேச்சுவார்த்தை. பேச்சுவார்த்தை என்றால் அது சுற்றத்தாரோடுதான் இருக்க வேண்டும் என்று உரை யாசிரியர் முடிவு செய்துள்ளார் என்று தெரிகிறது. சுற்றத்தாரோடு பேச்சு வார்த்தை இல்லாதான் வாழ்க்கைக் ஒரு ஏரியை உவமானம் காட்டுகிறார். கோடு இல்லாத ஏரி நீர்நிறைந்ததது போல் என்று உவமிக்கிறார் உரையாசிரியர்கள் கோடு என்பதைக் கரை என்று பொருள் கொள்கிறார்கள். கரை இல்லையென்றால் அது குளமே அல்ல. அது எப்படி நிரம்ப முடியும். இங்கு கோடு என்பது கலிங்கைச் சுட்டும் கலிங்கு இல்லாத குளத்தில் நீர் நிறைந்தால், மிகை நீர் வெளி யேற முடியாமல் கரை மீது வழியும் கரை பெரும்பாலும் மண்ணால் ஆனது. மிகை நீர் கரைமீது வழிந்தால் கரைமண்ணில் அரிப்பு ஏற்பட்டுக் கரை காணாமல்

போய்விடும். நீர் முழுதும் ஆற்றிற்கே ஓடிவிடும். அந்த ஆண்டு வேளாண்மை செய்ய இயலாது.

இரண்டு வகையில் இதற்குப் பொருள் கொள்ளலாம். ஏரி நிரம்பும் வரை நீ யாருக்கும் உதவ வேண்டியதில்லை. அது உன்னுடைய தேவைக்கே போதுமானதாக இருக்கும். ஏரி நிறைந்த பின் கோடி வாயிலாகச் செல்லும் நீர் உனக்கு உபயோகமாவ தில்லை. அது மிகைநீர் உன் சொந்த பந்தங்களுக்கு அதைப் பயன் படுத்தலாம். இங்கு நீர் என்ற தெல்லாம் செல்வம் தனக்கு மிஞ்சித் தான் தானம். தர்மம் எல்லாம். சுற்றத்திற்கும் இது பொருந்தும் இது பொருளியல் அதிகாரத்தில் இருக்க வேண்டும். குடும்பம் என்ற அதிகாரத்திலும் இருக்கலாம்.

அறிதொறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு *(குறள் 1110)*

ஒவ்வொரு புதிய செய்தியை அறியும்போதும். அடடா, இவ்வளவுநாள், இதனை அறியாமல் இருந்துவிட்டோமே என்று உணருகிறோம். இது மிகப்பெரிய அறிவியல் உணர்வு. பொது அறிவியல் பகுதியில் முதலில் வைக்கவேண்டிய குறள் என்பதில் ஐயமில்லை.

குறள் நூலில் இது காமத்துப்பாலில் இடம் பெற்றுள்ளது. அதுவும் உண்மைதான் நாம் முதல் வரியை அறிவியல் அதிகாரத்திலும், இரண்டாம் வரியைக் குடும்பம் என்ற பகுதியிலும் வைக்கலாம்.

தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு *(குறள் 1107)*

நம் வீட்டில் இருந்து கொண்டு, நம்மிடம் இருப்பவற்றை உரிய முறையில் பகுத்து ஒதுக்கீடு செய்துகொண்டு வாழ்வோம் என்பது மிகச்சிறந்த பொருளியல் உண்மை. பொருளியல் அதிகாரத்தில் வரவேண்டிய குறள் இதுவாம். எனவே முதல் வரியைப் பொருளியல் அதிகாரத்திலும் இரண்டாம் வரியைக் குடும்பத்திற்கான பகுதியிலும் வைக்கலாம்.

இது போன்று ஏராளமான குறிப்புகளைக் கூறமுடியும். இந்தக் கருத்தரங்கின் நோக்கம். 'இக்கால உலகிற்குத் திருக்குறளின் தேவை' என்பதாகும். அதற்கொப்ப இக்காலக் கலையியல் அறிவியல் பகுப்புகளுக்கேற்பத் திருக்குறளையும் பகுத்து ஆராய்தல் நலம்தரும். ஒவ்வொரு துறையிலும் நூல் எழுதுவோர் முதலில் குறட் கருத்துகளைக் கூறி அதனை ஆராய்வதன்மூலம் தன் நூலைத் தொடங்க வாய்ப்பாக இருக்கும்.

❋ ❋ ❋

'THIRUVALLUVAR AATHICHOODI' - AN INNOVATIVE CONCEPT IN THE WORLD OF THIRUVALLUVAM

N.V. Subbaraman

Is it the world consisting of different states with their own culture and language, heritage and civlization, economy and industries, governance and geogaphical boundaries? or is it a distinctive lcass of persons or their sphere of interest? Or is it earthly state of human existence? Or is it the inhabitants of earth- the human race? Is it the old world - its characteristic especially having the charm or piectureque qualities?

Is it the modern world involving recent techniques, methods and ideas? Is it the modern world-its fast-changing culture and ethos, wasy of governance and economy? Is it the make believe world or the world wherein the tragedy of human history is 'decreasing happiness with increasing comforts?



India - Mera Bharat Mahan

Indian civilization is one of the most ancient civilizations of the world. India with its age old culture and heritage has talked about the universal brotherhood and oneness of humanity from time immemorial. "Vasudaiva Kutumbakam" -the core Indian philosophy

treats the entire universe as one family. India has provided inspiration to several countries of the world to become a free nation. Great national poet Subramania Bharathiyar, sone of Tamil soil sings in joy and ecstasy

In the world, India is great
Great indded in its
Knowledge and charity, Godhood and dignity
Music and poetry, wealth and chivalry
Strength and valour, knidness and compassion
Godness and power, Science and philosophy
Achievement and development, bobility and chastity
Fortitude and willpower, intelligence and wisdom
Scholarship and Divinity, mercy and life divine
Rivers and waterfalls, trees and groves
Fruits and flowers, fauna and flora!

Yes East and West, South and North all over the world look to India for peace and serenity!

TAMILNADU - ITS CONTRIBUTION

Tamilnadu with its ancient civilization and rich heritage has contributed in enormous measure for the progress and greatness of India through its language and literature, scientific achievement and economic development. Patriotic leadership and the laws of good governance, archeology and architecture, systems of medicine and engineering have lent colour to India's glory.

TAMIL, THIRUVALLUVAR AND THIRUKKURAL

Tamil, one of the most ancient languages yet vibrant and dynamic with its inexhaustible thoughts in every realm influencing humanity through its literature centuries and centuries old, has contributed art and literature of the highest order. Tamil a great classical language - very rich in grammar and research work in all fields of human endeavours - has in fact contributed a major share for the glory of India and Indian people, to humanity at large all over the earth. Influence of Tamil has spread to many continents of the world.

Thiruvalluvar, one of the greatest of thinkers the world has witnessed, born more than two thousand years ago in this very glorious city of Chennai has contributed his most valuable work Thirukkural has conveyed when followed truthfully in letter and spirit will make this earth verily heaven. Hardly is there any subject in the world that has not been dealt with by Thiruvalluvar and that in fact has made Thirukkural a universally accepted common scripture of eternal truths. This is probably the only work that has been translated into more thatn 90 languages of the world. That indicates the universality of this

great work. Monumental contribution and rarest gift of Tamilnadu to India and the world is Thiruvalluvar and his marvellous Thirukkural.

THE NEED OF THIRUKKURAL TO THE MODERN WORLD

Today's world has shrunk and various countries have become nearer like neighbours thanks to the advancement in science and technology. Paradox of the modern world is that we have poverty and plenty, illiteracy and scholarship, very healthy people and extremely sick, peace and war, joy and sorrow, capitalism and communism, religious tolerance and communal fanaticism, politics of peace and progress and terrorism - the pairs of opposites afflicting humankind. Tragedy of today's human history is truly lesser happiness with more comforts.

"Rulers" here or elsewhere in the world have become insensitive to the "ruled". Have a look at some data on all-powerful America. Enjoying all conceivable luxuries of the modern world, they are under the greatest strain and stress of modernity and are in search of peace and poise. More than 70% of Americans sleep under the influence of sleeping pills only. More than 50% of the income is spent on sickness and the destitute. 40% of the children do not know their parents. More than 25% of the ladies become mothers before they are 12 years of age. 80% of marriages end in divorce! What a miserable condition as a country? The world-modern world-is afflicted with ills and evils. Can Thirukkural - the magnum opus cure the ills and be a panacea for all the evils spread in society? Yes, to a great extent if the tenets of Thirukkural are followed by society - the modern world.

WHAT DOES THIRUKKURAL SPECIFICALLY OFFER?

1) It can build up men of character and vision, nobility and virtues.
2) It provides directions to the rulers for good governance
3) It provides path for universal brotherhood and oneness of humanity.
4) It gives essential inputs in different realms influencing humanity in science or technology, medicine or economics, sociology or politics.
5) It this paper, I shall focus only on two important realms of the modern world that makes acute the need for Thirukkural. One is self development on which the development of Society rests and the other is on good governance.

THIRUVALLUVAR AATHICHOODI - Bonzai! - An innovative concept in the world of Thiruvalluvam

These are the days of bonsai! Society is moving fast. This is the age of robots and computers. There is no time even to enjoy a leisurely dinner with their beloved ones. Surely it needs a shortened

version for every thing. Thirukkural by itself is just couplets with seven seers in less than two lines. In order to give the message of even such short couplets in a capsule form, one authority on Thiruvalluvam, a great scholar and thinker who has dedicated himself to propagate the message of the Saint far and wide, Dr. Cheyon, has come out with his innovative work Thiruvalluvar Aathichoodi. In fact this work received a tremendous response from the literary world that caused translation of the work into English and Hindi. The second edition of the English version is in the offing.

The Tamil literary world is well aware of a particular form of literature 'Aathichoodi' originally handled ably by the grand old lady of Tamilnadu 'Avvayar' who by one account happens to be the contemporary of Thiruvalluvar and by another school of thought belongs to a later period. She won the hearts of all through her literary works- most significant is her Aathichoodi - phrases of profound meaning and message to the world, in simple terms beautifully arranged in Tamil alphabetical order consisting of 108 gems of wisdom. Mahakavi Bharathiyar and his disciple Bharathidasan, revolutionary poets of 20th century also came out with thier own Aathichoodies with 110 and 85 phrases.

Aathichoodi recognized as a type of literature has its own grammatical parameters and any that does not conform to the norms cannot be recognized as such. While Avvaiyar Aathichoodi is well known and widely recognize for its morals particularly meant for young children to read, remember and follow in their lives, Bharati's and Bharathidasan's had a great emotional impact, of course, in tune with the times and the demands of the age in which they lived. India was in the midst of her freedom struggle and the Indians had to be aroused and awakened.

Though these three different Aathichoodies had their own contributions to the needs of the times, some of the dictums such as 'Thaiyal sol kelel' (Don't be led by a woman) or 'Bhoomi thiruthi unn' (Tilling the ground, earn your food), 'Portozhil puriyel' (Do not indulge in war) etc of Avvayar or 'Oon miga virambu' (Love meat) or 'Sothidanthanai igazh' (Scorn Astrology) or 'Ngemali pol vazhel' (Live not like a dog) etc. of Bharathiyar or 'Aatchiyai podhumai sei' (Socialise governance) or 'Chadu pirarku uzhaital' (Fourth category of people is to serve) or 'Parpu podhu pagai' (Brahmin race common enemy) etc. of Bharathidasan are out of place in the modern world.

Thiruvalluvar phenomenally produced by Madame. H.P.Blavatsky at New York in front of Mr.Judge, Dr.Marquette and Col.H.S.Olcott, and which was missing from the frame hung in Col.H.S.Olcott's bedroom in New York, and later dropped before Col. H.S.O in front of Damodar - is still in the Archives of the T.S. headquarters at Chennai and is displayed for visitors during the Annual Convention. You can see this on other days with prior permission.

These incidents are described in The Old Diary Leaves Series 1, pages - 367 to 369 and Series 2 - page 214. Madame H.P.B. has mentioned the name of this Yogi as Tiravala and mentioned his period as more than 1000 years ago. But in Tamilnadu there is a calendar according to which he is supposed to have lived 2034 years ago. Madame. H.P.B. has mentioned that this Yogi still lives at Tirupati and Nilgiri Hills in Tamilnadu and keeps watch and ward over Hinduism.

GREATNESS OF YOGIS / HERMITS

Theosophy believes in the existence and also in the greatness of the Yogis. The Rishis/Masters/Mahatmas or Superhuman beings are Raja Yogis. Thiruvallur has also placed the greatness of Yogis in the 3rd chapter in his Kural in ten couplets.

21. All different scriptures confirm the greatness of those Yogis who have renounced everything.

22. To measure the greatness of those Yogis, who have renounced this world, is like trying to count the number of persons so far dead.

23. The world praises the greatness of those Yogis who have chosen to be Yogis after realizing the two different worlds of rebirth and liberation.

24. He who bridles firmly his five senses by determination is a fit seed for the great immortal world.

25. Indra the Lord of Heaven and the Master of those heavenly beings, who do not shut their eyes, is the witness for the might of those Yogis who have renounced the world by controlling the five senses.

26. Great persons will achieve the impossible and the mean-sprited cannot do so.

27. The world is in the hands of those who have realized the true nature of the five senses like taste, sight, touch, sound and smell.

28. The greatness of the persons who have mastered all scriptures will be understood by the Vedic words left by them.

29. It is impossible to bear even for a moment the anger of those who have ascended the mountain of goodness.

30. True Brahmins are those righteous persons who do only what is good for all lives.

Apart from the above 10 couplets he has mentioned the greatness of Yogis in chapter 24,and 27 also.

235.In spite of pain and pleasure Yogis endure life and postpone death.

264.The Yogi can by his will power destroy those who try to harm the practice of Yoga and can also bestow blessings on those who aid the practice of Yoga.

269.A Yogi who has mastered Yoga by penance can postpone death by his Yogic power.

REINCARNATION

Theosophy believes that life begins and dies in each planet in a cycle. When the life in a planet dies the life in another planet will start. In our planet Earth there are seven major or root races of human life. Within every major or root race there is still another seven minor races of life. Within every minor race there are still seven sub-ordinate races. So 7 x 7 x 7 =343. The life of a man has to undergo 343 times of birth and death before he can think of making himself another Buddha or attain Nirvana or Moksha. When the last round is completed he becomes a fully developed human being. Then he graduates from humanity and becomes a Master or Mahatma. The gap between one birth and another birth may be a few seconds or nothing and may also go beyond a kalpa. In Tibet the Dalai Lama is considered the person who is born within Tibet at the time of the death of the curreny dying Dalai Lama. One may be born again and again in the same cycle till one becomes fit to pass on to the next cycle. This is reincarnation. So it is not really 343 births but may take more.

In the present situation the life of human beings on our planet Earth has come to the 4th round. That does not mean that all human beings that live now have reached the 4th round or race. Only a few very advanced beings equal to the Masters might have

reached this stage. But others may be in other stages of evolution. That is why we find different kinds of people in every country.

Master K.H. mentions in his letter to A.P.Sinnett that: "The perfect man or the entity which reached full perfection, (each of his seven principles being matured) will not be reborn here. His local terrestrial cycle is completed and he has either to proceed onward or-be annihilated as an individuality."

Theosophy teaches that all life is ONE and also teaches in reincarnation. Thiruvalluvar also has given importance to reincarnation and the instability of life and wealth in chapter 7, 11, 13, 40 and 34 in his Kural.

62. No evil will touch the life and no bad Karma will follow for seven subsequent births those who have begotten good children.

107. Good people will keep in their hearts the memory of those who have helped them, in their subsequent seven times seven births.

126. As the tortoise withdraws his four legs and one head inside its shell to protect it from danger, like wise if one can control his wavering five senses (like the taste of the tongue, sight of the eyes, touch of the body, sound of the ears and smell of the nose) - that self control will give him protection and fame in his seven subsequent births.

398. The education one has received in one birth accompanies him in his seven subsequent births and gives him fame.

Understanding the instability of life and wealth (Chapter-34)

331. The unwise consider wealth and the body as permanent, when in fact they are evanescent.

332. The wealth acquired is like the crowd in a theatre and its loss is also like the theatre becoming empty after the show.

333. Wealth will not stay with one forever, so when one acquires wealth he must use it for charitable purposes, the benefit of which will come in the lives to follow.

334. Each day in the life of a man is like teeth in the saw that cuts his span of life.

335. Good deeds must be done in one's life before the tongue is paralyzed and the soul leaves the body.

336. One who is known to have lived for so many years, is not there today-is not life great!

337. One who is not sure whether he will be alive in the next moment thinks of more than 10 million things at a time.

338. The friendship of life with the body is like a new-hatched bird flying away from its shell.

339. Death is like sleep and birth is like awakening from sleep.

340. It is a pity that the soul, which takes only temporary shelter in a body, has no permanent home!

KARMA / DESTINY / FATE

Theosophy believes in Karma. What is Karma? Different persons have given different meanings at different times. It is similar to Newton's first law of motion. "For every action there is an equal and opposite reaction." Throughout our different lives on this planet or elsewhere we continuously do some kind of Karma or Action. So accordance with the law of equal and opposite reaction do we get results. One who works for a month in an office gets his salary at the end of the month as his reward for his services. Some of our Karma or Actions bring immediate reaction or result like the journey in a bus after paying for the fare. But some of our Karma or Action may bring a reaction or result like the monthly salary or the insurance payment. But there are some actions, which may take a lifetime, or many lives to get their reaction or result. Only this kind of reaction or result is what we generally mean by Karma.

Karma is like a Bank Account. The moment one is born for the first time as a human being his account is opened. This is what the Hindus call the account of the Chitrakupthan. This account continues till he becomes a Buddha or attains Nirvana or Moksha. After that only a consolidated balance is transferred to the individual soul. For every good or bad action we do to others our Karmic Account is either credited or debited. You are bound to reap the credit or debit balances in the lives to come. When you do some good to another person that person may or may not repay it in your next birth. But Karma will see to it that you reap the result. The Karmic Account is a sole proprietor account. It neither favors nor betrays any one. The Accountant is honest to the core. But

the balance in the account appreciates or depreciates according to the Yuga Dharma called Kali Yuga, Dwapara Yuga, Treta Yuga or Krita Yuga.

Our Tamil Hermit poet Thiruvalluvar has confirmed the effect of Karma in chapter 32 and has also given ten couplets on Karma / Destiny / Fate in chapter 38.

319. As the evening is followed by morning the result of one's Karma will automatically follow suit.

371. Perseverance to acquire wealth comes from one's own good karma, and idleness in losing wealth comes from bad Karma.

372. Even though one is endowed with all knowledge it will be of no use if one has bad Karma, but with good karma one will be rich and happy even though one may be a fool.

373. Even though one may learn minute texts of knowledge, one's own inborn wisdom due to Karma will prevail over learning.

374. To acquire wealth and to acquire wisdom are different; hence naturally they are two different worlds.

375. Due to the power of Karma it may be that all right activities to acquire wealth end in misery, and the wrong activities result in wealth.

376. Due to Karma the wealth guarded with utmost care will be lost and the lavishly spent wealth will multiply.

377. Unless determined by one's Karma, one cannot enjoy even the wealth of ten millions acquired by oneself.

378. Due to Karma one who does not know what poverty is may renounce every thing and become a Yogi.

379. Why should one who is pleased with good fortune worry when it is otherwise?

380. What is more powerful than Karma-even if one tries all possible ways to avert it, it will finally win!

From our above study we can understand that Thiruvalluvar also has stated Theosophy in a nutshell, which is his speciality.

BIBLIOGRAPHY

1. Author: M. Mohana Sundara Pandian, Title: Introduction to Theosophy and The Theosophical Society. Published by: Mr.M.Mohana Sundara Pandian, 48, Pandian Street, Sankaran Avenue, Chennai-600 042. Year of Publication: 2003, Pages: 90.
2. Authors: Mahatmas M & K.H., Title: The Mahatma Letters to A.P.Sinnett. Published by: The Theosophical Publishing House, Adyar, Chennai-600 020, Year of Publication: 1923, Pages:524.
3. Author: Col.Henry Steel Olcott, Title: Old Diary Leaves, Published by The Theosophical Society, Adyar, Chennai-600 020, Year of Publication: 1935, Volumes: 6.
4. The Holy Bible. Published by British and Foreign Bible Society, 146, Queen Victoria Street, London.

⁂

திருக்குறளில் எதிர்காலவியல்

கருவை. பழனிசாமி

அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் நான்கு இலட்சியங்களுக்கும் குறைவு வராமல், இடையூறு இல்லாமல் நாம் பணியாற்றுவதற்கும் வாழ்வதற்கும் எதிர்காலவியல் பற்றிய அறிவாண்மை உதவக்கூடியது. எந்த அளவிற்கு எதிர்காலவியல் பற்றிய அறிவை வளர்த்துக்கொண்டு கால சட்ட வரம்புகளுக்கு (சூழ்நிலை வாய்ப்பு வரம்புகளுக்கு) உட்பட்டு பயன்படுத்திக் கொள்கிறோமோ அந்த அளவுக்கு அந்த இலட்சியங்களை வெற்றிகரமாக எட்ட முடியும் என்பது கட்டுரையின் மையக்கருத்தாக உள்ளது. ஆய்வு நெறிப்படி சுட்டுவதனால் திருக்குறளில் எதிர்காலவியல் இடம் பெற்றுள்ளது; தனியார்துறை (குடும்பம் உள்ளிட்ட தொழில் வணிகம்) அரசு சார்ந்த பொதுத்துறை, கூட்டுறவுத்துறை மூன்றிலும் திருக்குறள் கண்டுள்ள எல்லைகளைக் குறைவின்றி எளிதாக எட்ட இயலும் என்பது இக்கட்டுரையின் கருதுகோளாகும்.



திருக்குறளில் காலத்தை உணர்த்தக் கூடிய பலவகைச் சொற்களும் இடம் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

காலம்	95-9	நெருநல்	105-8, 34-6
பருவம்	103-8	ஊழில்	99-9
பொழுது	123 ஆவது அதிகாரம் 34-6	என்றும்	98-8
காலை	123	முற்பகல்	
மாலை	123	பிற்பகல்	32-9
பகல்	123-49-1	நாள்	24-4, 18-6, 4-8
யாமம்	117	அன்று	4-6
இன்று			

காலத்தோடு தொடர்புடைய சில சொற்களும் திருக்குறளில் உண்டுஅவை

பிறப்பு - இறப்பு - கூற்று

பழந்தமிழ் இலக்கணங்களிலும் தமிழ் இலக்கியங்களிலும் காலம்பற்றிய தெளிவான கொள்கை உறுதி செய்யப்பட்டுள்ளது. இலக்கணத்தில் சொல்லதிகாரம் வினை இயலில் காலம் தெளிவாக்கப்பட்டுள்ளது. இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் காட்டக்கூடியது வினைச் சொல் என்பது விதி. காலம் காட்டும் வகையில் வினைத்திரிவு (Conjugation) என்ற கொள்கையை உருவாக்கி வினைச் சொல்லின் மதிப்பினை நிறுவியவர் திராவிட மொழிகளில் ஒப்பிலக்கண ஆய்வை மேற்கொண்ட இராபர்ட் கால்டுவெல்.

பொருளாதாரம் அகப்பொருள் புறப்பொருள் நிலைகளில் கால வகையைக் காண இடமுள்ளது. அகத்திணை ஐந்திற்கும் பெரும்பொழுது, சிறு பொழுது வரையறுக்கப் பட்டுள்ளது. திருக்குறளில் காலமறிதல் என்ற ஒரு தனிஅதிகாரம் புறத்திணை வகுத்த போர் நெறியைத் திட்டமிட உதவக்கூடியது.

இப்போது தமிழில் வழங்கிவரும் ஆண்டுப் பெயர்கள் 60, மாதப்பெயர்கள் 12, தினப் பெயர்கள் 7 திருக்குறளில் இடம் பெறவில்லை.

பருவங்களைச் சுட்டப்பயன்படும் இளவேனில்,கூதிர், கார், பனி ஆகிய பெரும்பொழுது திருக்குறளில் இல்லை. வைகறை, எற்பாடு ஆகிய சிறுபொழுதுப் பெயர்களும் குறளில் காணவில்லை

பேதை (1106) (1238), மடந்தை (1116) அரிவை (1107) மடந்தை, மிக நலம் பெற்றாள் தமியள் மூத்தற்று (1006) ஆகிய பெண்பால் பருவப் பெயர்களும் திருக்குறளில் கையாளப்

பட்டுள்ளதை அறியமுடிகிறது. நொடி, நிமிடம், மணி, ஆண்டு, வாரம், மாதம் ஆகிய காலப் பெயர்கள் திருக்குறளில் காண வில்லை. ஒருமை, இருமை, இம்மை, மறுமை, எழுமை, பிறவிப் பெருங்கடல், வாழ்நாள்ஆகிய காலம் சுட்டும் பெயர்கள் திருக்குறளில் உண்டு.

இக்காலத்தில் உள்ள பிறந்த நேரம், இறந்த நேரம், வயதுக்கு வரும் நேரம், முகூர்த்த நேரம், புதுமனை புகும் நாள் பார்க்கிற பழக்கம் திருக்குறளில் காட்டப்படவில்லை. பிறந்த நாள், மணநாள், மணிவிழா, பவளவிழா, வெள்ளிவிழா, பொன்விழா, முத்துவிழா ஆயிரம் பிறை காண்பது எல்லாம் திருக்குறளில் இல்லை.

63 நாயன்மார்களில் ஒருவராகப் போற்றப்படும் சோழ மன்னன் செங்கணான். அவனைப் பெற்றெடுத்த தாய், சோதிடர்கள் கணிதப்படி ஒரு நாழிகை கழித்துப் பிறந்தால் குழந்தையின் எதிர்காலம் சிறந்து விளங்கும் என்ற செய்தியை ஏற்றுக்கொண்டாளாம். அந்த நேரம் வரும் வரை தன் இருகால்களையும் தூக்கிக்கட்டும்படிச் செய்து உரிய நேரத்தில் மகனைப் பெற்றாளாம். அதன்காரணமாகக் குழந்தையின் கண்களில் இரத்தம் ஏறிவிட்டதாம்.அவனை ஈன்ற போதில் "எங்கோ" செங்கண்ணன் என்று அழைத்துப் பூரித்தாளாம் சோழ அரசி. திருஞான சம்பந்தர் பாடிய **கோளறு பதிகமும், நாளென் செய்யும் வினைதான் என்செய்யும் என்னை நாடி வந்த கோளென் செய்யும்** என்ற கந்தரலங்காரப் பாடலும் கால ஆய்வின் நன்மை தீமைகளை அறை கூவும் பாங்கினது. பிறப்பு இறப்பு நட்சத்திரங்களை ஒட்டிய நன்மை தீமைகளை ஒட்டிய ஆய்வு முறைகளும் காலம் பார்க்கும் பண்பாட்டையே காட்டும். அரசவைக்கு வந்த சோதிடர்கள் இளங்கோ அடிகளின் எதிர்காலத்தை அறிவித்ததைக் கேட்டதும் செங்குட்டுவனுக்குச் சினம் பொங்கியது. அது கண்ட இளங்கோ, உடன் துறவு மேற்கொண்டதாகச் சிலம்பு கூறும்.

வருவதுணர்த்தும் வகையில் திருக்குறளும் சோதிட நூலின் கூறுகளை ஜாதகப்பலனை உள்ளடக்கியதோ என்று கருதலாமா?

யூகமே யோகம்
ஊக்கமே பாக்கியம்

என்ற தொடர்கள் இந்திய தத்துவ முலாம் பூசப்பெற்ற உண்மையை மனோன்மணிய நாடகத்தில் காணமுடிகிறது.

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய் *(குறள் 429)*

ஒவ்வொருவருடைய வாழ்விலும் எதிர் பாராத செலவும் எதிர்ப்பார்க்கக்கூடிய செலவும் வருவதுண்டு. உதாரணமாக உடல்நோய், விபத்துச் செலவு எதிர்பாராமல் திடீரென்று வரக் கூடியவை. எப்படித் தீர்ப்பது? கல்விக்கட்டணம், புத்தகம், சீராடைச் செலவுகள், திருமணம் எதிர்பார்க்கக்கூடியவை. எப்படித் தீர்ப்பது? ஆயுள் கடன் வாங்க வழி உண்டு. களவாடக் கூடாது; பிச்சை எடுக்கக்கூடாது. கைவிடவும் கூடாது. நடுங்கிச் சாகும் துன்பம் தீர்ப்பது எதிர்காலவியல். அதைச் சுட்டு வகுப்பது குறள் நெறி ஓர் எச்சரிக்கை, ஓர் விழிப்புணர்வு,

வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும் *(குறள் 435)*

முன் மொழிந்ததையே வழி மொழிகிறார். விழிப்புடன் இருந்தாலன்றிக் கேட்டிலிருந்து தப்ப வழியேஇல்லை. வைக்கோல் முன்னர் தீப்பந்தம் எளிதாகப் பற்றி நாசமாக்கிவிடலாம். அப்படித்தான் சேமிப்பு ஆகிய வருமுன் காப்பதை வளர்த்துக் கொள்ளாதவன் துடிதுடிப்பான். திண்டாட்டம் - மன அதிர்ச்சிக் குள்ளாக நேரும். எதிர்காலவியல் அறிந்தவனும் எதிர்காலவியல் அறியாதவனும் எப்படி இருப்பார்கள் என்பதற்கான கேலிச் சித்திரமே இவ்விரு பாடல்களும். இதற்கான வழிகாட்டுவது மூன்றாவது குறள்.

உற்றநோய் நீக்கி உறாமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல் *(குறள் 441)*

வருவதுணர்த்தக்கூடிய அறிவு - படிப்பறிவு பட்டறிவு ஆகியவற்றால் வந்த துன்பம் நீக்கவும் துன்பத்தைப் போக்கவும் ஆலோசனை கூறவல்ல ஆற்றல் மிக்க பெரியாரைப் போற்றிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இனி, கால மறிதலில் மணி மணியான கருத்துரைகளை அடுக்கி எதிர்காலவியலை அரண் செய்கிறார் திருவள்ளுவர்.

வாழ்க்கையில் இன்பம் துன்பம், மேடு, பள்ளம் ஏற்ற இறக்கம் எல்லாமே உண்டு.

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளியவர் *(குறள் 487)*

துன்பம் நேர்கையில் இன்பம் சேர்க்க முடியும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

கலங்கிக் கலங்கி நம்பிக்கையைத் தளர விடக்கூடாது. பள்ளத்திலே வீழ்ந்துவிட்டதனால் சோர்ந்துவிட வேண்டாம். எதிர்காலம் உண்டு. மேடு ஏற ஊக்கம் கொள்ள வேண்டும். அதற்கான காலம் வரவர மேடு ஏறிட இயலும். இறக்கம், சரிவு, தோல்வி எல்லாம் ஊக்கமுடையவன் முன் போர்க்கிடாப் போலப் பின்வாங்குவதாகவே அமையவேண்டும். வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை என்ற தொடரில் வருவது தீமை, முன்னர் என்பது ஒரு காலப்பெயர், தீமைவரும் முற்காலத்திலே என்பதைக் காக்கும் காலமாகவே கருத இடமுள்ளது. அதனால் இது எதிர்காலவிய லாகிறது.

கழிகாமம் ஒரு தீமை, கடுங்கோபம், தன் முனைப்பான செருக்கு, அற்றார் அழிபசி தீர்க்கவேண்டிய போது பொருள் தராத கருமித்தனம், தாய்,தந்தை சான்றோர் அறவோர் ஆகியோரை வணங்காத சுயாபிமானம், கழிபேருவகை காரணமாக வெளிப்படும் கழிகண்ணோட்டம் ஆகிய ஆறு வகைத் தீமைகளால் வாழ்க்கையில் அறக்கேடும், பொருட்கேடும், இன்பக்கேடாகிய சுகக்கேடும் வந்து துன்பம் நேர்கையில் வாழ்க்கை சீரழியும். அதனை அறிவு, ஆண்மை, பெருமை ஆகியவை மூலமாக ஆற்றல் கொண்டு தடுப்பதே எதிர்காலவியல். அதற்குச் சாம, பேத, தான, தண்டம் ஆகிய நால்வகை உபாயங்களைக் கொண்டு தடை ஏற்படுத்துவது எதிர்காலவியல் கடமை. அதற்கு அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ச்சியான பெரியாரைத் துணைக்கொள்வது அவசியமாகிறது.

மழையினது இன்மை, மிகுதிகளால் வரக்கூடியு தீமை, கடுங்காற்று, பெருந்தீ விபத்து, கடும் பிணிகளால் வரும் தீமை, கடவுளரையும் தக்கோரையும் நோக்கிச் செய்யும் சாந்திகளால் நீக்கப்படும்.

மக்களால் வரும் துன்பங்கள், பகைவர், கள்வர், சுற்றத்தார், வினை செய்வார் என்று இவர்களால் வருவன இவைகளைச் சாம, பேத, தான, தண்டங்களில் ஏற்ற உபாயத்தால் நீக்க வேண்டும்.

தெய்வத்தால் வரும் தீங்குகளை உற்பாதங்களால் அறிய வேண்டும். பரிகாரங்களால் நிவாரணம் தேடவேண்டும்.

மக்களால் வரும் தீங்குகளை அவர் குணம், இங்கிதம், ஆகாரம், செயல் என்பவற்றால் அறிய வேண்டும். நால்வகை உபாயங்களைத் தக்கப்படி பயன்படுத்தி ஒன்றால் காத்தல் வேண்டும்.

உற்றநோய் நீக்கி உறாமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல் *(குறள் 442)*

புரோகிதர், அமைச்சர் என்பவரே பரிமேலழகரால் பெரியார் என்று சுட்டப்பட்டனர்.

எதிர்காலவியலைக் குறைவில்லாமலும் தடை இடையூறு களில்லாமலும் அறியத் துணை நிற்கும் பெரியாரைத் துணைக் கோடல் அரியவற்றுள் எல்லாம் அரிது என்றும் வன்மையுள் எல்லாம்தலை என்றும் போற்றிக் கொண்டாடுவார் வள்ளுவர். எதிர்காலவியலை அடையாளம் கண்டு காட்டி உதவும் நல்லாரே பெரியர். அவர் தொடர்பைக் கைவிட்டால் பல மடங்கு பகையை விட பன்மடங்கு தீமையாகிவிடும்.

மூவகை ஆற்றலும் நால்வகை உபாயங்களும் கொண்டு வல்லமை எல்லாம் கையாண்டாலும் ஏற்றகாலம் கண்டறிந்தால் ஆகாதகாரியம் எதுவும்இருக்க முடியும். தக்க காலத்தை அலட்சியமாக எண்ணாதபோது கைகூடாத காரியமும் எளிதாகவே கைகூடும். வலிமை நிறைந்திருந்தாலும் நினைத்ததை நிறைவேற்ற காலம் கனியும் வரை காத்திருப்பதேகடமை.

சரியான காலம் வரும் வரை காத்திருப்பது ஊக்கம் குறையாது இருப்பதற்குத்தான். அங்ஙனம் ஊக்கம் குறையாமலும் உள்நோக்கம் சிதையாமலும் பகைவருக்குத் தாழ்ந்து பணிவதை வெறுக்காமலும் இருப்பது சண்டைக்கடா பின்வாங்குவதைப் போன்றதாகவும், மீன் வருமளவும் நம்பிக்கையோடு காத்திருக்கும் கொக்கைப் போன்றதாகவும் வள்ளுவர் வருணனை செய்து எதிர்காலவியலை நயம்பட விளக்கியுள்ளார்.

தன் தொழில் வணிகம், கல்வி, குடும்பம் என்ற இலட்சியத்தை முன்னிறுத்தி உழைக்கும் கடமை வீரனுக்குக் காலம் ஒரு தடையாக இருக்கமுடியாது. கருமமே கண்ணாய் இருக்கக் காலம் தெரியாது. தூக்கமே வராது. பசியிராது, மெய்வருத்தம் தோன்றாது. எதிர்காலவியல் அவருக்குப் பொருந்தாது.

குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும் *(குறள் 1028)*

என்ற குறள்"வேண்டும் பொழுது" (481) என்ற இலட்சியத்தை விலக்கியதாக ஏற்க வேண்டியுள்ளது. எனவே குடி செய்வார்க்கும் பருவம் இல்லை என்பது எதிர்காலவியலை உட்கொண்டு பொருத்தமான காலம் வரட்டும் என்று சோர்வு காட்டுதல் கூடாது. மழை, பனி, வெயில் என்ற பொல்லாத காலம் என்று

கடமையில் கருத்தில்லாமல் பின்னர்ச் செய்து கொள்ளலாம் என்று ஒய்வெடுப்பது கூடாது. எதிர்காலவியல் அதற்கு இடம் தராது. பிறரெல்லாம் மகிழத் தான்மட்டும் இடர்படுவதை எண்ணி மானம் பார்ப்பது எதிர்காலவியலில் ஏற்பதற்கில்லை. ஊழையும் உப்பக்கம் காண்பர் என்பது (620) எதிர்காலவியலின் கூடுதல் பரிமாணமாகிறது.

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து *(குறள் 879)*

பகை நட்பாகக்கொண்டொழுகும் பண்பை உயரிய விரும்பத்தக்க பண்பாடாகக் குறள் நெறி வலியுறுத்தக்கூடியது. ஆனால் அழிக்கத்தக்க பகையும் உண்டு. அதனை விட்டு வைக்கக்கூடாது. அதனால் இளம் பருவத்திலேயே அத்தகைய பகையைக் களைந்துவிடுவது நல்லது. எதிர்காலவியலை இங்கு விலக்கிட வேண்டும். குடி செய்வார்க்குப் பருவம் இல்லை என்ற குறள் நெறியை இங்கே இணைத்துப் பார்க்கவேண்டும். அதே நேரத்தில் செறுநரைக் காணின் சுமக்க என்பதை ஒத்துப்பார்க்கக் கூடாது. விரும்பத்தகா பகைவரை ஒழியும் வரை மிகவும் தாழ்க என்பதையே புனைந்துரையாக்கிச் 'சுமக்க' என்று சுட்டப்பட்டது. அங்ஙனம் பணிந்து தாழவே பகைவர் தம்மைக் காத்தலை அலட்சியம் செய்து இகழ்வர். கொத்திப்பிடிக்கக் கிடைக்கும் வரை செயலற்றுக் காத்திருந்து மீன் வாய்த்தவுடன் விரைந்து பாயும் கொக்கு குத்துவதனால் மீன் தப்ப முடியாது. எனவே இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது என்பதும் குடி செய்வார்க்கு இல்லை பருவம் என்பதும் ஒன்றோடு ஒன்றுமுட்டி மோதாமல் ஒன்றுக்கு ஒன்று தனித்தனி அவசியமாக நேரும்போது மிக மிகக் கவனம் செலுத்திக் கைக்கொள்க என்பது குறள் நெறி. ஒன்றை மேற்கொள்ள நேரிடுமானால் மற்றதை விலக்கி வைப்பது கருத்து. மறுத்துவிட வேண்டிய தில்லை என்பது வெளிப்படை. ஒவ்வொன்றின் வரம்பினை உயர்த்துணர வேண்டுமே தவிர நூலறிவைத் தேடிப் பெற முடியாது. மேலும் எதிர்காலவியலின் இலக்கு எல்லையை உரைப்பின் வரும் குறள் வழி காட்டுகிறது.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும் *(குறள் 466)*

செய்யத்தகாதவை, செய்யத்தக்கவை என மேலாண்மைப் பொறுப்பில் முன்பின் எழும் சிந்தனையே யூகம் என்று பாமரர் நம்புவர். இந்த யூகத்தின் அடிப்படையில் பிறப்பது யோகம் என்று பாமரர் நம்புகிற ஊக்கம்,அதனையே மேலாண்மைப்

பொறுப்பில் மனக்கிளர்ச்சி (மோட்டி வேஷன்) என்று உளவியல் சுட்டிக்காட்டும். அதனை, வகையறச் சூழாது எழுதல் பகைவரைப் பாத்திபடுப்பதோர் ஆறு (குறள் 465) என்று திருக்குறள் தீர்மானிக்கிறது. வலிமை, காலப்பொருத்தம், இடச்சூழல் என்றுஇவற்றால் தனக்கும், பகைவர்க்கும், உள்ள நிலைமையோடு தொழில், வணிகம், கல்வி, குடும்பம், தொடக்கமும் அதற்கு வரும் இடையூறுகளும் அவற்றை நீக்கிடும் முறைகளும் வெற்றி பெறும் வழிகளும் அதனால் பெறக்கூடிய பயன்களும் குறைவில்லாமல் முற்றாக எண்ணித் திட்டமிடுவதே எதிர்காலவியல் நெறியாகும்.

சக்திக்கு மீறிய வேலை கூடாது. தகுதிக்குக் குறைவான முயற்சியும் வேண்டாம். பயன்தராதவை தேவையில்லை. சந்தேகத்திற்கு இடமளிப்பதை மேற்கொள்ளக்கூடாது.பின் துயர் தருவதை ஏற்க வேண்டாம். சக்திக்கு உட்பட்டதைச் செய்யலாம். தகுதிக்கு ஒத்ததை முயலலாம். பயன்தருவதை ஏற்கலாம். சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதையும் பின் துயர் தராததையும் மேற்கொள்ளலாம். இவற்றையெல்லாம்:

கொடுத்தல்	**இன்சொல் கூறல்**
வேறுபடுத்தல்	**ஒறுத்தல்**

ஆகிய உபாயங்களை ஏற்றவாறு தனித்தனியாகவோ முற்றாகவோ கையாண்டு எதிரிக்கு இடம் தராதபடி செயல்படவேண்டும் என்பதை எதிர்காலவியலின் வரம்பாகும்.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு *(குறள் 467)*

என்பது எதிர்காலவியலின் சூத்திரம்.

எதிர்காலவியல் மேலாண்மைச் சிந்தனையில் திருக்குறள் தெளிவும் உறுதியும் கொண்டுள்ளதை ஆண், பெண் உறவுத் தொடர்பிலும் மருத்துவம், உழவுச்செயல் முறைகளிலும் விழிப்புணர்வு உண்டாக்கியுள்ளதைக் கொண்டு அறியமுடிகிறது.

உழவுத் தொழில் செழித்து மேம்பாடடையத் தக்க மேலாண்மைச் செயல்பாட்டிற்குத் திருக்குறள் வழிகாட்டுகிறது. அதனை எதிர்காலவியல் கருத்தாக்கத்திற்கு அரண் என்றே கருதலாம்.

ஏரினும் நன்றாம் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு *(குறள் 1038)*

வாழை, தென்னை, எலுமிச்சை முதலியவற்றைக் கால காலத்தில் பயன்தரும்படி பயிரிட ஒவ்வொரு கட்டத்தையும் குறள் வகுத்துக்

கூறுகிறது. குழி வெட்டுதலில் கூட, ஒரு கணக்கு உள்ளது.நெல் கடலை முதலிய பயிர்களுக்கு அருமுதலியஅற இருப்பது போல் மேல் சுட்டியமரங்களுக்கான குழியின் அளவு கணபரிமானம் தெரிதல் அவசியம். இந்தப் பயிர் வகைக்கு உரமிடுதலிலும் ஒரு கணக்கு உண்டு. களை எடுப்பதும் கவனமாகச் செய்யப்படுதல் வேண்டும். நீர்ப்பாய்ச்சலிலும் கணக்கு உண்டு. எல்லாவற்றிற்கும் மேலாகக் காவல் மேற்கொள்வது குறளில் கடைசியில் இடம் பெற்றாலும் அதன் மூதன்மை கருத்தில் இருக்க வேண்டும். எல்லாமே எதிர்காலவியலில் கணக்கிட்டுக் காண வேண்டியவை. சில பயிர்கள் மாதக் கணக்குடன் அறுவடைக் குள்ளாகும். சில வருடக்கணக்கில் பலன் தரக்கூடியவை, காலக்கணக்கை அனுசரித்து உழவன் நிலத்தை நேரடிப் பார்வைக்குள்ளாக்க வேண்டும். இதில் தப்புக் கணக்கு ஏற்பட்டால் நிலம் தரக்கூடிய பருவப் பயன் விளைச்சலில் குறைவு ஏற்பட்டு விடலாம். அதனால் உழவுச் செயல்பாட்டில் காலம் தவறாமையை எதிர்காலவியல் மேலாண்மையில் மறந்துவிடக் கூடாது.

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும் *(குறள் 1039)*

என்ற குறளில் எதிர்காலவியல் மேலாண்மை திட்டவட்டமாக இடம் பெற்றுள்ளதை உணர இடமுள்ளது. ஏர்கொண்டு உழுத பிறகு அடுத்தடுத்து உழவு முறைப்படி எருவிடுதலும் நீர் பாய்ச்சுதலும் களை நீக்கிப் பூச்சி, கால்நடை, களவு முதலிய வற்றிலிருந்து காப்பது வரை செய்யத்தக்க கவனம் செலுத்துதல் நிலக்கிழார் கடமை, அக்கடமை தவறுவது உழுதொழில் புறக்கணிப்பாகி விடும். அது இன்பம் தரும் விளைச்சலுக்கு மறுதலையான துன்பம் தரும்படியாகிய சோர்வுக்கு இடம் தந்ததாகிவிடும். இல்லறவியலில் இன்பம் தரவல்ல ஊடல் உழவியலில் துன்பம் தருவதாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு புடை ஒப்புமை ஆகும். ஊடலில் ஒருவகை முதிர்ந்த துனி, அதனால் வருவது துன்பம், மற்றொருவகை புலவி, அது கலவியின்பம் தராது. இரண்டிற்கும் இடைப்பட்ட அளவு அறிந்து ஊடல் நீங்கப் பெறுதல்அரிது. அது இயலுமாயின் ஊடுதல் காமத்திற்கு இன்பம் தரக்கூடும். கூடித்தழுவுதல் நிகழ்வதுதான் ஊடலுக்குப் பின் வரும் இன்பச் செயல்பாடு. இல்லற மேலாண்மைக்கு இன்றியமையாத ஊடல், உழவு மேலாண்மையில் இடம் பெறக்கூடாது.

மருந்து என்ற தலைப்பிட்டு வள்ளுவர் வரையறை செய்யும் செய்திகள் பலதிறத்தன. அவற்றுள் எதிர்காலவியல்

மேலாண்மைக் கூறும் இடம்பெற்றுள்ளதை அறிய இடம் உள்ளது.

அற்றால் அளவறிந்து உண்க, அஃதுஉடம்பு
பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு *(குறள் 943)*

உற்றான் அளவும்பிணி அளவும் காலமும்
கற்றான் கருதிச் செய்க *(குறள் 949)*

மருத்துவ முறையிலும் உழவுச் செயல்முறையில் மேற் கொள்வது போலச் சில செயல்பாடுகளை அடுத்தடுத்துத் தவறாமல் பின்பற்றினால் பயன் நிச்சயம், நீண்டகாலம் உடல் நலம், பேணிடத்தக்க உபாயமாக அளவறிந்து உண்க என்பது ஒரு நெறி; இதில் சோர்வு ஏற்பட்டால் துன்பம் தராது; தொடரும், நீண்ட காலம் என்பதை எதிர்காலவியல் மேலாண்மைக் கூறாகவே கருதலாம். இம்மை, மறுமை, வீடுபேறுகள் பெறவழிவகுப்பது உடம்பு, அதனைப் பேணுதல் மூலம் இம்மூன்றின் பயன்களும் உறுதியாகும்.

நோயாளியின் வயது வேறுபாட்டிற்கும் நோயின் அளவு தன்மை வேறுபாட்டிற்கும் பொருந்தியபடி வேளை தவறாமல் மருத்துவ முறையை அனுசரித்தல் உயிர் வாழ்க்கை சிறக்க உதவும். காலம் கடந்து வருகிற நோயாளிகளுக்கு எதிர்காலம் இல்லை. அவசரப்பிரிவிலும் தீவிர சிகிச்சைப் பிரிவிலும் சேர்ப்பது எதிர்கால மேலாண்மைக்கு அறைகூவல் விடுப்பதால் “காலமும் கற்றான்” கருதிச் செயல்பட வழிகாட்டி வற்புறுத்துகிறது திருக்குறள். உழவுச் செயல்முறையிலும் மருத்துவச் செயல்முறையிலும் எதிர்காலவியல் மேலாண்மை இன்றியமையாத பங்களிப்புக் குரியது. அது உலகளாவிய நெறிமுறையாவதால் வாழ்வா, சாவா என்ற பிரச்சினையாகத் திருக்குறளில் உழவு, மருந்து எனும் அதிகாரங்களில் எதிர்காலவியல் மேலாண்மை இடம் பெற்றுள்ளது.

❋ ❋ ❋

அன்பும் நன்றியும் அனைவருக்கும் வேண்டும்

சா. கிருட்டினமூர்த்தி

திரு என்பதற்குக் கண்டாரால் விரும்பப்பெறும் தன்மை என்று பொருள். திருக்குறளும் அனைவராலும் விரும்பப்பெறும் ஒரு நூலே; வணங்கப் பெறும் நூலும் கூட இது சாதி, மதம், இனம், நாடு கடந்த நிலையில் அனைவருக்கும் உரிய நூல். இந்நூல் உலகில் நடந்த நிகழ்வுகளை வெளிப்படுத்திக் காட்டுகிறது; நடப்பதைக் கூறுகிறது; நடைபெற விருப்பதை எதிர்நோக்குகிறது. எனவேதான் காலத்தையும் கடந்த நிலையில் பொதுமைக் கூறுகளை உள்ளடக்கியிருக்கிறது. இத்தகு குறளைச் சான்றாகக் காட்டலாம்; சான்றாகக் கொள்ளலாம்! சான்றாகக் கருதலாம்.

இத்திருக்குறளுள், மனித இன வாழ்விற்கும், அதன் மேம்பாட்டிற்கும் விதிகளும் வேண்டுதல்களுமாகப் பல கூறப்பட்டுள்ளன. காலச் சூறாவளியில் சிக்கி உருக்குலைந்தும், உருமாறியும், மனிதப் பண்பை இழந்தும், மனிதநேயத்தைத் தேடியும் அலைகிற மனிதர்களைச் செம்மைப் படுத்திச் சீர்செய்யும் உன்னத சக்தியாகத் திருக்குறள் விளங்குகிறது.



இன்றைய மனித வாழ்க்கை பெரும்பான்மையும் பயன் கருதியதாகவே இருக்கிறது. அன்பைச் செலுத்தவும் பெறவும் நாம் நிரம்ப இழக்க வேண்டியுள்ளது. ஒன்றை இழந்தால்தான் பிறிதொன்றைப் பெறமுடியும் என்பது அன்புக்கும் உரியதாகி விட்டது. அன்பு அப்படிப்பட்டதா? இல்லை. அன்பும், மனித உயிர்வாழ்வும் ஒன்றையொன்று பிரிக்கவியலாதன. அதனால்தான் வள்ளுவர் **அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை** என்று கூறினார். இதனால், அன்பில்லாத உயிர் வாழ்க்கையை உயிருடையதாகவே கருத முடியாது. அன்பு என்பதற்குத் தொடர்புடையாரிடத்து நிகழ்வது என்ற ஒரு பொருள் உண்டு. அவ்வாறெனில் தொடர்பில்லாத பொருள்களிடத்து அன்பு செலுத்த முடியாது என்று கருத முடியும். எனவே அன்பு செலுத்த வேண்டுமென்றால் தொடர்பில்லாத பொருளையும் தொடர்புடையதாக மாற்றிக் கொள்ளலாம். அன்பு செலுத்த வேண்டாமென்றால் தொடர்புடைய பொருளையும் தொடர்பில்லாத பொருளாகக் கருதிக் கொள்ளலாம். இன்றைய உலக நடைமுறை இப்படித்தான் இருந்து வருகின்றது. இதனால்தான் திருவள்ளுவர் இதன் இன்றியமையாமையை உணர்ந்து அன்புடைமையைப் பத்துக் குறட்பாக்களில் எடுத்துக் கூறியுள்ளார். அன்பில்லையென்றால் உலக இயக்கமில்லை. எல்லா மதங்களும் அன்பையே ஆதார சுருதியாகக் கூறுகின்றன. அன்பு அனைத்தையும் தரும். அன்பு நட்பைத் தரும்; உறவைத் தரும்; உலக இன்பத்தைத் தரும்; அறத்தைத் தரும்; ஆக்கத்தைத் தரும். இதனை மனித இனம் உணரவேண்டும். இதுதான் வள்ளுவரின் வேண்டுகோள். இன்றைய உலகிற்கு அவருடைய அறிவுரை. மேலைநாட்டு அறிஞர் ஒருவர்,

> **Little drops of water, little grains of sand**
> **Make the mighty ocean and pleasant land**
> **Little deeds of kindness, little words of love**
> **Help to make the earth happy like the heaven above**
>
> (Julia A.F. Carney)

என்று அன்பின் தேவையைக் கூறுவதைக் காணலாம். இதையே வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே,

> **அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து**
> **இன்புற்றார் எய்தும் சிறப்பு** *(குறள் 75)*

என்று எதிர்காலச் சிந்தனையில் கூறியதைக் காணமுடிகின்றது.

தன்னைச் சார்ந்தவர்களிடத்தும் பிற உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவது ஒருவர்க்கு எவ்வளவிற்கு இன்றியமையாததோ அதே அளவிற்கு நன்றி பாராட்டுதலும் இன்றியமையாத

சிறந்த பண்பாகும். திருவள்ளுவர் காலத்தில் நன்றியென்பதற்கு உதவி, நன்மை என்று பொருள். ஆனால் இன்றைய நிலையில் ஒருவர் செய்த உதவியை மறவாதிருத்தல், திரும்ப உதவுதல் என்ற பொருண்மைகளில் இச்சொல் பயன்பாட்டில் உள்ளது. ஒருவர்க்கு உதவுதல் என்பது பயன்கருதிய உதவி, பயன்கருதா உதவி என்று இருவகைப்படும். இவற்றில் பயன் கருதாமல் செய்யப்படும் உதவியே மேலானது. இதனை மறவாதிருக்கும் பண்பு ஒருவனுக்கு வேண்டும். அத்தகு பண்புதான் இவ்வுலகை உய்விக்கும். அப்பண்பு இல்லாதவர்க்கு இவ்வுலகில் நல்வாழ்வில்லை என்று வள்ளுவர் சபித்துக் கூறுவதால் நன்றி பாராட்டுதலின் இன்றியமையாமையும், தேவையும், சிறப்பும் நன்குணரப்படும்.

அவ்வாறு செய்யப்படும் உதவி எப்படிப்பட்டதாகவும் இருக்கலாம். அதனை அவரே பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.

செய்யாமல் செய்த உதவி *(குறள் 101)*

காலத்தினால் செய்த நன்றி *(குறள் 102)*

பயன்தூக்கார் செய்த உதவி *(குறள் 103)*

தினைத்துணை நன்றி *(குறள் 104)*

என்று காரணத்தானும், பொருளானும், காலத்தானும், அளவானும் செய்யப்படுகின்ற உதவி எதுவாயினும் அது மதிக்கப்பட வேண்டும்; போற்றப்பட வேண்டும்; நினைக்கப்பட வேண்டும்; இதனை உலகோர்க்கு எடுத்துணர்த்த வேண்டியே பத்துக் குறட்பாக்களில் செய்ந்நன்றியறிதலை வள்ளுவர் அமைத்துள்ளார்.

நன்றியறிதல் என்பது உலகப் பண்பு; தனியொருவனுக்கு மட்டும் உரியதன்று; இம்மன்பதைக்கு உரியது. மேலை நாட்டு அறிஞர்களும் அறவியலாளர்களும் இதனைக் கூறத் தவறவில்லை.

Gratitude is the memory of the heart *- Massieu*

என்று, இது இதயத்தில் இருத்தப்பட வேண்டிய உணர்வெனச் சுட்டப்படுவதைக் காணலாம். இந்நன்மையும், உதவியும் பிறவற்றை எதிர்நோக்கி அமையும் உணர்வென்று பிறர் கருதவும், வள்ளுவர் அவ்வாறு கருதவில்லை. 'இவர்க்கு இது செய்தால் இன்னது பயக்கும் என்று ஆராயாமல் செய்த உதவி' என்றே அதனைத் திருவள்ளுவர் கருதுகிறார். அவ்வாறு செய்யும் நன்மை கடலினும் பெரிது என்று வள்ளுவர் கூறுகின்றார்.

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது *(குறள் 103)*

என்று அவர் கூறுவது ஒரு வாழ்க்கைத் தத்துவம், நட்புத் தத்துவம். அதனால்தான் முதல் ஐந்து குறள்களில் உதவியின் சிறப்பையும் பெருமையையும் கூறி, அடுத்த ஐந்து குறள்களில் நன்றி மறவாமையின் இன்றியமையாமையை,

மறவற்க மாசற்றார் கேண்மை	*(குறள் 106)*
எழுபிறப்பும் உள்ளுவர்	*(குறள் 107)*
நன்றி மறப்பது நன்றன்று	*(குறள் 108)*
ஒன்று நன்று உள்ள	*(குறள் 109)*
செய்ந்நன்றி கொன்ற மகற்கு	*(குறள் 110)*

என்று தொடர்ந்து வலியுறுத்துவதைக் காணலாம்.

Gratitude is a lively sense of future favors

- Sir Robert Walpole

என்ற கருத்திற்கும் மாறாக, அன்பின் காரணமாகப் பயன் கருதாமல் செய்த உதவியை மறத்தல் கூடாது என்பதே வள்ளுவரின் அறிவுரை. இவ்அறிவுரை நேற்று மட்டுமன்று; இன்று மட்டுமன்று; நாளையும் வேண்டும். ஏனெனில் நன்றியை அன்றே மறப்பவர் இன்றும் உள்ளனர்.

❋ ❋ ❋

திருக்குறளும் மனிதநேயமும்

தி. மகாலட்சுமி

உலகப் பொதுமறை எனப் போற்றும் திருக்குறளில் சொல்லப்படாத செய்திகளே இல்லை எனலாம். இது அறநூலாகத் தோன்றினும் இதில் சமூகச் சிந்தனை, விழிப்புணர்வு, சமூகத் தேடல் எனப் பல்வேறு நிலைகள் ஊடாடிக் கிடக்கின்றன. அவ்வகையில் மனிதநேயக் கருத்துகள் செறிந்து, நிறைந்து கிடக்கின்ற ஊற்றாகவும் இது திகழ்கின்றது. அருளுடைமை என்ற அதிகாரத்தை இதற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாகக் கூறலாம். இவ்வதிகாரத்திலும் அன்புடைமை, புலால் மறுத்தல், கொல்லாமை, இரவு, இரவு அச்சம் ஆகிய அதிகாரங்களில் உள்ள மனிதநேயக் கருத்துகளைக் காணலாம்.



மனிதநேயம்–விளக்கம்

மனிதன்-மனிதனிடத்தும் பிற உயிர்களிடத்தும் காட்டும் நேயம் மனித நேயம். இந்த மனிதநேயம் என்ற சொல் இருபதாம் நூற்றாண்டில் ஆங்கிலவழித் தமிழ்ப் படுத்தப்பட்ட ஒரு சொல். அருளுடைமை என்பதன் மாற்றுச் சொல்லே மனிதநேயம்.

அருளுடைமை-பொருள்விளக்கம்

அருளுடைமை என்பதற்குப் பல்வேறு விளக்கங்களை உரையாசிரியர்கள் கூறியுள்ளனர். அவற்றுள் "அருளுடைமை யாவது யாதானும் ஒருயிர் இடர்ப்படின் அதற்குத் தன்னுயிர்க்கு உற்ற துன்பத்தினால் வருந்துமாறு போல வருந்தும் ஈரமுடைமை" என்பது மணக்குடவர் தரும் விளக்கம். "எல்லா உயிர்கள் மேலும் தயை உடையவனாய் இருக்கிறது." என்பது மல்லர் தரும் விளக்கம். எனவே ஓர் உயிர் துன்பப்படும் போது அவ்வுயிர்பால் கசியும் ஈரமுடைமையை அருளுடைமை எனலாம். மனிதநேயம் என்பதும் இதன்பாற்படுவதே.

அன்புடைமையும்-அருளுடைமையும்

''இல்லற வாழ்வில் அன்புடைமை முதிர்ந்து, விருந்தோம்பல், ஒப்புரவு, ஈகையாற் படர்ந்து துறவியலில் அருளுடைமை ஆகிறது. இதனையே வள்ளுவர் 'அருள் எனும் அன்புஈன் குழவி' (757) என்றார்" என்று அன்புக்கும் அருளுக்கும் உள்ள தொடர்பைத் தண்டபாணி தேசிகர் விளக்குகிறார். மேலுமவர், ''கோப்பெருஞ் சோழன் பிசிராந்தையார் மேற்கொண்டது அன்பு. அதுவே புறாவுக்குத் தன் தசையைக் கொடுத்த சிபியின் செயல் அருள்'' என்ற காட்டின் வழி அன்புடைமையும் அருளுடைமையும் தம்முள் தொடர்பு கொண்டவை என விளக்குகிறார்.

அன்பும்-இல்லற அன்பும்

ஒத்த அன்புடையவர்களால் உருவாகும் அன்பு வாழ்க்கை அன்புடைமையாகும். இருப்பினும் இவ் அன்பு வாழ்க்கைக்கு மட்டுமன்றி அதனையும் தாண்டிச் செலுத்தப்பட வேண்டிய ஒன்று. "தன்னைச் சார்ந்தார் மாட்டுக் காதலுடையவனாதல்" என்ற மணக்குடவர் உரை இல்லறம் சார்ந்தோர் கொள்ளும் அன்பை அன்புடைமையாகக் காட்டுகிறது. "இல்லறம் இனிது நடத்தலும், பிறவுயிர்கள் மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனாகலின் இது வேண்டப்பட்டது'' என்பது அன்புடைமைக்கான அதிகார விளக்கத்தில் பரிமேலழகர் கூறும் சிறந்த விளக்கமாகும். எப்படியெனில்,

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும் *(குறள் 71)*

என்ற குறளில் ஆர்வலர், புன்கணீர் என்பதற்குத் துன்பம் கண்டவிடத்து அன்புடையவர் பெருக்கும் கண்ணீர் என்பது விளக்கமாகும். இதன்வழிக் கண்ணீரின் அளவைப் பொறுத்து

அன்பு வெளிப்பட்டு நிற்கும் என்று தெரிகிறது. அமெரிக்காவில் இரட்டைக் கோபுரம் சரிந்து ஆயிரக்கணக்கானோர் மடிந்தபோது இங்குள்ளவருக்குத் தோன்றியது இரக்கம். அதுவே தன்மகன் காலொடிந்து வருந்தினால் வரும் கண்ணீர் அன்பு. இவ் அன்பு தொடர்புடையார் மாட்டு நிகழும் உணர்வுப் பகுதி. மேலும்,

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உடையர் பிறர்க்கு *(குறள் 72)*

என்ற குறள் தன் உறவுக்காரர்களிடம் மட்டுமன்றி அதனையும் தாண்டி அன்பு செலுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இந்த உணர்வு மிகுதிப்படும்போது அருளுடைமையாக மலர்கிறது. 'அன்பு ஈனும் ஆர்வம் உடைமை' (74) என்ற குறளுக்குப் பொருளுரைக்கும் காளிங்கர் "பல உயிர்களிடத்தும் வைத்த உள்ளன்பு" என்கிறார். எனவே அனைத்து உயிர்களிடத்தும் காட்டும் இரக்க உணர்வை அருளுடைமை என்று கொள்ள இயலும்.

அருளுடைமை - செல்வம்

செல்வமானது கல்வி, கேள்வி, பொருள் எனப் பலவகையாக விரிந்து நிற்கக் கூடியது. இவற்றுள் ஒன்றான பொருட் செல்வத்துள் உண்டி, உடை, உறையுள், விளைநிலம் போன்றன அடங்குகின்றன. இருப்பினும்,

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு *(குறள் 212)*

என்ற குறள் பிறருக்கு உதவும் பொழுதுதான் செல்வமானது அதன் பயனை அடைகிறது என்பதை உணர்த்துகிறது. இரக்கமற்ற கயவர்களிடமும், இழிந்தவர்களிடமும் இருக்கும் செல்வம் உயர்வுபடாது. இத்தகையவரிடத்து அருள் பிறப்பதில்லை. அருள் என்னும் உயர்வுடைய செல்வம் பிறக்கும் வழியை,

வலியார்முன் தன்னை நினைக்க தான்தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து *(குறள் 249)*

என்ற குறள் காட்டுகிறது. இங்கு மெல்லிய உயிர்கள் அதாவது அடக்கப்பட்ட ஆடுமாடு போன்ற உயிர்கள் மேலும் கொள்ளும் இரக்கம், அருள் பிறப்பதற்கு வழியாகிறது.

கொல்லாமை-புலால் உண்ணாமை

நம்மிலும் மெல்லிய உயிர்களிடம் காட்டும் அன்பினால் அருள் பிறக்கும். பின்பு வையகமட்டும் வளரும்; முடிவில் அது கொல்லாமை என்ற உயர்மிகு பண்பில் நிற்கும் என்பது வள்ளுவர் எண்ணம். எனவே அருள், புலால் உண்ணாமை ஆகியவற்றைக் கூறி இறுதியாகக் கொல்லாமையை வலியுறுத்துகிறார்.

"ஓரறிவுயிரையும் கொல்லாதிருத்தல் கொல்லாமை. பிற உயிரைப் போக்கிய ஊனை உண்ணாதிருத்தல் புலால் மறுத்தல். ஆதலால் அருளையடுத்து இடம் பெறத்தக்கது புலால் மறுத்தல். முதிர்ந்த விரதமாக இறுதியில் பெறத்தக்கது கொல்லாமை" என்று தண்டபாணி தேசிகர் கூறுவார்.

ஓரிறிவுயிரையும் கொல்லாதிருப்பது ஆண்டவனை வணங்கி வீடுபேறடையத் துடிக்கும் அன்பருக்கன்றி நடைமுறை வாழ்க்கையில் அனைவருக்கும் கைகூடாது. ஆகையால் மெல்லிய உயிர்களை மதித்தலும், பரிவுகாட்டலும், உண்ணாதிருத்தலும் அருளைப் பெறுவதற்கு வழியாகும் என்பது வள்ளுவர் கருத்து.

மேலும் உண்ணக் கூடிய மெல்லிய உயிர்களைக் கொன்று தின்று கொண்டே இருந்தால் முடிவில் நாமும் வலிய விலங்குகளுக்கு இரையாகும் நிலை ஏற்படக் கூடும். பிறகு அதனைவிட வலிமையானது அதனை உண்ண இறுதியில் ஆக்கலும் அழிதலும் இன்றி உயிர்களே இல்லாத உலகம் மட்டுமே எஞ்சும். எனவே, வள்ளுவர் "ஊன் உண்ணாமை உள்ளது உயிர்நிலை" என்று கூறியுள்ளார்.

"உண்ணப்படும் விலங்குகள் அதனால் தேய்ந்து சிலவாக, ஏனைய பலவாக வருதலின் உண்ணாமை உள்ளது உயிர்நிலை என்கிறார்." என்று பரிமேலழகர் தரும் விளக்கம் சிறப்புக்குரியது. எனவே புலால் உண்பது என்ற நிலையிலிருந்து மாறுவது அருளைப் பெறுவதற்கான முதல்வழியாகும்.

அருளுடைமை-மதம்

இறைவனை அடையும் வழிகளைக் கூறும் மதங்கள் பலவாக உள்ளன. ஒரு மதம் கூறியதை இன்னொன்று மறுக்கும் அல்லது ஏற்கும். ஆயின் அனைத்து மதங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சில கருத்துகள் ஒவ்வொரு மதத்திலும் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் அருளுடைமையாகிய மனிதநேயம். 'உன் உயிரைப் போல, பிற உயிரையும் நேசி' என்ற மனிதநேயக் கருத்தை அனைத்துச் சமயங்களும் கூறுகின்றன.

இதனையே,

> **நல்லாற்றால் நாடி அருளாள்க பல்லாற்றால்**
> **தேரினும் அஃதே துணை** *(குறள் 242)*

என்கிறார் வள்ளுவர். "எல்லாச் சமயத்தாரானும் உறுதியாக விரும்பப்படுவது அருளாதலால் உயிர்க்குறுதி வேண்டினோர் அருளுடையராக வென்பது கருத்து" என இராமானுஜகவிராயர் விளக்கம் தருகிறார். சமயங்கள் பல இருந்த காலத்திலும் வள்ளுவர் அருளை மனத்தில் கொண்டு வாழுங்கள் என்று கூறியிருக்கிறார். இன்றும் சமயங்கள் பல இருப்பினும் மனிதநேயத்தோடு வாழுங்கள் என்பதே முதன்மையாகக் கூறப்பட்டு வருகிறது. எனவே மதவழியாக நடப்பினும் மனிதாபிமானத்தோடு நடப்பதே சிறந்தது.

அருளும்–உயிரும்

> **மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப**
> **தன்னுயிர் அஞ்சும் வினை** *(குறள் 244)*

என்ற குறளில் மன்னுயிர் என்பதற்கு நிலைபெற்ற உயிர் என்பது பொதுவான பொருளாகும். "ஆத்மா அழிவற்றது. அதுவே மன்னுயிர்" என்பது சமயக் கருத்து. "உயிர்களெல்லாம் நித்தியமாகலின் மன்னுயிர் என்றார்" என்பர் பரிமேலழகர். 'துவசம் சாபாவ அப்பிரிதியோகி" (நாசமின்றி இருப்பது) எனத் தண்டபாணி தேசிகரும் விளக்கம் தருகிறார். வள்ளுவரும் இம்மை, மறுமை, ஆத்மா போன்ற சொற்களைக் கையாண்டுள்ளார்.

நிலைத்த உயிரை விரும்பி அருள் செய்பவர் என்பதற்குப் பொருள், இவ்வுலகில் வாழ்வதற்கு ஏற்ற சூழலையும், வளத்தையும் இனிவரும் தலைமுறையினருக்கும் உருவாக்க முனைபவருக்குத் தன் உயிரைப் பற்றிய அச்சமில்லை என்பதாம். சுற்றுச்சூழல், வளம் எனப் பலவற்றையும் எண்ணவைக்கும் மனிதாபிமானமிக்க குறளாக இது அமைகிறது.

> **அல்லல் அருள்ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்**
> **மல்லல்மா ஞாலம் கரி** *(குறள் 245)*

என்ற குறள் அருளுடையவராக வாழ்கின்றவர்களுக்குத் துன்பம் இல்லை; காற்று இயங்குகின்ற வளம் பொருந்திய பெரிய உலகத்தில் வாழ்வோரே இதற்குச் சான்று என்கிறது.

தன்னைப்போல் பிறரையும் நேசிக்கும் பண்பு ஒரு நாட்டில் நிறைந்து இருக்குமானால் அந்த நாடு நிச்சயமாக

வளம்பெற்றுத் திகழும். எனவே அருள்உடைமைச் சிந்தனையோடு கூடியவர்கள் பெருக வேண்டும் என்பதை இக்குறள் வலியுறுத்துகிறது.

இரவும் இரவு அச்சமும்

வள்ளுவர் இரவதிகாரத்தில் வறியோனின் இரத்தலுக்குப் பரிந்து பேசுவார். இரவச்ச அதிகாரத்தில் இரத்தலின் இழிவைப் பேசுவார். இரத்தலும், ஈதலும் உள்ள சமுதாயத்தில் நீ இரத்தல் செய்யாதே, நீ ஈயாதே என்று கூறிவிட்டால் இரத்தலைச் செய்து வந்தவன் அடுத்து என்ன செய்வான் என்ற சிக்கல் உருவாகிறது. எனவே இதற்குத் தீர்வுகாணும் பொருட்டு 'அப்பா நீ வாங்கு தவறில்லை' என இரப்பவனுக்குப் பரிந்து பேசுகிறார். அதுபோல் தருபவரிடம் 'நீ கொடு அதுதான் உனக்குச் சிறப்பு' என அவனைத் தரச்சொல்லி ஊக்கப்படுத்துகிறார். எனவேதான் "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" (221) என்றார். ஆயின் இரத்தலைத் தொடராது தடுத்துநிறுத்த வேண்டும் என்ற நோக்கில் அல்லவா வள்ளுவர் அப்படிக் கூறினார்.

எனவே அடுத்தபடியாக வாங்கு என்று கூறினேன் என்பதற்காக நீ தொடர்ந்து வாங்கிக் கொண்டே இருக்கக் கூடாது. ஏனென்றால் அது மிகமிக இழிவான செயல். எனவே அதனை விடுத்து, நீ உழைப்பதற்கு முன் வரவேண்டும். உழைப்பின் பயன் மிகக் குறைவாகக் கிட்டினும் இரத்தலை விட உயர்வு என்பதால் அதனை நீ மலையளவு பயனாக எடுத்துக் கொண்டு முன்னேற வேண்டும். செறிவில்லாத தெளிந்த நீர் போன்ற கஞ்சி ஆயினும் தன் உழைப்பால் பெற்றதாயின் அதனை உண்பது என்பது அமிர்தத்தோடு ஒக்கும் (1065). இத்தகைய உழைப்பு உயர்வுதரும் நிலையில் இரத்தலும் ஈகையும் மெல்லமெல்லக் குறைந்து இறுதியில் மறையும் நிலை உருவாகும்.

உழைப்பு அடிபட்டுச் சோம்பல் காரணமாகப் பிறரிடமிருந்து பெறக்கூடிய நிலை என்பது இழிவுக்கும் இழிவானது என நினைத்த வள்ளுவர் உழைப்பின்றிப் பெறும் எப்பொருளும் மனிதநேயத்திற்கு இடையூறாக அமையும் என்பதை உட்பொருளாக வைத்துப் பேசுகிறார். இதன்வழி இரக்கும் நிலை ஏற்படினும் முயற்சியைக் கைவிடாது உழைக்கும் நிலை உருவாகி ஏற்றத்தாழ்வுகள் நீங்கவேண்டும் என்ற மனிதநேயச் சிந்தனையை வள்ளுவர் தருகிறார்.

முடிவாக...

அனைத்து உயிர்களிடத்தும் காட்டும் இரக்கமே அருளுடைமை.

அன்பும், அருளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை; அன்பின் வளர்ச்சியே அருளுடைமை.

அன்பு என்பது இல்லறம் பேணுவார் கடைப்பிடிப்பது மட்டுமல்ல. அது அதனினும் பெருகிப் பரவி நிற்பது.

எளிய உயிர்களையும் பேணுவதால் அருள்பிறக்கும்.

கொல்லாமை என்ற உயர்ந்த நெறியை அனைவரும் பின்பற்றுவது கடினம்; எனினும் புலால் உண்ணாமை என்ற பண்பைக் கடைப்பிடித்தல் இயலும். அருளுடைமை அழகுற உருப்பெற இதுவே முதன்மைப் பண்பாகும்.

முடிந்தவரை அருள்கொண்டு வாழுதல் என்பதே நல்ல நெறி. இனிவரும் உலகத்தையும் காக்க எண்ணும் அருளுடைமை கொண்டவருக்குத் துன்பமில்லை. இழிந்தது இரத்தல்; உயர்ந்தது உழைப்பு, அதுவே மனிதநேயத்தை வளர்க்கும்.

துணை நூல்கள்

1. திருக்குறள், டாக்டர் எஸ்.ஆர். கே. ஆய்வுரையுடன், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1991.
2. திருக்குறள் உரைக்களஞ்சியம் (இல்லறவியல்), மகாவித்துவான், ச. தண்டபாணி தேசிகர், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1983.
3. திருக்குறள் தெளிவுரை, டாக்டர் மு. வரதராசனார், சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.

※ ※ ※

ஒப்புரவறிதலும் செய்ந்நன்றியறிதலும்

ச.வே. சுப்பிரமணியன்

மனித வாழ்க்கை பொதுநிலையில் மூவகையாக அமைகின்றது. ஒன்று எண்ணம், இரண்டு சொல், மூன்று செயல். தன் எண்ணத்தைச் சொல்லிச் செய்கின்றவர் ஒரு நிலையினர். சொல்லாமலே செய்கின்றவர் சிறந்தோர். சொல்லியும் செய்யாதவர் மனிதர் இலர்.

அறிவு இருந்தால்தான் எண்ணங்கள் வரும்; வளரும். ஒன்றனைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்குப் பகுத்தறிவு தேவை. ஐம்புலன்களால் பெறுகின்ற அறிவைப் பகுத்து முறையான வழியில் செலுத்திச் சென்றவிடத்துச் செலவிடாது தீது நீக்கி, நன்மையின் பால் செலுத்துவதே அறிவு எனப் பேசுகின்றார் வள்ளுவர்.



அறிதல் என்பது அறிவின் செயல். ஒப்புரவு அறிதலும், செய்ந்நன்றியறிதலும் அறிதல் என்ற தலைப்பைக் கொண்டு அமைகின்றன. அவையறிதல், இடனறிதல், ஒப்புரவறிதல், காலமறிதல், குறிப்பறிதல், செய்ந்நன்றியறிதல், வலியறிதல் என வள்ளுவர் கூறியுள்ள எண்வகை அறிதலுள்ளும் ஒப்புரவறிதலே முதனிலையுடையது என்று

கொள்ளலாம். நம்மோடு வாழ்கின்ற மனிதர்களின் நிலைமைகளைத் தெளிவாக உணர்ந்து, ஒத்துணர்ந்து அவர்களுக்கு நம்மால் இயன்ற நன்மைகளைச் செய்வதற்கு ஒப்புரவறிதல் தேவைப்படுகின்றது. இதனையே பரிமேலகர், 'உலக நடையினை யறிந்து ...... தாமே செய்தல்' என்ற பொருண்மையாகத் தருகின்றார்.

மனித வாழ்க்கை இரு நிலைகளில் அமைகின்றது. ஒன்று, தன்னலமுடையவனாக வாழ்வது; மற்றொன்று, பொதுநலமுடையவனாக வாழ்வது தன்னலமில்லாப் பொதுநலம் உயர்நிலை வாழ்க்கை. பொதுநலத்தில் தன்னலம் இடைத்தர வாழ்க்கை. தன்னலத்தில் பொதுநலம் தாழ்ந்த வாழ்க்கை. தன்னலமாகவே வாழ்வது கடைநிலை வாழ்க்கை. இந்நால்வகை வாழ்க்கையிலும் தன்னலமற்ற பொதுநல வாழ்வு நடத்துகின்றவர்தான் முதனிலையுடையோர் என்று கொள்ளலாம். அவர்தான் ஒப்புரவுடையோர் என்றும் கூறலாம். இவ்வாறு வாழ்கின்றவர்களை மாரியோடு ஒப்பிடலாம். வள்ளுவர் இதனையே

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு *(குறள் 211)*

எனப் பேசுகின்றார்.

மழை, ஊருணி, மரம் போன்றவை தமக்காக வாழ்வதில்லை. பிறருக்காகவே வழங்குகின்ற வண்மை வாழ்வு வாழ்கின்றன. அவற்றில், மரம் ஒரு நிலையில் பிற இரண்டிலிருந்தும் வேறுபடுகின்றது. தன் இனத்தை வளர்த்துக்கொள்வதற்காக மரம் காய்கனிகளைத் தருகின்றது. இந்நிலை கூட ஊருணிக்கும் மாரிக்கும் இல்லை. உலக நிலையில் மனிதன் ஏனைய உயிர்களைத் தன்னுயிர் போல் நினைத்து ஒத்தது அறிந்து வாழ்ந்தால்தான் அவன் மனிதனாகக் கருதப்படுகின்றான். ஒத்த உயிர்களின் உண்மை நிலையை உணராதவன் மனிதன் ஆகான். உலகத்து எல்லா உயிர்களின் பொது நன்மைக்காகவும் மழை பிரதிபலன் கருதாது பொழிகின்றது. அதே போன்று எல்லா உயிர்களும் இன்பமுற மனிதன் தன் செயல்களைப் பரந்த நோக்கில் வகுத்துச் செய்தல் வேண்டும்.

வருகின்ற உயிர்கட்கெல்லாம், வருந்துகின்ற உயிர்கட்கெல்லாம் கொடுத்துக் கொடுத்துப் பெருகி வளம் கொழிக்கின்ற ஊருணி போன்று வாழும் நிலையின் சிறப்பு கூறும் தரமன்று. 'இறைத்த கிணறு ஊறும்' எனவும், 'பிறக்கும்போது கொடுவந்ததில்லை - இறக்கும் போது கொடு போவதில்லை' எனவும் உணர்ந்து, இடைக்காலத்து உயிருடன் இருக்கும்போது இறைவன் தந்த பொருளை எல்லாம், உலக உயிர்கள் அனைத்திலும் இறைவன் இருக்கின்றான் என்ற அறிவுணர்வுடன் பகிர்ந்தளித்து வாழ்வதே சிறந்த சீரிய வாழ்க்கை. அதுவே ஒப்புரவு என உரைக்கப்படுகின்றது.

உலகை வாழ்விக்கும் நீர்வளமுடையது மாரி. உலகைச் சூழ்ந்து உவர் நீருடன் அமைகின்றது வாரி. சிலரைக் கடல் நீரன்ன செல்வமுடையவன் என்று கூறுவார்கள். கடல்நீர் உண்பதற்குப் பயன்படுவதில்லை. எனவேதான் பிறருக்குப் பயன்படாச் செல்வமுடையவனைக் கடல்நீர் போன்றவன் எனக் கூறுகின்றோம்.

உலகில் வாழும் ஓரறிவு முதல் ஆறறிவுவரையுடைய உயிரினங்கள் அனைத்திற்கும் - அதாவது புல், பூண்டு, நண்டு, வண்டு, பறவை, மாடு, மனிதன் போன்ற உயிரினங்களனைத்திற்கும் சுவைநீர் வழங்கும் ஊருணி பயன்படுகின்றது. அவ்வாறு ஒப்புரவறிந்தவன் செல்வம் பயன்படுதல் வேண்டும் என்பதே வள்ளுவரின் பேரவா.

நீர், நன்மை வாய்ந்தது போல் செல்வமும் நன்மையுடையதே. ஆயின் ஆற்று நீரும், ஊற்று நீரும், மழை நீரும் எல்லாம் கடலைச் சென்றடைந்தபின், சார்ந்த இயல்பால் உலக உயிர்கட்குப் பயன் படாமல் போய்விடுகின்றன. நயனிலான்கண் பெருஞ்செல்வம் பல வழிகளிலும் சென்று சேரினும், வள்ளல் தன்மை இன்மையால் பயனற்றுத் தேங்கிக் கிடக்கின்றது. சேரும் பெருஞ்செல்வத்திற்குச் சிறப்பு கொடையே என்ற அறிதல் இங்கு இல்லை. அறிதல், அறிவில்லையெனில் வராது. அறிந்தபின் செயல்படுதல் சிறப்பு. அளவில் பெரிய கடலாக இருப்பதினும் உயிர்க்குப் பயன்தரும் ஊருணியாக அமையும் சிறப்பு இங்கு வெளிப்படுகின்றது.

கைம்மாறு வேண்டா மாரியாக, என்றும் ஊறும் உள்ளூர் ஊருணியாக இருக்கும் பயன்நிலை கனிமரத்திற்கும் உரியது. மரங்கள் பலவகை. விறகாக எரிக்கவும், வீடு கட்டவும், கனிகள் வழங்கியும் உதவுகின்றன. எரிக்கப் பயன்படும் மரங்களுடைய கடையை விறகுக்கடை என்போம். பல நூற்றாண்டுகட்கு முன், கி.பி. 1-இல் தோன்றிய வைரம் பாய்ந்த மரம் உத்திரமாக இன்றும் நின்று வீட்டைத் தாங்கும் நிலை பேறுடைத்தாய் விளங்குகின்றது. சமுதாயத்தில் விறகாக எரிந்து போனவர்கள் பலர். நிலைபெறும் மரமாகச் சமூகத்தைத் தாங்கிச் சீர்திருத்தி நன்மை புரிந்து வாழ்வித்தவர் உளர். கல்லணை கட்டிய கரிகாலன் போலப் பெயரால், புகழால் என்றும் நிலைப்பவர்கள் உண்டு. விறகாக அழியாது பயன்மரமாகப் பழமரமாக வாழுதல் நன்று.

மரங்கள் நல்ல கனிகளைத் தந்து உலகுக்கு உறுதுணையாகின்றன. கனிமரத்தை நாடிச் சேய்மையிலிருந்து வரும் புட்களும் தங்கிப் பசியாறிச் செல்ல முடியும். அம்மரமும் உள்ளூரிலேயே பழுத்தால், சென்று பெறும் துன்பம் குன்றிச் சிறப்பாக அமைய இயலும். ஒப்புரவாளனின் செல்வமும் இத்தகையதே.

கனிமரம் பசியாற்றும் நிலையில் உலக உயிர்கட்குப் பயன்படுகின்றது; நிழல்மரம் இளைப்பாறுதல் தரும் நிலையில்

அனைவர்க்கும் உதவுகின்றது. இவற்றைவிட, பல்நிலையிலும் பயன்படும் வாழை மரம் சிறக்கின்றது. அம்மர உறுப்புக்கள் அனைத்தும் அதாவது, இலை, பூ, காய், கனி, தண்டு, தடை எல்லாம் பயன்படுகின்றன. மனிதன் தன் புறப்பொருளாகிய செல்வத்தாலும் புற உறுப்புக்களாகிய கை கால்களாலும் அக உறப்புக்களான எண்ணம், சொற்களாலும் பிறருக்குப் பயன்படுவானேயானால் அவனையே சமுதாயத்தில் உயர்ந்த மனிதனாகக் கொள்ளலாம்.

மனித சமுதாயத்திற்காகத் தங்களையே அழித்துக் கொண்ட இயேசு, காந்தி, கென்னடி போன்ற பலரைக் குறிப்பிடலாம். அவ்வாறு வாழ்ந்தவர்கள் ஒப்புரவு அறிந்தவர்களே எனக் கூற இயலும். உயிருக்கு உறுதி தரும் மருந்து மரமாகப் பெறுவதற்கு எளிய நிலையில் உலகுக்கு உய்தி அளித்தவர்கள் இத்தகையவர்கள்.

மனிதன் சமுதாயத்தோடேயே இணைந்து வாழ்ந்தால் அச்சமுதாயத்திற்கு என்ன தேவை, என்ன தருதல் வேண்டும் என்பதனை அவன் உணர்ந்து செயற்பட வேண்டும். அவ்வொப்புரவு அறிதலே அவன் வாழ்வில் உயர்நிலையாக அமைகின்றது. அவ்வாறன்றி, உணராது உருகாது உதவாது வாழ்பவனாக இருந்தால் அவைனச் செத்தவர்கள் பட்டியலில் இணைத்துச் சுடுகாட்டில் கொண்டு வைக்க வேண்டியதுதான். இவ்வுலகில் வாழத் தகுதியற்றவன் அவன். அவன் வாழ்ந்து பயனில்லை. பயனற்றதை வைத்துக் காப்பதில் பலனில்லை. புறம்பே களைந்துவிட வேண்டியதுதான். இதனை உணர்த்தும் முறையிலேயே வள்ளுவர்,

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும் *(குறள் 214)*

என்கிறார்.

இவ்வாறு உலக நடையினை யறிந்து நல்லவர்கள் சமுதாயத்திற்குச் செய்த உதவியை என்றும் போற்றுதல் வேண்டும் என்பதனைத் தான் செய்ந்நன்றியறிதல் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் பேசுகின்றார். தமிழ்ச்சமுதயத்திற்கு அறிவூட்டுகின்ற பொதுப் பல்கலைக் கழகங்கள் சில அமைந்தாலும், தமிழ் மக்களின் வாழ்வும் வளமும் கருதி, ஒப்புரவு அறிந்து பல்கலைக்கழகம் வைத்த அண்ணாமலைச் செட்டியார் போன்றோர் உதவியைச் சமுதாயம் என்றும் நினைத்துப் போற்றுதல் வேண்டும். ஒரு தனிப்பட்ட மனிதன் இன்னொரு தனிப்பட்ட மனிதனுக்குச் செய்த உதவிக்கு நன்றியுடனிருத்தல் வேண்டும் என்பது பொதுக் கொள்கையாக இருப்பினும், பொதுமக்களும் தனிப்பட்ட மனிதனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்பதே வள்ளுவரின் எண்ணமாக அமைந்தது என்றும் கொள்ளலாம். செய்கின்ற உதவி இடத்திற்கும் காலத்திற்கும் பொருத்தமான நிலையில் அமைவது நன்று; அதுவே

சிறப்பு. செய்யப்படுகின்ற அவ்வுதவி செய்வோனால் பெறும் சிறப்பினை விடப் பெறுவோனால் மிகுந்த பெருமை பெறுகின்றது. பெறும் பாத்திரத்தால் இடுவோன் பெறும் சிறப்பு இது.

இன்று, சமுதாயத்தைச் சீர்திருத்தி உதவியவர்களுக்கு எல்லாம் சிலை வைத்துப் பாலங்கட்டி அவர்கள் பெயரால் பள்ளிகள் அமைத்து நினைவாலயங்கள் எழுப்பி அவர்களைப் போற்றி வழிபடுகின்றோம். இது பொதுநிலை. தனிப்பட்ட அளவில் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்குப் பல தீமைகள் செய்து, ஒரேயொரு சிறு நன்மை செய்யின் அந்நன்மையினை நினைந்து தீமைகளை மறத்தல் வேண்டும் என்று பேசுகின்றார் வள்ளுவப் பெருந்தகை.

உலகில் நன்மை தீமை இரண்டும் பிறப்பு இறப்புப் போன்றவை; தவிர்க்க இயலாதவை; அவை நிகழ்ந்தேயாதல் வேண்டும். அவற்றுள் நன்மையை நாடித் தீமையை நீக்க வேண்டும்; நன்மையை நயந்து தீமையை வெறுக்க வேண்டும்; நன்மையைப் போற்றித் தீமைகளை மறத்தலே உயர்ந்த பண்பு என்பது வள்ளுவர் கொள்கை. அதனைத்தான் செய்ந்நன்றியறிதல் என்ற அதிகாரம் தெளிவுபடுத்துகின்றது. ஒருவர் செய்த நன்றினை நினைக்க; தீமையை மறந்துவிடுக!

தீச்செயல்கள் பல ஒருசிறு நற்செயலில் கருகி அழிந்து விடுகின்றன. அக்கினிக் குஞ்சால் பெருங்காடு தீப்பட்டு அழிவது போன்றும், தீயினால் பொன்னின் தூசு நீங்குவது போன்றும், நீரினால் பொருளின் மாசு மறைவது போன்றும் நற்செயலாகிய சிறு சுடர், தீச்செயலாகிய பெரும் இருட்டை மாற்றிவிடுகின்றது.

வள்ளுவர் அறங்கூறும் முறையில், தான் பெருந்துன்பம் உற்றாலும் பிறர் இன்பம் பெறும்படி வாழவேண்டும் என்பது அமைகின்றது. இந்நிலை அனைத்து அறங்களுக்கும் பொருந்தும்படி உள்ளது. எனவே பல நிலைகளிலும் வலியுறுத்தப்படுகின்றது. துன்பம் உறவரினும், துணிவாற்றி இன்பம் பயக்கும் வினையே புரிக என்பது கருவாக உருப்பெறுகின்றது. இவ்வாறே எல்லா மனிதர்களும் அமைந்துவிட்டால் சமுதாயம் உயர்ந்துவிடுமல்லவா? உய்ந்துவிடுமல்லவா?

உதவிசெய்தல், நன்மை புரிதல் எத்துணை தேவையோ அத்துணை, உதவியை உணர்தலும் தேவையாகின்றது. ஒருவர் செய்த நன்றியை, நற்செயலை நாம் உணராது போயின் அது பெருங்குறையாகும். அவர் புரிந்த நன்மையை மறத்தல், மறுத்தல் பெருந்தீமையாகும். ஒருவர் செய்த நன்றை மறந்து செயல்படலைக் குற்றங்களின் உச்சநிலையாகக் காட்டுகின்றது வள்ளுவம். தீச்செயல் புரிந்த ஒருவனைவிட, செய்ந்நன்றி மறந்தவன் கொடிய தீர்ப்புக்கு உளவாகின்றான். கழுவாய் தேடி உய்தி பெறம் நிலைமை இவனுக்கு அறவே இல்லையாகின்றது.

நன்றியுணர்தலில் பல படிநிலைகளைக் காட்டுகின்றார் வள்ளுவப் பெருந்தகை. துன்புற்ற காலத்தில் துணையானவர் ஒரு நிலையினர். உதவ ஓர் உயிரின்றித் தாங்க ஒரு துணையின்றித் தவித்த காலத்து இடுக்கணுற்ற இன்மைக்காலத்தில் உதவிய உயர்ந்த உள்ளத்தினரை நட்பின் இலக்கணமே உருவானவராகக் காட்டுகின்றார். நினைக்குந்தோறும் நெஞ்சம் இனிக்கும் இவர்கள் நட்பு; விட்டு நீங்கற்கு அருமையானது இத்தகையோர் தொடர்பு.

இதனால் இன்ன பயக்கும் என எதிர்பாராது நற்செயல் புரிதல் ஒன்றே கொள்கையாக, குறிக்கோளாக உதவுபவர்கள் இன்னொரு நிலையினர். பயனற்ற செல்வப் பெருக்கைக் கடல் நீராகக் கருதிக் கண்ட நாம், இத்தகையோர் செய்த பேருதவியைப் பிறிதோர் கோணத்தில், ஆழமும் அகலமும் பரப்பும் வற்றாவளமும் உடைய பெருவாரியாக வள்ளுவர் வழிக் காண்கின்றோம். முத்தும், பவளமும், உப்பும், உணவும் கைம்மாறு கருதாது வாரி வழங்கும் கடலின் இயல்பினை இவ்வுதவி ஒக்கின்றது.

தமக்கு, முன்பு ஒருவர் உதவாதிருக்கத் தாம் அவர்க்கு ஏதேனும் நன்மை செய்தல் மற்றுமோர் நிலை. இது ஒப்புமை கூறுவதற்கும் அரிய உயர்நிலை. நீர்வளமும் நிலவளமும் உடைய வையகமும் மழைவளஞ்சுரக்கும் வானகமும் ஒருங்கிணையினும் இதற்கு ஒவ்வாதே அமையும் திறத்தன.

இத்தகு 'நன்றியறிதல்' என்பதற்கு இணையாக, அக்கருத்துடன் இணைந்த மற்றொரு கோட்பாடாக அமைவது 'தீது மறத்தல்' என்பதாகும். வள்ளுவர் வாக்கு இதனையும் விளங்க வைக்கின்றது. நன்மையை நினைவுகூரற்கேற்ப நன்றல்லாததை மறத்தலும் இன்றியமையாததே. 'நன்றே செய்க; நன்றும் இன்றே செய்க; இன்னே செய்க' என்பதுபோல் தீதையும் உடனடி மனத்திரையினின்று விலக்குதல் சிறப்பு. நல்லெண்ணங்களாம் விதைகளை வித்தி உடன் நீரூற்றி வளர்ச்சிக்குரிய சூழலை உருவாக்குவதற்கொப்பத் தீய நினைவுகளை முளையிலேயே களைந்து வேருடன் அழித்துவிடல் வேண்டும்.

தீது அழிந்து, நன்மை உணர்ந்து ஒப்புரவறிந்து வாழும் தன்னலமற்ற உயர்வாழ்வு உலகை உய்விக்கும் அருள் மாரியாக உருப்பெறுகின்றது; நிலைத்து நிற்கின்றது.

❋ ❋ ❋

கம்பரும் வள்ளுவரும்

ச. சிவகாமி



தமிழுக்குக் கதியாகப் போற்றப்படும் கம்பருக்கும் வள்ளுவருக்கும் இடையே காலத்தால் சுமார் ஆயிரமாண்டுகள் இடைவெளியிருப்பினும் சிந்தனையால் இருவரும் பெரிதும் ஒன்றுபடுகின்றனர். இருவரும் சமுதாயச் சிற்பிகள், சீர்திருத்தச் சிந்தனையாளர்கள், தம் படைப்பால் உலக அரங்கில் தமிழுக்குப் பெரும்புகழ் சேர்த்தவர்கள். வள்ளுவரின் படைப்பு மூல நூலாக அறவிலக்கியத்துள் தலைநூலாக, உலகப் பொதுமறையாகப் பெருமை பெற்றுள்ளது. கம்பரது காவியம் தழுவலான போதிலும் கிடைக்கும் முதல் இதிகாசமாகித் தமிழுக்குத் தனிச் சிறப்பு அளிக்கிறது. இவர்தம் படைப்புகள் இவர்தம் பெயராலேயே கம்பன், வள்ளுவம் எனவும் சிறப்புறுகின்றன.

வள்ளுவர் தம் நூலுக்கு இட்ட பெயர் மறை பொருளாகி, ஆன்றோர் அதன் யாப்பு மற்றும் பொருள் பெருமை கருதிக் குறள், திருக்குறள் என அழைக்க அதுவே இன்று நிலைத்துவிட்டது. கம்பர் தம் படைப்பிற்கு ‘இராமாவதாரம்’ எனப் பெயரிட்டிருந்தாலும் அதன் பெருமை

குறித்துக் கம்பராமாயணம் என்று பெருவழக்காகி இன்று இயற் பெயர் மறைந்துவிட்டது. வள்ளுவம் பக்திக்கு இடமளித்திருப் பினும் அறத்தை முதன்மையாக்குகிறது. கம்பன் பக்தியிலக்கிய மாயினும் அறத்திற்கும் இடமளித்துள்ளது. இருவரும் சென்ற பாதைகள் வேறுவேறாயினும் சென்றடைந்த அடிப்படை இலக்கு 'இன்பக்கனவுலகச் சமுதாயம்' (Utopia) ஆகும். எனவே இருவரையும் ஒப்பியல் பார்வையில் அணுகுதல் இயல்பாகிறது.

வள்ளுவம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் இலக்கண நூல் என்றால் கம்பன் அவ்விலக்கணத்திற்கு விளக்கமாக, சான்றாக எழுந்த இலக்கியம் எனலாம். இராமன்பால் கொண்ட பக்தி இராமாயணத்தைத் தமிழ்ப்படுத்தக் கம்பரைத் தூண்டிடினும் தமிழின் பால் கொண்ட மாளாக்காதல் அதற்குத் தமிழ்வேலி யமைத்தது. வள்ளுவத்தின் மேன்மை அவரின் அறமுணர்த்தும் பக்திக்காப்பியத்தை அணுஅணுவாகச் செதுக்கிச் செம்மைப் படுத்தத் துணையானது. கம்பனை முழுமையாக நோக்குமிடத்துத் தமிழ் தந்தவர் அகத்தியர், தமிழின் தலைநூலாம், தனிப்பெரும் இலக்கணமாம் தொல்காப்பியம், பொருண்மைச் சிறப்பால் வள்ளுவம் என மூவரும் மிகுந்த மதிப்புற்றிருக்கக் காணலாம். மூவருள்ளும் வள்ளுவம் முதன்மை கொள்கின்றது. தமிழறமகனாம் வள்ளுவரைத் தமிழ்ச்சீர்மகனாம் கம்பர் தம் படைப்பு முழுமையும் நடமாடச் செய்துள்ளார். கம்பராமாயணம் எனும் ஆடை வள்ளுவம் எனும் வண்ணத்தால் வனப்புற்றுள்ளது. நுணுகி நுணுகி ஆராய்ந்து ஆழங்கால்பட்ட அவரது வள்ளுவ அறிவு கம்பராமாயணத்தின் கட்டமைப்பில், கதைமாந்தர் பண்பு விளக்கத்தில், கதை நிகழ்ச்சிகளில், கவிதையழகில் எதிரொலிக் கின்றது. வள்ளுவத்தின் சொல்லோவியங்கள் கம்பனில் பல வாறாகக் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. வள்ளுவமும் 'ஐந்தவித்தான்' குறள் (25) வழி இராமாயணக் கூறினை உட்கொண்டுள்ளது.

வள்ளுவத்தின் 1330 குறட்பாக்களும் கம்பனில் ஆட்சி புரிவதைத் தண்டபாணி தேசிகர் தம் 'வள்ளுவரும் கம்பரும்' நூலுள் தெளிவுபடுத்தியுள்ளார். எனினும் தொட்டனைத் தூறும் மணற்கேணிகளாக இருநூல்களும் அமைவதால் புதியபுதிய சிந்தனைகள் ஆய்வாளருக்கு ஊற்றெடுக்கின்றன. அவ்வகையில் இக்கட்டுரையாளருக்குத் தோன்றிய சில கருத்துகள் இங்கே இடம்பெறுகின்றன.

ஒப்பு நோக்குக் களங்கள்

வள்ளுவத்தின் முப்பால் கூறுகளை, ஒவ்வொன்றாகக் கம்பனில் அணுகி இரண்டன் ஒற்றுமை, வேற்றுமை காணலாம்.

வீடு தனித்து இடம்பெறாவிடினும் வள்ளுவத்துள் கடவுள் வாழ்த்து முதலானவற்றில் பொதிந்திருக்கிறது. அகம், புறம் என அமைந்த இலக்கியப் பொருள் வகைப்பாடு அறம், பொருள், இன்பம், வீடு எனப் பிறிதொரு வகைப்பாட்டிற்கும் இடம் தர வள்ளுவம் அடிப்படையாயிற்று; பின் காப்பியப் பாடு பொருளின் கட்டாயமாயிற்று. எனவே இந்நோக்கில் இவற்றை இவற்றில் அணுகும் பொழுது காலமாற்றம் தந்துள்ள கருத்து மாற்றம், வளர்ச்சி வெளிப்படும். ஈதலறம் போன்று மாறாத சிந்தனைகளையும் வெளிப்படுத்தலாம். அதிக மாற்றங்களுக்கு இடங்கொடுக்கும் பொருள், அவ்வாறு மாறுவதற்கான காரணங்களைக் கணக்கிடலாம்.

கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட் பேறு, அன்புடைமை எனத்தொடரும் வள்ளுவ வரிசை கம்பனிலும் குறிப்பிடத்தக்கவாறு அமைதலும் காணத்தக்கது. இங்கும் கடவுள் வாழ்த்தைத் தொடருவது வான்சிறப்பைக் காட்டும் ஆற்றுப் படலமாகிறது. விசுவாமித்திரர், வசிட்டர், அகத்தியர் முதலான முனிவர் காப்பியக்களனுள் சிறப்புறுதலும் கதைத்தலைவன் தன் வன வாழ்க்கையின் பெரும்பகுதியை இவர்களுக்குத் துணையாகக் கழித்தலும், தன் வன வாழ்க்கையைத் தவ வாழ்க்கையாக அமைத்துக் கொள்ளுதலும் நீத்தார் பெருமையை நினைவூட்டுவனவாம். கதைத் தலைவன், தலைவி மற்றும் அவரோடு தொடர்புடைய பலரும் அற வாழ்க்கையினராக அதனைப் பிறருக்கும் வலியுறுத்துவோராக அமைதலும் எண்ணத்தக்கன. 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்பது காப்பிய நோக்காக அமைதலும் கருதற்பாலது. காப்பியக்கதை நிகழ்வுகள் இல்வாழ்வின் சிறப்பு, வாழ்க்கைத் துணைநலத்தின் பெருமை, மக்கட்பேற்றின் மகிமை, அன்பின் ஆழம் முதலானவற்றை முதன்மைப்படுத்தியும் வலியுறுத்தியமையக் காண்கின்றோம். வள்ளுவத்தின் ஒவ்வொரு அதிகாரமும் கம்பனில் கால் கொண்டுள்ள விதம் இதனால் புலப்படும். அரசியல் சார்ந்த அறநூலாக வள்ளுவரும், வாழ்வியலைக் கற்பிக்கும் அரசக் காப்பியமாகக் கம்பனும் அமைவதால் இரண்டின் நெருக்கமும் இயல்பாகிறது. கம்பரின் மூச்சாக வள்ளுவம் இயங்குதல் இதனால் தெளிவாகும்.

வள்ளுவம் மானுடத்தை அதன் வாழ்வின் தன்மை கொண்டு மேனிலை (சான்றோர்), இயல்புநிலை, தாழ்வுநிலை (கீழோர்) என மூன்றாகக் காணும். இவற்றிற்குக் குறள்தரும் இலக்கணம் கொண்டு கம்பன்கதை மாந்தரை அளவிடக்கூடும். இதுபோன்றே ஆண்மைக்கும் பெண்மைக்கும் வள்ளுவம்

உணர்த்தும் வரையறை கம்பனில் பொருந்துமாற்றையும் காணலாம். இவற்றால் வள்ளுவம் தரும் மானுடப்பண்பு நலன் கம்பன் கதைமாந்தர் சொல், செயலில் எதிரொலிப்பதும் தனி ஆய்வாக விரியும். இதனால் சில குறட்பாக்களுக்கு மிகச் சரியான காட்டாகக் கம்பன் மாந்தர் அமைவதும் சுட்டத்தக்கது. 'நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன் உண்மையறிவே மிகும்' (373)' என்னும் வள்ளுவத்தை வாலி தன் செயலாலும் கூற்றாலும் (4046, 4047) மெய்ப்பிக்கின்றான். 'பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து' (978) என்பதில் பெருமைக்கு அனுமனும் (5341, 6016), சிறுமைக்கு இராவணனும் (9123) சான்றாகின்றனர். கைகேயி, வாலி, இராவணன் என்போர் 'தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை வீயாது அடி உறைந்தற்று' (208) என்பதை நிலைநாட்டுகின்றனர்.

கதைமாந்தர் போன்றே கதைநிகழ்ச்சிகளும் குறட்கருத்துக்கு மிகப் பொருத்தமாக அமைவதையும் இங்குக் காட்டலாம். 'சான்றோர் தடுத்த செயல்களைச் செய்தால் அவை செய்து முடிக்கப்பட்டாலும் இறுதியில் துன்பத்தையே தரும்' எனும் குறட்பா (658) கைகேயி தசரதனிடம் பெற்ற வரங்களுக்குச் சான்றாகிறது. ஒரு வினை செயப்புகுந்து அதனால் பிறிதொரு வினையையும் முடித்துக் கொள்ளுதல் செய்யும் தொழிலின் சிறப்பாக, ஒரு யானையைக் கொண்டே மற்றொரு யானையைப் பிடித்தற்கு ஒப்பாக அமையும் என்பார் வள்ளுவர் (678). இதனைக் கம்பரும் அப்படியே ஏற்றுக் கொண்டமையை, தந்தையின் சொல் காப்பாற்ற காடேகிய இராமன் அங்குத் தன்னை வந்தடைந்தவர்களை நட்பாக்கி, உறவாக்கித்தன் ஆளுமையையும் விரித்துக் கொண்டதில் காணலாம்.

ஒப்பாய்வின் மேற்பரப்பில் தென்படும் இவற்றுடன் ஆழ் நோக்குக் கொள்ளும் பொழுதும் மற்றும் சில களங்கள் தென்படுகின்றன. ஒன்றன் பற்றிய எண்ணங்கள், கோட்பாடுகள் அடிப்படையிலும் இவ்வொப்பாய்வு மேற்கொளப்படலாம். சான்றாக அரசியல், நட்பு, உலகியல், கடவுள் போன்றன பற்றிய வள்ளுவச் சிந்தனைகள் கம்பனில் எங்ஙனம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன அல்லது மாற்றங்கண்டுள்ளன அல்லது வளர்ச்சி பெற்றுள்ளன என அறுதியிடலாம். மனித வாழ்க்கை பற்றிய மதிப்பீடுகளும் தனித்து அளவிடற்குரியன. பிறன்மனை நயவாமையைப் பின்பற்ற வேண்டிய வாழ்வியலறங்களுள் ஒன்றாக வள்ளுவம் உணர்த்த கம்பனுக்கு அதுவே காப்பியப் பாடுபொருள்களுள் ஒன்றாக அமைதல் குறிப்பிடத்தக்கது.

சில மாற்றங்கள்

வள்ளுவர் கருத்திற்கு மிகுதியும் ஒன்றியே செல்லும் கம்பர் சிலவற்றில் மாற்றங் கண்டுள்ளதையும் அறியமுடிகிறது. அவற்றில் சில:

1. அரசனின் அங்கங்களுள் ஒன்றாக வள்ளுவத்தில் நட்பு பெருமையுறுகிறது. தசரதன் - சுமந்திரன், தசரதன் - சடாயு, இராமன் - குகன் முதலான நட்புகளில் கம்பனும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் கம்பனில் நண்பர்கள் உடன் பிறப்புகளாகி நட்பின் பெருமையை மேலும் உயர்த்துகின்றனர். இருவரது நட்பு இருகுடும்ப, இரு இன நட்பாக விரிந்து சிறப்புறுகிறது. 'செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல் வினைக் கரிய யாவுள காப்பு' எனும் (781) வள்ளுவ வித்தே இவ்வாறு கம்பனில் முளைத்துக் கனிந்துள்ளது. சுற்றம் என்ற பொதுக் கோட்பாட்டுக்குள் உடன்பிறப்பினை வள்ளுவம் அடக்கிவிட, நட்புக்கு இணையானதொரு உறவாக உடன்பிறப்பைக் கம்பன் சிறப்பிக்கிறது. இரண்டையும் ஒன்றாக்கியதன் வழிக் கம்பர் ஒவ்வொருவர் வாழ்விலும் இரண்டும் இன்றியமையாதன என்பதை வலியுறுத்துகிறார்.

2. தன்மகனைப் பிறர் சான்றோன் எனப் பாராட்டியதால் ஈன்ற பொழுதினும் பெரிது உவந்த தாயை வள்ளுவம் காட்ட (69), அம்மகிழ்ச்சியைத் தந்தைக்கும் உரித்தாக்குகிறது கம்பன். நாடாளும் பொறுப்பைத் தசரதன் இராமனுக்கு அளிக்கப்போவதாகக் கூற அதனை ஏற்றுக் கொண்ட அவையின் சார்பில் விசுவாமித்திரர் அவன் அப்பதவிக்கு எப்படியெல்லாம் மிகுந்த பொருத்தமானவன் என விரித்துரைக்கிறார். அதனால் பெருமிதமுற்ற அவன் நிலையைக் கம்பன்,

மற்று அவன் சொன்ன வாசகம் கேட்டலும், மகனைப்
பெற்ற அன்றினும், பிஞ்ஞகன் பிடித்த அப்பெருவில்
இற்ற அன்றினும், எறிமழு வாளவன் இழுக்கம்
உற்ற அன்றினும் பெரியது ஓர் உவகையன் ஆனான் *(1354)*

என வடிக்கின்றது. இங்குப் பிறப்பு மட்டுமின்றிப் பிற அரிய பெரிய செயல்களும் அடுக்கப்பட்டுள்ளமை எண்ணத்தக்கது. தம் மகனைப் பிறர் பாராட்டுவது பெற்றோர் இருவருக்கும் பெரு மகிழ்வளித்தல் பொதுவானது; பெறுவது மட்டுமன்றி வெற்றி வாகை சூடுதல் போன்ற பிறவும் அதற்கு இணையான இன்பத்தை அளிக்கக்கூடியன என்பன கம்பரின் கொள்கைகளாக அறியப்படுகின்றன.

3. விருந்தோம்பலை வள்ளுவம் இல்லறத்தார் கடமையாக (43,81) நவில்வதுடன் துறவறத்தாரால் அது இயலாத ஒன்று எனவும் மொழிகின்றது (88). ஆனால் கம்பனோ வனவாசத்தில் இருந்த இராமனுக்குத் தண்டகாரண்ய முனிவர் (2661) விருந்தளித்து உபசரித்ததைக் காட்டி விருந்தோம்பல் மானிடர் அனைவர்க்கும் பொதுவானது; துறவியரும் அதற்கு விலக்கல்லர் என உணர்த்தி விருந்திற்கு மேலும் பொலிவூட்டுகிறது. கம்பர் அனுபவித்த வறுமைத்துன்பம், துறவியரையும் விருந்தளிப்போராக உயர்த்தியது போலும். இராமனுக்குச் சபரி விருந்தளித்ததையும் இங்கு இணைத்துப் பார்க்கலாம்.

4. அன்பின் ஆழத்தை, இறுக்கத்தை வெளிப்படுத்த இருவருமே கள்ளுண்டலைக் காட்டுகின்றனர். வள்ளுவம் தலைவன் தலைவியர் அன்பிற்கு, காதலுக்கு (1090, 1145, 1201, 1281, 1288) அதனைத் துணைக் கொள்கிறது. கம்பன் உடன்பிறப்பு நேயத்திற்கும் (10202), மகிழ்ச்சிப் பெருக்கிற்கும் (9974) அதனை விரிக்கிறது. இராமன் வரவறிந்த பரதன் இன்பத்திற்கும், தன் மீட்பு அறிந்த சீதையின் மகிழ்ச்சிக்கும் இங்கு உவமையாகின்றது.

5. கடவுள் இருக்கிறார் என்பதில் உறுதியான எண்ணம் உடைய கொள்கையை மட்டுமே வள்ளுவர் ஆதரிக்கிறார். தம் காலத்துப் பல்வேறு சமயங்கள் இருப்பினும் பொதுநிலைக் கடைப்பிடித்து எதன்பாலும் சாராது நடுநிற்கிறார். அற வாழ்வினருக்கு இறை நம்பிக்கையை வலியுறுத்துவது மட்டுமே அவரது நோக்காகிறது. கம்பன் பக்திக் காப்பியமாதலின் கடவுட் கோட்பாடு நூல் முழுமையும் படர்ந்துள்ளது. காப்பியத்திற்குப் புறம் நின்று அவரது தனிப்பட்ட சிந்தனை என்ன என்று கருதும் பொழுது, 'உலகம் யாவையும்' எனும் பாயிரத்துள் அமையும் கடவுள் வாழ்த்தால் தாமும் பொதுமை பேணுபவர் என்பதை உணர்த்துகிறார். மற்றும் 'ஒன்றே என்னின் ஒன்றே ஆம்; பல என்று உரைக்கின் பலவே ஆம்' எனும் யுத்த காண்ட கடவுள் வாழ்த்தாலும் இதனை நிறுவுகிறார். இப்பாடலின் பின் தொடரும் 'அன்றே என்னின் அன்றே ஆம்; ஆமே என்னின் ஆமே ஆம், இன்றே என்னின் இன்றே ஆம்; உளது என்று உரைக்கின் உளதே ஆம்' எனும் தொடர்கள் கடவுள் இல்லை என்பாருக்கும் உடன்பட்டு நிற்கக் காணலாம். கடவுள் மறுப்பினையும் கடவுள் நம்பிக்கையுள் இணைக்கும் பாங்கு, வள்ளுவச் சிந்தனையினின்றும் மாறி நிற்பதைத் தெரிவிக்கின்றது.

6. 'தீயினால் சுட்டபுண் உள் ஆறும், ஆறாதே நாவினால் சுட்ட வடு' (129) எனும் வள்ளுவர் கூற்றிற்கு மாறானதொரு

காட்சியைக் கம்பனில் காணலாம். சீதையைச் சிறைமீட்ட இராமன் அவளிடம்,

> **ஊண்திறம் உவந்தனை ஒழுக்கம் பாழ்பட**
> **மாண்டிலை முறைதிறம்பு அரக்கன் மாநகர்**
> **ஆண்ட உறைந்து அடங்கினை அச்சம் தீர்ந்து இவண்**
> **மீண்டது என் நினைவு? 'எனை விரும்பும்' என்பதோ** *(10013)*

எனக் கனல் கக்குகிறான். சீதை அதன் வெம்மையில் தீக்குளித்தாலும் தயரதன் அமைதிப்படுத்த, மனம் குளிர்ந்து இயல்பானதைத் தொடரும் காட்சிகள் காட்டுகின்றன. 'தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்' (56) என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சீதை படைக்கப்பட்டதால் இந்நிலை போலும். சீதையுள்ளம் இராமன் கூற்றால் வடுக்கொளின் அவர்தம் இல்லறம் நல்லறம் ஆகாது ; விரிசல் காணும்;அன்றைய சமுதாய நடைமுறைக்கும் ஒவ்வாது என்பனவற்றுடன் காப்பிய இலக்காகக் கம்பன் கொண்டுள்ள 'ஒருவனுக்கு ஒருத்தி' என்பதும் பாழ்படும் என்பதாலும் ஆகலாம்.

முடிபு

சினமின்மையை வலியுறுத்தும், கடவுள் வழிபாட்டை வேண்டும் வள்ளுவர், 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றி யான்' (1062) எனப் பொங்குகிறார். மற்றும் எப்படி அறிவுறுத்தினாலும் திருந்தாத சமூகம் கண்டு, 'செவியின் சுவை உணரா வாய் உணர்வின் மாக்கள் அவியினும் வாழினும் என்' (420) எனக் கனல்கிறார். இம்மானுடத்தின் மீது அவர் கொண்ட நேயமே இவற்றிற்கு அடிப்படை. இம்மனிதநேயக் காதலே கம்பனில், வெகுண்ட சினம் அடங்கிய நிலையில் இன்பக் கனவுலகக் கோசலமாகப் பரிணாமம் பெற்றுள்ளது.

துணை நூல்கள்

1. கம்பராமாயணம், கம்பன் கழகம், சென்னை, 1976.
2. திருக்குறள் (மூலமும் தெளிவுரையும்), நாமக்கல் கவிஞர், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1999.

❋ ❋ ❋

பெரியார்

அன்னி தாமசு

மூத்தோர், சிறந்தோர், ஞானியர், அரசர் எனும் பொருண்மையினதாகப் பெரியார் எனும் சொல் பேரகராதியில் குறிக்கப்படுகிறது (தமிழ் லெக்சிகன், தொகுதி, V, ப. 2869).

தொல்காப்பியத்தில் இந்த வடிவம் இல்லை. பெரியவர் (தொல். 1022), பெரியோர் (தொல். 1096) ஆகிய தரவுகளே உள.

சங்கஇலக்கியம் அருகி, 'பெரியார்க்கு, அடியரோ ஆற்றாதவர்' (கலி.88.3) என்பதில் இச்சொல்லாட்சியைத் தருகின்றது. பெரியர் (குறு. 3685), பெரியவர் (நற். 2669), பெரியோர் (புறம். 19212) போன்ற வடிவங்கள் அங்கு உள.

கலித்தொகை, காலத்தால் பிற்பட்டது என்ற கருத்து ஏற்புடையதாயின், திருக்குறளே பெரியார் என்ற சொல்லை முதலில் படைத்துக் கையாண்டது எனக் கருதமுடியும்.

திருக்குறளில், பெரியர், பெரியார் ஆகிய இரு பயன்பாடுகள் உள. பொருட்பாலின் இரு அதிகாரங்கள் பெரியாரைச் சார்ந்து அமைவது குறிப்பிடத்தக்கது. பெரியாரைத் துணைக்கோடல் (45-ஆம்



அதிகாரம்), பெரியாரைப் பிழையாமை (90-ஆம் அதிகாரம்) என இரண்டு அதிகாரம், ஒரு பாலில், இடைவெளிவிட்டு அமைவது காணப்படுகிறது. இவற்றிற்கு உள்ளும் இவற்றிற்கு வெளியேயும் 'பெரியார்' விளக்கம் பெறுகின்றனர். அறத்துப்பால், இன்பத்துப் பாலில் இவர் இடம் பெறவில்லை. 'செயற்கரிய செய்வார் பெரியர்' (26), 'உண்ணாது நோற்பார் பெரியர்' (160) எனப் பெரியர் என்பதே அறத்துப்பாலில் - அறத்துப்பாலில் மட்டும்- உண்டு. இன்பத்துப்பாலில் அதுவும் இல்லை. தேவைப்படவில்லை.

பெரியார் என்ற சொல்லாட்சிவரும் ஏழு இடங்கள் (443, 444, 680, 694, 892, 896, 976), முன் சுட்டிய பெரியாரைத் துணைக் கோடல், பெரியாரைப் பிழையாமை ஆகிய அதிகாரங்களுடன், வினைசெயல்வகை, மன்னரைச் சேர்ந்தொழுகல், பெருமை எனும் அதிகாரங்களிலாக இடம்பெற்றுள்ளன.

பெரியார் தொடர்பான அதிகாரங்கள் மற்றும் பெரியார் இடம்பெறும் குறள்களின் அடிப்படையில் 'பெரியார் யார்' என்பதை வகுத்துக் காண இயலும்.

பெரியார் நல்லவராக அமைவர். 'நல்லார்' (450) என வள்ளுவர் சுட்டுவதால் நற்பண்புகள் நிறைந்த குணவான்களாக, நன்மை நாடிக் கடைப்பிடிப்பவராக இவரைக் கொள்ளலாம். தகுதியுடையவராகவும் அமைவர் என்பது 'தக்கார்' (446) 'தகைமாண்ட தக்கார்' (897) எனும் சுட்டுகளால் புலப்படும். 'ஏந்திய கொள்கையர்' (899) என்பதால் அவரது உயர்ந்த கொள்கைப்பிடிப்பும், 'சிறந்தமைந்த சீரார்' (900) என்பதால் சிறப்பும் சீர்மையும் வள்ளுவரால் எடுத்துமொழியப்படும். இவற்றிற்கு மேல், இவர் அறிவும், முதிர்ச்சியும் அறமுமுடைய வராகவும் அமைவது வேண்டப்படுகிறது. 'அறன் அறிந்து மூத்த அறிவுடையார்' (441) என்ற வள்ளுவத் தொடர் இதனை விளக்கும். தமிழகராதி தரும் பொருண்மை பெரும்பாலும் இங்குப் பொருந்திவிடுகிறது.

இத்தகு பண்பு விளக்கங்கட்கு மேல் சில செயல் விளக்கமும் இவர்க்குப் பொருந்துதல் காணப்படுகிறது. 'ஆற்றுவார்' - 'ஆற்றுபவர்' (891, 893) என்பது அவற்றுள் ஒன்று. செயலாற்றுபவர் என்று இதனைக் கொள்ள முடிகிறது. செயல்திறன் இவரில் வெளிப்படுகின்றது. வந்ததை நீக்கி, வராததைக் காக்கும்-தடுக்கும் திறன் இவர்க்கே உரியதாதலால், 'உற்ற நோய் நீக்கி உறாமை முற்காக்கும் பெற்றியார்' (442) எனப் போற்றுகின்றார் வள்ளுவர். இவரையே சூழ்வார் (445) எனவும், இடிப்பார் (448), இடிக்கும் துணையார் (447) எனவும் படைத்துக் காட்டுவார். இவ்விரு செயல்நிலையிலும் இவர் மன்னனுக்கு உற்றுழி உதவுபவராக அமைவது குறிப்பிடத்தக்கது. இச் சூழ்வார்

மன்னனுக்குக் கண் போன்று அமைகின்றனர்; ஆதலால் அவன் இத்தகையவரைத் தேர்ந்து தன் சுற்றமாகக் கொள்ளல் தேவையாகின்றது.

சூழ்வார் கண்ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் *(குறள் 445)*

என்பது வள்ளுவர் வாக்கு.

'நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண் மேற் சென்று இடித்தற் பொருட்டு' என்று பிறிதிடத்துக் (784) கூறிய வள்ளுவர், மன்னனின் இப் 'பெரியார் சுற்றம்', தேவை ஏற்படும் போது அவனுக்கு அறிவுரை கூறி நெறிப்படுத்த வேண்டியதையும் இவ் 'இடித்தல்' செயலால் உணர்த்துகின்றார். இத்தகு இடிப்பார் எனும் பாதுகாப்பு இல்லாத மன்னன் தானே கெடுவான் எனவும்; இத்தகு இடிக்கும் பெரியார் துணையுடையவனை யாரும் கெடுக்க இயலாது எனவும் கூறும் குறள்கள் (447, 448), பெரியாரின் இன்றியமையாமையையும், செயலாற்றலையும், செயலூக்கத்தையும், செய்திறனையும் உணர்த்துகின்றன.

இச் சூழ்வாரும் இடிப்பாருமாகிய பெரியார் மதி மந்திரிகளாகவோ அறிஞர்குழுவாகவோ நெறிப்படுத்தும் ஆயமாகவோ பணிப்பட்டிருக்கலாம்.

மற்றிரு உவம-உருவகச் சார்பிலும் பெரியாரைப் புலப்படுத்துவார் வள்ளுவர். குன்றன்னார் (898), மதலை (449) என்பன அவை. குன்று போன்றவர். மலையிலும் மாணப் பெரியவர் இவர்; பற்றுக்கோட்டுக்குரிய - பளுதாங்கும் தூண் போன்றவர் இவர். நிலை தாழாதவர்; சார்ந்தாரைத் தாங்குபவர்.

ஆட்சியாளனும்-அரசுத் தலைவனுமான வேந்தன் கூடப் பெரியாராக அமையவேண்டும் என்ற வள்ளுவரின் விழைவு, 'வேந்து' (895) என வேந்தரைப் பிழையாமை உணர்த்தப்படும் போது சுட்டுப்பெறுகின்றது.

இத்தகு பன்முக ஆளுமை உடையாரே பெரியார்; மற்றோர் பெரியார் எனத்தகும் பான்மையர் அல்லர் என்பது வள்ளுவர் வழி முடிபு.

'நல்லாரோடு இணங்கியிருப்பது நன்று' எனும் தொன் முதுமொழிக்கு ஏற்ப, இப்பெரியாரொடு பொருந்துதல் தகும். 'பெரியார் பேணல்' என இதனை அணுகலாம். பெரியார் கேண்மையை-நட்பை-திறனறிந்து தேர்ந்துகொள்ள வேண்டும் என்பார் வள்ளுவர் (441). பெற்றியுடைய அவரைப் பேணுவதுடன், உறவாகப் பொருத்திக் கொள்ள வேண்டும் (442, 443). இது அரிய செயல்; அருமையான செயல்தான். எனினும்

முயன்று துணைக்கொள்ளல் தேவை. பெரியார், ஒருவருக்கு உற்றாரும் உறவும் ஆகிவிட்டால் அது மிகப்பெரும் பேறாகும்; வலிமை தருவதாகும்.

தம்மில் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை *(குறள் 444)*

என்று வள்ளுவர் இதனை மொழிவார். மன்னன் பெரியாரைத் துணைக் கொள்வதை இவர் விதியாக்குவார் (445).

பெரியார் முன்னிலையில் எப்படிப் பழக வேண்டும்? அதற்கும் நெறியுண்டு வள்ளுவரிடம். பெரியார் முன், மற்றவரின் காதோடு பேசுதல், நகைத்தல் முதலியன செய்தல் கூடாது என்பார் அவர்.

செவிச்சொல்லும் சேர்ந்தநகையும் அவித்து ஒழுகல்
ஆன்ற பெரியா ரகத்து *(குறள் 694)*

பெரியாருக்கு எதிரான, மாறான, முரணான சிறியாருக்கும் இப்பெரியாருக்கும் உள்ள தொடர்பு எத்தகையதாக இருக்க முடியும்? இரண்டு அணுகுமுறைகள் வள்ளுவரிடம் தெளிய முடிகிறது; சிறியார் பெரியாரைப் பேணிக் கொள்வர் (680) என்பது ஒரு கருத்து; சிறியார் பெரியாரைப் பேணிக் கொள்ளார் (976) என்பது மற்றொரு கருத்து. தற்பண்பு, சூழல் அழுத்தம் என்பன இவ் அணுகுமுறை வேறுபாட்டிற்குக் காரணமாகின்றன.

ஒரு செயலைச் செய்து முடித்தற்குரிய ஆற்றல் குறைவுபடும் சூழலில், அதனை நேர்செய்ய, 'உறைசிறியார் பெரியாரைப் பணிந்து கொள்வர்' என்பது முன்னதில் புலப்படுகின்றது. ஆயின், தற்பண்பு நிலையில் சிறுமையுடையவர் பெரியாரைப் பேணும் நல்நோக்குக் கொள்வதில்லை.

சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள்வேம் என்னும் நோக்கு *(குறள் 976)*

பெரியாரைப் பேணிக்கொள்வது நற்பயன் விளைவிப்பது. அவர் தொடர்பு, உறுதுணையாவது. அவரோடிணைந்திருப்பவனுக்குப் பகை இல்லை; பகைவரால் அவனுக்கு எந்தக் கேடும் செய்ய முடியாது (446); யாராலும் அவனைக் கெடுக்கமுடியாது (447).

பெரியாரின் தொடர்பைத் துண்டித்துக் கொள்பவர்க்கும், அவர் துணை இல்லாதவர்க்கும், அவர் உறவு நீங்குபவர்க்கும் உறுவது தீமையாம். கெடுப்பார் இல்லாமலும் கெடுவர் (448); வைப்புப் பொருள் இல்லாதவர் போல நிலை இழப்பர் (449); பன்மடங்கு கேடுறுவர் (450) என்பன வள்ளுவர் அளிக்கும் விளக்கம்.

பெரியாரைப் பிழைத்தல் கூடாது என்பதும் வள்ளுவர் நெறி (896). அவர் ஆற்றலை இகழக் கூடாது (891). அவருக்கு இழுக்குச் செய்யக் கூடாது (893). அவருக்கு இன்னா செய்தல் கூடாது (894). ஏனெனில், அவ்வாறு செய்தால் தீமை வரும். 'கூற்றத்தைக் கையால் விளித்தற்றால்' (894) என்பார் வள்ளுவர். கூற்றுவனை- யமனைக் கையசைத்து அழைப்பது போன்றது பெரியாரைப் பிழைக்கும் செயல். உயிருக்கே ஆபத்து வரும்.

'அகலாது அணுகாது தீக்காய்வார்' என்று இகல் வேந்தருடன் பழகும் முறைபற்றிப் பிறிதிடத்துக் கூறுகின்ற (691) வள்ளுவர், பெரியாரையும் இதனை ஒப்ப, நெருப்பாகக் காட்டுவார். தீப்பட்டால் கூட- தீயினால் சுடப்பட்டால் கூடத் தப்ப முடியும் ; பெரியாரைப் பிழைத்தால் தப்பமுடியாது என்பது இவர் எண்ணம்.

எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்

பெரியார் பிழைத்து ஒழுகுவார் *(குறள் 896)*

'வேந்து செறப்பட்டவர்-வெந்து' (895) என்பதிலும் இந் நெருப்பாட்சி புலப்படுவதாகக் கொள்ளலாம்.

பெரியாரைப் பேணாதபோது, பெரியாராலும் தீமை வரலாம்; பிறராலும் தீமை வரலாம். பெரியார் துணை, ஒரு பாதுகாப்புக் கவசம். எனவே அவரைப் பேணாமை, பிறர் தீமை செய்ய இடன் அளிக்கும் என்பது வெளிப்படை. ஆனால் பெரியாரே தீமை தருவர் என்பது எந்த அளவு ஏற்புடையது? தீமை செய்யலாமா? அத்தகையோர் எப்படிப் பெரியாராக அமைய முடியும்? எனினும் வள்ளுவர் வாய்மொழி அவ்வாறுதான் இயம்புகிறது.

பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும் *(குறள் 892)*

பெரியாரைப் பிழைத்தவர் கெடுதல் நிச்சயம் (893); அவர்களால் அக்கேட்டிலிருந்து தப்பமுடியாது (894, 896).

குன்றன்னார் (898) எனச் சிறப்பிக்கப்படும் இவர் எரியன்ன கோபம் கொண்டால், 'குணம் என்னும் குன்றேறி நின்றார் வெகுளி...' எனப் பிறிதிடத்து வள்ளுவர் சுட்டுவது போல (29) யாராலும் தற்காத்து எதிர்த்து நிற்க இயலாது. வாழ்க்கையும் அழியும்; பொருளும் அழியும்;

வகைமாண்ட வாழ்க்கையும் வன்பொருளும் என்னாம்
தகைமாண்ட தக்கார் செறின் *(குறள் 897)*

அரசனும் அழிவான்; அரசும் - ஆட்சியும் அழியும்; குடிகளும் மாய்வர் (898, 899). உய்தி என்பது இல்லாததாகும் (900). எனவே

தான், அழிவு வேண்டும் என நினைப்பவன் பெரியாரைப் பேணாதிருக்கட்டும் என்ற பொருள்படக் 'கெடல் வேண்டின் கேளாது செய்க' (893) எனக் கூறுவார் வள்ளுவர்.

பெரியார் பற்றிய வள்ளுவர் வாக்கை மூன்று தளத்தில் தொகுத்துக் கூறலாம்.

ஒன்று, பெரியார்-நல்லார், தகை மாண்ட தக்கார், ஏந்திய கொள்கையர், சிறந்தமைந்த சீரார், அறன் அறிந்து மூத்த அறிவுடையார், வேந்தர்; பெரியார் - ஆற்றுபவர், உற்ற நோய் நீக்கி உறாமை முற்காக்கும் பெற்றியார், சூழ்வார், இடிப்பார், துணையார்; பெரியார் - குன்றன்னார், மதலையாம் சார்பினர்.

இரண்டாவது, பெரியாரைப் பேணிக்கொள்ள வேண்டும். அது நன்மை விளைக்கும்.

மூன்றாவது, பெரியாரைப் பிழைத்தல்-மதியாது நடத்தல் கூடாது. பிழைத்தல் பிழை; தீமை விளையும்.

⁂

வள்ளுவர் வழங்கும் அரச நீதி

பு.ஏ. இராமையா

வண்டமிழ் நாட்டில் வான் புகழ் எய்திய சான்றோர்கள் மிகப் பலர். அவர்களுள் அறிவிலும், ஆற்றலிலும் உலகம் உய்ய உயர்நெறி காட்டும் பாங்கிலும் நனி சிறந்து விளங்கும் வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடத் தக்கவர். ஒரு குறிப்பிட்ட நாட்டினரோ, சமயத்தினரோ, வகுப்பினரோ, மொழியினரோ தமக்கு மட்டுமே உரியது இதுவென உரிமை கொண்டாட முடியாத வகையில் உலகப் பொதுமறையாகத் திருக்குறளை அவர் படைத்தளித்துள்ளார். அதே நேரத்தில் தமிழர்தம் நாகரிகம் - பண்பாடு சிதறாமலும், அறிவுக்கு ஒவ்வாக் கதைகள் இல்லாமலும், உலகியலுக்கு உகந்த முறையில், உலக மக்கள் அறிவுக்கு மீறிய கற்பனைகளுக்கு இடங்கொடுக்காமலும், தாம் சொல்ல வந்த பொருளை முறைப்படத் தொகுத்து - வகுத்து உலகியலுக்கு ஒத்த முறையிலும் 1330 அழகிய குறள் வெண்பாக்களில் மனங் கவரும் வகையில் அவர் வழங்கியிருப்பது எண்ணியெண்ணி இன்புறுதற்குரியதாகும். இந்தப் படைப்பாற்றல் தான் பாட்டுக் கொரு புலவர் பாரதியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. **'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர்**



போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' எனப் பாட வைத்தது.

இத்தகு சிறப்பு வாய்ந்த திருக்குறள் தனி மனித வாழ்க்கைக்கும் உலகப் பொது வாழ்க்கைக்கும் வழிகாட்டும் ஓர் ஒப்பற்ற உயர் நூல்; நல்லன எவை, அல்லன எவை என்பதைச் சுட்டிக் காட்டும் நூல்; கடமைகளை வலியுறுத்தும் நூல்; அறத்திற்கு விளக்கம் தந்து அதற்கு ஆக்கம் பயக்கும் நூல்; நற்பண்புகளையும் நற்செயல்களையும் வரையறுத்துக் காட்டும் நூல்; தீய பண்புகளையும், தீய செயல்களையும் இனங்காட்டி வெறுத்து ஒதுக்கும் நூல்; உண்மைக்கும் ஒப்புரவிற்கும் உயர்வு தரும் நூல்; அறிவிற்கும் ஆற்றலுக்கும் மதிப்பு அளிக்கும் நூல்; முயற்சிக்கு முன்னுரிமையளிக்கும் நூல்; உழைப்பையும் உற்பத்திப் பெருக்கத்தையும் வலியுறுத்தும் நூல்; புகழ்மிக்க புற வாழ்வு முறையினைப் புகழ்வதோடு மட்டுமன்றி, அகவாழ்வாம் சிறந்த காதலின்ப வாழ்வையும் போற்றும் நூல்; கற்பனைக் கடவுட் கொள்கைகள், கட்டுக்கதைகள், மூடப் பழக்க வழக்கங்கள், உலகியல் வாழ்விற்கு ஒவ்வாத நெறிமுறைகள் எவையும் இடம் பெறாத நூல். மனித குலம் ஒன்றே எனும் மாண்பினைப் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகுக்கு உணர்த்திய உயர்தமிழ் நூல். மொத்தத்தில் மானுடம் சிறக்கவும், மன்பதை தழைக்கவும் வள்ளுவப் பெருந்தகை இவ்வையகத்திற்கு வழங்கிய வாழ்வியல் பெட்டகமே திருக்குறள் எனலாம். அதனால்தான் ஏறத்தாழ 130 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உலகமெலாம் உலா வருகிறது திருக்குறள். வீரமாமுனிவர், ஜி.யூ. போப், வ.வே.சு. ஐயர், தீட்சிதர், இராஜாஜி, காந்தியடிகள், ஆல்பர்ட் சுவிட்ச்சர் போன்ற சான்றோர்கள் திருக்குறளின் திட்பத்தை அறிந்து பல்வேறு வகைகளில் அதன் புகழைப் பரப்பினர். திருக்குறளையும் திருவள்ளுவரையும் பாராட்டிப் பேசிய பெருமக்கள் பலராவார். மேனாட்டு அறிஞர்கள் பலர் பின்வருமாறு திருவள்ளுவரையும் திருக்குறளையும் பாராட்டிப் போற்றுகின்றனர்.

Sage Valluvar, Priest of lowly clan.
No tongue repeats no speech reveals thy name
Yet all things changing dieth not they frame
For thou art bard of Universal men. *-G.U. Pope*

The Kural is the master piece of Tamil Literature - one of the highest and purest expressions of human thought. *- M. Ariel*

Thirukkural is superior to the institutes of Manu and is worthy of the divine Plato himself. *- Rev. H. Bower*

There hardly exists in the literature of the world a collective of maxims in which we find so much lofty wisdom *- Dr. Albert Scheweitzer*

India thought and its development pp, 162-63

Among the precious classics of the world literature the Kural take in place in the front rank.
- C. Rajakopalachari

இப்படி, பெருமக்கள் பலராலும் பாராட்டப்பட்ட சிறப்புக் குரியதாகத் திருக்குறள் திகழ்கிறது. வள்ளுவப் பெருந்தகைக்குப் பின்தோன்றிய படைப்பாளிகளிடையே திருக்குறள் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியது. திருக்குறளின் கருத்துகளையும் தொடர்களையும் பொன்னே போல் போற்றி, பிற்காலத்தில் வந்த புலவர் பெருமக்கள் கையாண்டு வந்தார்கள். சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் போன்ற நூல்களில் வள்ளுவரின் கருத்துகள், விரவிக் கிடக்கக் காண்கின்றோம். மனித வாழ்க்கையின் பல கூறுகளையும் நுணுகி ஆய்ந்து, அவற்றில் கொள்ளத்தக்கவையும் தள்ளத்தக்கவையும் இவையிவை என்பதைத் தெள்ளத் தெளிவாக மக்கள் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதியும் வண்ணம் அளித்துள்ளார் வள்ளுவர். தனிமனித ஒழுக்கம், சமுதாயக் கடமைகள் ஆகியவற்றோடு அரச நீதி பற்றியும் வள்ளுவப் பெருந்தகை அழகுற விளக்குகிறார். அதன் காரணமாகத்தான் சுத்தானந்த பாரதியார்

நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்கு
தமிழ்நாடு வாழ்க

என்று பாராட்டிப் போற்றினார்.

ஒரு நாடு என்பது எப்படி இருக்க வேண்டும்?

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு *(குறள். 731)*

என்று நாட்டிற்கு இலக்கணம் வகுத்தார் வள்ளுவர். பசியும் பிணியும் இன்றி வளம் கொழிக்கும் வகையில் நாடு இருக்க வேண்டும் என்பது வள்ளுவப் பெருந்தகையின் கணிப்பு. நாடு வளம்பெற அதன் மூலம் தனிமனிதன் வளம்பெற வேண்டுமாயின் நாடு நல்ல முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதை மிகவும் அழகாகச் சுட்டிக் காட்டியுள்ளார். ஒரு நாட்டின் அரச நீதி காப்பாற்றப்படவில்லையானால், அந்த நாட்டில் அறம் அழிந்து மறம் பெருகும். அது கூடாதென்பது வள்ளுவப் பெருந்தகையின் ஆணித்தரமான கருத்து. இக்கருத்தை அடியொற்றியே இளங் கோவடிகளும், "அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும்" என்றார். அரச நீதி என்றால் என்ன? அது எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு வள்ளுவர் பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை *(குறள். 541)*

அதாவது குற்றம் இன்னதென்று நன்கு ஆராய்ந்து, யார் பக்கமும் சாயாமல் நடுவுநிலைமையில் நின்று, செய்யத்தக்கதைச் சரியாகச் செய்வதே அரச நீதியாகும் என்கிறார் வள்ளுவர். அரச நீதி காப்பாற்றப்படுவதற்காக அரசன் நற்பண்புகளையும், நற் செயல்களையும் கொண்டிருக்க வேண்டியது இன்றியமையாத தாகும். இதை இறைமாட்சி எனும் அதிகாரத்தில் விளக்குகின்றார் வள்ளுவப் பெருந்தகை.

படை, குடிமக்கள், உணவுப் பொருள்கள், நல்ல அமைச்சர்கள், நண்பர்கள், அரண் எனும் ஆறு உறுப்புகளையும், அச்சமின்மை, ஈகை, அறிவு, ஊக்கம், காலந்தாழ்த்தாமை, கல்வி, துணிவென்னும் ஆண்மையுடைமை முதலிய பண்பு நலன் களையும் உடையவன்தான் பெருமைபெற்ற அரசனாக இருக்க முடியும். இதில் குறையுடையவன் நாட்டை ஆளக்கூடிய தகுதி அற்றவனாகிறான். ஓர் அரசனுக்கு - அரச நீதி நிருவாகத்திற்கு மேற்குறிப்பிடப்பட்ட அனைத்தும் அடிப்படையானவை என்பதைப் பின்வரும் குறட்பாக்களில் கூறுகிறார்.

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு *(குறள். 381)*

அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு *(குறள். 382)*

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு *(குறள். 383)*

பொருள் ஈட்டும் வழியை மிக நுண்ணியதாய்க் கண்டறிந்து, பொருள் சேர்த்து, சேர்த்ததைப் பாதுகாத்து அதை நாட்டு மக்களின் நல்வாழ்க்கைக்குப் பயன்படுத்துபவன்தான் நல்ல அரசனாவான். இக்கருத்தை,

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு *(குறள். 385)*

எனும் குறள் வாயிலாக எடுத்துரைக்கிறார் வள்ளுவர். மக்களாட்சி முறையாக இருந்தாலும் சரி, மன்னராட்சி முறையாக இருந்தாலும் சரி இந்த இலக்கணம் இன்றும் பின்பற்றப்படுவதை காண்கிறோம்.

அரசன் ஒரு வெற்றிகரமான அரசை நடத்த வேண்டு மெனில் அவன் காட்சிக்கு எளியனாகவும், கடுஞ்சொல் சொல்லாதவனாகவும், வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்துக் காப்பாற்றும் பாங்கினைப் பெற்றவனாகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய அரசனை மக்கள் புகழ்வார்கள். அவன் நாட்டிலே அரசநீதி தழைத்தோங்கும். இத்தகைய சிறப்புக்குரிய அரசர்களே வரலாற்றில் வாழ்வார்கள். இதை வள்ளுவப் பெருந்தகை

காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம் *(குறள். 386)*

இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் வுலகு *(குறள். 387)*

என எடுத்துரைக்கிறார். நீதி வழுவாத நெறிமுறையில் ஆளும் மன்னவனே மக்கட்கு இறை என்று போற்றப்படுவான் என வள்ளுவர் சொல்கின்றார்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும் *(குறள். 388)*

முறை செய்யாமல் கோவலனைக் கொன்றதால் நீதி தவறி விட்டோம் என்று அறிந்தவுடன் பாண்டியன் நெடுஞ்செழியன் 'யானோ அரசன் யானே கள்வன்' எனக் கூறி, தன் உயிரை மாய்த்துக் கொண்டதைச் சிலம்பு செப்புகின்றது. அதனால்தான் உலகம் உள்ளளவும் பாண்டியன் நெடுஞ்செழியனின் குணநலன்கள் போற்றப்பட்டு வருகின்றன.

கொடை கொடுத்தல், கருணை, செங்கோல் புரிதல், தன்குடிகளைத் தாங்கிப் பாதுகாத்தல் ஆகிய குணநலன்களைக் கொண்ட அரசன் அரசர்களுக்கெல்லாம் ஒளிதரும் விளக்கு போன்றவன் ஆவான் என்பதை,

கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி *(குறள். 390)*

எனும் குறளால் வள்ளுவர் தெரிவிக்கிறார். நாள்தோறும் தன் ஆட்சியின் நன்மை தீமைகளை அலசி ஆராய்ந்து முறை செய்ய வில்லையானால், அவ்வரசன் நாட்டை இழக்க நேரிடும் என்றும், முறை செய்யாத அரசனுடைய ஆட்சியில் வாழ்வது மிகவும் துன்பமானது என்றும், அந்த நாட்டிலே பருவமழை தவறும் என்றும் பசுக்கள் கூட பால்கறவாமல் போகும் என்றும் அந்தணர்கள் அறநூல்கள் அனைத்தையும் மறப்பர் என்றும் வள்ளுவப் பெருந்தகை கீழ்க்காணும் குறள்கள் வாயிலாக மிகப்பெரிய எச்சரிக்கை விடுகின்றார்.

நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும் *(குறள். 553)*

இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோல்கீழ்ப் படின் *(குறள். 558)*

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல் *(குறள். 559)*

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின் *(குறள். 560)*

மக்களை அரசன் காப்பாற்றுகிறான். அரசனை யார் காப்பாற்றுவது? நீதி வழுவாத நெறிமுறையில் அவன் ஆட்சி

நடத்தினால் அதுவே அவனைக் காப்பாற்றும் என உறுதியளிக்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

> இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
> முறைகாக்கும் முட்டாச் செயின் *(குறள். 547)*

என்பது அந்த உறுதிமொழி.

சூழ்நிலையோடு பொருந்தாதவற்றை உலகம் ஏற்றுக் கொள்ளாது. ஆகையால் உலகம் இகழ்ந்து தள்ளாத செயல்களை ஆராய்ந்து செய்ய வேண்டும் என்கிறார் வள்ளுவர். எனவே, தன்னுடைய ஆட்சியின் கீழ் வாழும் அனைத்து உயிரினங்களையும் காத்து, மக்களை அன்போடு அரவணைத்து, நீதி வழுவாது முறைப்படி செங்கோலாட்சி செய்து, குடிகளைப் பிறர் வருத்தாமல் காப்பதுடன், தானும் வருத்தாமல் காப்பாற்றி, நடுவுநிலை தவறாது குற்றவாளிகளைத் தண்டித்து, நாட்டின் வளம் பெருக்கி, அதன் பயனை அனைவரும் நுகரும் வகையில் செங்கோல் செலுத்துபவனே சிறந்த அரசனாவான் என்பதை அறிய முடிகிறது. இந்நெறி முறைகளில் தவறாது ஆட்சி செய்த அரசர்களை வரலாறு மறப்பதில்லை. நெறிமுறை தவறி ஆட்சி செய்த அரசர்களை வரலாறு மன்னிப்பதில்லை. புத்தர்பிரான், வர்த்தமான மகாவீரர், பாண்டியன் நெடுஞ்செழியன், கரிகால் பெருவளத்தான், இராஜராஜசோழன், சேரமான் கணைக்காலிரும் பொறை, ஆபிரகாம் லிங்கன், கென்னடி போன்றோர் வரலாறுகள் இதற்கு உதாரணம். இன்றும் நாம் அவர்களைப் போற்றும் நிலையில் இருக்கிறோம். இந்நிலை தவறிய அரசர்களாலோ அல்லது அரசுகளாலோ மக்களுக்கு நன்மைகளை விடத் தீமைகளே அதிகம். அண்டை நாட்டினருடன் பகை உண்டாகி அதன் காரணமாகப் போர் ஏற்பட்டு, மக்கள் மடியும் சூழ்நிலைகள் உருவாகி, உலகத்தாரால் தூற்றப்படும் நிலைக்கு ஆளாகிறார்கள். உதாரணமாக, கொடுங்கோலாட்சி புரிந்த ஹிட்லர், முசோலினி, இடி அமீன் போன்ற ஆட்சியாளர்களை அவர்களது நாட்டு மக்கள் மட்டுமல்லாமல் உலகமே தூற்றுவதைப் பார்க்கிறோம். இதை நமக்கு வரலாறு உணர்த்துகின்றது. எனவே, நல்லாட்சி என்பது கவிச்சக்கரவர்த்தி கம்பன் கூறியதுபோல் மக்களை உயிராகவும் மன்னனை உடலாகவும், கருதி, வான் புகழ் வள்ளுவர் கூறிய அனைத்து அரசியல் நெறிமுறைகளையும் கொண்டு நடத்துவதாகும். அவ்வாறு நடக்கும் அரசாட்சியே என்றென்றும் மக்களால் போற்றப்பட்டு, வரலாறு என்னும் பொன்னேட்டில் வைர வரிகளாகப் பதிக்கப்படும்.

❋ ❋ ❋

திருக்குறளும் ரகீம் சத்சயீயும்

க. ஜெயந்தி

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு படைக்கப்படும் படைப்புகள் நாடு, இனம், மொழி என்ற பாகுபாடுகளைக் கடந்த சிந்தனைகளை உள்ளடக்கியவையாக இருக்கின்றன. திருக்குறள் உலகப்பொது மறையாக விளங்குவது இதற்குச் சான்றாக இருக்கிறது. மொழி சார்ந்த பிரிவினைகள், அதுதொடர்பான சிக்கல்கள் மிகுந்துவிட்ட இந்தக் காலக்கட்டத்தில், மொழி என்பது கருத்து வெளிப்பாட்டிற்கான ஒரு கருவி மட்டுமே என்ற அடிப்படை உண்மையை மக்கள் உணரவேண்டியது இன்றியமையாத தாக இருக்கிறது. இலக்கியங்கள் வழி அவ் வுண்மையை வெளிப்படுத்த ஒப்பீட்டாய்வுகள் துணைசெய்கின்றன. அவ்வகையில், தமிழ்-இந்தி மொழிசார்ந்த இலக்கியங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்தல் இன்றியமையாத தாக இருக்கிறது. இந்தக் கட்டுரையில் திருக்குறளுடன் ரகீமின், "ரகீம் சத்சயீ" ஒப்பிடப்பட்டுள்ளது. புலவர்களின் கருத்தொற்றுமையை வெளிக்கொணர்வது இக்கட்டுரையின் நோக்கமாக இருக்கிறது.



இராமானந்த சர்மாவின் "பிராசீன் பத்ய சன்கிரஹ்" என்ற தொகுப்பு நூல் இந்த

ஆய்விற்கு மூல நூலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள், படைப்புகள் – அறிமுகம்

தமிழில் தோன்றியுள்ள அறநூல்களுள் முதன்மையானது திருவள்ளுவரின் திருக்குறள் ஆகும். இந்த நூலிற்கு முப்பால், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து எனப்பல சிறப்புப் பெயர்களும் உண்டு.

கி.பி. 1610இல் தோன்றியவர் ரகீம். பன்மொழிப் புலமை பெற்றுள்ள இவர் முதன்மைச் சேனைத் தலைவராகவும் அமைச்சராகவும் இருந்துள்ளார். இவர் கிருஷ்ண பக்தர். இவரது படைப்புகளுள், "ரகீம் சத்சயீ", "பரவை நாயிகா பேத்", 'சிருங்கார் சோரட்", ஆகியவை குறிப்பிடத்தக்கவை ஆகும்.

இந்த ஆய்வு திருக்குறள், ரகீம் சத்சயீ ஆகிய இரண்டிலும் இடம்பெற்றுள்ள வடிவமைப்பு, கருத்தமைப்புகள் குறித்து மேற்கொள்ளப்படுகிறது.

வடிவ அடிப்படையில் ஒப்பாய்வு செய்தல்

திருக்குறளில் காணப்படும் குறளடி என்ற இரண்டடி அமைப்பு போன்று இந்தி மொழி இலக்கியங்களில் "தோகே" என்ற ஓர் அமைப்பு காணப்படுகிறது. ஆயினும் சீர் அமைப்பில் வேறுபாடு காணப்படுகிறது. ரகீமின் "ரகீம் சத்சயீ" தோகே என்ற இந்த வடிவமைப்பைக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. சுருங்கக் கூறி விளங்க வைத்தல் என்ற உத்தியை இரண்டு புலவர்களும் கையாண்டுள்ளமை இதன்வழித் தெரியவருகிறது.

உவமை கூறிக் கருத்தை விளக்கும் உத்தியை வள்ளுவரும் ரகீமும் பயன்படுத்தியுள்ளனர்.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர் ***(குறள். 997)***

என்ற குறளில் மக்கட்பண்பு இல்லாதாருக்கு வள்ளுவர் மரத்தை உவமையாகக் கூறி விளக்குகிறார். ரகீம் நட்புப் பற்றிக் கூறும்போது, "தயிர் நன்கு கடையப்படும்போது மோர் பிரிந்து நமக்கு வெண்ணெய் கிடைக்கிறது. அதுபோல துன்பம் ஏற்படும் போது நல்ல நண்பர்கள் மட்டும் நம்முடன் இருப்பார்கள்" (33) என்று உவமை கூறி விளக்குகிறார்.

இவ்வாறு, உவமை கூறி விளங்க வைக்கும் உத்தியைக் கையாண்டுள்ளமை, கூறவரும் கருத்து தெளிவாகவும் முழுமையாகவும் மக்களிடத்துச் சென்று சேரவேண்டும் என்ற ஒத்த எண்ணத்தை இருவரும் கொண்டிருந்தனர் என்பதைக் காட்டுகிறது.

கருத்து அடிப்படையில் ஒப்பாய்வு செய்தல்

மனித இனத்திற்குத் தேவையான (இன்றியமையாத) பண்புகள், மனித இனம் விலக்கவேண்டிய பண்புகள், பொதுவானவை என்ற மூன்று பிரிவுகளாக இந்த ஆய்வு அமைகிறது.

மனித இனத்திற்குத் தேவையான பண்புகள்

அன்பு, ஒப்புரவு, ஒழுக்கம், அடக்கம் பற்றிப் புலவர்கள் கூறியுள்ள கருத்துகள் இந்தப் பிரிவில் அடங்கும்.

அன்பின் வழியில் செல்லும் உடலே உயிருள்ள உடல் என்று அன்பின் வழியில் செல்வோரின் சிறப்புக் குறித்து வள்ளுவர் கூறுகிறார். "அன்பின் வழியது உயிர்நிலை" (குறள் 801) என்பது அவரின் குறளடி. ரகீம் அன்பின் வழி பற்றிக் கூறும்போது, "அன்பின் வழி மென்மையானது; அந்த வழியில் எறும்பின் பாதங்களும் எளிதாகச் செல்லும். ஆனால், இத்தகைய மென்மையான பாதையில் மக்கள் எருதின் மீது சுமை ஏற்றிச் செல்லும் கொடுமையைச் செய்கின்றனர்" (26) என்கிறார்.

ஒப்புரவு பற்றி வள்ளுவர் கூறும்போது, "பிறர்க்கு உதவி செய்து வாழும் ஒப்புரவைப் போன்ற நல்ல அறம் தேவருலகிலும் இல்லை; இவ்வுலகிலும் இல்லை" என்று கூறுகிறார்.

> **புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே**
> **ஒப்புரவின் நல்ல பிற** *(குறள் 213)*

என்பது அந்தக் குறள். ரகீம் ஒப்புரவு பற்றிக் கூறும்போது, "எவர் ஏழைகளுக்கு உதவி செய்கிறார்களோ, அவர்கள் போற்றத் தகுந்தவர்கள். ஏழை சுதாமா எங்கே? துவாரகை மன்னன் கிருஷ்ணன் எங்கே? கிருஷ்ணரை நண்பர் என்று கூறும் தகுதி சுதாமாவிற்கு இல்லை. ஆனால் கிருஷ்ணன் சுதாமாவைத் தனது நண்பனாகக் கொண்டு உதவிகள் செய்தான். கிருஷ்ணனின் இந்தச் செயல் போற்றத்தக்கது" (11) என்று கூறி ஒப்புரவினால் விளையும் சிறப்பைச் சுட்டியுள்ளார்.

ஒழுக்கம் பற்றி வள்ளுவர் கூறும்போது, "நல்லொழுக்கம் இன்பமான வாழ்விற்குக் காரணமாக இருக்கும்" என்கிறார். 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" (குறள் 138) என்ற குறளடி இங்குக் கருதத்தக்கது. ரகீம், "எவன் ஒழுக்கமுடையவனாக இருக்கிறானோ, அவனுக்குத் தீயவர்களால் எந்தத் துன்பமும் நேராது. அரவினால் தீண்டப்பட்ட நிலவு எவ்வாறு ஒளி குன்றாது இருக்குமோ அவ்வாறு அவர்கள் ஒளி வீசுவார்கள்" (12) என்று ஒழுக்கமுடையவனின் சிறப்பைக் கூறுகிறார்.

அடக்கம் பற்றி வள்ளுவர் கூறும்போது "அடக்கம் அமரருள் உய்க்கும்" (குறள் 121) என்று கூறுகிறார். ரகீம், அடக்கம் பற்றிக் கூறும்போது, "மனத்தை அடக்கி வைக்க வேண்டியது இன்றியமையாததாகும். மனம் அடங்கியிருப்பின் உடல் எங்குச் சென்றாலும் கவலையில்லை. நீரின் அருகில் செல்லும்போது நமது நிழல் மட்டுமே நீரில் விழும்; நம் உடல் அல்ல" (2) என்று கூறுகிறார்.

மனித இன மேம்பாட்டின் மீது இவ்விரு புலவர்களும் கொண்டுள்ள ஈடுபாட்டை மேற்படி சான்றுகள் வாயிலாக அறியமுடிகிறது.

மனித இனம் விலக்க வேண்டிய பண்புகள்

தீ நட்பு, பிறருக்கு உதவ மனமில்லாத தன்மையுடையோர் ஆகியவை பற்றிய புலவர்களின் கருத்துகள் இந்தப் பிரிவில் அடங்குகின்றன.

வள்ளுவர் தீ நட்புப் பற்றிக் கூறும்போது, "கீழ்மக்களின் நட்பு ஒருவனுக்கு ஏற்படுவதைவிட ஏற்படாதிருப்பதே நன்று" என்று கூறுகின்றார்.

செய்துஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று *(குறள் 815)*

என்பது அந்தக் குறள். ரகீம், "கீழ்மக்களுடன் நட்பும் கொள்ளக் கூடாது. பகைமையும் கொள்ளக் கூடாது. எவ்வாறு நாய் நடனமாடினாலும் கடித்தாலும் காணத்தகுந்ததாக இராதோ, அவ்வாறு இத்தகையோருடன் கொள்ளும் தொடர்பும் இருக்கும்". (31) என்று கூறுகிறார்.

பிறருக்கு உதவ மனமில்லாதோர் குறித்து வள்ளுவர், "தான் சேர்த்து வைத்துள்ள பொருளைப் பிறர்க்குக் கொடுக்காமல் வைத்திருந்து பின் இழந்துவிடும் தன்மையுடையவர் கொடுப்பதால் ஏற்படும் மகிழ்வை அறியார்" என்று கூறுகிறார்.

ஈத்துஉவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்துஇழக்கும் வன்க ணவர் *(குறள் 228)*

என்பது அந்தக் குறள். ரகீம், "சில மனிதர்கள் அன்பு காரணமாகப் பொருளுதவி செய்கின்றனர். ஆனால் சிலர், மகிழ்ச்சியான நேரங்களில் கூடப் பிறருக்கு உதவும் எண்ணமில்லாதவர்களாக இருக்கின்றனர். இத்தகையோர் விலங்கினும் கீழானவர்கள்" (15) என்று கூறுகிறார். மனித இன மேம்பாட்டிற்கு உயர்ந்த எண்ணம், பரந்த சிந்தனை - மனப்பான்மை இன்றியமையாதது என்ற கருத்து இருவரிடையும் இருப்பதைக் காணமுடிகிறது.

பொதுவானவை

திருக்குறளில் ஆசிரியர் பெயர் சுட்டப்பெறவில்லை. ரகீம் படைப்புகளில் "ரகீம் கூறுகிறார்" என்பது போன்ற பெயர் சுட்டும் தொடர்கள் இடம்பெற்றுள்ளன.

வள்ளுவர், கடவுள் வாழ்த்துக் கூறுகிறார்; ஆனால் கடவுளர் பெயர்களைச் சுட்டிக் கூறவில்லை. ரகீம் கிருஷ்ண பக்தர். இவர்தம் பாடல்களில் புராணக் கதைகளில் (குறிப்பாகக் கிருஷ்ணன், லக்குமி) இடம்பெறும் கடவுளர் பெயர்கள், நிகழ்ச்சிகள் சுட்டப்பட்டுள்ளன. இதன்வழி, மக்களுக்கு நேரடியாகத் தம் கருத்தை வள்ளுவர் கூற விழைந்துள்ளார் என்பதையும் ரகீம், மக்களின் வாழ்வுமுறை மேம்படக் கடவுள் பக்தியும் தேவை என்பதைச் சுட்டிப் பக்தி உணர்வுடன் கருத்துகளைக் கூற விழைந்துள்ளார் என்பதையும் அறிய முடிகிறது.

மனித இனத்தின் சிக்கல்களைத் தீர்க்க வேண்டும்; மனித இனம் மேம்பட்டு விளங்க வேண்டும் என்ற சிந்தனை இருவரிடமும் காணப்படுகிறது. மொழி என்பதைக் கடந்து "மனித இனம்" என்ற ஒட்டுமொத்த அமைப்புக் குறித்தே இருவரும் சிந்தித்துள்ளனர். இவர்கள் கூறியுள்ள கருத்துகளை மொழிவாரியாகப் பிரிக்க இயலாது. மக்கள் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய அனைத்துக் கூறுகளையும் இவர்கள் எதிர்க்கின்றனர். இரண்டு நூல்களும் வெவ்வேறு மொழியிலமைந்தவை என்பது மட்டுமே வேற்றுமை. அவை கூறும் கருத்துகள் அனைத்தும் "மக்கள் நல மேம்பாடு" என்ற ஒன்றையே மையமிட்டுச் சுழல்கின்றன. நாடுவாரியாக, இனவாரியாக, மொழிவாரியாகப் பிரிந்து-பிரித்து நாட்டு நலனுக்குத் தீங்கு விளைவிக்கும் சக்திகள் இதை உணரவேண்டியது இன்றியமையாததாகும்.

துணை நூல்கள்

1. திருக்குறள் தெளிவுரை, வரதராசனார், மு., திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை, 156ஆவது பதிப்பு, 2000.
2. **திருக்குறள் பரிமேலழகர் உரை**, புலியூர்க் கேசிகன் (பதிப்பு), பூம்புகார் பதிப்பகம், சென்னை, 1993.
3. **பிராசீன் பத்ய சங்கிரஹ்**, இராமானந்த சர்மா, தக்சிண பாரத் இந்தி பிரச்சார சபை, சென்னை, 1992.

***

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
அண்மை வெளியீடுகள்

Agreement in Dravidian Languages	100.00
சங்கரநமச்சிவாயர்	60.00
அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி	60.00
சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்	30.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்	100.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு	50.00
மிருச்சகடிகம்	50.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
பெரியாரின் பண்பாட்டுப்புரட்சி	25.00
வ. உ. சி. வளர்த்த தமிழ்	20.00
ஜப்பானியக் காதல் பாடல்கள்	75.00
குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு	80.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும்	30.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்	40.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள்	75.00
தமிழர் கட்டிடக்கலை	30.00
தமிழ் மேடை நாடக வரலாறு	55.00
பரதநாட்டிய சாஸ்திரம்	150.00
இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள்	55.00
சதகத்திரட்டு தொகுதி-1	80.00
தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்	70.00
எழுத்திலக்கணக் கோட்பாடு	70.00
பாவாணர் கண்ட இன்றைய தமிழின் இலக்கணங்கள்	30.00
கருவூரார் பல திரட்டு	70.00
தமிழ் மொழியின் வரலாறு	30.00
தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர்	45.00
சங்ககாலக் காசு இயல்	30.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00
பாரதி இந்தியா	40.00
தமிழில் மருத்துவ இதழ்கள்	50.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00
Social Heritage of Tamils	75.00

Pub.No. 477 **இக்கால உலகிற்குத் திருக்குறள் - 3** 95.00